# இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்



பெ.சு.மணி

இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்

பெ. சு. மணி

பொது நூலகம்
பதிவு இல: AM, CC 46
02-10-1948
102

ராமகிருஷ்ண மிஷன்
ராமகிருஷ்ணா சாலை,
கொழும்பு-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு விழா
வெளியீடு
முதற்பதிப்பு : 1997

வெளியிடுவோர் :
ராமகிருஷ்ண மிஷன்
40, ராமகிருஷ்ணா சாலை
கொழும்பு-6

விலை ரூ. 75-00

அச்சிட்டோர் :

ராஜ் பிரிண்டர்ஸ்
சூளைமேடு,
சென்னை-600 094
இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல: A.H. CC/46
02-10-1948
பாண்டிருப்பு - 01, கல்முனை

# பதிப்புரை

**சுவாமி ஆத்மகனாநந்தா**
**துணைத்தலைவர்**
**ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்-கொழும்பு-6**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே உலக சமய வரலாற்றிலே ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் சுவாமி விவேகானந்தர். குறுகிய மனப்பான்மையில் சிக்கி, மக்களிடையே வேற்றுமைகளையும் வெறுப்பையும் வளர்த்து வந்த சமயங்களில் அநாகரிகப் போக்கை கண்டித்து அவை மக்களை ஒன்றுபடுத்தி உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை உலகறியச் செய்தவர் அவர். மனிதனை மறந்து கடவுளை ஏத்துதலைவிட, மனிதனில் அக்கடவுளைக் கண்டு சேவை செய்தலே இன்றைய சமயமாக அமைய வேண்டும் என வலியுறுத்தினார் அவர். அவரது வாழ்க்கை மற்றும் அருளுரைகளின் தாக்கம் இன்று உலகெங்கும் காணப்படுகிறது.

1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் நாள் சுவாமி விவேகானந்தர் நமது இலங்கைத் திருநாட்டிற்கு விஜயம் செய்தார். இங்கு தனது அருளுரைகளால் மக்களது மனதிலே ஆன்ம நாட்டத்தைத் தூண்டினார். அவரது விஜயத்தைத் தொடர்ந்து இராமகிருஷ்ணர் இயக்கப் பணிகள் இங்கு வேரூன்றத் தொடங்கின. அந்த வரலாற்றை இந்நூலிலே விரிவாக விளக்குகிறார், ஆசிரியர் திரு. பெ. சு. மணி அவர்கள். அவர் இராமகிருஷ்ண விவேகானந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களிலே ஆழ மூழ்கியவர் அவர் ஏற்கனவே எழுதிய ''நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிக்காகோ சொற்பொழிவுகள்'' என்னும் நூலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டோம்.

சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையிலே திரு. பெ. சு. மணி அவர்கள் எழுதிய ''இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்'' என்னும் இந்நூலை வெளியிடு வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நூலாசிரியருக்கு எங்களது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந் நூலை வெளியிடுவதற்கு உதவி புரிந்த அனைத்து அன்பர் களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'இலங்கையில் இராமகிரிஷ்ணர் இயக்கம்' எனும் இந் நூல், என்னுடைய ''இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ் நாடும்'' (1990) என்ற நூலைப்போன்று பிரதேச அடிப் படையில் ஓர் இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றி ஆய்வதாகும். இதே தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு நூல் இலங்கையில் 1978-ல் வெளிவந்துள்ளது. நூலாசிரியர் சுவாமி விருபாக்ஷா (கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன்) வெளியிட்டவர் சுவாமி ஜீவனானந்தா (மட்டக் களப்பு இராமகிருஷ்ணா மிஷன்) 211 பக்கங்கள் கொண்ட இந்த ஆங்கில நூலில் குருதேவர் வாழ்க்கை வரலாறு 126 பக்கங்களிலும், இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்க வரலாறு எஞ்சிய பக்கங்களிலும் கூறப்பட்டுள்ளது.

தமிழில் வெளிவரும் இந்த நூல் இராமகிருஷ்ணர் இயக்க வரலாற்றுப் பின்னணியுடனும், சிகாகோ சர்வமதசபையின் பின்னணிஎழுதப் பெற்றுள்ளது முற் கூறிய ஆங்கில நூலும் 1963-ல் இலங்கையில் வெளிவந்த ''இலங்கையில் சுவாமி விவேகானந்தர்'' (ஆசிரியர் திரு அம்பிகைபாகன்) எனும் சிறு நூலும் (60 பக்கங்கள்) இந்தத் தமிழ் நூலிற்கு முன் னோடி நூல்களாகப் பயன்பட்டன என்பதை நன்றியறி தலுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன், இந்தத் தமிழ் நூலில் முதன்மையான மூலாதாரச் சான்றுகள் கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் மட்டக்களப்பு இராமகிருஷ்ணா மிஷன், கொழும்பு தேசிய ஆவணக்காப்பகம், இந்து சாதனம், உதய தாரகை எனும் பழங்கால இதழ்கள், நேர் முகப் பேட்டிகள் முதலானவற்றில் இருந்து திரட்டப் பெற்று ஆய்வு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வெளியாகும் 1997 ஆண்டு, வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கையில் சிகாகோ வீரராக சுவாமி விவேகானந்தர் வருகையின் நூற்றாண்டுவிழா ஆண்டாகும். கல்கத்தாவில் இராமகிருஷ்ணா மிஷன் அமைந்ததின் (மே. 1-1897) நூற்றாண்டு விழா ஆண்டாகும். இராமகிருஷ்ணர் இயக்க வரலாறு கண்ட நூற்றாண்டு விழாக்களில் இவ்விரு நூற்றாண்டு விழாக்கள். 1895-ல் சுவாமி விவேகானந்தர் தமது சகோதரத் துறவி சுவாமி பிரம்மானந்தா மகராஜ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் பின்வரும் வரலாற்றுண்மைக்கு சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.

''நவீன இந்தியாவின் வளர்ச்சியும், அதன் பொற்காலமும், ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவதரித்த நாளோடு ஆரம்பமாகிவிட்டது. நீங்கள் அனைவரும் இந்தப் பொற்காலத்தைக் கொண்டு வரும் தொண்டர்கள். இந்த உறுதிப்பாட்டை உள்ளத்தில் கொண்டு உழைப்பீர்கள்.''

'நீங்கள் அனைவரும்', என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்ட சகோதரத்துறவிகள் வளர்த்தெடுத் இராம கிருஷ்ணர் இயக்கத் துறவியர் பாரம்பர்யம் மானுடத்தின் பொற்காலத்தையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருகின்றது என்பதை இந்த நூற்றாண்டு விழாக்கள் வாயிலாகவும் அறிகின்றோம்.

''நூற்றாண்டு விழாக்காணும் சுவாமி விவேகானந்தா சிகாகோ சொற்பொழிவுகள்'' எனும் என்னுடைய நூலை 1993-ல் வெளியிட்ட கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் இவ்வாண்டில் இந்தத் தமிழ் நூலை வெளியிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் துணைத்தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் இந்நூலை எழுதப் பணிந்ததோடு, நூலுருவாக்கத்திற்கு அனைத்து உதவி களையும் அளித்தமைக்கு என் நன்றி என்றும் உரியது. குறிப்பாக 1996 அக்டோபரில் ஒரு மாதகாலம் கொழும்பு இராமகிருஷ்ணா மிஷனில் என்னைத் தங்க வைத்து பல் வேறு ஆவணங்களை பார்வையிட உதவியும் சிலருடைய நேர் காணலுக்கு ஏற்பாடு செய்து உடன் வந்து உதவி யதும், கொழும்பு தேசிய ஆவணங்காப்பகம் நாள்தோறும் சென்றுவர அனைத்து உதவிகளை அளித்ததும் என் எழுத்துப் பணியை ஆக்கமுறச் செய்தன.

மட்டக்களப்பு இராமகிருஷ்ணா மிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்தா அவர்களும், இந்நூல் எழுதப் பெறுவதற்கு வேண்டிய ஆவணங்கள், அரிய ஆலோசனை கள் முதலியவற்றை கொழும்பு வந்திருந்து உதவிய சால் பிற்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

கொழும்பில் எனக்கு தேவைப்பட்டத் தகவல்கள், நூல்கள் முதலானவற்றை அளித்த அன்பர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பை சென்னையில் ஏற்றுக் கொண்டு பேருதவிபுரிந்த எனதருமை நண்பர் 'பூங்கொடி' வே. சுப்பய்யாவிற்கும், பதிப்புபணியில் தேவைப்பட்ட உதவிகளை ஆர்வமுடன் அளித்த சென்னை இராமகிருஷ்ணா மிஷன் பிரம்மசாரி புண்ணிய சைதன்யா விற்கும், குறுகிய காலத்தில் அச்சிட்ட ராஜ் பிரிண்டர்ஸ் ராஜ்ஜிற்கும், ஓவியர் ஆனந்தனுக்கும் நன்றி கூறு கின்றேன்.

பெ. சு. மணி

11, இராமகிருஷ்ணாபுரம். 2-வது தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33, இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. பத்தொன்பதாம் நூற்றாண்டில்
இலங்கை இந்து சமயப் பண்பாட்டுச் சூழல் 9

2. சிகாகோ பயணத்தில் சூழ்ந்த
சோதனைகளும் துன்பங்களும் 34

3. சிகாகோ சர்வமத சபையில்
சுவாமி விவேகானந்தர் சாதனைகள் 54

4. இலங்கை கொழும்பு நகரத்தில்
சுவாமி விவேகானந்தர் 81

5. யாழ்ப்பாணத்தில் சுவாமி விவேகானந்தர் 112

6. சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண
விஜயத்தின் எதிரொலி 138

7. குருதேவர் பரமஹம்சர்
நேர் சீடர்களின் இலங்கை விஜயம் 171

8. இலங்கை இராமகிருஷ்ணர் இயக்க
உருவாக்கத்தில் சுவாமி சர்வானந்தர்
பங்களிப்பு 183

9. விவேகானந்தா சபைகள் 191

10. இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன்
தோற்றமும் வளர்ச்சியும் 206

பின்னிணைப்பு-1
முக்கிய நிகழ்ச்சிகள் 229

பின்னிணைப்பு-2 237



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் சுவாமி விவேகானந்தர்
—ஜனவரி 1897

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை இந்துசமயப் பண்பாட்டுச் சூழல்

,'இலங்கையில் வழங்கும் சமய நெறிகளிற் சைவ சமயமே மிகப் புராதனமானது என்பதும் ஆதிகாலம் முதலாகவே இங்கு சிவாலயங்களும் வைணவக் கோயில்கள் சிலவும் அக்கிரகாரங்கள் பலவும் நிலைபெற்று வந்துள்ளன என்பதைக் குறிப்பாக மகாவம்சத்தினாலும் நாட்டில் வழங்கும் தமிழ், சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளிலுமுள்ள நூல்களினாலும் சாசனங்களினாலும் அறிய முடிகின்றது''. இவ்வாறு வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.[1]

''வடக்கின் கண்ணே தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரச் செழும்பதியும், தெற்கின் கண்ணே திருப்புகழ் பெற்ற கதிர்காமத் திருப்பதியும், கிழக்கின் கண்ணே தேவாரம் பெற்ற தென் கயிலைத் திருக்கோணமலைவளம் பதியும், மேற்கின் கண்ணே மேன்மைசால் முனீச்சுர வியன்பெரும்பதியும் அமைத்து நாற்புறமும் அருட்காவல் பூண்டு நிற்பதால் நமது ஈழவளநாடு புனிதமுற்றுப் பொலிகின்றது'' என்று புலவர் மணி சி. பெரியதம்பி பிள்ளை ''ஸ்ரீ காளிகாமேடு கற்பக விநாயகர் ஆலயம்'' எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையில் (இலங்கை இந்துக் கோயில்கள் - பகுதி-I 1994) பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

'மட்டக் களப்பு மான்மியம்' வழியாக அப் பிரதேசத்தில் நிலவிய சைவ சமய வரலாற்றை அறிகின்றோம். ஆறுமுகநாவலர் விரும்பாத கண்ணகி வழிபாடு கிழக்கிலங்கை மக்களிடம் செறிவாகப் பரவியதையும் அறிய முடிகின்றது.

இலங்கையின் தொன்மையான மற்றொரு சமயமான பௌத்தம் இலங்கையில், இந்தியப் பேரரசன் அசோகன் காலத்தில் பரவத் தொடங்கியதை வரலாற்றில் அறிகின்றோம். கி. மு. 251-ல் தேவாநாம் பியா திஸ்ஸா எனும் இலங்கை அரசன் கேட்டு கொண்டதற்கிணங்க, அசோக சக்ரவர்த்தி, தனது மகன் மகிந்தாவையும், மகள் சங்கமித்ராவையும் பௌத்தபிக்குகள் சிலருடன், புத்தரின் நினைவுச் சின்னங்கள் சிலவற்றுடனும், அனுப்பி வைத்தார். இந்த வரலாற்று நிகழ்வு, இலங்கையில் பௌத்தம் பரவ வித்திட்டது.

சிங்கள இதிகாசமான மகாவம்சம், இலங்கையில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழ் மன்னன் ஆட்சி நிலவியதை ஒப்புக் கொண்டுள்ளது. சிங்கள மன்னன் துட்டகைமுனு, தமிழ் மன்னன் எல்லாளனை வென்று சிங்கள அரசை நிறுவினான் என்று கூறப்பட்டுள்ளது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஐம்பத்தாறு ஆண்டுகள் தொடர்ந்து நீதிநெறி தவறாமல் செங்கோலோச்சியவன் எல்லாளன் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசுகளும், தமிழ் நாட்டின் சோழ. பாண்டிய. விஜயநகர அரசுகளும் தம்முள் கொண்டிருந்த அரசியல் கலாசார உறவுகள் வரலாற்றில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் தமிழர் ஆட்சி பதினேழாம் நூற்றாண்டில் மறைவதற்கு முன்பு ஆட்சி செலுத்தியவர்கள் ஆரியச் சக்ரவர்த்திகள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் ஒன்றரை நூற்றாண்டு காலம் ஆண்டனர். 'ஆர்யசக்ரவர்த்தி' எனும் பெயர்க் காரணம் பற்றி ஒரு கருத்து கூறப்படுகின்றது. அதாவது யாழ்ப்பாண அரசன் ஒருவன் இராமேச்சுரத்தைச் சார்ந்த ஒரு பிராமமணப் பெண்ணைத் திருமணம் செய்துக் கொண்டதால் தோன்றிய வமிசம் ஆர்ய சக்ரவர்த்தி வமிசம் என்று கூறபபடுகின்றது. இதற்கு மறுதலையாக, இராமேச்சுரத்தைச் சார்ந்த ஒரு பிராம்மணன், யாழ்ப்பாண இளவரசியைத் திருமணம் செய்துக் கொண்டதால் தோன்றிய வமிசம் என்றும் கூறப்படுகின்றது.[2]

ஆர்ய சக்ரவர்த்திகள் ''தமிழையும், சைவத்தையும் பேணி வளர்த்த புரவலராகவும், புலவராகவும்'' விளங்கியவர்கள் என்று பாராட்டப் பெற்றுள்ளனர்.[3]

கி. பி. 1620-ல் போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர், இதனால், ''ஈழவள நாட்டின் தமிழ்ப் பகுதிகள் வேற்று மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட வேற்று மதத்தினரின் ஆட்சிக்குட்பட்டன.''

இலங்கையில் போர்த்துகீசியர் ஆக்ரமிப்பு அரசு கி. பி. 1597 முதல் கி. பி. 1658 வரையில் நீடித்தது. கீழை நாடுகளில் வர்த்தகக் குழுக்களாக வந்த ஐரோப்பிய வர்த்தகக் குழுக்கள் தங்கள் காலனி யாதிக்கத்தை நிறுவி விரிவுப் படுத்திக் கொள்ள சுதேச அரசுகளே துணை போயின. இலங்கையிலும் இது நிகழ்ந்தது. போர்த்துகீசியர், மத மாற்றத்தில் முனைந்து செய்த கொடுமைகள் தமிழர்களாலும், சிங்களவர்களாலும் எதிர்க்கப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க கிறிஸ்து மதத்தர்களான போர்த்துகீசியர்கள், சைவ ஆலயங்களை அழித்தொழித்தனர். இந்துக்கள் புனிதமாகக் கொண்டாடும் பசுவை, தாங்கள் உண்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்த ஒவ்வொரு வீட்டாரும் போர்த்துகீசிய தலைவனுக்கு நாள்தோறும் அனுப்பி வைக்க வேண்டும் என்று விதிக்கப் பட்டது.*

தம்முடைய முறை நாள் வந்தபொழுது இந்தக் கொடுந்தொழிலைச் செய்வதைக் காட்டிலும் பரதேசம் போய் விடுவது உகந்தது எனத் துணிந்து வெளியேறினார் யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச சுவாமிகள். கண்டி பிரதேச அரசன், போர்த்துக்கீசியரை எதிர்க்க டச்சு வர்த்தகக் குழுவினருடன் உடன்படிக்கை செய்து கொண்டான். பல போர்களுக்குப் பின்பு டச்சுக்காரர்கள் 1658-ல் போர்த்துக்கீசியரை வீழ்த்தினர்.

டச்சு காலனியாதிக்கம் கி. பி. 1658 முதல் கி. பி. 1790 வரையில் நீடித்தது. இந்த இரு காலனியாதிக்கங்களிலும் கிறித்துவ மிஷனரிகளின் மதமாற்ற முயற்சிகள், சுதேச சமயங்களை இழித்துரைத்தல் தொடர்ந்தன. புராடெஸ்டண்ட் பிரிவைச் சார்ந்த ஒல்லாந்தர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பினர்.

ஒல்லாந்தர்கள் எனப்படும் டச்சுக்காரர்கள் ஆட்சி, போர்த்துக்கீசிய ஆட்சியைக் காட்டிலும் வளர்ச்சிப் பணிகளில் நாட்டம் செலுத்தியது. இலங்கையில் நெசவுத் தொழில் வளர்ச்சிக்காக, தென்னிந்தியாவில் இருந்து தமிழ் தொழிலாளர்களை, அடிமைகளாகக் கொண்டு வந்தனர். ஒல்லாந்தர்கள், கண்டி அரசருடன் நட்புறவு கொண்டு தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொண்டனர். சிங்களர், தமிழர்களுடன் திருமண உறவும் கொண்டனர். இவர்களின் சந்ததியுனர், 'பர்கர்ஸ்' என்பவர்

ஆவார். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்கள் தேச வளமை என்னும் சட்டத்தை உருவாக்கி மக்களின் பாராட்டைப் பெற்றனர். தம் ஆட்சிக் காலத்தில் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கி இலவசமாக வழங்கி வந்தனர்.

கண்டி அரசு, ஐரோப்பிய கட்டுப்பாட்டிற்கு வெளியே வெகு காலம் இயங்கியது. 1739-ல் தென்னிந்திய மதுரை விஜயநகர அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள் கண்டி அரசரானார்கள். டச்சு காலனியாதிக்கத்தை முடிவிற்கு கொண்டு வந்தது, ஆங்கிலேயர் காலனியாதிக்கம். 1796-ல் கண்டி அரசருடன் ஆங்கிலேயர் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம், காலனியாதிக்கத்திற்கு வழிகோலியது. 1796-ல் ஆங்கிலேயர் கொழும்பைக் கைப்பற்றியதால், டச்சு ஆட்சி முடிவுற்றது. கி. பி. 1815-ல் கண்டியரசனை வீழ்த்தி ஈழம் முழுவதையும் ஆங்கிலேயர் தமது காலனியாதிக்கத்தின் கீழ் அடிமைப் படுத்தினர்.

நாடு முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப் பட்டதால் முன்னையர் ஆட்சியைக் காட்டிலும் ஆங்கிலேயர் ஆட்சி வலிமை பெற்றது. அரசியலில் தட்டிக்கேட்க எவ்வித சக்தியும் இல்லாதச் சூழலில், அந்த அரசியலின் மறைமுக பகிரங்க ஆதரவைப் பெற்ற பலவகைப் பிரிவினரான கிறிஸ்துவ மிஷனரிகளின் பலவகைப்பட்டத் தாக்குதல்களை சைவ சமயம் எதிர்கொள்ள வேண்டியச் சூழல் மூண்டெழுந்தது. இந்தச் சூழல் சைவ சமய மறுமலர்ச்சியையும், புத்தெழுச்சியையும் அவாவியது.

போர்த்துக்கீசிய, டச்சு ஆதிக்கக் காலத்தை, ஆங்கிலேயர் காலத்துடன் ஒப்பிட்டு பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள் கூறிய பின்வரும் கருத்து இங்கு நினைவு கூர்தற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பறங்கியர், ஒல்லாந்தர் காலத்திலே சைவ சமயத்துக்கு வந்த வருத்தம், சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித்தோல் வருத்தம். உள்ளூறச் சமயம் உயிரைப்பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்துக்கு வந்த வருத்தம் சுச வருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம் அது. உட்பகையான வருத்தம். புறப்பகையில் உட்பகை பொல்லாதது.''[5]

ஆறுமுக நாவலர் வாழ்க்கை வரலாற்றை (1916) எழுதி வெளியிட்ட த. கைலாச பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்தும் அக்கால சைவ சமய அவல நிலையை விளக்க வல்லது.

''இந்த இரண்டரசினர் காலத்திலும் (போர்த்துகேய, டச்சு அரசினர்) யாழ்ப்பாணமானது சமணர் துலுக்கர் காலத்திலே இந்தியா இருந்த நிலையிலும் பார்க்க மிக்க இழிந்த நிலையிலிருந்தது. இந்தக் காலங்களிலே இங்கே நமது சமயம் தப்பியிருந்தது தெய்வச் செயலன்றி வேறொன்றாலுமன்று.''

பிரித்தானியர் ஆட்சியில் சைவ சமயம் ஆட்சியாளர் தரப்பில் எதிர்ப்பை எதிர்கொள்ளாதிருந்தது எனும் கருத்தை சைவ வித்துவான் வ. செல்லையா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்,

''ஏறக்குறைய 180 வருடங்களாகப் பறங்கியரின் ஆட்சியிலும் ஒல்லாந்தரின் ஆட்சியிலும் தடை செய்யப்பட்டிருந்த சைவ சமயம் பிரித்தானியரின் ஆட்சியிலே பத்தொன்பதாம் நூற்றாண்டிற் புனருத்தாரணம் பெற்றது. முன்பு பறங்கியர்களால் அழிக்கப்பட்ட கோயில்களின் தலங்களிலே புதிய கோயில்கள் உருவாக்கப் பெற்றன.'' (இலங்கையில் இந்துக் கோயில்கள் - பகுதி 1:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர், பேராசிரியர் சி. பத்மநாதன்-இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள வெளியீடு - 1994 - ப. 10). யாழ்ப்பாணத்துச் சிவன் கோயில்களுள் மிகத் தொன்மை வாய்ந்த கீரிமலைச் சிவன் கோயில் புனருத் தாரணத்தை ஆறுமுக நாவலர் முன்னின்று முயற்சி செய்து சாதித்தார்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் 1843 முதல் 1903 வரை யில் இலங்கையின் மலையகப் பிரதேசத்தில் சுமார் ஐம்பது லட்சத் தமிழ் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர் களாகக் காடு கொன்று தம்மையும் கொல்வித்துக் கொண்டு. அடிமைகள் போல குடியேற்றப் பட்டனர். பசி, பட்டினி, நோய் நொடிகளில் சிக்கிச் சீரழிந்த இந்த இந்தியா வமிசாவளியினர், மேலைநாட்டு நீக்ரோ அடிமைகளைக் காட்டிலும் துன்பக்கேணியில் அலறினர். இவர்கள் சமயம், பண்பாடு பிற இலங்கைத் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து மாறுபட்டிருந்தது. சிறு தெய்வ, கிராமியத் தேவதைகளின் வழிபாடுகள், சடாங்காசாரங் கள் முதலானவை யாழ்ப்பாண சைவ சமயம் பண்பாட் டிற்கு சற்று விலகிய நிலையில் நிலவின.

சைவ சமய - கிறிஸ்துவ மோதல்களுடன், நாத்திக வாதமும் யாழ்ப்பாணத்தில் தலையெடுத்ததையும் பின் வருமாறு அறிய முடிகின்றது,

''பௌதிகவாத சேட்டராகிய பிறட்லா (Bradlaugh) முதலாயினரது துர்வாதங்களை வாசித்துணர்ந்த நம்மவரிற் பலர் அக்கொள்கையின் கண்ணே பேரபிமான மூற்று, அதனை எடுத்துப் பத்திரிகைகள் வாயிலாகப் பிரதி பாதிக்கத் தொடங்கிக் கொண்டார்கள். இற்றைக் குப் பல வருடங்கட்கு முன்னே, சென்னையிற் பிரசுரிக்கப் பட்டு வந்த ''தத்துவவிசாரிணி'', ''தத்துவ விவேசினி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பத்திரிகைகளிலே இப்பௌதிக வாதம் பெரிது பிரதி பாதிக்கப்பட்டு வந்தமை காரணமாக, நாம் அந்தக் காலத்திற்றானே அக்கொள்கைகளையும் அவற்றுக்கு ஆதாரமாயுள்ள உலோகயத முதலிய நிரீச்சுரவாதக் கொள்கைகளையும் கண்டித்து, யாழ்ப்பாணம் - உதயபானு'' பத்திரிகை வாயிலாகப் பற்பல கடிதங்களை எழுதிப் பிரசுரித்து வந்தோம்.''[6]

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் ஆங்கில மொழிக் கல்வி முறை புகுத்தப்பட்டதும், அங்கு சமய - பண்பாட்டு தளங்களில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி அரசாட்சி ஆங்கில மொழிக் கல்வி முறையைப் புகுத்தியது போன்று, இலங்கையில், தொடக்கக் காலத்தில், அரசு முன்நின்று செயற்படவில்லை. கிறித்துவ மிஷனரிமார் முன் நின்றனர். இந்தக் கல்வி முறையை கிறித்துவ சமயப் பரப்புதலுக்கு பயன்படுத்தினர்.

இந்தியாவில் தாமஸ் பேரிங்கடன் 1835-ல் வெளியிட்டக் ''கல்வி குறிப்பு''களில் ஆங்கிலம் கற்கும் இந்தியர்கள் நிறத்தாலும், ரத்தத்தாலும் இந்தியர்களாகவும், அறிவு, விருப்பங்கள் அபிப்பிராயங்கள், நியதிகளில் ஆங்கிலேயர்களாகவும் இருப்பார்கள் என்று கூறப்பட்டது. ஆங்கிலம் படித்தவர்கள், பாரத சமய-பண்பாட்டை அவமதித்து கிறிஸ்துவர்களாக மாறுவார்கள் என்றும் மெக்காலே கருதினார். மெக்காலேவிற்கு முன்பு கல்கத்தாவில் ராஜா ராம்மோகன் ராய் (1772—1832), 11-12-1823-இல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆம்ஹர்ஸ்ட் பிரபுவிற்கு ஆங்கில மொழிக்கல்வி முறையைக் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி, எழுதியக் கடிதத்தின் ஒரு பகுதி, வருமாறு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தியாவை அறியாமை இருளிலேயே நிலைத்து வைத்திருக்க வேண்டும் என்பது பிரிட்டிஷ் சட்ட மன்றத்தின் நோக்கமாய் இருந்தால், அதற்கு சமஸ்கிருதக் கல்வியே திட்டவட்டமான முடிவாகும். ஆனால், சுதேசிகளின் முன்னேற்றமே அரசாங்கத்தின் குறிக்கோள் என்றால் விரிவான விளக்கமான போதனா முறையின் கீழ விஞ்ஞானம், வானியல், உடற்கூறு சாத்திரம் போன்ற பயனளிக்கும் விஞ்ஞானப் பாடங்களை இந்தியர்களுக்குக் கற்பிக்க வழிகாண வேண்டும். இந்த வகையில் உங்கள் நாட்டில் பேகன் பிரபு கல்வித் துறையில் போதித்த சீர்திருத்தங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.''[7]

தாய் மொழியான வங்க மொழியை நவீனத்துவப் படுத்தி, சமய சாத்திர விவாதங்களுக்கு வங்க மொழியை ஊடகமாகப் பயன்படுத்தி, 'நவீன வங்க மொழி உரை நடையின் தந்தை' என்றும் போற்றப் பட்ட ராஜா ராம்மோகன் ராய், சமய வழிப்பட்ட கல்வி மொழிகளான பாரசீக அரபு சமஸ்கிருத மொழிகளுக்குப் பதிலாக சமயச் சார்பற்ற நவீன விஞ்ஞானக் கல்வி முறைக்கு அன்றையச் சூழலில் ஆங்கிலக் கல்விமுறையை விரும்பினார்.

இத்தகைய அரசு சார்ந்த, சமூகத்தலைமைச் சார்ந்த முயற்சிகள் இலங்கையில் தோன்றாத கால கட்டத்தில் கிறித்துவ மிஷனரி மார்கள் ஆங்கிலக் கல்விமுறையை தங்களது மத மாற்ற முயற்சிகளுக்கும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தினர். அரசாங்க வேலை வாய்ப்புகளுக்கு ஆங்கிலம் தேவைப்பட்டதால் ஆங்கிலக் கல்விமுறை ஆக்கம் பெற்றது. மத மாற்றத்திற்குக் கல்வியை சக்தி வாய்ந்தக் கருவியாகப் பயன்படுத்தினர் கிறித்துவ மிஷனரி பாதிரிகள். வெஸ்லியன் (1814),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கர் (1816), சேர்ச் மிஷன் (1818) முதலான கிறித்துவ மிஷனரிமார் முன்னிருந்தவர்களைக் காட்டிலும் பன்மடங்கு உத்வேகத்துடன் கல்விப் பரப்புதலுடன் சமயப் பரப்புதலையும் மேற்கொண்டனர்.

சைவ சமயக்குருக்களோ, சைவ சமய ஆர்வலர்களோ கல்வியைக் கிறித்துவமிஷனரிமார் போன்று ஆள்வதில் தகுதியும் திறமையுமில்லாமல் மிகவும் பின் தங்கியிருந்தனர். பொதுக் கல்வியில் மட்டுமன்று சமயக்கல்வியிலும் தேர்ச்சியில்லாமல். கிறித்துவப் பாதிரிமார்கள் தொடுத்தக் கண்டனக் கணைகளுக்கு எதிர்க் கணைகளைத் தொடுக்க இயலாத அவலத்தில் ஆழ்ந்திருந்தனர்.

இந்தச் சூழலில் தான் ஆறுமுக நாவலர் (1822—1879) ஓர் இயக்கமாக, புயலாகச் சுழன்று ஆர்த்தெழுந்தார். ஆறுமுக நாவலர் வாழ்க்கை வரலாற்றறசிரியார் த.கைலாச பிள்ளை நாவலருக்கு பதின்மூன்றாம் வயதிலேயே, சைவ சமயம் குன்றிப் போயிருந்தகைக் கண்டு சிவபெருமான் அருள் வேண்டி ஒரு வெண்பா பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார்.[8] அப்பொழுது அவர் யாழ்ப்பாணம் வெஸ்லியன் மத்திய பாடசாலையில் ஆங்கிலம் கற்று வந்தார். 1868-ல் வெளியிட்ட ''சைவ சமயிகளுக்கு விக்கியாபனம்'' எனும் கட்டுரையின் பின் வரும் பகுதியில் தமது இளமைக் காலத்துச் சிந்தனைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

''நான் ஜய வருஷம் (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஷ் வித்தியா சாலையில் இங்கிலீஷ் கற்றேன். பிலவ வருஷம் (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனாயினேன்...பார்சிவல் துரை 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்: தாங்கள் என்னை விடலாகாது' என்று பலதரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை... நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லா வற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையாம். நான் என் சிறுவயது முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து. 'சைவ சமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவ சமய விருத்தியின் கண்ணதாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சத்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சக்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே!' என்று இரவும் பகலும் பெருங்கவலை கொண்டு பெருமூச்செறிதலிலும் பலருக்கும் பிதற்றுதலினுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்குவேனாயினேன்.''

நாவலர், தமது கால சமயச் சூழலை, தாம் எழுதிய யாழ்ப்பாணச் சமயநிலை (1872), நல்லூர் கந்தசாமி கோயில் (1875), மித்தியாவாத நிரசனம் (1876) முதலிய நூல்களில் விரிவாக, தெளிவாக உணர்த்தியுள்ளார். இந்நூல்களுக்கு முன்பாக 1860-ல் வெளிவந்த அவருடைய ''விக்கியாபனம்'' எனும் நூலிலும் அவர்காலச் சமயச் சூழலை அறிகிறோம்.

அனுட்டான விதி முதற்புத்தகம் (நித்திய கன்ம விதி), அனுட்டான விதி இரண்டாம் புத்தகமும் குரு வாக்கியமும், 'சிவாலய தரிசன விதி, சைவசமயசாரம் சைவ வினா விடை முதற் புத்தகம், சைவ வினா விடை இரண்டாம் புத்தகம் (1875) என்பனவும், சைவ சமயி, அநாசாரம், திருக்கோயிற் குற்றங்கள் (1878) எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பும் சைவர்களுக்காக நாவலர் எழுதிய பிரசார நூல்களாகும்.

சைவ தூஷண பரிகாரம் (1854) சுப்பிரபோதம் (1853), வச்சிர தண்டம் ஆகியன கிறித்துவ சமயக் கண்டன நூல்களாகும்.

சமயப் பிரசார நூல்களை போர்க் குரலில், போராட்ட இயக்க நூல்களாகப் படைப்பதில் நாவலர் தனிமுத்திரை பதித்தார். மெதடிஸ்த கிறிஸ்துவ பாடசாலையின் மாணவராகவும், ஆசிரியராகவும் அவர் பெற்ற அறிவும் அனுபவமும், பைபிளை தமிழாக்கம் செய்வதில் பெர்சிவல் பாதிரியாருடன் கொண்டிருந்த தொடர்பும், சமய பிரசாரத்தில் கிறித்துவர்கள் கையாண்ட வழிமுறைகளை ஆள்வதில் நாவலரிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இவருடைய கிறித்துவ மத கண்டனங்களை பாதிரிமார்கள் தங்கள் 'Hindu pastor' என்னும் புத்தகத்தில் மிகவியந்து எழுதியிருக்கிறார்கள். நாவலருடைய ''சைவ தூஷண பரிகாரம்'' எனும் வெளியீட்டைப் பற்றி வெஸ்லியன் மெதாடிஸ்ட் அறிக்கையில் (இங்கிலாந்தில் 185ɔ-ல் அச்சிடப் பெற்றது பின்வரும் வியப்புரைகள் கவனிக்கத் தக்கன.

''இந்த ஆண்டின் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வு, சைவ தூஷண பரிகாரம் எனும் நூல் வெளியீடாகும். இந்நூல் அசாதாரணமான இலக்கியமாகவும் தொன்மமாகவும் விளங்குகிறது... சைவருடைய ஒவ்வொரு நம்பிக்கையும் நடைமுறையும், கிறித்துவ புனித நூல்களில் கூறப்பட்டுள்ள நம்பிக்கை, சடங்காசாரங்களோடு இசைந்தும் இணைந்தும் இருப்பதாக நிரூபணம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இத்தகையக் கருத்துகளுக்கு ஆதரவாகத் திரட்டித்தரப் பெற்றுள்ள சாத்திரக் குவியலைப் பார்க்கும் பொழுது மிக்க வியப்பாக உள்ளது. எதிர் தரப்பின் மறுப்பை முன்கூட்டியே எதிர்பார்த்து, அதை புறந்தள்ளும் மதிநுட்பம் முதல் தரமான தேர்ந்த உள்ளத் திற்கே உரியதாகும் என்பதையும் இந்நூலில் காண்கின் றோம். இந்நூல் மிகுந்த இடர் விளைப்பதாகும்'' [9]

''முன்னிருந்த எங்கள் சமயாச்சாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப் போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களி லெல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தனர்'' என்றும் நாவலர் பாராட்டப் பெற்றார்.

நாவலர் சைவ சமய எழுச்சிக்கு ஆற்றிய அருந் தொண்டு, தேசிய எழுச்சியாகவும் விமர்சனம் செய்யப் பட்டது. ''ஆறுமுக நாவலரது சைவப் பிரயாசையின் தோற்றமும் வளர்ச்சியும் அது எதிர்நோக்கிய எதிர்ப்புக் களும், அது பற்றி நாவலரும் அவரைச் சார்ந்திருந்தோரும் கிறிஸ்தவர்களுடன் நடாத்திய விவாதங்களும், அரசாங் கத்துடன் கொண்டிருந்த தொடர்புகளும் தேசியத்தின் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்'' என்று ஆய்வாளர் க. அருமை நாயகம் விமர்சனம் செய்துள்ளார். [10]

நாவலரை தமிழ் தேசிய இன எழுச்சியாளராக ஒரு வரம்பிற்குள் உட்பட்டே விமர்சனம் செய்ய வேண்டும். அவர் உயர்சாதி மனப்பான்மையை அழுத்தமாகக் கொண் டிருந்தார். தீண்டாமையை ஆதரித்தார்; சாதியாசா ரத்தை வலியுறுத்தினார். அவருடைய சமூக நோக்கை விளக்கியும் மேற்படி ஆய்வாளர் எடுத்துக் கூறியுள்ள பின்வரும் பகுதியும் கருத்தில் நிறுத்தத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே கிறிஸ்தவர்களுக் கெதிராகத் தோன்றிய எதிர்ப்புகள் சமய எதிர்ப்புகளென்பதிலும் பார்க்கச் சாதியாசாரத்தை நிலை நாட்டுவதற்கான எழுச்சிகள் போலத் தோன்றுகின்றன. நாவலரது சமூக நோக்கையும் இவ்வடிப்படையிலேதான் ஆராயப்படல் வேண்டும். நாவலர் உயர் சாதியினரது ஏகப் பிரதிநிதியாக விளங்கினார்; இவரது கண்டனங்கள் உபதேசங்கள் அனைத்தும் உயர் சாதியினரை மையமாக வைத்தே எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாயிகள், வர்த்தகர்கள், அரச ஊழியர்கள் போன்றோரை விளித்தே எழுதப்பட்டுள்ளன.

''சிறுவர் முதல் பெரியவர் வரை சாதி ஆசாரங் களைப் பேணிக்காக்க வேண்டுமென்பதை முதலாம் சைவ வினாவிடை முதல் யாழ்ப்பாணச் சமயநிலை வரை வற்புறுத்தியுள்ளார். இவ்விரண்டு நூல்களுக்கு மிடைப் பட்ட காலம் இரு தசாப்தங்களுக்கு மேலாயினும், நாவலர் சாதி பற்றிய தமது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. பின்வரும் உதாரணங்களை எடுத்துக் காட்டாகக் கொள்ள லாம். முதலாம் சைவ வினாவிடையில் ''எவர்களிடத் திலே போசனம் பண்ணலாகாது?'' என்ற வினாவிற்குப் பதிலாக......தாழ்ந்த சாதியாரிடத்திலும்.........போசனம் பண்ணலாகாது ''எனவும், நான்காம் பாலபாடத்தில் ''நல்லொழுக்கம்'' என்னும் கட்டுரையிலே ''தீண்டத் தகாத சாதியாரையும்......தீண்டினாலும்.........உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானம் செய்தல் வேண்டும்'' எனவும். தேவாலய தரிசனம் என்னும் கட்டுரையில் ''திருக்கோயி லுள்ளே போவதற்கு யோக்கியர்களல்லாத சாதியார்கள் போன்றவை இளஞ் சந்ததியினருக்குச் சாதி பற்றிய அறிவினைப் புகட்டும் தன்மை வாய்ந்தன. யாழ்ப்பாணச் சமயநிலை என்ற பிரசுரத்தில் கிறிஸ்துவ பாடசாலை களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்பிய உயர்சாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரை ஏளனம் செய்து கண்டிக்கும் வகையில் ''தங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார் வீட்டிலே கீழ்ச்சாதியரரோடும் போசனஞ் செய்வித்துச் சாதியாசாரத்தையும் சமயாசாரத்தையும் இழப்பித்து, அவர்களோடு தாங்களுங் கலந்து, அவ்விரண்டையும் இழக்கின்றார்களே! இவர்கள் இப்படிச் செய்தும் எதிரிகளெதிரே தலை குனியாது, தாங்கள் சைவ சமயிகளென்றும், உயர் சாதிமான்களென்றும், சிறிதும் நாணமின்றித் தலையெடுப்புடனே பாராட்டத் தொடங்குகின்றார்களே! சீச்சீ! இஃதென்ன மதிமயக்கம்.''

இராமகிருஷ்ண பரமஹம்சர் (1833-1886), சுவாமி தயானந்தர் (1824-1883), இராமலிங்க சுவாமிகள் (1823-1874) ஆகியோரின் சமகாலத்தவரான ஆறுமுக நாவலரை, சுவாமி தயானந்தருடன் ஒரு வகையில் ஒப்பிட்டுள்ளார் கலாநிதி க. கைலாசபதி. ''வட இந்தியாவில் வேத சமயத்திற்கு தயானந்தர் செய்தது போன்று, நாவலர் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் சைவ ஆகமநெறிக்கு செய்துள்ளார்'' என்று பேராசிரியர் க. கைலாசபதி சுட்டிக்காட்டியுள்ளார்.[11]

'வேதகாலத்திற்கு திரும்புங்கள்'' என்று சுவாமி தயானந்தர் விடுத்த அழைப்பு போன்று, நாவலர் 'சிவாகமங்கள் காலத்திற்கு திரும்புங்கள்' என்று குரலெழுப்பினார். சிவாகமத்தையும் சிவதீக்ஷையையும் வலியுறுத்தியதில் இவர் சற்றும் பின்வாங்கியதில்லை. வேதத்திலும். ஆகமஞ் சிறந்தது என்பது இவர் முழக்கம். பரசமயக் கண்டனங்களில் எரிசரங்களைத் தொடுப்பதில் சுவாமி தயானந்தருக்கும், ஆறுமுக நாவலருக்கும் இசைந்தப் பொருத்தமுண்டு. சுவாமி தயானந்தரின் ''சத்யார்த்த பிரகாசம்'' எனும் ஆர்ய சமாஜ வேதநூலில் பன்னிரண்டாவது அத்யாயத்தில் சமண, பௌத்த, சாருவாக மதங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், பதின்மூன்றாவது அத்யாயத்தில் கிறிஸ்துவ மதத்தையும், பதினான்காவது அத்யாயத்தில் இஸ்லாத்தையுங் கண்டனம் செய்து எழுதியுள்ளார்.

இவ்வாறு ஒரு வகையில் சுவாமி தயானந்தர், ஆறுமுக நாவலர் இருவரிடையே ஒற்றுமை அம்சங்கள் சமயப் பணியிலே இருந்தாலும், சமூக சீர்திருத்த நோக்கிலே இருவரிடையே வேற்றுமை அம்சங்கள் விளங்கின.

சுவாமி தயானந்தர் தீண்டாமையைச் சாடினார்; புராணங்களை எதிர்த்தார்; சாதியொழிப்பிற்கு ஆதரவளித்தார். அரசியல் சுதந்திர உரிமையை பகிரங்கமாக பிரசாரம் செய்தார். ''ஆர்யாபிவிநய'' எனும் நூலில் வேத மந்திரங்களுக்கு பொருள் காணுமிடத்தில் இந்திய சுதந்திரத்திற்கு ஆதரவாக பொருள் கண்டார்.[12] சமய சீர்திருத்தத்தை சமூக சீர்திருத்தத்துடன் இணைத்தே நிகழ்த்தினார். இவை யாவும் ஆறுமுக நாவலரிடமிருந்து சுவாமி தயானந்தர் வேறுபட்டு விளங்கிய நிலைப்பாடுகளைச் சுட்டுவனவாகும்.

சைவ சமயக் கல்வியைப் பரப்புவதில் நாவலர் ஓர் இயக்கத்தையே நடத்தினார். கிறிஸ்துவப் பாதிரிகள் கல்விக் கூடங்களைப் பயன்படுத்தி சமயவுணர்வை வளர்த்ததைப் போல, நாவலர் பாடசாலைகளையும், சைவ சமய பாட நூல்களையும் உருவாக்கி சைவ சமயக் கல்வி இயக்கத்தை உயிர்மூச்சாகக் கொண்டு நடத்தினர். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 1848-ல் அவர் தோற்றுவித்த சைவப் பிரகாச வித்யாசாலை, சைவ சமய கல்வி இயக்கத்தின் தலையூற்றாகும்.

தாய் மொழிப் பாடசாலைகளை அரசு நடத்த விரும்பாத காலகட்டம் தோன்றியது. 1831-ல் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர் வில்லியம் கோல்புருக், காமெரன் ஆகியோ ரைக் கொண்ட ஒரு கமிசனை பாடசாலைகள் சீர்திருத் தம் தொடர்பாக நியமித்தது. இந்தக் கமிசன் தனது அறிக்கையில் தாய் மொழிப் பாடசாலைகளை டிவிட பரிந்துரைத்தது, இதன் விளைவாக யாழ்ப்பாணம் முதலான இடங்களில் அரசினர் நடத்தி வந்தப் பாடசாலைகள் மூடப்பட்டன, இதனால் கிறித்துவ சமயத்தினர் நடத்தி வந்த தனியார் பாடசாலைகளில் சைவ சமய மாணவர்கள் கட்டாயமாகச் செல்ல வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பாடசாலைகளில் சைவ சமயச் சின்னங்களை நிருவாகம் அனுமதிக்க மறுத்தது. திருநீறு அணிந்து மாணவர்கள் வருவது தடை செய்யப் பட்டது. இந்தச் சூழலில்தான் நாவலர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் தொடங்கிய சைவப்பிரகாச வித்யாசாலை சைவ சமய மாணவர்களுக்கு சமய நெறி பிறழாமல் கல்வி கற்க நல்வாய்ப்பை அளித்தது.

பாடசாலைகளுக்கு அளிக்கப்பட்ட அரசு நிதியுதவியை பெரும்பாலும் கிறித்துவ சமயத்தினர் நடத்தி வந்த பாடசாலைகளே ஏகபோகமாக பெற்றுக் கொண்டு வந்தன. கத்தோலிக்க, புராட்டஸ்டண்ட் பாடசாலை களுக்கு அளிக்கப்படும் அரசு நிதியுதவி சைவ சமயத்தினர் நடத்தும் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட வேண்டு மென்று நாவலர் வாதாடினார். கிறித்துவரின் எதிர்ப்பால் சைவப்பிரகாச வித்தியாசாலை இருபத்திரண்டு ஆண்டு களாக அரசு நிதியுதவி பெறாமல் அல்லல் பட்டது. கிறித்துவ வேதாகமத்தை ஆங்கில பாடநூலாக ஆக்கிய பின்பே 1870-ல் சைவப் பிரகாச வித்யாசாலைக்கு நிதி யுதவி கிடைத்ததென்றால், நாவலர் எதிர்கொண்ட அறை கூவலின் வன்மையைப் புரிந்துக் கொள்ள முடியும்.

அக்காலத் தேவையாக விளங்கிய ஆங்கிலக் கல்விக்கும் நாவலர் தமது கல்வி இயக்கத்தில் இடமளித்தார். 1872-ல் ஆங்கில பாடசாலையை ஆரம்பித்தார் சைவ சமயத்தினர் இந்த ஆங்கிலப் பாடசாலையைப் பயன்படுத்திக் கொள்ள வில்லை. இதனால் நான்காண்டுகளில் இந்தப் பாடசாலை மூடப்பட வேண்டியதாயிற்று.

'நாவலரும் கல்வியும்' எனும் தலைப்பில் யாழ்ப் பாணம் முஸ்லிம் தமிழறிஞர் எ. எம். எ. அஸீஸ் 28-11-1953-ல் கொழும்பு விவேகானந்த சபையில் சொற் பொழிவாற்றினர். இதன் பின்வரும் பகுதி நாவலர் கல்வி இயக்கத்தில் பயன்பாட்டை விளக்கவல்லது.

''இலங்கையிலே மதசார்புள்ள சுதேச பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே பிதா ஆவார். இவர் ஆங்கிலக் கல்வியையும், மதத்தையும் ஒன்று சேர்க்கலாம் என்பதை எடுத்துக் காட்டினார். அக்காலத்திலே ஆங்கிலம் கற்கப் புகுபவர் சமய மாற்றம் பெறவேண்டியிருந்தது, நாவலர் வழிகாட்டிய பின்பு அந்தந்தச் சமயத் தலைவர்களால் ஆங்கிலக் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆறுமுக நாவலர் கிறிஸ்துவ மதப் பிரசாரகர்களின் முறைகளில் சிறந்தவற்றைப் பின்பற்றி னார். பிரசங்கங்கள் புரிந்தார். புத்தகங்கள் எழுதினார். பாடசாலைகள் தாபித்தார். ஆறுமுக நாவலரின் சேவைத் திறம் அக்காலத்தில் பௌத்தர்களுக்கு எட்டியதோ தெரியாது. முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் அது பரவியது''. அஸீஸும் தமிழும் - 1991 ஏ.எம் நஹியா இலங்கை ப. 129.

நாவலர் உருவாக்கி வளர்த்த சைவ சமய தேசிய உணர்வில் சைவமும் - தமிழும் ஒன்றேயெனும் கோட்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இரண்டையும் தனித் தனியே வளர்த்தார், நாவலர் என்பது குறிப்பிட்டு சுட்டிக் காட்ட வேண்டியதொன்றாகும்.

'யாழ்ப்பாணச் சமயநிலை' எனும் கட்டுரையில் சைவ சமயம் பற்றி எழுதியவிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளது. நாவலரின் சைவ சமய தேசியவுணர்வின் நிலைப் பாட்டைத் தெளிவுறுத்துகின்றது.

''சைவ சமயத்தைத் தமிழ்ச் சமயம் என்றும், சைவ சமயக் கோயிலைத் தமிழ்க் கோயில் என்றும் அறிவில்லாத சனங்கள் வழங்குகின்றார்கள். தமிழ் என்பது ஒரு சமயத் தின் பெயரன்று, ஒரு பாஷையின் பெயர்.''[12]

யாழ்ப்பாண சைவ சமயம், கந்தபுராணக் கலாசா ரத்தை அடித்தளமாகக் கொண்டது. யாழ்ப்பாணம் நல்லூர் இந்து சமய மன்னர்களின் தலைநகரமாக விளங் கியது. நல்லூர் கந்தசாமிக் கோயில் சைவ சமயத்தின் உயிர்நாடியாகும். கிறித்துவ சமயப் பாதிரிமார் இக் கோயிலை குறி வைத்து தாக்கிப் பிரசாரம் செய்தனர். யாழ்ப்பாணத்துக் கிறிஸ்துவ மதப்பாதிரிமார் 1852-ஆம் ஆண்டில் நடத்தி வந்த 'நன்கொடை' எனும் பத்திரிகை யின் ஏழாம் சங்கிகையில் ''கந்தசாமி கோயிற் திருவிழா'' எனும் தலைப்பில் சுப்பிரமணிய வழிபாட்டினை இகழ்ந்து கட்டுரையொன்று வெளிவந்தது. எழுத்தில் மட்டுமன்று, பேச்சிலும் இகழ்ந்து வந்தனர். இந்தப் பிரசாரத்தை கண்டனம் செய்யும் வகையில் 1853-ல் நாவலர் 'சுப்பிர போதம்' எனும் நூலை யாழ்ப்பாணத்தில் வெளி யிட்டார்.[13]

கந்த புராணத்தின் ஆன்மிக மேன்மையை நாவலர் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எத்துணைக் காலந்திரும்பித் திருப்பிப் படிப்பினுஞ் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்த மூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல் களினால் இவர்களுள்ளத் தூற் றெடுத்த மெய்யுணர்வேயாம். இப்போதும் இருக்கின்ற ஒரு கிறிஸ்து சமய உபதேசியார் ஏறக்குறைய இருபத் தெட்டு வருஷத்துக்கு முன் நம்முள்ளே நால்வருடன் அந்தரங்கத்திற் கலந்து பேசிய போது 'பைபிள் வசனங்களெல்லாம் ஒருங்கு திரண்டுங் கந்த புராணத்து அவைபுகு படலத்தினும் அமைச்சியற் படலத்தினுமுள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றனது ஓரடிக்குத் தானும் ஆற்றாது 'என்ன அற்புதம்.' என்று கண்ணீர் வார உரோமஞ் சிலிர்ப்ப மிக்க ஆராமையோடு சொல்லினர்.'' [15]

1861-ல் நாவலரின் கந்தபுராண வசனப் பதிப்பு வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் கந்த புராணச் சொற் பொழிவு பெரும் செல்வாக்குடையது.

'கந்தபுராண கலாசாரம்' என்றால் என்ன என்பதை விளக்கி கலாநிதி க.கைலாசபதி கூறியதாவது:

''தத்துவத்தையும் பண்பாட்டையும் இலக்கியத் துடன் இணைத்துக் காணும் நிலைக்கும் பொருத்தமான குறியீடாக 'கந்த புராண கலாசாரம்'' என்னும் தொடர் கச்சிதமாக அமைந்துள்ளது எனலாம்'' [16]

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிங்கள, இஸ்லாமிய மக்களிடையே சமய கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தி வளர்த்தவர்களைப்பற்றிய தனிஆய்வும் வேண்டற்பாலது. சிங்கள மக்களிடையே மொஹொத்தி வத்த குணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னந்த தேரோ (1833-1890), கர்னல் எச்.எஸ். ஆல்காட் (1832-1906), அநகாரிக தர்மபாலா (1864-1933) முதலான பௌத்த சமய அறிஞர்கள் சிங்கள மக்களின் பௌத்த சமய பண்பாட்டை வளர்த்தனர்.

இஸ்லாமிய மக்களிடையே, அறிஞர் சித்திலெவ்வை (1838-1898), ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் (1867-1915), வாப்பிச்சி மரைக்காயர் (1819-1925) ஆகியோர் இஸ்லாமிய சமய பண்பாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பத்திரிகைகளின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் மதப் பிரசாரங்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இந்த நூற்றாண்டில் அச்சுயந்திர வசதி, அரசு ஆதரவு முதலானவற்றைப் பயன்படுத்தி கிறித்துவ சமயப் பாதிரிகள் சமயப் பத்திரிகைத் துறையில் முன்னோடிகளானார்கள். இலங்கையில் இந்த நூற்றாண்டில் கிறித்துவ சமயப் பிரசார ஏடுகளாக, 'உதயதாரகை' (1841), 'கத்தோலிக்கப் பாதுகாவலன்' (1876), 'மாணவன்' (1896), 'சன்மார்க்க போதினி' முதலான பத்திரிகைகள் வெளிவந்தன.

முஸ்லிம் மக்களுக்காக, 'முஸ்லிம் நேசன்' (1882) 'சர்வஜனநேசன்' (1888), 'சைபுல் இஸ்லாம்' (1890) 'இஸ்லாமிய மித்திரன்' (1893), முதலான பத்திரிகைகள் வெளிவந்தன.

'இலங்கை நேசன்' (1877), 'சைவ உதயபானு' (1880), 'சைவசமய போதினி (1881), 'விஞ்ஞான வர்த்தினி (1882), இந்து சாதனம் (1889) ஆகியன சைவர்கள் மத்தியில் இருந்து தோன்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக தேசிய நோக்கில் 'இலங்காபிமானி' (1863). 'இலங்கைக்காவலன் (1864) 'இலங்கைப் பாதுகாவலன், (1864) முதலான பத்திரிகைகள் வெளிவந்தன.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் முதுகலைமாணி இரா.கனக ரத்தினம் அவர்கள் இந்து சாதனத்தில் (11-9-1988) எழுதிய ஆய்வுக்கட்டுரையில் பின் வரும் விமர்சனத்தை முன் லவத்துள்ளார்:

"மேற் கூறிய பத்திரிகைகளில் உதய தாரகைப் பத்திரிகை தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் மறுமலர்ச்சிப் பத்திரிகையென்றே கூறுதல் வேண்டும்.

ஆரம்பத்தில் அது சமயப் பொறுமையுடன் தன்னை வளர்த்துச் சென்றமையினால் ஆறுமுக நாவலர், காசி வாசி செந்திநாதையர் முதலான சைவப் பெரியார்கள் அதற்கு விடயதானம் செய்து வந்தனர். காலப் போக்கில் இப்பத்திரிகை சைவ சமய கண்டனங்களை வாரி இறைக்க முற்பட்டு நின்றது. இந்த நிலைப்பாடு சைவர்களின் மத்தியில் தம் சமய சிந்தனைகளைக் கட்டிக்காக்கத் தமக்கோர் பத்திரிகை அவசியம் என்பதை சிந்தித்துச் செயல்பட வழிவகுத்தது...

"இலங்கையின் அரசியற் கட்சி அடிப்படையிலே வளர்ச்சி பெறுவதற்கு முன்பாகத் தமிழ் மக்களின் பெரும் பான்மையோரின் சமூக, அரசியற், பொருளாதார சிந்தனைகளின் வெளிப்பாட்டின் ஏகப் பிரதிநிதியாக விளங்கிய பத்திரிகைகள் இந்து சாதனம், Hindu Organ என்று கூறில் மிகையன்று. உதய தாரகை, கத்தோலிக்கப் பாதுகாவலன் ஆகிய இருபத்திரிகைகளும் இக்காலப்பகுதியிலும் தொடர்ந்து சேவையாற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் அவை யோர்குழுநிலைப் பத்திரிகையாகவே மக்களாற் கவனத்திற் கொள்ளப்பட்டது.''

19-ம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆய்வு செய்வோர்க்கு முகம்மது காசிம் சித்திலெவ்வையின் ''முஸ்லிம் நேசன்'' (1881) மிகச் சிறந்த மூலாதார ஏடாகும்.'' உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஆறுமுக நாவலரின் உரை நடையாலும் கண்டனப் பிரசுரங்களாலும் உரம் பெற்றது 'முஸ்லிம் நேசன்' என்று எ.எம்.எ. அஸீஸ் கூறுவார்.

பௌத்த சமய அறிஞரான அநகாரிக தர்மபாலர், ஆறுமுக நாவலரைப் போலவே கிறித்துவ சமயங்களை எதிர்த்து ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டார். இதை மட்டும் குறிப்பிட்டு இருவரிடையே கருத்து ஒற்றுமை காட்டப்படுகின்றது. இக்கூற்று இருவருடைய ஆளுமையின் அசல் தன்மையை மதிப்பிடத் திசை திருப்பி விடும். ஆய்வாளர் க.அருமை நாயகம் இருவரையும் பின் வருமாறு ஒப்பிட்டு உண்மையறியத் தூண்டுகிறார்.

''நாவலர் தமிழராக விருப்பினும், இலங்கையின் முழுதேசிய அடையாளத்திலும் அக்கறை கொண்டிருந் தார் என்பதை அவர் எழுத்துக்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். அநகாரிக தர்மபாலர் மகாவமிசம் கூறும் பௌத்த சிங்கள இலங்கையின் வாரிசாவார். நாவலர் தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் சைவ சமயத் திலும் பெருமை கண்டவர்...ஆறுமுக நாவலர் தாம் இலங்கையர் என்பதில் பெருமையடைந்தார். பௌத்தத் திற்கு எதிராகவோ அல்லது சிங்கள மக்களுக்கெதிரா கவோ பிரசாரம் எதுவும் செய்யவில்லை. வரலாற்றின் போக்கினை ஏற்றுக் கொண்டவர் நாவலர். அநகாரிக தர்மபாலர் பௌத்த—சிங்களம் ஆகிய இரண்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து, அவ்விரண்டும் இணைந்ததே இலங்கைத் தேசியம் என வற்புறுத்தினார்.''

தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் அத்வைத வேதாந்தித்திற்கு எதிராக சைவசித்தாந்திகள் நடத்திய கருத்துப் போர் அக்காலத்தில் உச்சக் கட்டத்தில் இருந்தது. 'நாகை மீனலோசனி' '(1890), சென்னையில் இருந்து வெளிவந்த 'ஞானாமிர்தம்' 1888] ஆகிய இதழ்கள் சைவசித்தாந்த உயர்விற்காகவும், சிதம்பரம் 'பிரம்மவித்யா' (1887) சென்னை ''ஹிந்து ஜன பூஷணி'' இரண்டும் அத்வைத வேதாந்த உயர்விற்காகவும் கருத்துப் போர்களை நிகழ்த்தின.

''நாவலரவர்கள் வைதிக அடிப்படையில் அமைந்த சைவ நெறியைப் போற்றிப் பேணியவர். வேதாந்த சமரசப் போக்குகள் அவருக்கு உடன் பாடில்லை'' என்று ஓர் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்'' [17]

இந்த நிலைமை நாவலருக்குப் பின் யாழ்ப்பாணத்தில் சற்று மாறத் தொடங்கியது. ''நாவலருக்குப் பின் வேதாந்த விசாரம் இலங்கையிலே கற்றோர் மத்தியில் ஆங்காங்கு இடம் பெற்றது. வேதாந்தியாக இராகவர் களும் அதனை ஒரு ஈடுபாட்டுடன் கற்றறிய முனைந்த னர்; விரும்பினர். அதற்கு ஒரு காரணம் சுவாமி விவேகா னந்தர்'' என்றும் கூறப்பட்டுள்ளது. [18]

நாவலர் சிவாகாமப்புறக்கணிப்பை சீற்றமுடன் சாடத் தவறியதே இல்லை.

நாவலர் சிவபதமடைந்த பொழுது, புதுக் கோட்டை நீதிபதியாக விருந்த யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை யாத்த இரங்கற் பாக்களிலே பின் வருவது நாவலரின் வரலாற்றுப் பாத்திரத்தை விளக்குகின்றது.

நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—
யெல்லவரு
மேத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்க
மெங்கே
யாத்தனறி வெங்கே யறை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்து சமய—பண்பாட்டின் சூழலின் பின்னணியில் நோக்கும் பொழுது சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் (1893), இந்து சமயத்தின் மேன்மையை நிறுவிவிட்டு, இலங்கைக்கு வந்தது (1897) சிறந்ததொரு வரலாற்று நிகழ்வாக அமைந்தது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ பயணத்தில் சூழ்ந்த சோதனைகளும் துன்பங்களும்

சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றில், இந்தியாவின் வரலாற்றில், உலக சமயங்களின் வரலாற்றில் சிகாகோ பயணம் மாபெரும் வரலாற்றுத்திருப்பத்தை ஏற்படுத்தியது.

அக்காலச் சூழலில் கடல் கடந்து அயல்நாட்டிற்கு செல்வதென்றால் பிரச்னைகள், சோதனைகள், துன்பங்கள் அடுக்கடுக்காய் வந்து மோதும். போலித்தனமான சாத்திரக் கட்டுப்பாடு ஓர் இந்துவை கடல் கடக்கும் பயணத்திற்கு தடை விதித்திருந்தது. நிறுவனமயமான ஓர் இந்து சமய அமைப்பு வாயிலாக பிரதிநிதித்துவம் பெற்று செல்ல வழி இல்லை. சர்வமத சபையும் முறையான அழைப்பை தகுதி படைத்தவரைக் கண்டறிந்து அழைப்பு அனுப்பவும் வாய்ப்பில்லை. பயணச் செலவை உதவிட எந்தச் சமய நிறுவனமும் இல்லை. பயணத்தைத் திட்டமிட்டு, முன்னேற்பாடுகளின் விவரமறிந்து பயணத்தை ஒழுங்கு செய்யவும் போதிய அனுபவம் பெற்றவர்களும் இல்லை. பயணத்தின் முடிவில் சிகாகோவில் சர்வமத சபையில் ஓர் பிரதிநிதியாகக் கலந்துக் கொள்வதற்கு சான்றிதழைப் பெறவும் தேடி அலைய வேண்டியிருந்தது. காழ்ப்புணர்ச்சியுடனும், பாராமுகமுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுகிய பிற இந்தியப் பிரதிநிதிகளும், கிறித்துவ சமத் எதிர்ப்புப் பிரசாரங்களும் கொடுத்தத் தொல்லைகளோ ஏராளம்.

இவற்றையெல்லாம் எதிர்கொண்டு புறந்தள்ளி முன்னேற வழிகாட்டியது சுவாமி விவேகானந்தருடைய ஆன்மபலமே.

இந்த ஆன்ம பலத்தை அருளிய இராமகிருஷ்ணபரம ஹம்சர், தமது அருமைச் சீடர் ''தன்னுடைய அறிவாற்ற லாலும், ஆன்மிக வலிமையாலும் உலகின் அடித்தளத்தை அசைக்கப் போகும் காலம் வரும்'' என்று சிகாகோ சர்வமத சபை பற்றிய எண்ணம் தோன்றாதக் காலத்தி லேயே தீர்க்கதரிசனமாகச் சாற்றினார்.

குருமகராஜ் பரமஹம்சர் – தூய அன்னை சாரதா தேவியார் -- சுவாமி விவேகானந்தர் மூவருமே இந்தியா வின் புதிய விழிப்பிற்கு உதவிய முப்பெரும் ஆதிகர்த் தாக்களாவர்.

நிர்விகல்ப சமாதியிலேயே தோய்ந்து உறைந்திருக்க சுவாமி விவேகானந்தர் அவாவியதை சற்றே கடிந்து, குருமகராஜ் பரமஹம்சர். தமது சீடரின் எதிர்காலப் பணியை எடுத்துரைத்தார். ஆலமரம் போல் பலருக்கு நிழல் அளித்து நாடும் உலகமும் உய்ந்திடச் செய்யும் பணியே. சுவாமி விவேகானந்தரின் எதிர்காலப் பணி என்பதை உணர்த்தினார், பரமஹம்சர். சுவாமி விவேகா னந்தர் 'தேசபக்த மெய் ஞானி'யாக விளங்கினார் என்றால் அதற்கு மூலகாரணகர்த்தா, பரமஹம்சரே யாவார்.

''நம்மவரின் அதிர்ஷ்டத்தாலும் ஈசனுடைய திருவரு ளாலும், மற்றெல்லா மாயப் படலங்களையும் அறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறிந்து விட்ட விவேகானந்தர் சுதேசப் பற்றை மட்டும் நெடுங்காலம் கொண்டிருந்தார்'' என்று மகாகவி பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய ஆன்மிக ஆசார்ய புருஷரை, 'தேச பக்தி'யில் கட்டுப்பட வைக்க வேண்டுமா? எனும் கேள்வி எழலாம். இதற்கும் மகாகவிபாரதியார் பதிலளித்துள்ளார்.

''ஸர்வ ஸந்நியாசியாக விவேகானந்தர் தமது நாட்டிலே மட்டும் ஒருவிதமான அதிகப்பற்று வைத்திருந்தமை அவரது பெருந்துறவுக்கும் பொருந்துமா? என்று சிலர் ஐயுறலாம். இதே விஷயந்தான் அவருடைய சிஷ்ய சிகாமணிகளில் ஒருவராகிய ஸ்ரீநிவேதிதா தேவியின் மனத்திலும் பலவித ஆலோசனைகளுக்கு இடமுண்டாக்கி இருக்கிறது. ஸ்ரீநிவேதிதாதேவி சென்ற சில மாதங்களாக 'பிரபுத்த பாரதம்' என்ற பத்திரிகையில் விவேகானந்தரைப் பற்றி வரிசையாக எழுதிக் கொண்டு வருகிறார். இம்மாதத்துப் பத்திரிகையிலே நிவேதிதா தேவி ஸ்வாமியின் தேச பக்திக்கும் ஸந்நியாசத்திற்குமுள்ள விரோத இயற்கையைப் பற்றி விஸ்தாரமாகப் பேசுகிறார்...... விவேகானந்தரின் இயற்கையில் சுதேச பக்தி வேர் ஊன்றிப் போய்விட்டது. மகாபலம் கொண்டவளாகிய பாரதமாதா தனது பலத்தைத்தானே அறியாதவளாகி அடிமை நிலை கொண்டு நிற்பதை அவரால் பார்த்து சகிக்க முடியவில்லை. ஆனால் அந்த சொற்பப் பாசங்கூட மாயா சம்பந்தமானது என்பதை அவரே நன்றாக அறிவார். அவர் மட்டுமென்ன? அவருடைய பரமகுருவாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூட இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். ''விவேகானந்தருடைய மனதை இலேசான ஒரு மாயைப் படலம் சூழ்ந்திருக்கிறது. அதை ஈசன் இவருடைய மனத்தில் ஒரு நன்மையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி வைத்திருக்கிறார். ஆனால் அது மிகவும் இலேசான படலம். அதை எந்த நிமிஷத்திலும் விவேகானந்தர் கிழித்தெறிந்து விடுவார்'' என்று ராமகிருஷ்ணர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.''

மேலே பாரதியார் கூறியுள்ள சகோதரி நிவேதிதா தேவியின் கட்டுரை 'பிரபுத்த பாரதா'வில் 1906 ஆகஸ்ட் இதழில் வெளிவந்தது.

சுவாமி விவேகானந்தரின் வேதாந்த பிரசாரத்தை தேசபக்தியின் தாய் முயற்சியென்றும், இந்தியாவின் சுயாதீனக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டவர் சுவாமி விவேகானந்தர் என்றும், மதாசார்யராகவே நாட்கழித்த போதிலும் தேசபக்தி எழுச்சிக்கு பெரியதோர் மூலதாரமாக நின்றவர் என்றும் சுவாமி விவேகானந்தரை தேசபக்த மெய் ஞானியாக தரிசனம் செய்து பாரதியார் பலவாறாகப் போற்றி வணங்கியுள்ளார்.

பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் ரோமன் ரோலந்து அவர்களும், ''மாபெரும் அத்வைதத் துறவியாகிய விவேகானந்தரை பிரபஞ்சத்தைப் பற்றியப் பொருள்தான் எடுப்பாக ஈர்த்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேசியத்தின் நரம்புகளுக்கு அவர் முறுக்கேற்றியதுதான் இந்தியாவிற்கு மறு பிறப்பை அளித்தது. எனும் கருத்தை வெளியிட்டுள்ளார்'' இந்தியாவை நேசிப்பதின் மூலம் தமக்கு ஒருவர் சிறந்த உதவி அளிக்க முடியும் என்று சுவாமி விவேகானந்தரே தம்மிடம் மேலை நாட்டுச் சீடர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோ பயணம் பற்றிய இறுதி முடிவெடுக்க குருதேவர் பரமஹம்சர் கடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கையசைத்து அழைப்பது போன்ற கனவுக் காட்சியும், தூய அன்னையிடம் பயணத்திற்கான நல்லா சியை வேண்டி கடிதம் எழுதிய பொழுது கிடைத்த அநுமதியும் இருபெருங் காரணங்களாயின.

## தூய அன்னையாரின் தேசியவுணர்வுகள்

இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடை பெற்று வந்த காலத்தில் தூய அன்னை சாரதா தேவியார் சில சந்தர்ப்பங்களில் தமது உணர்வுகளை எவ்வாறு வெளியிட்டார் என்பது இங்கு நினைவு கூரத் தக்கது.

கோல்பாரா ஆச்ரமத்தின் தலைவர் கேதார்பாயு (பிற்காலத்தில் சுவாமி கேஷவானந்தா) சுதேசி இயக்கத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். ஆச்ரமத்தில் ஜபம், தியானம், வழிபாடு, புனித நூல்களைக் கற்றல் ஆகியனவற்றைவிட கைராட்டினம் சுழற்றுதல், அரசியல் பேச்சுகள் அதிகமாயின. இதனால் காவல் துறையின் கண்காணிப்பும் இருந்தது. ஒரு சமயம் தூய அன்னை கேதார்பாபுவிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது "ஆச்ரமத்தின் தேவைகள், வழிபாடு முதலானவை ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதில் கவனம் செலுத்து. சுதேசி இயக்கம் ஒன்றினால் மட்டும் எந்த லாபத்தை அடையப் போகிறாய்?" என்று கேட்டார். கேதார் பாபுவிற்கு நேரடியாக தூய அன்னையாருடன் பகிரங்கமாக முரண்பட்டு நிற்க போதிய தைர்யமற்ற வராயிருந்தார். ஆனால் மறைமுகமாக, "சுவாமிஜி எங்களை நாட்டிற்காக உழைக்கச் சொன்னார்; இந்த நாட்டின் இளைஞர்கள் தன்னலமற்று தொண்டாற்ற எழுச்சியூட்ட அஸ்திவார மிட்டார். அவர் இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருந்தால் எவ்வளவு வேலைகள் மிகுதியாக செய்யப் பட்டிருக்கும்'' என்று வாதிட்டார்.

கேதார்பாபுவின் இந்த வாதம், தூய அன்னையாரின் இதய வீணையின் ஒரு தந்தியை மீட்டி விட்டது. இதனால் கேதார்பாபு எழுப்பி விட்ட இசைக் கோவை, ஆழ்ந்த ஆன்மிகப் பொருள் நிறைந்தது; இனிமையாய் நிறைந்தது. கேதார்பாபு பேசி முடிப்பதற்குள், தூய அன்னையார் குறுக்கிட்டு கூறியதாவது:

> ''அன்பு மகனே! நரேன் (விவேகானந்தர்) இன்று இருந்திருந்தால் கம்பெனி அவரைத்தனி யாக விட்டு வைத்திருக்குமா? அவரை சிறையில் அடைத்திருப்பார்கள் அந்தக்காட்சியை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. நரேன் உறையுள் இடப்படாத வாள் போன்றவர். அயல்நாடுகளில் இருந்து திரும்பியப் பிறகு அவர் என்னிடம், ''அன்னையே தங்கள் அருளால் இந்த வயதில் நான் கடலைத் தாவித்தாண்ட வேண்டிய அவசியமேற்படவில்லை. கப்பல்கள் மூலம் கடற் பயணத்தை மேற்கொண்டேன். நான் சென்ற விடங்களில் எல்லாம் குருதேவரின் புகழ் எவ்வ ளவு மகத்தானதாக பரவியதைக் கவனித்தேன். நல்ல மக்கள் பலர் குருதேவரைப் பற்றி வியக்கத் தக்க ஆர்வமுடன் என்னிடமிருந்து அறிந்து போற்றினர்.

இதைக் குறிப்பிட்டு கேதார்பாபுவிடம் தூய அன்னையார், ''அந்த அயலவர் கூட என் மக்கள்தாம் என்பதை ஒப்புக் கொள்ள மாட்டாயா?'' என்று கேட்டார்.

தூய அன்னையாரின் இந்தப் பேச்சு. கேதார்பாபு செய்த இரு பிழைகளைத் திருத்தத் தூண்டியது. தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்ரம நடவடிக்கைகளுக்கு சுவாமிஜியைத் தவறாக உவமைக்காட்டிப் பேசிய பிழையையும். தேசபக்தியை அந்நியர் மீதான வெறுப்பாக மாற்றிக் கொள்ளும் மற்றொரு பிழையையும், திருத்தியது. சமயத்தை அடிப்ப டையாகக் கொள்ளாமல் தன்னல மற்றத் தொண்டாற்ற இயலாது என்ற ஞானோதயமும் கேதார்பாபுவிற்கு ஏற்பட்டது.

(மேலே அன்னையார் 'கம்பெனி ஆட்சி' என்று கூறியது. பிரிட்டிஷ் ஆட்சியை யாகும். 1857- க்குப் பிறகு பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முடிவுற்று இந்தியா நேரடியாக பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டாலும், பழக்கம் காரணமாக 'கம்பெனி ஆட்சி' என்று கூறுவது நீடித்தது)

ஒருசமயம் தூய அன்னையார், தமது உறவினர் களான சிலபெண்களுக்கு வழங்குவதற்காக கோல்பாரா ஆச்ரமத்தைச் சார்ந்த ஒரு பிரம்மசாரியிடம் ஆடைகள் வாங்கி வரப் பணித்தார். அந்தப் பிரம்மச்சாரி இந்திய நூற் பாலைகளில் நெய்யப் பெற்ற ஆடைகளை வாங்கி வந்தார். அந்த ஆடைகள் சற்று மென்மையில் லாமலும், கவர்ச்சியற்றும் இருந்தன. ஆடைகளை உறவினர்களான அந்தப் பெண்கள் விரும்பவில்லை. வேறு நல்ல உயர்தர ஆடைகளை மாற்றி கொண்டு வரு மாறு பிரம்மசாரியிடம் கூறினர். பிரம்மசாரி சுதேசிப் பொருள்களையே ஆதரிப்பவர். இதனால், அந்தப் பெண்களிடம் "நீங்கள் விரும்பும் ஆடைகள் அந்நியர் தயாரிக்கும் ஆடைகள் அவைகளை வாங்கு வதைப்பற்றி ஒருவர் சிந்திக்க முடியுமா?" என்று கேட்டார். இந்தப் பேச்சை அங்கு ஒரு மூலையில் அமர்ந்திருந்த அன்னை யார் கேட்டார். பிரம்மசாரியைப் பார்த்து புன்முறுவ லுடன் "என் மகனே! அந்நியர்களும் என் குழந்தைகளே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் பாரபட்சம் காட்ட முடியுமா? அந்தப் பெண்கள் விரும்பிய ஆடைகளை வாங்கி வரவும்'' என்று கூறினார். பிறருடைய உணர்வுகளைப் புண்படுத்தும் மனப் பான்மை இல்லாதவர், அன்னையார் ஆகையால் அன்றிலிருந்து அந்நிய ஆடைகளை வாங்கிவர அந்தப் பிரம்மச்சாரியை ஒரு பொழுதும் அனுப்பியதில்லை. வேறு யாரையாவதுதான் அனுப்புவார்.''

மேற்குறிப்பிட்ட இரு நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்ட வகையில் அன்னையார் வெளிப்படுத்திய உணர்வுகளும் குறிப்பிடத்தக்கன.

ஒரு கிராமத்தில் ஒருவருடைய மனைவிக்கும், சகோதரிக்கும் சிந்துபாலா என்ற பெயர்கள் அமைந்திருந்தன. சகோதரி சிந்து பாலா தாய்மைப் பேறு பெற்றிருந்தாள். காவல் துறையினர், சிந்து பாலாக்களில் ஒருவர் அரசாங்க எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று சந்தேக முற்று அவரை கைது செய்ய முற்பட்டனர். இரு சிந்து பாலாக் களில் எவர் கைது செய்யப்பட வேண்டும் என்பதில் பெயர் ஒற்றுமை காரணமாகக் குழப்பம் அடைந்த காவலர்கள் சகோதரி, தாய் இருவரையுமே கைது செய்தனர். அவர்கள் கிராமத்தில் இருந்து நகரத்தின் காவல் நிலையத்திற்கு வெகுதூரம் நடக்க வைத்தே அழைத்துச் சென்றனர். மனிதாபிமான மற்ற இந்தச் செயல் அன்னையாரிடம் தெரிவிக்கப்பட்ட பொழுது, அவர் வியப்பும் சீற்றமும் அடைந்து, உடல் பதற, கண்சிவக்க ஓங்கியக்குரலில், ''காவலர்கள், தாங்களாகவே இந்தச் செயலைச் செய்தார்களா? அல்லது கம்பனி ஆட்சி (அரசாங்கம்) யின் உத்திரவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில் செய்தார்களா? விக்டோரியா மகாராணியின் ஆட்சிக்காலத்தில் இத்தகைய சம்பவம் நிகழ்ந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. இந்தச் செயலிற்கு கம்பனி ஆட்சியுத்திரவுதான் காரணமென்றால். அந்த ஆட்சி விரைவில் ஒழிந்து விடும். அந்தப் பெண்களை அவ்வாறு அழைத்துச் சென்ற பொழுது காவலர்களை உதைத்து. பெண்களை விடுவித்துச் செல்ல அங்கு ஆண்மகன் ஒருவர் கூட இல்லையா?'' என்று முழங்கினார்.

சிறிது நேரம் கழித்து. அந்தப் பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பதை அறிந்ததும், அன்னையார், ''இந்தச் செய்தி எனக்குக் கிடைக்காமல் இருந்தால், இன்றிரவு எனக்கு தூக்கம். வந்திருக்காது'' என்று சமாதானம் அடைந்தார்.

மற்றொரு சமயம், அன்னையார் கோல்பாராவில் இருந்தக் காலத்தில் ஒரு பக்தர் பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்டுள்ள விஞ்ஞானச் சாதனைகளை அன்னையாரிடம் விவரித்துக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சைக் கேட்ட பிறகு அன்னையார். ''ஆனால், என் மகனே! நம்முடைய நாட்டில் உணவு, உடைகளுக்கான பெரிய தேவைகள் உள்ளன. இதற்கு முன்பு உணவுப் பற்றாக் குறை இல்லை'' என்று குறிப்பிட்டார்கள். இந்த நிகழ்ச்சி முதல் உலகப்போர் காலத்தில் [1914—18] நடந்தது.

ஆன்மிக உணர்வும், சமூகவுணர்வும் இராமகிருஷ்ணர் இயக்கத்தின் இரு கண்களாவன என்பதை பல்வேறு கோணங்களில் குருமகராஜ்-தூய அன்னை—சுவாமிஜி ஆகியோரின் மும்மூர்த்தித் தத்துவப் பார்வையில் தேர்ந்து தெளிய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர், சிகாகோ பயணத்தில் ஏற்பட்ட சோதனைகளையும், துன்பங்களையும் இந்திய நாட்டின் ஏழை எளிய மக்களின் துன்பத்துயரங்களைப் போக்க சுமந்துக் கொண்டார்.

''நான் மேல் நாடு செல்ல வேண்டுமென்றால், அதற்குரிய நன்கொடை இந்திய ஏழை எளிய மக்களிட மிருந்து திரட்டுங்கள்'' என்று சென்னைச் சீடர்களிடம் கூறியவர், சுவாமி விவேகானந்தர்.

## ஏழைமக்கள் விமோசனத்திற்கு சிகாகோ பயணம்

சிகாகோ பயணத்திற்கான, காரணத்தை சுவாமி விவேகானந்தர் தமது சகோதரத் துறவிகளான சுவாமி பிரம்மானந்தர், சுவாமி துரியானந்தரிடம் பிவருமாறு கூறியுள்ளார்.

''நான் இந்தியா முழுவதும் பயணம் செய்தேன். ஐயகோ! என் செய்வேன். சகோதரர்களே! மக்களின் கொடிய வறுமையை நேடுக்கு நேர் கண்களால் கண்டு துயருற்றேன். என் கண்களில் பெருகிய நீரைக் கட்டுப் படுத்த என்னால் முடியவில்லை. அவர்களுடைய வறுமையையும், துன்பங்களையும் அகற்ற முதலில் முயற்சி செய்யாமல், அவர்களிடம் மதத்தைப் போதிப் பது பயனற்றது என்பது என் உறுதியான முடிவாகும். இந்தக்காரணத்திற்கு வழிதேட நான் அமெரிக்கா சென்று கொண்டிருக்கிறேன்.''

ஏழைமக்கள் விமோசனத்திற்கு அமெரிக்கா செல் கிறேன் என்று சுவாமிஜி கூறியது வெறும் வாய்ச் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமன்று. சொந்த வாழ்க்கையில் வறுமைத்தீயின் நாக்குகள் அவரைச் சுட்டெரித்துள்ளன. துறவியாக அவர் இந்தியாவை முதன் முதலில் 1892-ல் வலம்வந்த பொழுது மாளிகைகளில் மட்டு மன்று, குடிசைகளிலும் தங்கியவர். ஏழை எளிய மக்களின் வறுமையை. ஏக்கங்களை, துன்பத்துயரங்களை நேருக்கு நேர் கண்டுணர்ந்து நெகிழ்ந்தவர். தேசிய சமுதாயம் குடிசைகளில் இருக்கிறது என்றும், ''ஏழை மக்களுக்காகக் கசியும் இதயத்தை மகாத்மா என்பேன்; மற்றவர்களை துரோகாத்மா'' என்றும் சாற்றியவர்.

சுவாமிஜி மேலை நாடுகளில் சுற்றுப் பயணம் செய்த காலத்தில் பாரதத்தில் புரையோடிப் போயிருந்த வறுமையை நினைத்து, நினைத்து உலக மாதாவிடம் தமது உள்ளக்குமுறலை பின் வருமாறு வெளியிட்டுள்ளார். ''தேவீ! இங்குள்ள மக்கள் மலர் மெத்தையில் படுக்கிறார்கள். இனிய பண்டங்களை உண்கிறார்கள். இவர்கள் நுகராதது ஒன்றுமில்லை. என்நாட்டு மக்கள் பட்டினியில் மடிகின்றார்கள். தாயே இதை மாற்றுவதற்கு ஒருவழி இல்லையா? நம் நாட்டு மக்களுக்கு உண்பதற்கு வழிதேடக் கருதி மேலை நாடுகளுக்கு வந்தேன்.''

''மாத்ரு தேவோபவ, பித்ரு தேவாபவ'' என்பதுடன் ''தரித்ர தேவோபவ, மூர்க்க தேவோபவ'' (ஏழை தேவனாகட்டும், மூடன் தேவனாகட்டும்) என்னும் புதிய மந்திரத்தையும் வழங்கியவர். பாமர மக்களை ஒதுக்கி வைத்தது தேசிய மகா பாவம் என்று முழங்கியவர். படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் சமய போதனை செய்வதைக் காட்டிலும் ஏழை மக்களுக்கு சமய போதனை செய்வதில் அதிகமாக ஆர்வம் காட்டுகிறேன் என்றும் பிரகடனம் செய்தவர். இவ்வாறு அடுக்கிக் கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லலாம். ஆன்மிக போதனையில் ஏழையின் பசியாற்றுதலுக்கும் இடம் தர வேண்டும் என வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் போன்று ஒழுகியவர் சுவாமிஜி.

சுகபோக அமெரிக்க வாழ்க்கை முறையைக் கண்ட நேரத்திலும் சுவாமிஜிக்கு இந்திய ஏழைமக்களின் வறுமை வாழ்க்கைதான் விழி நீர் பெருக்கியது. சுவாமிஜி சிகாகோ சாதனையாளராக பீடும் புகழும் பெற்று வாழ்க்கையின் உச்சக்கட்டத்தில் இருந்த பொழுதும் அவர் உணர்வும் உயிர் மூச்சும் இந்திய ஏழைகளைச் சுற்றியே வட்டமிட்டதை பின்வரும் செய்தி உணர்த்துகின்றது.

''ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் மேற்றிசையில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பொழுது, ஓரிரவு ஒரு தனவந்தருடைய வீட்டிறிற்றங்கி நிற்க நேரிட்டது. பார்த்த விடமெங்கும் மின்சார விளக்குகள் இலங்கை, இந்திரன் வாழும் அமராபதியோ எனச் சிறந்து விளங்கிய அவ்வீட்டிற் பதினைந்தடுக்கு மெத்தைகள் இடப்பட்ட சப்ரகோள மஞ்சத்தின் மீது சிறியதயர்ந்து நித்திரை செய்து கொண்டிருக்கும் பொழுது சுவாமிகளுக்கு இந்தியாவிலுள்ள சகோதரர்களுடைய எண்ணம் வந்தது. ஏழைகளுடைய துன்பத்தையும் வறுமையையும் நினைத்தார். கண்ணிலிருந்து வழிந்த கண்ணீர் தலையணையை முற்றிலும் நனையப் பண்ணிற்று. ''பாரத மாதாவின் மக்களாகிய எனது சகோதரர் வறுமைத் துன்பத்தினால் வருந்த நான் இந்த மஞ்சத்தின் மேற் படுத்தல் தகுமோ'' என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டு கீழே இறங்கித் துணியை விரித்துப் படுத்துக் கொண்டு இந்தயாவிலுள்ள ஏழைச் சகோதரருடைய துன்பத்தை நினைப்பதிலே இராப்பொழுது முற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்தனர்.'' [மா.பீதாம்பரன், 'விவேகானந்தன்'... மாத இதழ், 1925 கார்த்திகை-கொழும்பு -ப.17]

சுவாமி அபேதானந்தர், சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பயணத்தின் வரலாற்றுச் சிறப்பைக் குறித்துக் கூறியதாவது:

''கீழை நாட்டு அறிஞர் பெருமான் ஒருவர், அரசாங்கத்தின் உதவியில்லாமல், எந்த ஒரு சமய அமைப்பின் ஆதரவில்லாமல், முறையான அழைப்பு ஏதும் இல்லாமல் ஆழம் காணவியலாத கடலால் பிரிக்கப் பெற்ற இந்தியாவில் இருந்து மேற்கொண்டப் பயணம் நவீன இந்தியாவின் வரலாறறிலும், அமெரிக்காவின் சமய வரலாற்றிலும் முதன் முறையாக பதிவாகியுள்ளது.''

இவ்வாறு வரலாற்றுச் சாதனையாக அமைந்த சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பயணம் அவருக்கு மிகுந்த சோதனைகளையும் துன்பங்களையும் தந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. சோதனைகளும் துன்பங்களும் நிறைந்த கடற்பயணத்தால் கொலம்பஸ் 1492-ல் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். இதே வகையில் சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பயணம் 1893-ல் இந்து மதத்தின் தத்துவ செழிப்பை உலகறியச் செய்தது.

புடம் போட்ட பொன் ஒளி வீசுவதைப் போன்று சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பயணம் புத்தொளி வீசியது.

கடல் கடந்து செல்வதை ''பாபச் செயலாகக் கருதிய மூட நம்பிக்கை இந்து சமய ''சாத்திரங்களின்'' பெயரில் அக்காலத்தில் கொடுங்யகான்மை செய்யப் பெற்ற காலத்தில் சுவாமி விவேகானந்தர் கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடக்கும் பயணத்தை மேற்கொண்டார். இவருக்கு இவ்வழியில் முன்னே வழிகாட்டியவர்-புதிய இந்தியாவின் விடிவெள்ளியும், சுவாமி விவேகானந்தரால் பாராட்டப் பெற்ற வருமான பிரம்ம சமாஜத் தலைவர் ராஜாராம் மோகன்ராய் (1773-1833).

கடல் கடந்த பயணத்தை முடித்துக் கொண்டு கல்கத்தா திரும்பிய சுவாமி விவேகானந்தர் தட்சணே சுவரர் காளி கோயிலில் பகிஷ்கரிக்கப்பட்டச் சம்பவமும் நினைவு கூர்தற்குரியது.

சிகாகோ நகரைத்தை நெடிய கப்பற் பயணத்தின் உடற் சோர்வுடன் அடைந்ததும், சுவாமி விவேகானந்த ருக்கு மனச் சோர்வையும் சேர்த்திட்டச் சோதனையும் யும் ஏற்பட்டது. முதலாவதாக சர்வமத சபை எப் பொழுது கூடும் என்பதை அறியாத நிலையில் அங்கு வந்தப் பிறகு சர்வமத சபை செப்டம்பர் நடுவில்தான் கூடவுள்ளது எனும் செய்தி ஏமாற்றத்தைத் தந்தது. இரண்டாவதாக அங்கீகரிக்கப் பெற்ற அமைப்பின் ஆதாரச் சான்றில்லாமல் சர்வ மதசபையில் எவரும் பிரதிநிதியாக அநுமதிக்கப்பட மாட்டார். மூன்றாவதாக பிரதிநிதியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டிய கால கெடுவும் கடந்து விட்டது.

சுவாமிஜியின் பயணத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் சர்வமத சபையைப் பற்றிய விவரங்களை முறையாகச் கேட்டறிய வில்லை. இதனால் தமக்கு ஏற்பட்ட முதல் சோதனையைப் பற்றி 1894-ல் தமது சென்னைச் சீடர் ஒருவருக்கு எழுதியக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட் பிட்டுள்ளார்.

''சென்னைச் சிறுவர்கள் வற்புறுத்தியதை ஏற்று நான் சர்வமத சபைக்கு வந்தது முட்டாள் தனம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். அவர்கள் பார்க்கப் போனால், சிறுவர்களே. அவர்களுக்கு நான் என்றும் கடமைப் பட்டவன் தான், ஆனால் அவர்கள் எவ்வித நிருவாகத் திறமையில்லாத ஆர்வம் மிக்க இளைஞர்கள், எவ்வித ஆதாரச் சான்றுக் கடிதம் இல்லாமல் இங்கு வந்து விட்டேன்.''

சுவாமிஜிக்கு ஏற்பட்ட இந்த முதல் சோதனையைப் பற்றி பிற்காலத்தில் சகோதரி நிவேதிதா அவர்களும் கூறியதாவது:

''சுவாஜியும், அவருடைய சீடர்களைப் போலவே உலக நடைமுறைகளைப் பற்றி சாதாரணமாகவே அறிந்திருந்தார். தெய்வீக அழைப்பின் பேரில் செல்வதால் எவ்விதத் துன்பமும் வழியில் ஏற்படாது என்று உண்மையிலேயே அவர் நம்பினார். நிறுவனத்திறன்களைப் பெற்றிராத இந்து சமயத்தைப் போலவே, அதன் அறிவிக்கப்படாத பிரதிநிதியாக முறையான ஆதாரச் சான்றுகள் இல்லாமல் 'உலகச் செல்வத்தாலும் சக்தியாலும் வலுவான காவலுக்குட்படுத்தப்பட்ட கதவுகளைத் திறந்து உள்ளே நுழையச் சென்றார்.''

சுவாமிஜிக்கு ஏற்பட்ட இரண்டாவது சோதனை கைச்செலவுக்கான பணம் இல்லாமல் தவித்தது. அவரும், அவருடைய நண்பர்களும் நினைத்ததற்கு மாறாக அமெரிக்காவில் அன்றாட வாழ்க்கைச் செலவு மிக உயர்ந்து ஊதாரித்தனமாக இருந்தது. தமக்கு ஏற்பட்ட பண நெருக்கடியை விவரித்து 1893 ஆகஸ்ட் 20-ல் தமது சீடர் அழகிய சிங்கப் பெருமாளுக்கு பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்.

''நான் இங்கு செய்ய வேண்டிய செலவு மிக மோசமாக உள்ளது. 270 பவுண்டுகளை பணத் தாள்களாகவும் 29 பவுண்டுகளை நாணயங்களாகவும் என்னிடம் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தது உனக்கு நினைவிருக்கலாம். சராசரியாக எனக்கு நாளொன்றுக்கு ஒரு பவுண்டு பணம் செலவாகின்றது. நமது நாட்டு நாணய மதிப்பில் ஒருசிகரெட்டின் விலை எட்டணா ஆகும். பணத்தைத் தண்ணீர் போல் செலவு செய்கின்றார்கள். அவர்கள் இயற்றும் சட்டங்கள் காரணமாக பொருள்கள் விலையேறிக் கொண்டே போகிறது. உலகத்தில் வேறெந்த நாடும் இதை அணுக இயலாது. சாதாரண கூலியாள் நாளொன்றுக்கு ஒன்பது அல்லது பத்து ரூபாய் சம்பாதிக்கிறான். புறப்படுவதற்கு முன் நான் கொண்டிருந்த பசுமையான எண்ணங்கள் யாவும் கரைந்து போகின்றன. ஒத்துவராதவைகளை எதிர்த்து இப்பொழுது நான் போராட வேண்டியுள்ளது.

''இந்த நாட்டை விட்டு, இந்தியாவிற்குத் திரும்பி விடலாம் என நூறு தடவை எண்ணினேன். ஆனால் இறைவன் திருவுள்ளத்தை நினைத்து உறுதியாக இருக்கிறேன். நான் எந்த வழியையும் பார்க்கவில்லை. ஆனால் இறைவனுடைய வழி நடத்துதல் இருக்கின்றது. வாழ்வாயினும் சரி, சாவாயினும் சரி வந்த குறிக்கோளை நிறைவேற்ற உறுதியெடுத்திருக்கிறேன்.''

சிகாகோவில் இருந்த தியோசாபிகல் சொஸைடியிடம் பண உதவி கேட்கச் சென்ற சுவாஜிக்கு அங்கு ஏமாற்றம் காத்திருந்தது. தியோசாபிகல் சொஸைடியின் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதாக சுவாமிஜி ஒப்புக் கொண்டால் பண உதவி செய்வதாக ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. தியோசாபிகல் சொஸைடியின் பல கொள்கைககள் சுவாமிஜிக்கு உடன்படானதல்ல. பண உதவி பெறுவதற்காக தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ள சுவாமிஜி மறுத்து விட்டார். வேறுவழியில்லாமல் சென்னை நண்பர்களுக்கு பணம் அனுப்புமாறு கேட்டு தந்தி கொடுத்தார், சுவாமிஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோவில் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருந்ததால், வாழ்க்கைச் செலவு சற்று குறைவாக இருந்த பாஸ்டன் நகரில் வசதி குறைவைப் பொருட்படுத்தாது தங்கினார், சுவாமிஜி, பாஸ்டன் நகரில் அவர் பெற்ற அனுபவத்தைப் பற்றி தமது சீடர் அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதியக் கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''பாஸ்டன் நகரத்தருகே மூத்த பெண்மணியின் விருந்தினனாக இப்பொழுது தங்கியுள்ளேன். தற்செயலாக அவரை ரயில் வண்டியில் சந்தித்தேன். அவர் தம்முடன் வந்து தங்குமாறு அழைத்தார். அவருடன் தங்குவதால் எனக்கு ஒருநாள் செலவாவது ஒரு பவுண்டு மீதமாகின்றது. அவரும் தமது நண்பர்களை அழைத்து என்னை, இந்தியாவில் இருந்து வந்துள்ள ஓர் அதிசயமாகக் காட்டினார். இதையெல்லாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். பசி, குளிர். என்னுடைய விநோதமான உடை காரணமாக தெருக்களில் செல்வோர் பேசும் பேச்சுகள் முதலானவற்றை நான் எதிர் கொள்ள வேண்டியிருந்தது.''

அமெரிக்காவில் சுவாமிஜிக்கு கிடைத்த நண்பர்களில் பேராசிரியர் ரைட் என்பவர் ஒருவர். அவரிடம் சுவாமிஜி சர்வமத சபையில் கலந்துக் கொள்ள அநுமதி பெறுவதற்கு தம்மிடம் எவ்விதத் தகுதிச் சான்றும் இல்லை என்று தமக்கேற்பட்ட சோதனையைக் குறிப்பிட்டார். வியப்புற்ற பேராசிரியர் விண்டுரைத்தக் கருத்து சுவாமிஜியின் மேதாவிலாசத்தை உயர்த்திக் காட்டியது.

''சுவாமிஜி தங்களிடம் தகுதிச் சான்றுகளைக் கேட்பது. சூரியனிடம் அது ஒளி வீசுவதற்கு உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளதா? என்று கேட்பதற்கு ஒப்பாகும்'' என பேராசிரியர் பரவசமுடன் கூறினார். உண்மைப் புகழ்ச்சி யுரையுடன் அமையாமல் பேராசிரியர், சர்வமத சபையில் கலந்துக் கொள்ளும் பிரதிநிதிகளை தேர்வு செய்யும் குழுவின் தலைவர் டாக்டர் பரோஸுக்கு எழுதியக் கடிதத்தில், ''கற்றறிந்த நமது பேராசிரியர்கள் அனைவரும் சேர்ந்து அறிந்திருப்பதைக் காட்டிலும் கற்றறிந்த ஒருவர் இதோ இவர்தான்'' என்று தகுதிச் சான்றைப் பரிந்துரை செய்தார்.

சிகாகோ சென்ற பிறகும் சுவாமிஜிக்கு மீண்டும் ஒரு சோதனை துன்பத்தைத் தந்தது. சிகாகோ ரயில் நிலையத்தில் அந்தச் சோதனையேற்பட்டது. டாக்டர் பரோஸின் முகவரியை வழியில் தொலைத்து விட்டார். ரயில் நிலைத்தில் டாக்டர் பரேஸைப் பற்றி கேட்டறியவும் இயலதாயிற்று. ஏன் எனில் சுற்றுப் புறத்தில் ஆங்கிலம் அறிந்தவர் கிடைக்கவில்லை. அங்கு பெரும்பான்மையோர் ஜெர்மன் மொழிபேசுவோர் இருந்தனர். தங்குவதற்கு ஓட்டல் கிடைக்குமா என்றுகூட ஆங்கிலத்தில் கேட்டறிய மொழிவேற்றுமை தடையாய் இருந்தது.

தெய்வம், அடியார்களுக்கு விதிக்கும் சோதனைகளுக்கு தனிவரலாறேயுண்டு. அதுபோல் அன்று சுவாமிஜிக்கும் சோதனையேற்பட்டது. ரயில் நிலையத்தில் இரவில் தங்கி 'ஓய்வு' எடுப்பதற்கு அவருக்கு அப்பொழுது கிடைத்தது, சரக்குகள் ஏற்றுமிடத்தில் இருந்த காலியான ஒரு பெட்டிதான். சிகாகோ குளிரில் இருந்து தப்பிட சரக்குப் பெட்டியை விட்டால் வேறுகதியில்லை. சிகாகோ சர்வமத சபையில் வேதாந்தச் சிங்கமாக முழங்கப்போகும் சுவாமிஜி அன்றிரவு சரக்குப் பெட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைப்பட்டு முடங்கிக் கிடந்ததைவிட வேறு சோதனை வேண்டுமா?

ஒருவாறு இரவின் குளிரில் இருந்து தப்பிய சுவாமி ஜிக்கு பொழுது விடிந்தப் பிறகு வயிற்றுப் பசியும் விழித்துக் கொண்டது. சந்யாச தருமத்திற்கு ஏற்ப கையேந்தி உணவுயாசிக்கப் புறப்பட்டு விட்டார். அழுக் கேறிய ஆடைகள். மழிக்கப்படாது முகம் கொண்ட 'அதிசய' நிலையில் அவரைக்கண்ட வழிப்போக்கர்கள் அவரை நாடோடியாகப் பார்த்தனர். மாடமாளிகைகள் மட்டும் உயர்ந்திருந்த சாலைகளில், சுவாமிஜியை எவரும் கண்டு கொள்ளவில்லை. துறவு நெறியில் கையேந்துவது இழிவன்று; அது ஓர் ஆன்மிக நெறி யாகும் எனும் இந்து சமயப் பண்பாட்டை அறிய வாய்ப் பில்லாத அந்த மக்கள் சுவாமிஜியின் பசியடங்க ஏதும் செய்யவில்லை.

பசி மயக்கத்தில் களைத்துப் போய் நடைபாதை யோரத்தில் சாய்ந்து விட்டார், சுவாமிஜி. ஆன்மிகப் பசியடங்க வாரி வழங்க வந்த சுவாமிஜி. அன்று வயிற்றுப் பசியால் வாடியது யாருக்காக? எதற்காக? வையகம் உயர்ந்திட, இந்திய மக்கள் ஏழ்மை-வறுமை இனைல்கள் மாய்ந்திடவேயாகும்.

தெய்வ சோதனை நீடிக்காது. ''சோர்வும், துன்ப மும், தோற்பும் அறநெறி மாந்தர்கில்லை'' எனும் மகாகவி பாரதியின் சத்தியவாக்கு அப்பொழுது விளக்க முற்றது. நடைபாதையில் வீழ்ந்துக் கிடந்த இடத்திற்கு நேர் எதிரில் இருந்த வீட்டின் ஜன்னல் திறந்தது. ஜன்னல் மட்டும் திறக்கவில்லை. சர்வதத சபையின் தலைவாயிலை திறக்க வைத்ததும் அந்த வீட்டு ஜன்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறப்பே. ஆம்; அந்த வீட்டின் தலைவி ஹேல் அம்மையார் சுவாமிஜியின் பசியாற்றி, சிகாகோ சர்வமத சபைக்கு ஆற்றுப் படுத்தினார்.

சிகாகோ பயணத்தில் ஏற்பட்ட சோதனைகளும் துன்பங்களும் தங்கத்தை புடம் போட்டு ஒளிரச் செய்வதற்கு ஒப்பானவையாகும்.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் சாதனைகள்

1893 செப்டம்பர் 11-ல் திங்கட்கிழமை காலை பத்துமணி அளவில், சிகாகோ நகரத்தின் மிச்சிகன் அவென்யூவில் கலை நிறுவனத்தின் கொலம்பஸ் மன்றத்தில் சிகாகோ சர்வமத சபை கூடியது. செப்டம்பர் 11 முதல் பதினேழு நாட்கள் தொடர்ந்து செப்டம்பர் 27 வரையில் நடைபெற்ற சிகாகோ சர்வமதசபை, உலக சமய வரலாற்றில் முதன் முறையாகக் கூட்டப் பெற்ற சர்வமத சபையாகும்.

சர்வமத சபையின் பல்வேறு அமர்வுகளில் மதங்களைப் பற்றி மட்டுமன்று, சமூகம், கலை, விஞ்ஞானம், மானுட நேயம், நீதி நெறிகள் முதலானவற்றைப் பற்றியும் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன.

கிறித்துவ மதத்துடன், பிற உலக சமயங்கள் எட்டும் சர்வமத சபையில் பிரதிநிதித்துவம் பெற்றன. இந்து சமயம், சமணம், பௌத்தம், யூதமதம், கன்பூஷியஸ் மதம், ஷிண்டோ மதம், ஜராதுஷ்ட்ரர் மதம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் ஆகிய எட்டு மதப் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

சுவாமி நிகிலானந்தா, சுவாமி விவேகானந்தரின் பிரதிநிதித்துவச் சிறப்பைப் பற்றி பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

''சுவாமி விவேகானந்தர் எந்தக் குறிப்பிட்ட சமய உட்பிரிவின் பிரதிநிதியாகக் கலந்துக் கொள்ளாமல் வேதங்கள் கூறும் அனைத்துலக சமயத்தின் பிரதிநிதியாகக் கலந்துக் கொண்டார். மானுடம் முழுவதற்குமான சமயப் பேரார்வத்தைப் பற்றிப் பேசினார்.''

''கிழக்கிற்கு ஒரு செய்தியை புத்தர் கொண்டு சென்றது போல், மேற்கிற்கு நான் ஒரு செய்தி கொண்டு செல்கிறேன்'' என்று சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வ மத சபைக்கு சென்றது தொடர்பாகக் கூறினார்.

முதல் நாளிலேயே சிகாகோ சர்வமத சபையில் அவருடைய சாதனை அரங்கேறிவிட்டது. ''நடமாடும் சர்வமத சபை''யாக வாழ்ந்து காட்டிய இராமகிருஷ்ண பரமஹம்சரின் தலையாயச் சீடர் சுவாமி விவேகானந்தர். சிகாகோ சர்வமத சபையின் பெரிய மேடையில் சொலல் வல்லார் பலர் முந்திய அனுபவச் செழிப்புடன் குழுமி யிருந்தனர். சுவாமிஜி அத்தகைய ஒரு பொது மேடை யில் இதற்கு முன் ஏறியவர் அல்லர். மேடைப் பேச்சின் அனுபவச் செழிப்பும் பெறாதவர். அன்றையப் பேச்சா ளர்கள் பலரைப் போல் திட்டுமிட்டு பேருரையை எழுதிக் கொண்டு வரவும் இல்லை. பேச அழைக்கப்பட்ட பொழுது, பிறகு பேசுகிறேன் என்று தயங்கியவர். இவ்வளவு நெருக்கடிகளுக்கிடையே பேச எழுந்து வந்த சுவாமி விவேகானந்தர் தமது உரையின் தொடக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் சிலவற்றிலேயே அவையோரின் பாராட்டு தலை, பிற பேச்சாளர்கள் எவரும் அன்று பெறத்தவறிய பாராட்டுதலை, பெற்றது சிகாகோ சர்வமத சபையில் அவருடைய முதல் சாதனையாகும்.

சர்வமத சபையின் விஞ்ஞானப் பகுதி அமர்வு ஒன்றில் சுவாமி விவேகானந்தர் பேசியக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மேர்வின் மேரி ஸ்நெல் என்பவர் 'பயனீர்' எனும் இந்தியப் பத்திரிகையில் எழுதியக் கட்டுரையில் சுவாமி விவேகானந்தர் பேச்சாற்றலின் சாதனையைப் பற்றிக் கூறியதாவது:

''அவர் அங்கே கூடியிருந்த சபையோர் யாவராலும் புகழ்ந்து கொண்டாடப் பெற்றார். நான் அக்கிராசனம் பெற்றிருந்த சாஸ்திர சபையிலும் ஏனைய சபைகளிலும் அடுத்தடுத்துப் பன்முறை பிரசங்கஞ் செய்தார். ஒவ்வொரு முறையிலும் சனங்கள் திரண்டு கூடி அத்தியந்த ஆராமையோடும் சிரத்தையோடும் கேட்டார்கள். இத்துணைச் சிரத்தை ஏனைய கிறிஸ்த பிரசாரகர்கள் முதலிய பிறமதப் பிரசாரர்கள் செய்த பிரசங்களின் மீது காணப்படவில்லை.'' (மேற்கோள்; இலங்கையில் சுவாமி விவேகானந்தர்-1963- ச. அம்பிகைபாகன் -பக். 1-2)

''மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்'' என்றாரே பாரதியார் அதன் நடமாடும் இலக்கியமாக சர்வமத சபையில் பொலிவுற்றார். அந்த மந்திரச் சொற்கள் எளிமையானச் சொற்கள் தாம். ஆனால் ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் பிறந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' எனும் தொல்காப்பிய இலக்கணத்திற்கு, இலக்கியச் சொற்களாக அமைந்தன, அந்த மந்திரச் சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அமெரிக்க நாட்டு சகோதரிகளே, சகோதரர் களே'' எனும் ஆத்மார்த்தமான சொற்கள்தாம், அந்த மந்திரச் சொற்கள். இவருக்கு முன்பு பேசியவர்கள், மேடைப் பேச்சிற்கேயுரிய சம்பிரதாயமான முறையிலே 'கனவான்களே! சீமாட்டிகளே!' என்று தான் தொடங்கி னார்கள். அதில் எந்தப் புதுமையையும் அவையோர் காணவில்லை. ஆனால் சுவாமிஜியின் தொடக்கச் சொற் களிலே ஆன்ம நேயம், மனித நேயம், சமூக உறவு நேயம் முதலான பல நேயங்களை நயந்து ஒருமைப்பாட்டுணர் வில் தோய்ந்தனர். இஃதோர் அற்புத சாதனையாக நவில் தோறும் புதுமையாகப் பேசப்பட்டு வருகிறது.

சர்வமத சபையின் ஆதார சுருதியான சர்வமத சமரச நோக்கை சுவாமிஜி, இந்து சமயத்தைக் கொண்டு விளக்கி, உலக அரங்கில் வேதாந்த சமயக் கொடியை பட்டொளி வீசப் பறக்கவிட்டதும் சாதனையாகக் கொண்டாடப்பட்டது, இந்து சமயத்தினரால்.

''பிறருடைய கொள்கையை வெறுத்து ஒதுக்காத பண்புடைமை, அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ளு கின்ற பொது நோக்கு என்ற இரண்டினையும் உலகிற்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமை பாராட்டுகின்றேன். எல்லாச் சமயங்களையும் அன்பி னோடு நோக்குகின்ற பண்புடைமையிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அது மாத்திரமல்ல, எல்லாச் சமயங் களையும் உண்மை மார்க்கங்களென நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்'' என்று சுவாமி விவேகானந்தர் ஒருவரால் தான் சாற்றிட முடிந்தது. 'நடமாடும் சர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதசபை'யில் பெற்ற அரிய பயிற்சியல்லவா, அவரை அவ்வாறு பேசவைத்தது.

''இன்று காலையிலே இந்த மகாசபை கூடும் பொழுது அடித்த மங்கல மணியோசையானது, மூடக் கொள்கைகளை மாய்க்கும் மணியோசையாகுக. வாளினாலோ, எழுது கோலினாலோ ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ் செயலானது அகன்று விடுக. ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்லுகின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக.'' இவ்வாறு பேச்சின் முத்தாய்ப்புக் கருத்துகள் முகிழ்த்தன. அவையோரின் மனசான்றிற்கு தூண்டுதல் அளித்தன.

செப்டம்பர் 15-ல் அவருடைய சொற்பொழிவு முதல் நாளைப் போலவே எழுதிப்படிக்கப்படாமல், தன்னிச்சையாகப் பெருக்கெடுத்தது. இரண்டாம் நாள் சொற்பொழிவில் இந்திய நாட்டின் நாட்டுப் புறப் பண்பாட்டுக் கதையொன்று ஆட்சி செலுத்தியது. ''யாம் உடன்படாதிருப்பது ஏன்?'' எனும் தலைப்பில் பேசிய பொழுது, உடன்படாமல் இருப்பதற்கு கிணற்றுத்தவளை மனப்பான்மைதான் காரணம் என்பதை கதை வாயிலாக விளக்கினார்.

கடல் தவளைக்கும், கிணற்றுத் தவளைக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை கதை விவரித்தது. கடல் தவளை கடலின் பெரும் பரப்பை எடுத்துக் கூறிய பொழுது, கிணற்றுத்தவளை நம்ப மறுத்தது; கடல் தவளையை பொய்யன் என்று முடிவு செய்து விரட்ட நினைத்தது. குறுகிய மதப்பற்று, கிணற்றுத் தவளைக்கு உவமையாயிற்று. விரிந்து பரந்து கிடக்கும் கடல் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய உணர்வின் தேவையை கடல் தவளையின் பேச்சு எடுத்துக்காட்டியது.

வலிமை மிக்க உபநிடதக்கருத்துகளை காலத் தேவைக்கு ஏற்ப வழங்குவதில் வல்லமை காட்டும் திறமை பெற்ற சுவாமி விவேகானந்தர், ''பூமைய்வ சுகம், நஅல்ப சுகம் அஸ்தி'' எனும் உபநிடதப் பேருண் மையை [பேரானந்தம் விரிந்து பரந்து இருப்பதில் உள்ளது; சுருங்கிச் சிறிதாய் இருப்பதில் அன்று) விளக்குவது போல் ''விரிவடைதல் வாழ்க்கை, சுருங்குதல் இறப்பு, என்பதை விளக்குவதுதான் கிணற்றுத் தவளைக் கதை என்பதையும் எடுத்துரைத்தார்.

ஆங்கில மொழியை ஏவல் கொள்ளும் புலமையையும், சிந்தனைத் தெளிவும், இசைக் கோவை போன்ற சொல்லடுக்கும் சுவாமிஜியின் பேருரையை அலங்கரித்தன. கேட்போர் பரவசமானதில் வியப்பில்லை.

சுவாமிஜி பேச்சாற்றலின் சாதனையை அமெரிக்கப் பத்திரிகைகள் பாராட்டின. சிகாகோ சர்வமதசபை நடவடிக்கைகளைப் பற்றி பிற்காலத்தில் விமர்சனம் செய்து எழுதிய ''நார்த்தாம்டன் டெய்லி ஹெரால்ட்'' எனும் பத்திரிகையில் (ஏப்ரல் 11, 1894) சுவாமிஜியின் நாவன்மை பின் வருமாறு பாராட்டப் பெற்றுள்ளது.

''நிகழ்ச்சி நிரலில் விவேகானந்தர் பேச்சு இறுதியில் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு முன் அவரை பேச அழைப்பதில்லை. காரணம் என்னவெனில், கூட்டம் முடியும் வரை மக்கள் கலையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஒருநாள் ஒரு பேராசிரியர் கேட் போர்க்குச் சலிப்பேற்படும் வகையில் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். கூட்டம் நூற்றுக் கணக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையத் தொடங்கியது. இதைத் தடுத்த நிறுத்த அப்பொழுது ஓர் அறிவிப்பு தேவைப்பட்டது. அந்த அறிவிப்புதான். "விவேகானந்தர் பேசவிருக்கின்றார்' எனும் அறிவிப்பு. இந்த அறிவிப்பு வெளியேறிக் கொண்டிருந்தோரை அவரவர் இருக்கைகளுக்கு திரும்பச் செய்தது. குறிப்பிடத்தக்க மனிதரான விவேகானந்தரின் பதினைந்து நிமிடப் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் பலமணி நேரங்கள் காத்திருந்தனர்." [19]

> "விவேகானந்தரின் பதினைந்து நிமிடப் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் பல மணி நேரங்கள் காத்திருந்தனர்" எனும் பாராட்டுரை சுவாமிஜியின் சிகாகோ சாதனைகளில் ஒன்றாகும்."

சிகாகோ சர்வமத சபையில் எழுதிப் படிக்கப்பெற்ற சுவாமிஜியின் பேருரை, "இந்து சமய ஆய்வு" —Paper on Hinduism— என்பதொன்றேயாகும்.

"செப்டம்பர் 19-ல் நிகழ்த்தப்பட்ட இந்தப் பேருரையின் வரலாற்றுச் சிறப்பைப்பற்றி மகாகவி பாரதியார் ஆசிரியராக விருந்த 'பால பாரதா' எனும் ஆங்கில இதழில் வெளிவந்த கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

> "அன்று மீண்டும் இந்து மதத்தின் வரை
> விலக்கணம் எழுதப் பெற்றது. அன்று
> அதே நாளில் இந்திய தேசியத்தின்
> விதைகள் தூவப்பட்டன."

(பாலபாரதா-தொகுப்பு-1 1908-ப 150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் அன்றையச் சொற்பொழிவில் ஒருங்கிணைப்புத்தத்துவ நோக்கு மிளிர்ந்தது. கிழக்கு-மேற்கு; வேத சமயம்-உலக சமயம்; விஞ்ஞானம்-சமயம்; சடப்பொருள்-மனம்: மானுட மேம்பாடு-ஆன்மிக உரிமை வேட்கை முதலான இரு நோக்குகளை ஒருங்கிணைத்து உலகளாவிய சமய நெறிக்கு ஆக்கம் அளித்தார், சுவாமிஜி.

அவருடைய ஆய்வுரையின் அடிப்படையானக் கருத்தோட்டத்தை பின் வருமாறு சுருக்கிக் கூறுவர், ஆய்வாளர்கள்.

''ஒவ்வொரு ஜீவான்மாவும் உள் நிறைந்தத் தெய்வத் தன்மையுடையது. அகத்தேயும், புறத்தேயும் சார்ந்து நிற்கும் பிரகிருதியை அடக்கி, உள் நிறைந்தத் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயங்களின் நோக்கமாகும். கருமம், பூசனை, பிராணனை லயப்படுத்துதல், ஞான நூலாராய்ச்சி-என்னுமிவற்றில் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, யாவற்றினாலுமோ இதனைச் செய்து நிறைவேற்றிச் சுதந்திரமாக இருக்கவும். இதுவே சமயத்தின் முழு உண்மை. கொள்கைகளும், கருமங்களும், கோயில்களும், பிறவும் இதற்கு உதவி செய்யும் சாதனங்களாய் அமைந்து நிற்பன.''

''ஒவ்வொரு ஜீவான்மாவும் உள்நிறைந்தத் தெய்வீகமாகும்'' என்று சர்வமத சபையில் முழங்கியதற்கு காரணம் உள்ளது. கிறிஸ்துவ சமயத்தில் ''முதல்பாவம்'' (Original sin) பெரிதும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இயேசு கிறிஸ்துவின் அருளால் சாப விமோசனம் பெற்று வீடுபேறு பெறுவதோ, நரகத்தில் வீழ்வதோ ''முதல் பாவம்'' எனும் கொள்கையோடு தொடர்புடையதாகக் --படுகின்றது. இவ்விடத்தில் இராமகிருஷ்ண இயக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவி சுவாமி சிரத்தானந்தா அவர்கள் எழுதியுள்ள "வேதாந்தமும் முதல்பாவமும்" எனும் கட்டுரையின் பின்வரும் பகுதி கவனிக்கத்தக்கது.

"முதல் பாவம்" பற்றியக் கொள்கைக்கு தெளிவான ஆதரவு பைபிளின் பழைய ஏற்பாட்டிலோ அல்லது இயேசு கிறிஸ்துவின் போதனைகளிலோ இல்லை என்று பைபிள் ஆய்வாளர்கள் பலர் கருதுகின்றனர். யூதர்களின் கடவுள் அருள்வெளிப் பாட்டிற்குரிய மரபுகளில் இருந்து புனித பால் அவர்கள் இந்தக் கொள்கையை எடுத்துக் கொண்டார்கள்... கி.பி.ஐந்தாம் நூற்றாண்டின் முதல் பாதியில் புனித அகஸ்தீன் 'முதல் பாவம்' பற்றியக் கொள்கைக்கு அசைக்க முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டார்." [9]

உலகெங்கும் கிறிஸ்துவ சமயத்தால் பரப்பப்பட்டு வரும் இந்த 'முதல்பாவம்' கொள்கைக்கு மாற்றாக சுவாமி விவேகானந்தர் தமது ஆய்வுரையில், தெய்வீக, அமரத்துவ ஆத்மதத்துவத்தை விளக்க ரிக்வேத மந்திர மொன்றையும், உபநிடதமொன்றையும் எடுத்துக் கொண் டார்.

ரிக்வேதத்தில் (9-93-19), "ஸ்ருண வந்து விஸ்வே அம்ருதஸ்ய புத்ரா: ஆயதோ மாணி திவ்யாணி தஸ்து.:" எனும் மந்திரத்தை எடுத்துக் கொண்டார். இதன் பொருள், "அழிவற்ற அமரர்களாகிய அனைத்து மக்களே கேளுங்கள்; தெய்வீக இயல்பின் உடைமையாளர்களே" என்பதாகும், சுவேதாஸ்வதரா உபநிடதத்திலும், 'அழிவற்ற அமரர்களாகிய அமிர்தத்துவமாகிய ஆனந் தத்தின் மக்களே' தெய்வீக இயற்கைகளின் உடைமை யாளர்களே, என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதர்வண வேதத்திலும், மனிதனுடைய உடல் படைக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, தெய்வங்கள் அவனுள்ளே நுழைந்தன'' என்று கூறப்பெற்றுள்ளது. இவற்றையெல்லாம் நினைவுறுத்தும் வகையில் சுவாமிஜி பேசியதாவது:

''அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தினது மக்களே''-இது, எவ்வளவு இனிமையும் மனத்திற்கு நம்பிக்கை தருகின்ற பெயராக விருக்கிறது. 'சகோதரர்களே' அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற்கு உரியவர்களென்றும் அந்த இனிய பெயரில் நான் உங்களை அழைப்பதற்கு அனுமதி தருவீர்களாக-நீங்கள் கடவுளுடைய மக்கள். அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற்குப் பங்கு உடையவர்கள். பரிசுத்தம் பொருந்திய பூரணர்கள். உலகிலே தெய்வங்களாக விருக்கிற நீங்கள் பாவிகளா! ஒரு மனிதனை அவ்வண்ணம் அழைப்பது பாவமாகும். மனித இயற்கைக்கு அஃது ஒரு நிலையற்ற பழிச் சொல்லாகும்.''

''ஓ! பாவிகளே! ஓ! பாவிகளே!'' என்று கேட்டுக் கேட்டுப் பழகிப் போன செவிகளுக்கு, ''அமிர்தத்துமாகிய ஆனந்தத்தினது மக்களே!'' எனும் தெய்வீக அழைப்பு புதிய சிலிர்ப்பைத் தந்தது. ''ஓபன் கோர்ட்'' எனும் பத்திரிகையில் (அக்டோபர் 12,1893) ஒரு கவிதையே வெளிவந்தது. அந்தக் கவிதையின் கருத்து வருமாறு:

''ஆரஞ்சு வண்ண உடையில் அழகுமிக்க ஓர் இந்து துறவியின் பேச்சைக்கேட்டேன். நாளுடம் முழுவதும் கடவுளின் அம்சம் என்றார். நாம் பாவிகள் அல்லர் என்றார் இதைக் கேட்டதும் ''மீண்டும் கூறுக!'' என்று குரல் தந்தேன். சர்வ மத சபை அக்கூற்றை ஏற்றுக் கொண்டு ஆரவாரம் செய்தது''[21]

சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்ட ''அம்ருதஸ்ய புத்ரா:'' என்பதைக் குறிப்பிட்டு சுவாமி சிரத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னந்தா, முற்கூறிய, தமது கட்டுரையில் எழுதிய தாவது.

''முதல் பாவம்'' என்பதற்குப் பதிலாக ''தொடக்க மில்லாத அறியாமை'' என்பதை ஒரு மாற்றாக வேதாந்தம் கூறுகின்றது... நம்முடைய உண்மைத் தன்மையை மறைத்திருக்கும் அறியாமை, ஆத்ம போதம் தோன்றியவுடன் மறைந்து போய் விடுகிறது. வழிபாடு பிரார்த்தனை, தியானம் முதலான பல ஆன்மிகப் பயிற்சி முறைகள், ஆத்ம போதத்திற்குரிய சாதனங்களா கின்றன. இந்தக் கண்டு பிடிப்பால் மனிதன் பூரணத்து வத்தை எய்துகின்றான்; எல்லையற்ற இருப்பை அடை கின்றான்; ஞானத்தையும் பேரின்பத்தையும் பெறு கின்றான். இது, வேதாந்தம் காட்டும் விமோசனம்''.

சமயம் என்பதற்கு சுவாமிஜி அளித்துள்ள பின்வரும் வரைவிலக்கணத்திலும் ''அம்ருதஸ்ய புத்ரா,'' என்னும் வேத முழக்கத்தின் எதிரொலியைக் கேட்கின்றோம்.

''மனிதனுக்குள் ஏற்கனவே உறைந்துள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயம்.''

மூன்றாவது பேருரையில் சுவாமிஜி விஞ்ஞானத்திற் கும் சமயத்திற்கும் இடையே உள்ள ஒட்டுறவையும் விளக்கியுள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு:

''விஞ்ஞானம் என்பதே ஒற்றுமையைக் கண்டறி வதேயாகும். பூரணமாகிய ஏகத்துவத்தை கண்டடைந்த வுடனே விஞ்ஞானம் தனது எல்லையை அடைந்து மேற் செல்லாது நின்றுவிடும். எந்த ஒரு பொருளில் இருந்து மற்றெல்லாம் பொருள்களும் ஆக்கப்படுகின்றனவோ அதனைக் கண்டு பின்னர் வேதியல் முன்னேற் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை யொழித்து நின்று விடும். எல்லா வலிமைகளும் தோன்றுவதற்கு மூலமாக விருக்கின்ற ஒருவலிமையைக் கண்டவுடனே இயற்பியல் தன் து தொழிலை முடித்துக் கொண்டு நிலைபெற்று விடும். ஈரணமே காட்சியாக விருக்கின்ற பிரபஞ்சத்திலே நிலை பெற்ற ஓரே உயிராக வுள்ள ஒருவனைக் கண்டறிந்தவுடனே சமய ஆராய்ச்சியும் முழுநிறைவு பெற்றுவிடும். அவ்வொருவனே என்றும் மாறுதலடைகின்ற உலகத்திலே மாறுபாடின்றி நிலை பெற்ற ஆதாரமாயிருப்பவன். எல்லா ஆன்மாக்களும் தோற்றத்தளவில் வேறு வேறாகக் காணப்படுவதற்கு இடமாக நின்ற ஒரே ஆத்மா அவனே. பன்மை, இருமை ஆகிய இவற்றினைக் கடந்து முடிவாகிய ஒருமை அடையப்படுகின்றது. சமயம் அதற்கு அப்பாற் செல்ல மாட்டாது. இதுவே அனைத்து விஞ்ஞானத்தின் இலக்காகும்.''

ஒன்றுக்கொன்று ஆதாரமாக சமயமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைய வேண்டும் என்ற சிந்தனையை ''இக்காலத்திற்கு மிகப் பெரிய நன்கொடையாக சுவாமி விவேகானந்தர் வழங்கியுள்ளார்'' என்று சுவாமி ரங்கநாதானந்தா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உருவ வழிபாட்டிலிருந்து அருவ வழிபாட்டிற்கு ஆன்மிக யாத்திரை மேற்கொள்வது, ''தவறில் இருந்து உண்மைக்குச் செல்லுவதாகாது. உண்மையில் இருந்து உண்மைக்குச் செல்லுவதாகும். அதாவது தாழ்படியில் உள்ள உண்மையில் இருந்து உயர்படியில் உள்ள உண்மைக் குச் செல்லுவதாகும்.'' என்று விளக்கமளித்தார். சுவாமிஜி.

சமய அடிப்படைவாதமும், பிற மத வழிபாட்டைக் கண்டித்து வெறுப்பூட்டும் பிரசாரமும் ... மதத்திற்

குரியதன்று என்பதைப் பற்றியும் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

''உருவங்களும், சிலுவைகளும், இளம் பிறைகளும் குறியீடுகள் மாத்திரமாக இருக்கின்றன. ஆன்மிக எண்ணங்களைத் தொங்க விடுவதற்கு கொழுக்கள் போன்றிருக்கின்றன. இத்தகைய உதவி அனைவருக்கும் வேண்டப்படுவதல்ல. ஆயினும் அதனை வேண்டாதவர் வேண்டி நிற்போரை நோக்கி அவர் செல்லும் வழி தவறு எனக் கூறுவது முறையாகாது. மேலும் இவை இந்து சமயத்திற்கு இன்றியமையாதனவுமல்ல... இந்துக்கள் மட்டுமே முக்தியடைவார்கள், பிறர் அல்லர் என்னும் கருத்தமைந்தச் சொற்களை, சம்சுகிருதத் தத்துவங்கள் முழுவதிலும் தேடிப்பார்த்தால் காணமுடியாது. இவ்வுண்மையை ஏற்க மறுப்பவரை நான் வாதிட அறை கூவி அழைக்கிறேன்.

''புனிதத் தன்மை, தூய்மை, அருளிரக்கம் ஆகிய உலகத்தில் உள்ள எந்த ஒரு தனிமனிதனுக்கோ அல்லது சமய அமைப்பிற்கோ தனியுடைமை ஆகாது. பண்பார்ந்த ஒழுக்க மேம்பாடுடைய ஆண்-பெண்களை ஒவ்வொரு சமய அமைப்பும் உலகிற்கு அளித்துள்ளது.''

சிகாகோ சர்வமத சபையில் மட்டுமன்று, தொடர்ந்து பேசிய பல்வேறு பேருரைகளிலும் உலகளாவிய சமயத்தின் (Universal Religion) தேவையை வற்புறுத்தியுள்ளார். சுவாமிஜி, இவ்வழியில் 1900-ல் அமெரிக்காவில், கலிபோர்னியாவில், ''உலகளாவிய சமயத்தை மெய்யாகக் காண்பதற்கு உரிய வழிமுறை'', ''உலகளாவிய சமயத்தின் இலட்சியம்'' எனும் இரு சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார், சுவாமி விவேகானந்தர். முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவில் அவருடைய உலகளாவிய சமய நோக்கு பின்வருமாறு சமரச ஞானக்காட்சியாக விரிந்தது.

"...எதிர் காலத்தில் தோன்றப் போகும் சமயங்களுக்கும் என் இதய வாயிலைத் திறந்து வைப்பேன். கடவுளுடையப் புத்தகம் முற்றுப் பெற்று விட்டதா? அல்லது தொடர்ந்து ஞானக் காட்சிகளை வெளிப்படுத்திக் கொண்டே செல்லுகிறதா? உலக ஞானக்காட்சிகளை வெளிப்படுத்தும் இந்தப் புத்தகம், அற்புதமானப் புத்தகம், வேதம், பைபிள், திருக்குரான் மற்றும் பிற அனைத்துப் புத்தகங்களில் மிகப் பலபக்கங்கள், இன்னமும் திறந்து வைக்கப்படாமல் எஞ்சியுள்ளன. அந்தப் பக்கங்கள் அனைத்தையும் திறந்து வைக்க நான் விட்டு விடுகின்றேன்."

'இந்து சமய ஆய்வு' எனும் இந்தப் பேருரையின் இறுதியில் சமரசக் கொடி ஏந்திச் செல்ல அனைத்து மதங்களும் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். "சமரசமென்னும் கொடியினை, நாகரிகத்தின் முன்னணிப் படையிலே ஏந்திச் செல்ல வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார். இந்த முன்னணிப் படையின் அணி வகுப்பில் ஆன்மிக வீரம் மட்டுமே செங்கோலோச்சும். சமரசக்கொடியை ஏந்தும் கரங்கள் "அயலாருடைய ரத்தத்திலே தோய்க்காது", "அயலாருடைய செல்வத்தைக் கொள்ளையடித்து குறுக்கு வழியில் செல்வம் சேர்க்காது" என்று குறிப்பிட்டு வன்முறையும், சுரண்டலும் சமய சமரசத்திற்குரியன அல்ல என்பதையும் திட்டவட்டமாகத் தெளிவுப்படுத்தினார். வேதாந்த சமயத்தை உலகளாவிய சமயமெனப் பிரகடனப் படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்டவாறு, உலகளாவிய சமய நெறியின் தேவையை, வேத சமயம், பௌத்தம், சமணம், கிறித்துவம், இஸ்லாம், ஜராதுஷ்டிர மதம், யூதமதம் முதலான பல மதக்கருத்துகளையும், மேற்கோள்களாக எடுத்துக்காட்டி வலியுறுத்தியதில் சுவாமிஜி தன்னிகரற்று விளங்கினர். இது, அவருடைய சர்வமத சபையில் நிகழ்த்திய மற்றொரு சாதனையாகும்.

சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜியின் நான்காவது சொற்பொழிவாக ''இந்தியாவின் இன்றியமையாதத் தேவை, சமய போதனையன்று'' Religion not the crying need of India) எனும் சொற்பொழிவு அமைந்தது. இது, செப்டம்பர் 20-ல் நிகழ்த்தப்பட்டது. இந்தச் சொற்பொழிவு சற்று வித்தியாசமானது இந்திய ஏழை எளிய மக்களின் வறுமையைத் தங்கள் மதமாற்ற முயற்சிகளுக்கு கிறித்துவ மிஷனரிகள் பயன்படுத்துவதை அம்பலப்படுத்தி அவர்களிடம் எதிர்பார்க்கப்படுவது மத போதனையன்று, உள்நோக்க மற்ற உதவியே என்பதை தெளிவுப்படுத்தியுள்ளார், இந்தச் சொற்பொழிவில்.

இந்தச் சொற்பொழிவு சுவாமிஜியின் உரைத்தொகுப்பில் மிகச் சுருக்கமாக பத்து வரிகளில் வெளியாகியுள்ளது. மேரிலூயிக் பர்க் அம்மையார் தமது கண்டு பிடிப்பில் இந்தச் சொற்பொழிவு முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லையென்று எடுத்துக் காட்டியுள்ளார். இதற்குரியச் சான்றாக அக்டோபர் 11, 1893-ல் வெளிவந்த அமெரிக்கப் பத்திரிகையான 'கிறிஸ்டியன் ஹெரால்ட்'டில் வெளிவந்த இந்தச் சொற் பொழிவுத் தொடர்பான கட்டுரையை எடுத்துக் காட்டியுள்ளார். அந்தக் கட்டுரையின் பின்வரும் மேற்கோள், சுவாமிஜியின் தொகுப்பு நூலில் வெளிவரவில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கிறிஸ்த்துவ மிஷனரிகள் வந்து உதவி செய்கின்றார்கள். ஆனால் அதுவும் நிபந்தனையின் பேரில் தான். அதாவது ஓர் இந்து, தனது மூதாதையர்கள் பின்பற்றி வந்த நம்பிக்கையைத் துறந்து கிறிஸ்துவரானால்தான் உதவி பெறமுடியும். இது சரிதானா? நீங்கள். 'சகோதரத்துவம்' என்ற சொல்லிற்கு விளக்கம் தர விரும்பினால், இந்து சமயப் பற்றுள்ள இந்துவிடம் மிகுந்த அன்பு காட்ட வேண்டும். மிஷனரிகளை அனுப்புங்கள்; அவர்கள் பசிக்கு ஒரு பிடிசோறு எப்படி பெற வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லித் தாருங்கள்; ஆனால், அவர்களிடம் சென்று சமய நுட்பங்களை போதிக்கும் முட்டாள் தனத்தைக் காட்டாதீர்கள்.''

இந்தப் பேருரையில் தமது சிகாகோ பயணத்தின் நோக்கத்தைப் பற்றியும் பின்வருமாறு தெளிவும் படுத்தியுள்ளார்.

''நான் இங்கு என்னுடைய நாட்டில் வறுமையால் வாடும் ஏழை எளிய மக்கள் துயர் துடைக்க உதவி தேடும் பொருட்டு வந்துள்ளேன்.''

இவ்வாறு குறிப்பிட்டபிறகு ''கிறித்துவ நாட்டிலே கிறிஸ்தவர்களிடமிருந்து பிறச் சமயத்தார் பொருட்டு உதவிதேடுவது எவ்வளவு கஷ்டமென்பதை நான் முற்றிலும் உணர்ந்து கொண்டேன்'' என்றும் குறிப்பிட்டார்.

சர்வமதசபையில் சுவாமிஜி இந்தியாவில் கிறிஸ்துவ மிஷனரிகள் செயற்பாட்டின் சில கூறுகளை அம்பலப் படுத்தியது பலர் கவனத்தைக் கவர்ந்தது. சர்வ மத சபையின் பதினோராவது நாள் கூட்டத்தில் பிஷப் கேனே என்பவர் சுவாமிஜியின் கருத்தை [ஏற்றார். அவர் கூறியதாவது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பட்டினி கிடக்கும் இந்துக்கள் தங்கள் மனசாட்சியையும், நம்பிக்கையையும் இழக்க வேண்டிய நிலையில் அவர்களுக்கு இரக்கம் காட்டுவதாக நடிக்கும் மிஷனரிகள் மீதான கண்டனத்தை நான் ஒப்புதல் அளித்து ஏற்கின்றேன்.''

சுவாமிஜியின் ஐந்தாவது சொற்பொழிவு செப்டம்பர் 26-ல் ''புத்த சமயம், இந்து சமயத்தின் நிறைவாகும்'' (Buddhism—The Fulfilment of Hinduism) -எனும் தலைப்பில் அமைந்தது.

மகாபோதி சொஸைடியின் அநாகாரிகதர்ம பாலர் சர்வமத சபையில் பௌத்த சமயப் பிரதிநிதியாகப் பேசினார். இந்து சமயப் பிரதிநிதியான சுவாமி விவேகானந்தர் பௌத்த சமயத்தைப் பற்றிப் புதியக் கண்ணோட்டத்துடன் பேசினார். பௌத்த சமயத்தை, இந்து சமயத்தில் எதிர்ப்புக்குரல் கொடுக்கும் குழந்தை'' என்றும் சுவாமிஜி கூறுவார். சர்வமத சபையில் பௌத்தம் இந்து சமயத்திடையே அவர் கண்ட உறவைப் பற்றி பேசியதில் ஒருபகுதி வருமாறு:

''வேதங்களில் கூறப்படும் சமயமாகிய இந்து சமயத்துக்கும் இக்காலத்தில் பௌத்த சமயமென்று சொல்லப்படும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு யூத மதத்திற்கும், கிறிஸ்துவ மதத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை ஒத்தது. இயேசுகிறிஸ்து யூதராயிருந்தார்; சாக்கிய முனி இந்துவாயிருந்தார். யூதர்கள், இயேசு கிறிஸ்துவைத் தள்ளி விட்டார்கள்; சிலுவையில் அறைந்து விட்டார்கள். இந்துக்கள் சாக்கிய முனியைத் தெய்வமெனக் கொண்டு அவரை வழிபடுகின்றார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சமயத் தத்துவங்கள் சிலவற்றுடன் குறிப்பாக வேத சமய எதிர்ப்பு, அனாத்ம வாதம் முதலானவற்றுடன் நாம் மாறுபடுவதை பகிரங்கமாக சுவாமிஜி பிரகடனப்படுத்தினார். அதே சமயத்தில், ஆண்மை, அச்சமின்மை, பெருங்கருணை, மானுட நேயம், சீர்திருத்த வேட்கை, தியாகவுணர்வு, ஒழுக்க மேம்பாட்டை சமரசமற்ற வகையில் வலியுறுத்துதல் முதலானவற்றைக் கொண்ட புத்தர் பெருமான் ஆளுமையை வழிபட்டார், சுவாமிஜி.

1893 செப்டம்பர் 11-ல் தொடங்கிய சர்வமத சபையின் பதினேழாவது நாள் கூட்டம் செப்டம்பர் 27-ல் நடைபெற்றது. இந்தக் கூட்டம் சபையின் நிறைவு நாள் கூட்டமாகும். சுவாமிஜியின் ஆறாவது சொற்பொழிவு சபையின் இறுதி நாள் கூட்டத்தில் சமய ஒற்றுமை என்பது ஒரு சமயத்தின் வெற்றியிலும் மற்றொரு சமயத்தின் அழிவிலும் தோன்றுவதென்று என்பதை மிகத்துல்லியமாக பின் வருமாறு எடுத்துரைத்தார்.

''விதை பூமியிலே ஊன்றப்படுகிறது. மண்ணும் காற்றும் நீரும் அதனைச் சூழ்ந்திருக்கின்றன. விதையானது மண் அல்லது காற்று அல்லது நீராகின்றதா? இல்லை; அது ஒரு செடியாகின்றது. தனக்குரிய வளர்ச்சி விதிக்கு ஏற்ப வளர்ச்சி பெறுகின்றது. காற்றையும், மண்ணையும், நீரையும் ஒன்று சேர்ந்து, அவற்றை தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக்கி ஒரு செடியாய் வளருகின்றது. இவ்வாறே சமயம் தோன்றி வளர்கின்றது. அவ்வாறே கிறிஸ்துவர், இந்துவாகவோ; பௌத்தர், கிறிஸ்துவராகவோ மாறவேண்டியதில்லை. ஒவ்வொரு சமயமும் மற்ற சமயங்களின் மெய்ப் பொருளை உட்கொண்டு அதே சமயத்தில் தன்னுடைய தனித்தன்மைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்துக் கொண்டு வளர்ச்சி விதியின் படி வளர வேண்டும்.''

தமது பேச்சின் முடிவில் சர்வமத சபையின் இலட்சிய முழக்கங்களாக பின் வருவனவற்றை எழுப்பினார்.

''உதவி செய்; சண்டையிடாதே; ஒன்றுபடுத்து; சமரசமும் அமைதியும் வேண்டும்; கருத்து வேறுபாடு வேண்டாம்'' என்பதை ஒவ்வொரு சமயமும் தனது கொடியில் விரைவில் எதிர்ப்பேற்படியினும் எழுதும் என்பதை சுட்டிக் காட்டுவேன்.''

சுவாமிஜியின் சிகாகா சாதனைகளின் வெற்றியைப் பாராட்டி இந்தியாவில் முதன் முதலில் சென்னையில் தான் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு நான்கு மாதங்களுக்குப் பிறகு கல்கத்தாவில் செப்டம்பர் 5,1894-ல் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. இந்தப் பொதுக் கூட்டம் பற்றியச் செய்தியை சென்னை, 'விவேக சிந்தாமணி' எனும் உயர்தர இலக்கிய மாத இதழ் (ஏப்ரல், 1894) பின்வருமாறு வெளியிட்டது.

''அமெரிக்க யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள சிகாகோ பட்டணத்தில் சென்ற வருஷம் கூடிய ''சர்வமத சித்தாந்த விளக்க மகாசபை''யில் ஹிந்து பிரதிநிதியாக ஆஜராயிருந்து ஹிந்து மத சித்தாந்தத்தைத் தெளிவாக எடுத்துரைத்துப் பேசிய விவேகானந்த சுவாமிகளுக்கும் அவரையும் உபசரித்து நடத்திய அமெரிக்கா மகாஜனங் களுக்கும் வந்தனம் கூற ஏப்ரல் மாதம் 28-ம் நாள் சென்னை பச்சையப்பன் மாளிகையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டினார்கள்.''

இந்தப் பொதுக் கூட்டத்தில் ராஜா சர்.ராமசாமி முதலியார், சர். சுப்பிரமணிய ஐயர் உட்பட பல பிரமுகர் களும் அறிஞர்களும் கலந்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை மக்கள் அனுப்பி வைத்த முதல் பாராட்டுச் செய்தியைப் பெற்ற சுவாமிஜி மிக்க மகிழ்ச்சியடைந் தார்." சென்னை வாசிகள் எனக்கு அனுப்பிய பாராட்டுப் பத்திரமானது இங்குள்ள செய்தித்தாள்கள் யாவற் றிலும் பிரசுரமாயிருந்தது. அது மக்களிடையே ஒரு பெரும் பரபரப்பையே உண்டாக்கி விட்டது" என்றும் ஒரு கடிதத்தில் எழுதியுள்ளார்.

கிறிஸ்துவ சமயத்தின் மேன்மையை உயர்த்திக் காட்ட சிகாகோ சர்வமத சபையைப் பயன்படுத்தத் திட்டமிட்ட கிறிஸ்துவ மிஷனரிகள், சுவாமி விவேகா னந்தர் காரணமாக அந்த முயற்சிகள் பயனற்றுப் போனதாகக் கருதினர். இதனால் ஏமாற்றமும், சீற்றமும் கொண்டு சுவாமிஜியை தத்துவ-சமய நோக்கில் எதிர்த்து வாதம் செய்யாமல், தனிப்பட்டமுறையில் அவதூறு களை புனைந்துரைத்துத் தரக்குறைவாகப் பிரசாரம் செய்தனர். இவர்களுக்கு பிரம்மசமாஜத்தலைவர் பிரதாப் சந்திரமஜூம்தாரும், சில தியோசபிஸ்டுகளும் உதவும் வகையில் பிரசாரம் செய்தனர். மஜூம்தார் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வமத சபையில் பெற்றப் பெரும் புகழைக்கண்டு பொறாமை கொண்டார். தியோசபிஸ்டுகளும் பொறாமை கொண்டனர்.

## சென்னை கிறிஸ்டியன் லிட்ரச்சர் சொஸைடி

1854-ல் "கிறிஸ்டியன் ஸ்கூல்புக் சொஸைடி" என்றும் 1856-ல் "கிறிஸ்டியன் வெர்னாகுலர் எஜுகேஷன் சொஸைடி" என்றும் பெயர்பெற்றவை 1891-ல்" சென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவ லிட்ரச்ர் சொஸைடி'' என்று பெயர் பெற்றது. இவற்றை நிறுவியவர் டாக்டர் ஜான்முர்டோக் (1819-1904) என்பவர். ஆங்கிலேயரான இவர் கிறிஸ்துவ சமய இலக்கிய திருப்பணியாளர் என்று புகழ் பெற்றவர். கி.பி. 1844 முதல் கி.பி. 1839 வரையில் இலங்கையில் கண்டி உட்பட பலவிடங்களில் கிறிஸ்துவ சமய இலக்கியத் துண்டுப்பிரசுரங்களைப் படைத்துப் பரப்பு வதில் முன்நின்றவர்.

சென்னை கிறிஸ்டியன் லிட்ரச்ர் சொஸைடியின் செயலாளரான டாக்டர் முர்டோக் (Dr. John Mudroch) சுவாமிஜியின் சிகாகோ சாதனையைக் கண்டு மனம் பொறுக்காமல் மறுத்து கட்டுரைகள் எழுதினார். சென்னை லிட்ரச்சர் சொஸைடி சார்பில் 'சுவாமி விவேகா னந்தர்' எனும் துண்டுப் பிரசுரம் 1895-ல் வெளியிடப் பட்டது. இந்தப் பிரசுரத்தின் தரக்குறவை அக்கா லத்தில் லாகூரில் இருந்து வெளிவந்த 'ட்ரிப்யூன்' (Tribune) எனும் பத்திரிகை (1895 மே 19-ல்) பின் வரு மாறு எழுதியது.

''சுவாமி விவேகானந்தர்'' எனும் பிரசுரம் சிகாகோ உரையை மதிப்பிடுவதாகச் சொல்லியது. மதிப்பீட்டிற்கு கையாளப்பட்ட வழி புதுமையாய் இருந்தது. அமெரிக்கா வில் சுவாமிஜி மக்கட் கூட்டத்தைக் கவர்ந்ததைப் பற்றி இப்பிரசுரம் கூறியதாவது: ''அமெரிக்காவிற்கு சந்யாசி உடையில் வந்த முதல் இந்தியன் இவர். இது புதுமை மிக்கதாய் இருந்ததால் மக்கட் கவனத்தைக் கவர்ந்தது.'' வேறோரிடத்தில் இந்தப் பிரசுரத்தில் காணப்பட்டதாவது: 'சுவாமிஜி ஓட்டலில் முதல் வகுப்பறையில் தங்கினார். அந்த சுகங்களை வேண்டாம் என்று ஒதுக்கினாரா? சிகாகோ, பன்றி இறைச்சிக்கு பெயர் போனதாயிற்றே? அதைச் சாப்பிடாமல் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோவை விட்டுச் சென்றாரா? மாட்டிறைச்சியின் மணம் அவரைத் தூண்டவில்லையா? மது சாப்பிடாமல் இருந்தாரா? ஹவானா சிகரெட்டுகளின் தரம் பற்றி அவர் என்ன நினைக்கின்றார்?'' சுவாமிஜியின் உரை இத்தகைய உணர்வுடன் மதிப்பிடப்பட்டது. 'சுவாமிஜி யின் கருத்துகளைப் பற்றி இவ்வாறு எழுதுவதால் இந்தியாவில் கிறித்துவத்தின் குறிக்கோள் ஊனமடையும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ''. லாகூர் ட்ரிப்யூ னின் இந்தச் செய்தி சுவாமி ஜோதிர்மயானந்தா எழுதிய 'விவேகானந்தா' எனும் நூலில் தொகுக்கப் பட்டுள்ளது. (பக்.517)

> இதற்கு மாறுபட்ட வகையில் சென்னை கிறிஸ்துக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் வில்லியம் மில்லர் பாதிரியார் ''சுவாமிஜி கருத்துடன் இசைந்து இந்து சமயத்திற்கு உலகில் சமயப் பரப்புப் பயிற்சி முறையொன்று உண்டு; கிறித்துவ நாடுகளுக்கு மகத்தான பாடங்களைப் போதிக்க வேண்டியுள்ளது'' என்றும் குறிப்பிட்டார். டாக்டர் மில்லர் சர்ச்சில் உயர் பொறுப்பில் இருந்தவர்; அனுபவ முதிர்ச்சி பெற்றவர். கற்றறிந்தப் புலமையுடையவர். அவர் சுவாமி ஜியை மதிப்பிட்டதற்கும், சென்னை கிறிஸ்டியன் லிட்ரச்சர் சொஸைடி ''மதிப்பிட்டதற்கும் இடையே உள்ள வேற்றுமை கவனத்திற்குரியது.

மெர்வின் மேரி ஸ்நெல் வெளியிட்டுள்ள பின் வரும் கருத்தும் சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி வேதாந்த இந்து சமயத்தை உலகோர் அறிந்து போற்றும் வண்ணம் நிறுவி விட்டார் என்பதை எடுத்துக்காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடந்த செப்டம்பர் மாதத்திலே இந்நகரத்திலே கூட்டப்பட்ட சர்வ சமய மகா சபையினால் கிறிஸ்துவ தேசமெல்லாம்—அவற்றுள் இவ்வமரிக்கா தேசம் அறிந்து கொண்ட விஷயம் யாதென்றால் கிறிஸ்துவ சமயத்தினும் மிக மேலோங்கிய சமயங்கள் சில உலகிலுண்டென்பதேயாம் ...இம்மதங்களுளே அமெரிக்காவை வசீகரித்துத் தன்னை மோகிக்கச் செய்து கொண்ட மதம் இந்துமதம் ஒன்றேயாம்...ஆங்கிலேய பாதிரிகளாலும் பிறராலும் திரித்துரைக்கப்பட்ட இந்து மதத்தினது உண்மை விளக்கம் இவ்விவேகானந்த சுவாமிகள் இங்கே வராதிருந்தால் ஒரு காலத்தும் கிடைக்கப் போவதில்லை. இவரைப் போலச் சிறந்தவர்கள் இதற்கு முன் வந்ததில்லை.''

கிறிஸ்துவ சமய மிஷனரிகள் சிலரின் நடவடிக்கைகளைக் குறை கூறிப் பேசவேண்டிய அவசியம் சுவாமிஜிக்கு ஏற்பட்ட போதிலும், கிறிஸ்துவ சமயத்தைக் கற்றுத் தெளிந்ததோடு இயேசுநாதர் மீதும், இயேசு அடியார்கள் மீதும் பெருமதிப்பு கொண்டு போற்றியவர் சுவாமிஜி. ''தேவகுமாரன் இப்பொழுது வந்தால்: கண்ணீரால் அல்ல, என் இதய ரத்தத்தால் அவருடைய திருவடிகளை'' கழுவுவேன் எனக் கூறியவர் சுவாமிஜி.

தமது பரிவிராஜகப் பயணக் காலத்தில் அவர் இரண்டேயிரண்டு ஞான நூல்களைத்தான் எடுத்துச் சென்றார். ஒன்று பகவத்கீதை; மற்றொன்று 'தி இமிடேஷன் ஆப் க்ரைஸ்ட்' (The Imitation of Christ) என்னும் கிறித்துவ சமய நூலாகும்' ஜெர்மன் நாட்டு ஞானியான தாமஸ் எ கெம்பிஸ் (1380-1471) என்பவர் படைத்த இந்நூலை சுவாமிஜி 'சங்கீத கல்ப துருமா'' எனும் வங்கமொழி மாத ஏட்டில், முதல் பாகத்தின் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு அத்தியாயங்களில் இருந்து சில பகுதிகளை வங்க மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

மொழி பெயர்ப்பில் ஆங்காங்கே அடிக்குறிப்புகளில் மூலநூலுடன் ஒத்துள்ள இந்து சமயக் கருத்துகளையும் தமது விளக்கங்களுடன் தந்துள்ளார். அத்துடன் வங்க மொழியில் மொழி பெயர்ப்பிற்கு முன்பாக எழுதிய முன்னுரையிலும் 'இமிடேஷன் ஆப் க்ரைஸ்ட்' நூலைப் பற்றி பின் வருமாறு புகழ்ந்துள்ளார்.

''இந்த நூலைப் படிக்கும் பொழுது, ஒருவர் பகவத் கீதையின் எதிரொலியை மீண்டும்—மீண்டும் கேட்பார்கள். 'எல்லா தருமங்களையும் விட்டு விடு, என்னைப் பின் பற்று' எனும் பகவத்கீதையின் எதிரொலியைக் கேட்கின்றோம். எளிமை உணர்வு, துன்பப் படுவோரின் மூச்சுத்திணறல்கள், தாஸ்ய பக்தியின் சிறப்பான வெளியீடு ஆகியன, மகத்தான இந்த நூலின் ஒவ்வொரு வரியிலும் பதிவாகியுள்ளதைக் காணலாம்.''

சர்வ மத சபை முடிவுற்றப் பிறகு அமெக்காவின் கிழக்கு, மத்திய, மேற்கு மாநிலங்களில் சுவாமிஜி உரையாற்ற அழைக்கப்பட்டார். சர்வமத சபையின் நோக்கத்திற்கு மறந்தும் ஊறுதேடாமல் உரையாற்றிய சுவாமிஜி, இந்து சமயத்தத்துவ விளக்கங்களில் வேதாந்தத்திற்கு முன்னுரிமை கொடுத்தார்.

உலகில் உள்ள ஒவ்வொரு சமய நம்பிக்கையையும், தத்துவத்தையும், விழுமிய மனித முயற்சி ஒவ்வொன்றையும், ஆன்மிக, பொருளாதார முன்னேற்றத்தை இணைக்கும் போக்கையும், காரணகாரிய நோக்கையும், விஞ்ஞானத்தையும், அநுபூதி நிலையையும், தொண்டுள்ளத்தையும், இறைவனுடன் சாட்சாத்காரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேதாந்தம்' எனும் சொல்லிற்குரியப் பொருளாக விரிவடையச் செய்தார். ஒருவர் தமது சமயத்தை விடாமலேயே, வேதாந்த சமயத்தை ஏற்க இயலும் என்றும் விளக்கமளித்தார், சுவாமிஜி.

சுவாமிஜியின் அமெரிக்கச் சீடர்கள், நியூயார்க்கில் வேதாந்த சொஸைடியை அமைத்தனர். தற்சமயம் சுமாராக பன்னிரண்டு வேதாந்த சொஸைடிகள் அமெரிக்காவின் பலவிடங்களில் இயங்கி வருகின்றன. 1895 பிப்ரவரி முதல் நியூயார்க் நகரத்தில் சுவாமிஜி வேதாந்த வகுப்புகளை நடத்தி வந்தார்.

சுவாமிஜியின் பெயரும் புகழும் புயற் காற்று போல் பரவியதைக் கருத்தில் கொண்டு அமெரிக்கப் பத்திரிகைகள் அவரை 'புயற்காற்றொத்த இந்து' (Cyclonic Hindu) என்று வருணித்தன. இந்தப் புகழுரையைப் பற்றி சுவாமிஜி, ஹேல் சகோதரிகளுக்கு எழுதியக் கடிதத்தில் பின்வருமாறு கருத்து வெளியிட்டார்.

''நான் உண்மையிலேயே புயத் காற்றை யொத்தவன் இல்லை; அதில் இருந்து வெகு தொலைவில் இருக்கின்றேன். இங்கு மட்டுமன்று, வேறெங்கும் இந்த புயற் காற்றுச் சூழலை என்னால் தாங்க முடியாது. அமைதியான, குளிர்ந்த, மென்மையான, ஆழமான, ஊடுருவுகின்ற. சுதந்திரமான, தூய்மையான, பண்பார்ந்த, திரும்பப் பிரதிபலிக்கின்ற கண்ணாடி போன்ற ஆய்ந்தறியும் சிந்தனை வேண்டும். அதில் அனைத்தும் உறுதியாக இணைந்து இருக்க வேண்டும்.

அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு ஆகஸ்ட் 17, 1895-ல் நியூயார்க்கில் இருந்து லண்டனுக்குப் புறப்பட்டார். வழியில் பாரீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்தில் சிலநாட்கள் தங்கினார். செப்டம்பர் 10-ல் லண்டன் சேர்ந்தார். லண்டனுக்கு இது சுவாமிஜியின் முதல் வருகையாகும்.

லண்டனில் பிரின்ஸஸ் அரங்கில், 'ஆத்மபோதம்' எனும் தலைப்பில் சுவாமிஜி பேசியப் பேச்சைப் பாராட்டி; ''லண்டன் ஸ்டாண்டர்ட்'' எனும் பத்திரிகை எழுதியதாவது.

''ராம்மோகன் ராய் காலத்திற்குப் பிறகு, கேசவ சந்திரஸென் நீங்கலாக, நேற்று பிரின்ஸஸ் அரங்கில் மிகக் கவர்ச்சியாக பேசிய இந்து சந்யாசி போல் இங்கிலீஷ் மேடையில் வேறு எவரும் பேசவில்லை.''

லண்டனில் ஆன்மிக வகுப்பொன்றில், சுவாமிஜியை மார்க்ரெட் எலிசபெத் நோபின் சந்தித்து, பின்பு சகோதரி நிவேதிதா தேவியானது, வரலாற்றுச் செய்தியாகும்.

கிறிஸ்துவ மிஷனரிகள் தொடர்பாக, அமெரிக்கா, இங்கிலாந்துக் கிடையே தமக்கேற்பட்ட அநுபவ வேறுபாடுகளை சுவாமிஜி விளக்கிக் கூறியதாவது;

''அமெரிக்காவில் சமயத்தின் பெயரால் எதையும் பாதிரிமார்கள் செய்யத் துணிவார்கள் எனும் அனுபவம் என் கண்களை நன்கு திறந்து விட்டது. இங்கிலாந்தில் சமயப் பிரசாரகர் இருக்கிற இடம் தெரியவில்லை. ஒருவரும் என்னோடு வாதாட வரவில்லை. ஆங்கில மடத்தைச் சார்ந்த அனைவரும் பெருந்தன்மை வாய்ந்தவர்கள். அவர்களில் சுமார் முப்பது பாதிரிமார்கள், சமய சர்ச்சைகளில் எல்லா அம்சங்களிலும் முற்றிலும் என் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். என்னோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து வேறுபாடு கொண்டவர்கள், என்னைத் தாக்கிப் பிரசாரம் செய்யவில்லை. இங்கிலாந்தைவிட அமெரிக்கா வில் பெருந்தொகையான மக்கள் என்னிடம் பரிவு காட்டினார்கள். கிறிஸ்தவப் பாதிரிகள் கூறிய கொடிய வசை மொழியே நான் எடுத்துக் கொண்ட செயல் வெற்றிகர மாக முடியத் துணை செய்தது.''

1893 முதல் 1896 வரையில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் தமது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு சுவாமிஜி 1896 டிசம்பர் 16-ல் லண்டனில் இருந்து இலங்கை வழியாக இந்தியாவிற்கு புறப்பட்டார். அவருடன் அவருடைய ஆங்கிலேயச் சீடர்கள் சேவியர் தம்பதிகள் புறப்பட்டனர். வழியில் நேப்பில்ஸில் குட்வின் சேர்ந்துக் கொண்டார்.

சிகாகோ வீரராக சுவாமிஜியை வரவேற்று புத்து ணர்ச்சி பெற இலங்கை இந்துக்கள் காத்திருந்தனர்.

1893-ல் சிகாகோ பயணத்தின் பொழுது மே மாதத் தில் இலங்கையில் ஒருநாள் தங்கிய பொழுது, கொழும்பு நகரைச் சுற்றிப் பார்த்த அவரை எவரும் அடையாளங் கண்டு கொள்ள வில்லை.

1897-ன் தொடக்கத்தில் அவரைப் பேரெழுச்சியுடன் போற்றி வரவேற்க இலங்கை இந்துக்கள் திரண் டெழுந்தனர்.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கொழும்பு நகரத்தில் சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சாதனைகள் இலங்கை இந்துக்களுக்கு பெரு மகிழ்ச்சியைத் தந்தன. பொதுவாக இலங்கையிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் கிறித்துவ சமயப் பிரிவினர்களின் சைவ சமய எதிர்ப்புப் பிரசாரத்தையும், மத மாற்ற நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த சைவ சமயத்தினருக்கு சுவாமிஜியின் சிகாகோ சாதனைகள் புத்துணர்ச்சியை தந்தன. தங்கள் நன்றிப் பெருக்கையும், பெருமிதத்தையும் சுவாமிஜிக்கு காணிக்கையாக்க வழி மேல் விழிவைத்து காத்திருந்தனர்.

1894-லேயே இலங்கை இந்துக்கள் சிகாகோ சர்வ மத சபையில் சுவாமிஜி ஆற்றியச் சொற்பொழிவுகளை இந்து சாதனம், சிலோன் அப்சர்வர், சிலோன் இன்டிபென்டென்ட் எனும் இதழ்கள் வாயிலாக அறிந்திருந்தனர். அந்தச் சொற்பொழிவுகள் தங்கள் சமயப் பிரசாரத்திற்கு வலிமை சேர்த்து, பொலிவுறச் செய்வன என்று மகிழ்ந்தார்கள். நாவலர் காலச்சூழலைத் தொடர்ந்து, சுவாமி விவேகானந்தர் உருவாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியச் சூழலை நன்கு பயன் படுத்திக் கொள்ள பேரார் வத்துடன் திரண்டனர்.

## இந்து சாதனம்

சுவாமி விவேகானந்தரின் வெற்றியுலாச் செய்தி களை எழுச்சியுடன் விரிவாக வெளியிட்டும், சுவாமிஜியை குறை கூறிய 'உதயதாரகை' முதலான கிறித்துவ சமய ஏடுகளின் பிரசாரத்தை எதிர்த்தும் இந்து சாதனம் நடத்தியப் பிரசாரப் போர் குறிப்பிடத் தக்கது. இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம் தோன்று வதற்கானச் சூழலையும் உருவாக்கித் தந்தது, 'இந்து சாதனம்.' இவ்விதழின் வரலாற்றைச் சுருக்கமாக அறிதல் அவசியமாகும். சைவ சமயப் புத்தெழுச்சியின் எழு ஞாயிறாகத் தோன்றிய யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் 1879-ல் சித்தியடைந்தார். சைவ சமயப் பிரசார அமைப்பொன்றும், பிரசார இதழொன்றும் தொடங்கப்பட வேண்டும் என்பது நாவலரின் இறுதிக் விருப்பமாகும். அவர் அவாவியதை நாவலரவர்களின் மாணவ பரம்பரையினரும், யாழ்ப்பாண சைவ சமயப் பொது மக்களும் நிறைவேற்ற ''சைவ சமய பரிபாலன சபை'' எனும் அமைப்பை 29-4-1888-ல் ஆரம்பித்தனர். நாவலரின் மருகர் வித்துவ சிரோமணி. ந.ச. பொன்னம் பலபிள்ளை ஆரம்ப அவைத் தலைவர். இந்தச் சபையின் பிரசார ஏடாக 11-9- 1889-ல் ''புதன் கிழமை சுப தினத்தில் இந்து சாதனம் என்றும் ஆங்கிலத்தில் ''Hindu organ'' என்றும் நாமமிட்டு புறத்தே ஆங்கிலத் திலும், அகத்தே தமிழுங் கொண்ட ஒரு பத்திரிகை'' தொடங்கப் பெற்றது.[22]

முதலில் மாதமிரு முறையாக 'இந்து சாதனம்' 'டெமி' அளவில் வெளிவந்தது. இப்பத்திரிகையின் முதல் ஆசிரியர்களாக நாவலரவர்களின் உடன் பிறந்தாரின்

பெருமகன் தம்பு கைலாசப் பிள்ளை அவர்களும், ஓய்வு பெற்ற திருவிதாங்கூர் உயர்நீதி மன்ற நீதிபதி தா• செல்லப்பா பிள்ளை அவர்களும் பணியாற்றினர். வண்ணை தலையாளி அ. சபாபதி அவர்கள் 1890 முதல் 1924வரையில் ஆங்கில இந்துசாதனத்தின் ஆசிரியராவார்.

1889-ம் ஆண்டு ஆடிமாதம் முதல் இப்பத்திரிகைகள் தனித்தனி வெளியீடுகளாக வந்தன. 1913-ம் ஆண்டு முதல் ஆடி மாதம் முதல் இந்து சாதனம் வாரந்தோறும் வியாழககிழமையிலும், 'Hindu organ' வாரத்தில் இரு முறை திங்கள் 'வியாழக்கிழமைகளில் வெளி வரலாயின. 1923-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ம் தேதி முதல் இந்து சாதனம் வாரந்தோறும் இருமுறை திங்கள், வியாழக் கிழமைகளில் வெளிவர ஆரம்பித்தது. [23]

''ஈழத்துத் தமிழ் சைவத்தின் தனிச் செங்கோலாக'' பாராட்டப் பெற்ற இந்த இதழ் 11-9-1988-ல் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. இந்தக் காலகட்டத்தின் இதன் ஆசிரியர் சட்டத்தரணி நம. சிவப்பிரகாசம். அ சபாபதி அவர்களின் சாதனையை அடுத்து இப்பணியில் இவர் தொடர்ந்து சாதனை செய்தவர்.

'இலங்கையில் சுவாமி விவேகானந்தர்' எனும் வெளியீட்டில் நூலாசிரியர் ச. அம்பிகை பாகன் 'அமெரிக் காவில் இந்து மதம்' எனும் தலைப்பில் வெளிவந்த இந்து சாதனம்' (21-3-1894) கட்டுரையைத் தந்துள் ளார். இந்தக் கட்டுரை ''பயோனியர்'' பத்திரிகையில் வெளிவந்ததாகவும் அதன் சுருக்கம் மொழி பெயர்த் துத் தரப்பட்டதாகவும் ஒரு குறிப்பு கூறப்பட்டுள்ளது. இது சற்று ஆய்விற்குரியது. கட்டுரையாளரின் பெயர் மேர்வின் மேரி ஸ்நெல் என்று காணப்படுகின்றது. ஆனால் சரியான பெயர். ''மெர்வின்-மேரி ஸ்நெல்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும். அடுத்ததாக மெர்வின்-மேரி ஸ்நெல் கல்கத்தா 'இந்தியன் மிர'ருக்கு எழுதியக் கடிதம் மார்ச் 9, 1894-ல் வெளிவந்துள்ளது. இந்து சாதனத்தில் ''பயோனியர்ப் பத்திரிகைக்கு எழுதிய விஷயத்தைச் சங்கிரகித்து இங்கே மொழி பெயர்த்துக் கூறுகின்றோம்'' என்று தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்தியன் மிரரில் வெளிவந்ததின் சுருக்கமான மொழி பெயர்ப்பாகவே இந்துசாதனம் கட்டுரை காணப்படுகின்றது. இந்தியாவில் வெளிவந்த 'பயோனியர்' பத்திரிகை மெர்வின்-மேரி ஸ்நெல் கட்டுரையைப் பற்றி சில வியப்புரைகளை எழுதியுள்ளது. குறிப்பாக,'' சுவாமி விவேகானந்தர் போன்ற சில சமயப் பணியாளர்களை இந்துக்கள் அமெரிக்காவிற்கு அனுப்பினால், அமெரிக்கா மதமாற்றம் பெற்றுவிடும்'' எனும் மெர்வின்-மேரி ஸ்நெல்வின் உற்சாகவுரை பயோனியரை வியப்படையச் செய்து விட்டது.

''ஆரஞ்சு வண்ண உடையுடுத்திய இந்துஸ்தானத்தின் சுவாமி சர்வமத சபையில் தோன்றியது. இருளடைந்த அமெரிக்கர்களுக்கு பேரொளி காட்டி விட்டது'' என பயனோனியர் வியந்து குறிப்பிட்டது.

அமெரிக்கப் பேரறிஞர் மெர்வின்-மேரி ஸ்நெல் எழுதியக் கடிதத்திற்கு 'அமெரிக்காவில் இந்து மதம்' எனும் தலைப்பைத் தந்தது இந்து சாதனம். இந்தக் கட்டுரையில் சில பகுதிகள் முன் வந்தப் பக்கங்களில் வெளியிடப் பெற்றுள்ளன. பின் வருவன, மற்றும் சில பகுதிகள்:

''இவரிடத்திலே இவ்வளவு அபிமானத்துக்குக் காரணம் அமெரிக்காவுக்கு இந்தியர்கள் இவர் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிய ஞானத்தின் மீதுண்டாகிய பெருங்காதலன்றி மற்றியாது? உலக விவகாரத்திலும் அறியாமையிலும் அமிழ்ந்திக் கிடக்கும் பல திறப்பட்ட அமெரிக்கருள்ளே ஆங்காங்கும் பலர்க்கு இப்போதொருவாறு ஆன்ம ஞானத்தின் மீது பெருங்காதலெழுந்திருக்கின்றது. ஐரோப்பிய தேசத்தில் ஒரொருவரிடத் துண்டாகிப் பிரகாசித்து ஆன்ம ஞானமெல்லாம் அன்றும் இன்றும் இந்தியா கொடுக்கக் கொண்ட ஞானமேயாகும். பித்தோகரஸ் (Pythogoras) கொண்ட ஞானமும், பிளேட்டோ அடைந்த தத்துவ வுணர்ச்சியும், நோஸ்டிக்ஸ் உண்டாக்கிய மாஸ்டிய ஞானமும், துருக்கிய ஞானிகள் காட்டிய முகமது ஞானமும், தியோசாபிஸ்ட் சமாசத்தார் கண்டடைந்த குப்த வித்தையும் (occultism) ஏனைய பிறவுமாகிய வெல்லாம் இந்தியாவிலே ஞானாமிர்தமாகிய நதி பிரவாகமாகப் பாய்ந்த காலத்துண்டாக்கிய தேக்கம் வழிந்தோடிய பொசிவன்றோ!...

"இங்ஙனம் இங்கே பரந்து வருதலைப் பெற்று இந்து மதவுணர்ச்சியாகிய படர்கொடிக் கொழுந்துக்கு விவேகானந்த சுவாமி பிரசங்கங்கள் கொளு கொம்பாயின...... இவ்விவேகானந்த சுவாமிகளுடைய இனிய பிரசங்கத்தையும் அவரைச் சனங்கள் புகழ்ந்து கொண்டாடுவதையும் காதில் வீழ்த்தப் பொறாமை கொண்டவர் 'புரோடெஸ்டாண்டுக் கிறிஸ்தவருள்ளும் றெவாரண்டுக் குருமார் சிலரினும் சிலரேயாம். அவர்கள் பொறாமை முதலியன வெல்லாம், 'பாரத வருஷமாகிய இந்தியாவினின்றும் வந்த பச்சைப் பீதாம்பரதாரியும் பரம சாதுவமாகிய விவேகானந்த சுவாமிகளது மாறாக் கருணை, மாறாச் சாந்தம், மாறாப் பெரும் பொறை, கலங்காக் கல்வி, குளிர்ந்து மலர்ந்த முகம், மதுர பாஷணம் முதலிய நற்குணங்களின் முன்னே சூனியமாகி நசிந்து விட்டன."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அமெரிக்காவில் இந்து மதம்' என்னும் கட்டுரையுடன் டாக்டர் பரோஸ் எழுதிய ஒரு கட்டுரையையும் சேர்த்து தனிப் பிரசுரம் ஒன்றையும் 'இந்து சாதனம்' வெளியிட்டதாகத் தெரிகிறது.

டாக்டர் பரோஸ், சுவாமிஜி சிகாகோ சர்வ மத சபையில் இறுதி நாள் பேச்சியில் குறிப்பிட்டதைப் பற்றி கூறியதையும் இங்கு நினைவு கூர வேண்டும். ''எவரும் மதம் மாற வேண்டியதில்லை'' எனும் கருத்தையும் சுவாமிஜி அன்றையப் பேச்சில் குறிப்பிட்டார். சபையில் விவேகானந்தரின் உரை எப்பொழுதும் ஆர்வமுடன் கேட்கப்பட்டது. ஆனால், அவர் இறுதியாகப் பேசும் பொழுது வெளிப்படுத்திய உணர்வுகள் சிறிதளவே ஒப்புதல் பெற்றது'' என்னும் கருத்தை டாக்டர் பரோஸ் வெளியிட்டுள்ளார்.

சிகாகோ சர்வ மத சபையில் அவையோர் மீது வியக்கத்தக்கச் செல்வாக்கு செலுத்தினார் என்று கூறிய டாக்டர் பரோஸ் இந்தியாவில் சுற்றுப் பயணம் வந்த காலத்தில் சுவாமிஜி இந்தியா திரும்புவதற்கு சற்று முன்பு) சுவாமிஜியிடம் அவர் கொண்ட பொறாமையையும், அவநம்பிக்கையையும் தமது சொற்பொழிவுகளில் வெளியிட்டார். டாக்டர் பரோஸிற்கு பெரிய வரவேற்பு அளிக்குமாறு நமது நண்பர்களுக்கு லண்டனில் இருந்து சுவாமிஜி கடிதம் எழுதியிருந்தார். ஆனால் பரோஸின் நோக்கும்-போக்கும் மாறிவிட்டன.

1897 பிப்ரவரியிலேயே டாக்டர் பரோஸ் இந்து சமயக் கண்டனத்தில் முனைந்து விட்டதை யாழ்ப்பாணம் 'உதயதாரகை'யில் பின்வருமாறு அறிய முடிகின்றது.

''சர்வ சமய சபாநாயகமாயிருந்து சுவாமியின் இந்துமத பிரசாரணங் கேட்டும் அத்துடன் பல மதங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நன்கு ஆராய்ந்து இப்பொழுது கற்குத்தாவில் வந்து இந்து சமய விரோதமாயுங் கிறிஸ்துமத ஸ்தாபன மாயும் பிரசரணம் புரியும் Dr. Barrows.''

டாக்டர் பரோஸ் பற்றி சிகாகோ மாநாட்டிற்குப் பிறகு வெளிவந்த பின் வரும் பத்திரிகைச் செய்திகளும் இங்கு கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

1 ''பரோஸ் பண்டிதர் அமெரிக்காவைச் சேர்ந்த வுடன் தாம் இந்தியாவிலடைந்த அனுபவங் களைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்ததில் இந்தி யாவில் பிராமணர்கள் உட்பட பலர் கிறிஸ்துவ சமயத்தில் சேர்வதை விளக்கியுள்ளார்! ''மூன்று மாதங்களாய் இந்தியாவில் நான் கண்ட காட்சி களைக் காணும் எந்தச் சுவிசேஷ விசுவாசி யாவது அங்கே கிறிஸ்து ஊழியத்தினாலுண்டா யிருக்கும் அனுகூலத்தையும் வெற்றியையும் பற்றி யுணராதிருத்தல் கூடாது. (உதய தாரகை யாழ்ப்பாணம்- ஜூலை22, 1897-ப.65)

2 ''டாக்டர் பரோஸ் விவேகானந்த சுவாமியை அமெரிக்காவில் கண்ணியம் பண்ணியதற்குக் கைமாறாகத் தாமுமவர்க்குக் கண்ணியஞ் செய்ய வேண்டுமெனச் சென்னை பிரபுக்கள் சிலர் காத்திருந்தனர். ஆனால் அவர் கிறிஸ்து மதமேன்மையையே பிரசங்கித்து வருகிறார்.'' (சன்மார்க்க போதினி, யாழ்ப்பாணம். 1897 தைமாதம் 15, -ப.11)

சுவாமிஜியின் சிகாகோ சாதனைகளின் எதிரொலியை இலங்கையின் ஆங்கிலம், தமிழ் பத்திரிகைகளில் இருந்து தொகுத்தறிய, ''இலங்கைப் பத்திரிகைகளில் சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தர்-'' எனும் தனி ஆய்வு தேவைப் படுகின்றது. *

''ஓவர்லேண்ட் சிலோன் அப்சர்வர்'' எனும் இதழ் சுவாமிஜியின் கொழும்பு வருகையைப்பற்றி ஒருநாள் முன்னதாகவே 14-1-1897-ல், ''A Hindu Sage to arrive In Colombo'' எனும் தலைப்பில் (ஒரு இந்து முனிவர் கொழும்பு வருகிறார்) வெளியிட்டச் செய்தியின் சுருக்கம் வருமாறு:

''இந்து சமயச் சிந்தனையின் பிரபல தலைவர், முனிவர், தலைவர் ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் நாளை கொழும்பு வருகிறாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் கூட்டங்களுக்கு மக்கள் பெருந்திரளாகத் திரண்டனர். பெருமளவில் மக்கள் கவனத்தைக் கவர்ந்தார். அவருக்கு தகுந்த வரவேற்பளிக்க கொழும்பு இந்து சமூகம் விசேஷ ஏற்பாடு களை செய்துள்ளது.''

## சுவாமிஜியின் இலங்கை விஜயம் பற்றிக் கூறும் முதல் நூல்

சுவாமிஜியை வரவேற்கக் கூடிய ஆலோசனைக் கூட்டத்தையும், அவருடைய கொழும்பு நகர நிகழ்ச்சிகள் பற்றிய விவரத்தையும், அவருடைய இரு சொற்பொழி வுகளின் முழுமையான வெளியீடுகளின் உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்த முதல் ஆங்கில வெளியீட்டின் பெயர், ''Srimat Swami Vivekananda's Visit To Ceylon'' என்பதாகும். இந்நூலின் மற்றொரு சிறப்பு, சுவாமிஜியின் கொழும்பு வருகை நிகழ்ந்த பிப்ரவரி மாதத்தை யடுத்து மார்ச் மாவத்திலேயே உடனடியாக வெளிவந்ததாகும்.

---

* இத்தகைய ஆய்விற்கானக் குறிப்புகளைத் திரட்ட இந்நூலாசிரியர், கொழும்பு ராமகிருஷ்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரிய வெளியீடு முப்பத்தேழு பக்கங்களைக் கொண்டது. வி. அய்யம்பிள்ளை செட்டியார் அவர்களால் கொழும்பில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. இவர் இராமகிருஷ்ணர் இயக்க வரலாற்றாசிரியர்களின் நன்றிக்குரியவர்.

5, மார்ச், 1897 என்று திகதியிட்டுள்ள முன்னுரை சுவாமிஜியின் வரலாற்றுப்பாத்திரத்தை விளக்கிக் கூறுவதால், முழுமையாக இங்கே வழங்கப்படுகிறது.

''பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இக்காலக் கட்டத்தில் பல்வேறு மதப்போராட்டங்களிடையே, இறுதியில் எது ஜீவிக்கப்போகிறது என்பதை அறிய மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் நெடுங்காலமாக ஒன்றையொன்று எதிர்த்துக்

---

மிஷன் துணைத்தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் உதவியுடன், கொழும்பு தேசிய ஆவணக் காப்பகத்தில் முயற்சி செய்தார். ஆனால் அக்காலக் கட்டத்திற்குரிய இதழ்களில் ஒன்றுகூட பார்வைக்குக் கிடைக்கவில்லை. 'இலங்கையில் விவேகானந்தர்' எனும் வெளியீட்டின் ஆசிரியர் அம்பிகை பாகன், இந்து சாதனத்தில் 1894-ல் வெளிவந்த ஒரு கட்டுரையை மட்டும் தான் (சிகாகோ சாதனையைப் பற்றி) தரமுடிந்தது. அவர் தனியார் வசமிருந்த இந்து சாதன இதழ்களைப் பார்த்தவர். மேலும் முயன்று பார்க்க ஆர்வலர்கள் முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு திகழ்ந்து வருகிறது. மதங்கள் பேரில் நடைபெற்ற யுத்தங்களாலும் அடக்குமுறைகளாலும் சிந்தப் பட்ட ரத்தத்தினால் இந்த பூமியின் முகம் கண்ணீரில் நனைந்துள்ளது.

''சமீப காலமாகத்தான் வாள் இருந்த இடத்தில் எழுதுகோல் வந்துள்ளது. இதனால் இந்தப் போராட்டங் களில் விஞ்ஞான வளர்ச்சியினால் கனல் பறக்கும் விவாதங் கள் உருப்பெற்றன ஒரு பக்கத்தில். மறுபக்கத்தில் ஆசிய மொழிகளின் மொழி பெயர்ப்புகளால், குறிப்பாக சம்ஸ் கிருதத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டதில், பலமதங் களைப் பற்றி அதிகமாக ஆய்ந்தறிய வாய்ப்பேற்பட்ட தாலும் விவாதங்கள் எழுந்தன.

''விஞ்ஞானம், தத்துவம் வளர்ந்த நிலையில் கிறித்து வம் தனது அர்த்தமற்ற பொருத்தமற்ற பெரும்பாலானக் கொள்கைகளால் தருக்க நெறி எழுப்பும் கேள்விகளுக்கு திருப்திகரமாக பதில் தர இயலாதுபோயிற்று. கண்மூடித் தனமான நம்பிக்கையால் அது விஞ்ஞான வளர்ச்சிக்கு இடையூறாயிற்று. தீவிரமான விஞ்ஞான சிந்தனையாளர் கள் ஒவ்வொரு மதத்தையும் விஞ்ஞான தருக்க நெறியில் சோதித்து பார்க்க விரும்பினர். இந்தச் சோதனையில் கிறித்துவம் பரிதாபகரமாகத் தோற்றதைப் பற்றியும் சொல்ல வேண்டியதில்லை.

''மீண்டும் டெமாகியஸ்ஸின் உலோகாயதக் கொள் கைகள், லுக்கிஷியஸ், எபிக்யூரஸ் ஆகியோரால் செழுமையூட்டப் பெற்று கிறித்துவ நாடுகளை ஆட்டிப் படைத்தன. டியான்டல், ஹக்ஸ்லி, பிராட்லா, அன்னி பெசன்ட் ஆகியோர் இந்தக் கொள்கைகளின் பிரதி களாவர். இதனால் நாத்திகம் இயக்கம் மிகுந்த ஊக்கத் துடனும் ஆர்வத்துடனும் பரவியது, மானுட தெய்வீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள் அனைத்தையும் அழிக்கத்தக்க பயங்கர போக்கை, அதுவும் படித்தறியா பாமர மக்களை அழிக் கத்தக்க போக்கை தடுத்து நிறுத்தபக்குவப்பட்ட முதிர்ந்த சிந்தனைகள் உதவின. இந்தச் சமயத்தில் பிளாவட்ஸ் கியின் செல்வாக்கிற்கு உட்பட்டு அன்னிபெசன்ட் தனது நாத்திக கொள்கைகளை மாற்றிக்கொண்டு தியோஸ பிஸ்ட்டாக மாறினார். பிறகு ஏராளமான இந்து சமய சாத்திரங்களைக் கற்று இந்து சமயத்தில்ஆழ்ந்தநம்பிக்கை கொண்டார் அன்னிபெசன்ட் இந்தப் பெண்மணியின் சமய பரிணாம வளர்ச்சி பல கட்டங்களைக் கொண்டது. திறந்த உள்ளத்துடன் எந்தக் கொள்கையையும் எதிர் கொள்பவர். கூர்ந்த சிந்தனையாளர்.இவர்இந்து மதத்தை தழுவியக் காலத்தில் மேலை நாட்டினர்இருந்த இவருடை ஆர்வலர்கள், எதிர்ப்புணர்ச்சியில் திளைத்த அன்னி பெசன்ட்டை அமைதிப்படுத்திய கீழ்ப்படுத்திய இந்து சமயத்தைக் கற்பதில் அக்கறை காட்டினார்கள்.

சிகாகோ சர்வமத சபையில்,சுவாமி இந்துசமயப் பிரதி நிதியாக பங்கேற்றது,அந்த ஆர்வலர்களுக்கு பெரும் வாய் ப்பாக அமைந்தது. அங்கு சுவாமி விவேகானந்தர் பெற்ற மாபெரும் வெற்றியும், எளிதில் அறியப் படமுடியாத, விழுமிய உண்மைகளை அவர் எளிய எடுத்துக் காட்டுக் களால் விளக்கியத் திறம் கற்றவர்- கல்லாதவர்கள் இருதரப்பாரையும் கவர்ந்தது. அவருடைய மஞ்சள் நிற ஆடை, குறிப்பாகத் தெரிவிக்கிற தூய்மை, துறவு நெறியின் உருவகம், கவனத்தைக் கவர்கின்ற பாங்கு அவருடைய கனிவார்ந்த போதனைகளுக்கும் வாழ்க் கைக்கும் இடையே திகழும் முரண்பாடற்ற நிலையை நிரூபிக்கின்றன.

''இந்த நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள மேற் கோள் கருத்துகள், சிகாகோ சர்வமத சபையில் சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தர் பேருரைகளைக் கேட்டவர்கள் வைத்திருந்த மரியாதையையும், பாராட்டுதலையும் தெரிவிப்பனவாகும். இதில் புகழார்ந்த சுவாமிஜியின் வாழ்க்கை முறையை விசேஷ அக்கறையுடன் கவனித்தயவரும் வியப்படையமாட்டார்கள். மதவெறிக்கு விடை கொடுத்து, உலகளாவிய சமயத்தை முதன் முதலில் போதித்தவர், இவர், பல்வேறு மதப் பிரிவினரும் இனிய ஒளிவீசும் குரலில் பாட ஒத்திசைவுள்ள பண்ணோசையில் இணைவார்கள். இலங்கைக்கு அவர் வருகை தந்ததை இந்தச் சிறு வெளியீடு விளக்கும் எனக் கருதுகிறோம்.''

சுவாமி விவேகானந்தரின் கொழும்பு வெற்றியுலாவை விளக்க வந்த பிற்கால வெளியீடுகளுக்கு. வி. அய்யம் பிள்ளை பதிப்பித்த மேற்கூறிய நூல் மூலாதாரமாகத் திகழ்கின்றது.

## வரலாறு படைத்த வருகையும் மாபெரும் வரவேற்பும்

இந்த நூலில் சுவாமிஜியை கொழும்பில் வரவேற்கத் திட்டமிட கூட்டப் பெற்றக் கூட்டத்தின் விவரம் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

''தகுந்த முறையில் சுவாமிஜியை வரவேற்க, செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய கொழும்பில் குறுகிய காலத்தில் இந்தக் கூட்டம் கூடியதில் வியப்பில்லை. வரவேற்பிற்கான ஏற்பாடுகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்காக பெருமளவில் இந்துக்கள் தம்பய்யா சத்திரத்தில் கூடினர். செலவினங்களுக்காக நன்கொடையாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அப்பொழுதே 800 ரூபாய் வசூலாகியது. சிலர் தலைக்கு 50 ரூ. கொடுத்தனர்,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப் பெற்ற தம்பய்யா சத்திரம், சண்முகம் தம்பய்யா முதலியார் என்பவரால் 1880-ல் கட்டப்பெற்றதாகக் கூறப்படுகின்றது. கொழும்பு நகரத்தின் முதல் நகராட்சியின் முதல் உறுப்பினராகப் புகழ் பெற்றவர் தம்பய்யா,[26] இவரும் சுவாமி விவேகானந்தரை கொழும்பில் வரவேற்றவர்களுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''சுவாமிஜி கொழும்பு நகரத்திற்கு வருகை தந்ததைப் பற்றி இந்து சாதனம் (20-1-1897), 'சிலோன் இன்டிபென்டன்ட்' (ஆங்கில ஏடு), ஓவர்லேண்ட் ஒப்சர்வர்' (ஆங்கில ஏடு). 'பிரபுத்த பாரதா' (பெப்ரவரி, 1897, ஆங்கில ஏடு, இந்தியா) முதலான பத்திரிகைகளில் அறிகின்றோம்.

இரு ஆங்கில ஏடுகளில் வெளிவந்தனவற்றை அய்யம் பிள்ளை செட்டியார் நூலிலும், சுவாமி விருபாக்ஷானந்தா அவர்களின்' இலங்கையில்ராமகிருஷ்ணர் இயக்கம்' எனும் நூலிலும் தெரிந்துக் கொள்ளுகின்றோம்.

'இந்து சாதனம்' எழுதியதில் ஒரு பகுதி பின்வருவது:

''ஜொலிஜிற்றர் ஜெனரல் இராமநாதத்துரை, தமிழ்ப் பிரதிநிதி குமாரசுவாமித்துரை ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் அருணாசலத்துரையாதியாம் கனவான்கள் இச்சுவாமிகளை வந்தனை வழிபாடு செய்து அங்கீகாரஞ் செய்தற்கென்றே உறுவாக்காட்டில் ஓர் அழகிய மாளிகையைப் பொன்னுலகமிதுவன்றி எந்நகரமிதுவென்று பார்த்தோர் வியப்புற அலங்கரித்து மேளதாள மாதியாம் வாத்திய கோஷங்களுடன் சுவாமிகளை அம்மாளிகைக்கு எழுந்தருளச் செய்தார்கள்.'' (ப, 46).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிலோன் இன்டிபென்டன்ட்'' வெளியிட்டச் செய்தியில் ஒரு பகுதி பின்வருமாறு;

''கொழும்பு நகர இந்து சமூகத்தினர் வரலாற்றில் ஜனவரி 15, நினைவில் நிறுத்தத்தக்க நாளாகும். முன் என்றும் காண முடியாத ஆன்மிக செயற்பாட்டின் உதய சகாப்தமாக அவருடைய வருகை நிரூபிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.''

சிகாகோ வீரரின் நல்வரவை சுவாமி விபுலானந்தர் கவிதையுள்ளத்தின் எழில் துலங்கும் செந்தமிழ் சொற்களால் 1925-ல் வருணித்ததில் ஒரு பகுதி வருமாறு.

''சூரியோதய காலமாயிருந்தது. செங்கதிர் எழுந்து வருதலும் கிழக்குத் திசையிலே தெங்க மரங்களின் பசிய மடல்கள் பச்சைநிற மகர தோரணங்களைப் போலச் சிறந்து விளங்கின. நீல மேற்கட்டி போன்ற அகல்வானத்தின் கீழ் மஞ்சள் வெண்ணிறமாகத் தோற்றிய மணற் பரப்புகள் நிலமீது விரித்த நடை பாவாடை போலப் பொலிவுற்றுத் தோன்றின. இலங்காபுரியென்னுஞ் சுமங்கலி ஸ்திரி தவப்பெருஞ் செல்வராகிய விவேகானந்த சுவாமியை நல்வரவேற்கும் பொருட்டு மஞ்சள் நீரும் அறுகும் நிறைத்துத் தன்கையிற்றாங்கிய பொற்பாத்திரம் போன்றிருந்தது. மேகங்களினிடையே மெல்லொளி பரப்பிய சூரிய பிம்பம்.

''இவ்வாறு சிறப்புற்றிருந்த காலைப் பொழுதிலே இ. பி. 1897-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந் தேதியன்று மேற்றிசையிலிருந்து ஸ்ரீ சுவாமிகள் ஏறி வந்த பிறின்ஸ் றீஜென்ற் லியப்போல்ட் என்னும் மரக்கலமானது கொழும்புப் பட்டினத்தின் துறைமுகத்தினுட் புகுந்து நங்கூரமிட்டு நின்றது. அங்ஙனமாயினும் தம் கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள அரும்பொருளைப் பிறர் கையில் இலகுவிற் கொடுக்காத பொருட்பிணியாளரே போல நண்பகற் காலங்கழிந்து மாலைக் காலமாகும் வரையும் தவமுதல்வரைத் தன்னகத்து வைத்துக் கொண்டது.''[26]

சுவாமிஜியை வணங்கி வரவேற்க வந்தத் தலைவர்கள் பெயர்கள் வருமாறு ;

மேதகு பி. குமாரசுவாமித்துரை, இலங்கை சட்ட சபை உறுப்பினர், இவருடைய இளவல் ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் பி. அருணாசலத்துரை, திரு. தம்பய்யா.

சுவாமிஜியுடன் சேவியர் துரை, அவருடைய மனைவி, குட்வின் துரை, சுவாமிகளை கப்பலில் இருந்து அழைத்து வரும்படி போயிருந்த நிரஞ்சனானந்த சுவாமிகள், திரு. கனகசபை, திரு. சொக்கநாதன், ஹரிசன்துரை ஆகியவர்களும் நீராவி ஓடத்தில் உடன் வந்திருந்தார்கள்.

இவ்விடத்தில் சுவாமிஜி தமக்கு எத்தகைய வரவேற்பு கிடைக்கும் என்பதைப் பற்றி எவ்வாறு நினைத்தார் என்பதற்கு இரு வேறு வகையான கருத்தோட்டங்களை அறிவோம். ''இந்தியா தம்மை வெற்றி விழாக்கோலம் புனைந்து வரவேற்கு'' என்னும் தமது கருத்தை இந்தியா திரும்புவதற்கு பல மாதங்களுக்கு முன்பாக நமது நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு கூறினார், சுவாமிஜி.

''இந்தியா எனக்குச் செவி சாய்க்கத்தான் வேண்டும். அதன் அஸ்திவாரத்தையே அசைக்கப் போகிறேன். அதனுடைய தேசிய ரத்த நாளங்களிலே மின்சார அதிர்வைப் பாய்ச்சப் போகிறேன், இந்தியா எம்மை எப்படி வரவேற்கப் போகின்றது என்பதைப் பொறுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார். வேதாந்த உணர்வை. என் உயிர்ச் சக்தியுடன் இங்கு எவ்வளவில் வாரி வழங்கியுள்ளேன் என்பதை என் தாய்த்திருநாடான இந்தியாவிற்கு உண்மையிலேயே மதிப்பிடத் தெரியும். இந்தியா, எம்மை வெற்றி விழாக் கோலம் பூண்டு வரவேற்கும்,''

இவ்வாறு ஒரு பக்கம் மிகுந்த நம்பிக்கையுடன் உணர்ச்சிப் பொங்கக் கூறிய சுவாமிஜி, மற்றொரு சமயத்தில் என்ன நடக்குமோ? என்று சற்று சந்தேகத்துடன் கருதியுள்ளார். சுவாமிஜியின் இந்த மன நிலையை, 1896 நவம்பர் 14-ல் ஒலிபுல் அம்மையாருக்கு குட்வின் எழுதியக் கடிதத்தின் பின்வரும் வாசகங்கள் தெரிவிக்கின்றன.

''இந்தியாவில் தாம் எவ்வாறு வரவேற்கப் படுவார் என்பதைப் பற்றி சுவாமி நிச்சயமற்ற உணர்வைக் கொண்டுள்ளார். தாம் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்றும் நினைக்கிறார். அப்படியானால், இந்தியாவில் சிறிது காலம் தங்கி மீண்டும் அமெரிக்கா, இங்கிலாந்திற்கு போவது தான் விரும்பத் தக்கதாகும்.''

சுவாமிஜியின் 'சந்தேகம்', அறவே அகன்றுபோக. அவர் நினைத்த ''வெற்றி விழாக் கோலத்தை'' மங்கல ஆரத்தியுடன், சுவாமி விபுலானந்தரின் கவித்துத் வருணனைக்கு ஏற்ப, இலங்காபுரி யென்னுஞ் சுமங்கலி ஸ்திரி ''இந்து சமய மரபின் மாண்பு பொலிவுற வரவேற்று விட்டாள். அக்காலத்தில் இலங்கை பிரிட்டிஷ் இந்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது நினைவிற்குரியது.

துறைமுகத்தில் மேதகு பி. குமாரசுவாமித்துரை மணங்கமழும் மல்லிகை மாலையை சுவாமிஜியின் திருவளர் கழுத்தில் அணிந்து வணங்கிட, இக்காட்சியை பின்நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியர் பி. அருணாசலம் கண்டு மகிழ்ச்சியில் திளைத்தார். அலை மோதும் மக்கள் கடலின் ஆரவாரமும் கர ஒலியும், அடுத்து அலையெறிந்தாடிய இந்து மகாசமுத்திரத்தை இரண்டாந்தரமாக்கி விட்டன.

துறைமுகத்திலிருந்து இலட்சணம் பொருந்திய இரண்டு குதிரைகள் பூட்டிய இரதத்திலே சுவாமிஜி அமர்ந்திட, கொழும்பு நகரத்தில் சுவாமிஜி தங்குவதற்கென்றே புதிதாகக் உறுவாக்காடு எனுமிடத்தில் கட்டப்பெற்ற மாளிகையை நோக்கி ஊர்வலத்துடன் சென்றார். இந்த அழகிய மாளிகை திரு. ரத்தினசபாபதி என்னும் பிரமுகருக்கு சொந்தமானது. சுவாமிஜி இங்கு எழுந்தருளியதால் இதற்கு 'விவேகானந்தா லாட்ஜ்' என்ற பெயரும் ஏற்பட்டது. இந்த மாளிகையை சுவாமிஜி அணுகிய காட்சி தெய்வீகச் சூழலிடையே நிகழ்ந்தது.'' தாற்றிசையிலும் பலவகை மங்கள வாத்தியங்கள் முழங்கின. கொடி, குடை, ஆலவட்டம் முதலிய சின்னங்கள் முன்னதாகச் செல்ல ''ஹர ஹர மகாதேவ'' என்னும் மங்கள முழக்கம் எங்கனும் ஒலிக்க பூரண கும்பங்களும் முளைப்பாலிகைகளும் பாவை விளக்குகளும் பரந்திருந்தன.''

மாளிகைக்குள் நுழையும் வழியில் இரு நறுமணப் பூப்பந்தல்களில் நிகழ்ந்த இரு காட்சிகளில் ஒன்றை 'பிரபுத்த பாரதா' பின்வருமாறு வருணித்துள்ளது,

''சுவாமிஜியும் அவருடைய குழுவினரும் நுழைந்தவுடனேயே பந்தலில் தொங்கவிடப்பெற்றிருந்த பூவேலைப் பாட்டுடன் கூடிய செயற்கை தாமரைப்பூ விரிந்து அதில் நிறைந்திருந்த ரோசாப் பூக்கள் பொழியத் தொடங்கின.'' தவயோக ஞானிக்கு ஞானமலர் பூக்குடலையில் இருந்த மணங்கமழும் ரோசாப் பூக்கள் அருச்சனை செய்து வழிபட்டன போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விருபாக்ஷானந்தா. இரண்டாவது பூப்பந்தரில் நிகழ்ந்த அற்புதக் காட்சியை, இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்' எனும் தமது ஆங்கில நூலில் பின்வருமாறு வருணித்துள்ளார்.

''சுவாமிஜி பந்தலுக்குள் நுழைந்தவுடனேயே பந்தலில் கட்டப்பட்டிருந்த செயற்கையான தாமரைப்பூ இதழ்கள் விரிந்து மலர்ந்தது. உள்ளிருந்து சில பறவைகள் சிறகசைத்து அங்கும் இங்கும் தங்கள் விருப்பம் போல் பறந்தன''.

ஞானப் பறவைகள் விவேகமும், ஆனந்தமும் ஒருங்கு சேர தம்முன் நடந்து வந்ததைக் கண்டு சுற்றிச் சூழ்ந்தன போலும்.

''தோள் கண்டார் தோளே கண்டார்; தொடுகழல் கமலமன்ன தாள் கண்டார் தாளே கண்டார்'' என்பதற் கேற்ப மக்கள் கூட்டம் பந்தல் அலங்காரங்களையோ, பிற வேடிக்கைகளையோ பொருட்படுத்தாமல் சுவாமிஜி யின் திருமேனியில் ஏதேனும் ஓர் அங்கத்தைக் காண்ப கற்கு போராடிக் கொண்டிருந்தனர். அவர்களின் ஆர்வப் பெருக்கில் அலங்காரங்கள் சாய்ந்தன.

ஆரவாரம் அடங்க மேதகு பி. குமாரசுவாமித்துரை சுவாமிஜியை மாளிகைக்குள் வரவேற்றார். ஊர்வலத் துடன் வந்த டி. சண்முகம் என். தியாகராஜா, என். ரத்தினசபாபதி, ஆர். ராஜேந்திரன், கே. சிற்றம்பலம் முதலான பிரமுகர்கள் பலரும் வரவேற்பில் கலந்துக் கொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந் தனர்.

வயலின் பக்கவாத்தியத்துடன் தேவாரம் இசைக்கப் பட்டது, தேவாரப் பாராயணம். சுவாமிஜிக்கு கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அனுபவமாகும். இதையடுத்து சம்சுகிருத மொழியில் துதிப்பாடல் ஒன்றும் ஓதப்பட்டது.

கொழும்பு நகர இந்து சமய மகாஜனங்களுக்காக அவைத் தலைவர் பி. குமாரசாமித்துரை அவர்கள், செயலாளர் ஏ. குலவீரசிங்கம் பெயர்களும் பொறிக்கப் பெற்ற வரவேற்பிதழ் மடலை பி. குமாரசாமித்துரை படித்து, சுவாமிஜியிடம் சமர்ப்பித்தார். இதில் ஒரு பகுதி பின்வருமாறு.

''அனைத்து சமயநெறிகளையும் சமரசப்படுத்தும் இந்து சமயத்தின் இலட்சியமான உலகளாவிய சமயத்தைத் தாங்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் அறிவுறுத்தினீர்கள்......ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் பேரருளினாலும் தங்களுடைய தன்னலமற்ற பற்றார்வக் கிளர்ச்சியாலும் இந்திய ஆன்மிக மேன்மையுடன் உயிர்த்தொடர்பு கொள்ள மேற்கு நாடுகள் விலை மதிப்பற்ற வரத்தைப் பெற்றன. சுவாமிஜி, அவருக்கேயுரிய எளிய, தெள்ளிய, மனதில் ஆழப்பதியவைக்கக்கூடிய சொல்லாற்றல் நனிதுலங்க தமது ஏற்புரையை நிகழ்த்தினார். இதன் செய்திச் சுருக்கம் வருமாறு,

''இரந்துண்ணும் ஒரு சந்நியாசிக்கு அளிக்கப் பெற்ற இளவரசுக்குரிய வரவேற்பானது. இந்துக்களின் உச்சக்கட்ட ஆன்மிக வெளிப்பாடாகும் என்பது செயலில் எடுத்துக் காட்டப்பட்டது. கண்ணெதிரே திரண்டுள்ள பல்லாயிரக்கணக்கிலான மக்களை ஈர்த்தவர் ஒரு தானைத் தலைவரோ, ஓர் இளவரசரோ, ஒரு செல்வந்தரோ அல்லர். ஓர் ஏழை சந்நியாசியே என்று அவர் கூறினார். நாட்டு மக்களின் ஆன்மிக வலிமையை உண்மையிலேயே இது சுட்டிக் காட்டுகிறது என்றும் கூறினார். சுவாமிஜியின் சக்தி வாய்ந்த உரைக்குப் பின் பூமாரி பெய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹர ஹர மகாதேவ' எனும் மந்திரச் சொற்கள் முழங்கின. சுவாமியின் பிரார்த்தனையுடன் அவை கலைய, பன்னீர்த்துளிகள் தூவப்பட்டன.''

மறுநாள் 16-ந் தேதி காலையில் ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமிஜி எழுந்தருளியிருந்த மாளிகையில் தரிசனம் செய்து வாழ்த்துக்களைப் பெற்றனர். அன்று மாலையில் கொழும்பு நகர 'ப்ளோரல்ஹால்' எனப்படும் அணிமலர் மண்டபத்தில், ''புண்ணிய பூமி - இந்தியா'' எனும் தலைப்பில் தமது கீழைநாட்டு முதல் பொதுக் கூட்டச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அருட்பெருஞ்செல்வர் சுவாமிஜி இப்பொழிவின் சாராம்சம் சுவாமி விபுலானந்தர் தமிழிலே பின்வருமாறு அமைந்துள்ளது.

''அன்பர்களே! மேநாட்டில் நான் செய்த கைங்கர்யம் என்னுடைய வலிமையினால் ஆனதன்று. நம்மனைவருடைய அன்பின் நிலைக்களமாய, மகாபரிசுத்தம் பொருந்தியதாய்த் திகழுகின்ற நமது அருமைத் தாய்நாட்டினின்று என்னைத் தொடர்ந்து வந்த ஆசீர்வாதத்தினாலும், மங்கள மொழியினாலும், நன்னய விருப்பினாலுமே நிறைவேறியதென்பேன். மேனாட்டிற் செய்த கைங்கரியத்தினாற் சில நன்மைப்பேறு உண்டாயிற்று என்பதும் உண்மையே. ஆயினும் முன்னாளில் என் மனத்தில் ஆர்வமாத்திரமாக விருந்த பல உண்மைகள் உறுதிப்பட்டுப் பிறருக்கு உரைத்தனம் காரணமாக வலிமை பெற்றனவாதலால் அங்ஙனம் விளைந்த நன்மையும் எனக்கே சிறந்த நன்மையாயிற்று.

''கனம் பொருந்திய அக்கிராசனாதிபதி யெடுத்துக் காட்டியவாறு போலவும், இந்துக்களனைவரும் கைக் கொள்ளுகிறவாறு போலவும் நமது நாடு கர்மபூமியாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய பூமியென்றும் எண்ணம் தொன்று தொட்டு என் உள்ளத்தில் இருந்ததெனினும், இப்பொழுது அவ் வுண்மை உறுதிட்டுச் சந்தேக விபரிதமற்றதாகத் தோன்று கின்றது. புண்ணிய பூமியென்னும் பெயரினைப் பெறுதற்கு நிலவுலகத்திலுள்ள அனைத்து நாட்டிலும் பார்க்கப் பேருரிமை பூண்டு நிற்பதும், கருமத் தொடர்பை நிவர்த்தி செய்து கடவுளுடைய திருவடி நிழலையடையும் மார்க்கத் திற் செல்லுதற்குப் பக்குவராகிய சிலர்கள் வந்து எய்துதற் குரியதும், அன்பு, அருள், தூய்மை, அமைதி என்னும் இவற்றை அடைதற்கும், உண்ணோக்கி யாராய்ந்து ஆன்ம வியல்பைக் கண்டறிதற்கும் தொன்று தொட்டு வந்த நிலையாயிருப்பதும் பரதகண்டமாகிய இந்தியா தேசமேயாம்.

''மிகப் பழமையான காலந்தொட்டு இந்நாட்டிலே அறநெறி நிறுவிய பெரியோர்கள் தோன்றி மெய்ந்நெறி ஞானப் பெருக்கினால் உலகத்தின் ஏனைய பாகங்களையும் உய்யக் கொண்டார்கள். நாற்றிசையிலும் பரந்த ஞான வாரிதிக்கு உற்பத்தித்தானமாகியது இந்நாடு. இந்நாளில் உலகிற் பரந்திருக்கிற உலோகய அழுக்கினைப் கழுவப் போகிற புனித நதியும் இந்நாட்டினின்றே தோன்று மென்பதற் கையமில்லை. அந்நிய நாடுகளிற் பன்னூறா யிரம் மாந்தரது உள்ளத்தினைப் புழுக்குகின்ற உலோகா யத் தீயையவித்துத் தண்ணருள் கூட்டி வைக்கும் ஆற்ற லுடைய புண்ணிய தீர்த்தம் இந்நாட்டிலுள்ளது. அன்பர் களே இங்ஙனம் நடந்தேறப் போகிறதென்னும் உண்மை யைச் சந்தேகமின்றி நம்புங்கள்.''

தமது கொழும்பு வருகையின் மூன்றாம் நாளில்-சனவரி 17-ல் சுவாமிஜி எண்ணற்ற பக்தர்களுக்கு பேட்டி யளித்தார். மாலையில் கொழும்பு நகரத்தின் பிரபல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயிலான கொச்சிக் கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபாடு செய்தார்.

சனவரி 18-ல் கொழும்பு நகரத்தில் புகழ் பெற்றிருந்த இந்துவான திரு, செல்லையா என்பவர் வீட்டிற்கு சென்றார் சுவாமிஜி இந்தச் சந்திப்பின் முக்கியத்துவத்தைக் கருதி 'சிலோன் இன்டிபென்டன்ட்' கீழ்காணும் செய்தியை வெளியிட்டது.

''திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணி அளவில சுவாமி விவேகானந்தர், திரு. செல்லையா வீட்டிற்கு வந்தார். செல்லையாவின் மாளிகை வந்திருக்கும் விருந்தினரின் உயர் மதிப்பிற்கு ஏற்ற வண்ணம் கலையம்சம் நிறைந்து காண்போரைக் கவரத்தக்க வகையில் அலங்கரிக்கப்பட்டது. சுவாமிஜி அமரும் வெல்வட் சோபா மீது தர்ப்பை ஆசனம் போடப்பட்டது. கங்கையின் புனித நீரும். பன்னீரும் சுவாமிஜி மீது தூவப்பட்டது......ஆயிரத்திற்கும் மேலாகக் கூடியிருந்தோருக்கு சுவாமிஜி திருநீறு பிரசாதம் வழங்கினார். அவருக்கே எதிரே சுவற்றில் அழகிய எண்ணெய்க் கலவையால் வரையப்பட்ட ஓவியம் அவரைக் கவர்ந்தது. அவருடைய குரு பரமஹம்சரின் அற்புத ஓவியத்தை வணங்கினார். ஓவியம் தீட்டியக் கலைஞரைப் பாராட்டினார். அதனருகே ராமநாதபுரம் ராஜாபாஸ்கர சேதுபதியின் ஓவியம் இருந்தது, சுவாமிஜீ அதைப் பார்த்த பொழுது தமிழகத்தில் இருந்து வந்த 'நாகை மீனலோசனி' எனும் பத்திரிகையின் ஆசிரியர் ஜி. சதாசிவம் பிள்ளை, செல்லையா மாளிகைக்கு பாஸ்கர சேதுபதி, சுவாமிஜியை வரவேற்க வருவார் என்று எதிர்பார்த்து வந்தார். ஆனால் அவர் ஏமாற்றமடைந்தாலும் குருமகராஜ், சுவாமிஜி, சுவாமிஜியின் மெய்யடியார் பாஸ்கர சேதுபதி மூவரும் இணைந்து காட்சி தந்தது போன்ற உணர்வைப் பெற்றார், சதாசிவம் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாவின் மாளிகை, மகாத்மாக்கள் தங்குவதற்கு ஏற்ற இடம் என்று பாராட்டினார் சுவாமிஜி. செல்லையாவின் சிறு குழந்தை அழகிய சுந்தரியை கையிலெடுத்து கொஞ்சினார், சுவாமிஜி. தேவாரப் பாராயணத்துடன் சிறப்பு மிகுந்த இந்த நிகழ்ச்சி முடிவுற்றது.''

ஜனவரி 18-ல் கொழும்பு நகர பொது மண்டபத்தில் சுவாமிஜி 'வேதாந்தத் தத்துவம்' எனும் பொருளில் பேருரையாற்றினார். வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய சமயத்தை விளக்கிப் பேசினார், அக்காலத்தில் உயர் கல்வி கற்ற இந்துக்களில் பலர் ஆங்கிலேயரைப் போலவே நடையுடைபாவனை கொண்டிருந்தனர், இவ்வாறு இருப்பதில் பெருமிதமும் கொண்டனர், சுவாமிஜி தமது பேச்சில் உடையலங்காரத்தில் ஐரோப்பியர்களைப் பின்பற்றும் அடிமைத்தனமானப் போலித்தனத்தைக் கண்டித்தார். கறுப்பு மனிதனுக்கு ஏற்ற வண்ண ஆடையை அணியாமல் அழகுணர்ச்சியற்ற, அருவருப்பான ஆடையை அணிவது ஏற்றதன்று என்றும் கூறினார். மஞ்சள், சிவப்பு நிறம் போன்ற வண்ணச் சாயல்கள் உள்ள ஆடைகளை அணிவது ஏற்புடைத்தாகும் என்றும் குறிப்பிட்டார். இலங்கையின் மண்ணும், வானமும் செழிப்பாகப் பெற்றுள்ள வண்ணக் கோலத்திற்கு ஒத்திசைவான வண்ண ஆடைகள் விரும்பத்தக்கது என்றும் சுட்டிக் காட்டினார்.

'புண்ணிய பூமி - இந்தியா', 'வேதாந்தத் தத்துவம்' எனும் இரண்டு சொற்பொழிவுகளும் ஒரு மாத இடைவெளியில் வி. அய்யம் பிள்ளை அவர்களால் ஆங்கிலத்தில் முதன் முதலாக வெளியிடப்பட்டதை முன் பக்கங்களில் கண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னையில் வெளிவந்த முதல் இரு நூல்கள்

சுவாமிஜியின் சொற்பொழிவுகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இரு நூல்களாக சென்னையில் முதன் முதலில் வெளிவந்தன. கல்கத்தா இந்தியன் மிரர் இதழில் (1897 ஆகஸ்ட் 22) வெளிவந்த செய்தியொன்றில், எழும்பூர் வைஜயந்தி பிரஸ் வெளியீடாக ''கொழும்பு முதல் அல்மோரா வரையில்'' எனும் ஆங்கில நூல் வெளி வந்ததை அறிகின்றோம். சுவாமிஜியின் பதினேழு சொற் பொழிவுகள் இந்நூலில் உள்ளன, ''ஆதாரபூர்வமான ஒரே நூலாகவும் இது விளங்குகிறது. ஆனால் இந்த நூலில் சுவாமிஜிக்கு ஆங்காங்கே அளிக்கப் பெற்ற வரவேற்புரை கள் சேர்க்கப்படவில்லை. எப்படியிருந்தாலும் சுவாமிஜி யின் எழிச்சியூட்டும் சொற்பொழிவுகளை முதன் முதலில் வெளியிட்ட அரும்பணி சென்னையில் நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.[27]

சுவாமிஜி அவர்கள் தமிழ் நாட்டில் சென்னையைச் சார்ந்த வி. நடராஜ ஐயர் என்னும் பத்திரிகையாளருக்கு 15-4-1898-ல் எழுதியக் கடிதத்தில் ''நமது நாட்டு மொழி களில் நான் கூறுவன அனைத்தும் வெளிவருதல் வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். 'லோகோபகாரி' எனும் பத்திரிகையின் வாயிலாக வி. நடராஜ ஐயர் ஆன்மிகத்தை யும், பொது அறிவையும் நல்ல தமிழில் வளர்த்தார். 'பி. ஏ.' பட்டதாரியான இவர் சுவாமி விவேகானந்த ரிடம் பக்தி கொண்டவர். 1895-ல் டிசம்பரில் 'லோகோப காரி'யை மாத இதழாக ஆரம்பித்தார். 1896-ல் மாதம் மும்முறையாகவும், 1897-ல் வார இதழாகவும் வெளிவரத் தொடங்கியது. இந்த பத்திரிகையின் ஒரு பிரதி கூடக் கிடைக்கவில்லை. அவர் பதிப்பித்த 'ஞானத்திரட்டு' எனும் நூலின் வாயிலாக 'லோகோபகாரி'யைப் பற்றி அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஞானத்திரட்டு' இரு பாகங்களாக 1898-ல் வெளி வந்தது. இந்நூலில் சிகாகோ சொற்பொழிவு உட்பட சுவகமிஜியின் சொற்பொழிவுகள் பல அடங்கியுள்ளன.[28] இந்நூலை அப்பொழுது டார்ஜிலிங்கில் தங்கியிருந்த சுவாமிஜிக்கு கடிதத்துடன் அனுப்பியதற்கு சுவாமிஜி எழுதிய பதிலில் முற்கூறிய கருத்து கூறப்பட்டுள்ளது.

## இலங்கையில் வெளிவந்த சுவாமிஜி சொற்பொழிவின் முதல் தமிழ் நூல்

இலங்கையில் யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் (1858-1917) 'விவேகானந்தர் சுவாமி கள் கொழும்பிற் செய்த பிரசங்கம்' எனும் சிறு வெளி யீட்டை 1897-ல் (மாதம் தெரிய வில்லை) பிரசுரித்தார். பதினாறு பக்கங்கள் கொண்ட இந்நூல் 2000 பிரதிகளாக அச்சிடப் பட்டது.[29] இந்நூலின் ஆசிரியரும், பதிப்பாளரும் மாணிப்பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை நாவலர் மரபைப் பேணியவர். 'யாழ்ப்பாண வைபவம்' எனும் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். இவருடைய 'அபிதானகோசம்' (1902) அத்துறையில் வந்த முதல் நூலாகவும் கருதப்படுகிறது. கல்விக்குரிய பாட நூல்களை நாவலர் மரபு வழியே வெளியிட்டவர். Tamil Antiquary, Siddantha Deepika, செந்தமிழ் முதலிய இதழ்களில் இவருடைய கட்டுரைகள் வெளிவந் துள்ளன.[30]

''இலங்கையில் சுவாமி விவேகானந்தர் பிரசங்கம்'' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள 'பிரசங்கம்', எந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கம் என்பதைப் பற்றி அறிய முடியவில்லை. இந்நூல் தேடி எடுக்கப்பட வேண்டிய நூலாகும்.

## பி. அருணாசலம்

சுவாமிஜியை கொழும்பில் வரவேற்ற புகழ் பூத்தப் பேரறிஞர் பி. அருணாசலம், அவருடைய சகோதரர் பி. குமாரசுவாமியைப் போலவே கல்வியாலும், சமயப் பற்றாலும், உயர் பதவிப் பொறுப்பாலும், இந்து சமய முன்னணித் தலைவர்களுள் ஒருவராக புகழ் பெற்றவர். தஞ்சாவூர் அருள்பரானந்த சுவாமிகளிடம் மிக்க ஈடுபாடு கொண்ட இவர் சுவாமி விவேகானந்தரிடமும் மிக்க ஈடுபாடுகொண்டவர். தமிழ், சம்சுகிருதம், இலத்தீன், கிரேக்கம் பிரெஞ்சு, ஜெர்மன் முதலான பன்மொழிப் புலமைப் பெற்றவர். ஆங்கிலத்தில் உள்ள இவருடைய நாட் குறிப் பேட்டை, கொழும்பில் பேராசிரியர் தம்பய்யா நடராசா பார்வையிட அன்புடன் இசைந்தார். இந்நூலாசிரியரும், சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களும் இந்த 'டைரி'யைப் பார்த்தனர். 1897 ஜனவரி மாத நாட்டு குறிப்புகள் தேடப்பட்டும் கிடைக்காமல் போனது பேரிழப்பாயிற்று. அவருடைய நாட் குறிப்பேட்டில் பல்வேறு ஆன்மிக நூல் களைப் பற்றியக் குறிப்புகள் குவிந்துள்ளன.

சுவாமிஜி பரிபூரணமடைந்தச் செய்தியைப் பேரறிஞர் பி. அருணாசலம் தமது நாட்குறிப்பேட்டில் (1902) பின் வருமாறு எழுதியுள்ளார்.

''விவேகானந்தசுவாமி கல்கத்தாவில் 4நான்காம் தேதி யன்று காலமாகி விட்டார். மாபெரும் மனிதர், இந்தியா பெற்றெடுத்த தலைசிறந்தவர்களில் ஒருவர், அவரும் அவருடைய நூல்களும் எனக்கு மகத்தான உதவியாய் அமைந்தன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி, கொழும்பில் தங்கிய காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய வாழ்க்கை வரலாற்றில் கூறப் பட்டுள்ளது. ஓர் ஏழைப் பெண்மணி, சுவாமிஜியை தரிசித்து, கடவுள் ஞானம் பெற அருளுமாறு வேண்டிக் கொண்டாள். அப்பெண்மணியிடம் பகவத்கீதையைப் படிக்குமாறு சுவாமிஜி கூறினார். அத்துடன் சமயத்தை செயல் முறை சமயமாகப் பின்பற்ற வேண்டுமானால் அப்பெண்மணி தன் இல்லறக் கடமைகளை தகுந்த முறை யில் நிறைவு செய்ய வேண்டும் என்றும் சுட்டிக் காட்டி னார். இதற்கு அப்பெண்மணி பதிலளித்தபொழுது, "நான் பகவத்கீதையைப் படிக்கிறேன்; ஆனால் அதை நான் புரிந்துக் கொள்ளவோ உணர்ந்துக் கொள்ளவோ இயலாத நிலையில் எனக்கு என்ன பயன் கிடைக்கும்" என்று குறிப்பிட்டாள். ஏழைப் பெண்மணியின் இந்தப் பதில் இரு வழிகளில் சிந்திக்கத் தூண்டுவதாகும். ஒன்று, நூலறிவில் சமயம் அடங்கவில்லை என்பது, மற்றொன்று கீழை நாடுகளில் கல்வி கற்காத ஏழையிடம் கூட ஆழ்ந்த சமயவுணர்வு உள்ளது என்பதை எடுத்துக் காட்டியது.

சுவாமிஜியின் கொழும்பு விஜயம், இலங்கையில் பிற விடங்கள் சிலவற்றிலும் எதிரொலித்தது. அவர் கொழும் பில் இருந்து நீராவிப் படகு மூலம் நேராக சென்னைக்கு புறப்படுவது என்று முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் கண்டி, யாழ்ப்பாணம் முதலான இடங்களில் அவரை வரவேற்று வாழ்த்துப் பெற இந்துக்கள் பேராவல் கொண் டனர். இதனால் சுவாமிஜியின் பயணத்தில் மாறுதல் செய்யப்பட்டது.

19-1-1897-ல் காலையில் கண்டிமாநகருக்கு சிறப்பு ரயில் வண்டியில் புறப்பட்டார், சுவாமிஜி. அந்த ஊர்தி யில் தம்பய்யாவிற்கு சொந்தமான சிறப்பு ரயில் பெட்டி சுவாமிஜிக்காக இணைக்கப் பட்டது. பேரறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி. அருணாசலம் சுவாமிஜியுடன் சென்றார். காலை 7-30 மணிக்கு கொழும்பில் புறப்பட்ட சுவாமிஜி கண்டிக்கு காலை 11-20க்கு வந்து சேர்ந்தார்.

கண்டி ரயில் நிலையத்தில் காத்திருந்த பெருங்கூட்டம் இந்திய பாண்டு வாத்தியக் குழுவின் இசையுடனும், வழக்கமான கோயில் விருது சின்னங்களுடனும் சுவாமிஜியை வரவேற்று, அவர் தங்கவிருக்கும் மாளிகைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். கண்டி இந்துக்கள் சார்பில் தில்லையம்பலம் முகாந்திரம் விரிவான வரவேற்புரையை வாசித்தளித்தார்.

வரவேற்புரையையும், அதற்கு சுவாமிஜி அளித்த பதிலுரையும் "சிலோன் இன்டிபென்டன்ட்" எனும் இதழில் வெளிவந்துள்ளது. வரவேற்புரையில் ஒரு பகுதியாவது.

"தங்கள் முதல் அமெரிக்க விஜயத்தில் சிகாகோ சர்வமத சபையில் நம் சமயத்தைப் பற்றித் தாங்கள் பிரசாரம் செய்ததை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டு வந்தோம். மேலை நாட்டில் எதிர்பாராத அளவில் தங்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியை ஆழ்ந்த நன்றியுணர்வுடன் கேள்வியுற்றோம்."

கண்டி இந்து மக்கள் சுவாமிஜிக்கு பிரியா விடை கொடுத்தார்கள். கண்டியில் இருந்து அன்று மாலையே சுவாமிஜி மாத்தளைக்கு சென்றார். மாத்தளையில் சுவாமிஜி இரவு தங்கினார், அங்கு சுவாமிஜிக்கு ஏதேனும் நிகழ்ச்சியிருந்ததா என்பதைப்பற்றி செய்தியேதுமில்லை.

மாத்தளையில் இருந்து 20-ந்தேதி அநுராதபுரம் வழியே சுவாமிஜியின் யாழ்ப்பாணப் பயணம் தொடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயது. 200 மைல் தொலைவுள்ள இந்தப் பயணம் மிகுந்த சிரமங்களுடன் நிகழ்ந்தது. கொழும்பில் இருந்து கண்டி வரையிலான ரயில் பயணம் போன்று அலுப்பு-சலிப்பில் லாதப் பயணம் அன்று இந்தப் பயணம். கரடு முரடானப் பாதை, பசுமையற்றச் சூழல், கோச்சு வண்டிப் பயணம். அநுராதபுரத்திற்கு போகும் வழியில் வண்டியில் முன் சக்கரங்கள் மலையிறக்கத்தில் மோதலினால் ஆட்டங் கண்டு விட்டன. நல்ல காலம் சக்கரங்கள் முழுவதுமாக கழன்று விடவில்லை. இதனால் வண்டி குப்புறக் கவிழ்ந்து போகும் அபாயம் நிகழவில்லை. மாற்று வண்டிக்காக தேடியலைந்த பொழுது ஓரே ஒரு மாட்டு வண்டி தொலை வில் இருந்த ஒரு கிராமத்தில் இருந்து கிடைத்தது. மூட்டை முடிச்சுகளுடன் திருமதி சேவியர் மட்டும் இந்த வண்டியில் அமர முடிந்தது. வேறு மாட்டு வண்டிகள் கிடைப்பதற்குள், சுவாமிஜியும், உடன் வந்தவர்களும் பல மைல்கள் நடந்து செல்ல வேண்டியதாயிற்று. இரவு நேரங்களை இந்த வண்டிகளில் தான் கழிக்க வேண்டி யிருந்தது. எட்டு மணி நேரம் காலதாமதமாக அநுராத புரத்தை அடைந்தார்கள்.

இவ்வளவு சரீர சிரமங்களை கருணையுள்ள முடன் சுவாமிஜி ஏற்றுக் கொண்டார். சிகாகோ சர்வமத சபைக்குப் பிறகு தொடர்ந்தாற் போன்று அமெரிக்காவிலும், ஐரோப்பாவில் சிலவிடங்களிலும், லண்டனிலும் சுவாமிஜி மேற்கொண்ட சுற்றுப்பயணங் களால் அவருடைய அற்புதமான உடற்கட்டு தளர்ந்த நிலையிலும், யாழ்ப்பாண இந்துக்களின் அன்புள்ளங்களை வாழ்த்தியருளி மகிழ்விக்கக் கருதி, சுவாமிஜி தமக்கேற் பட்ட வழிப்பயணத் துன்பங்களை ஏற்றுக் கொண்டார்.

அநுராதபுரம், வரலாற்றுப் பழமை வாய்ந்த நகரம், பண்டைச் சிவன் கோயில்களும், பௌத்த சமயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களும் நிறைந்திருந்த வரலாற்றுச் செய்திகள் பலவுண்டு. பௌத்த சமயப் பிரசாரத்திற்கு இந்தியச் சக்ரவர்த்தி அசோகன் அனுப்பி வைத்த மகேந்திரன் நாட்டிய ஆலவிருட்சம் அனுராத புரத்தின் புகழ் பேசுவது இந்தப் புனித மரத்தின் நிழலின் கீழ் நின்று சுவாமிஜீ சுருக்கமாகப் பேசினார். ஆயிரக்கணக்கில் கூடியிருந்த பௌத்தர்கள்— தமிழர்கள் பொருட்டு சுவாமிஜியின் பேச்சு சிங்களத்திலும், தமிழிலும் மொழி பெயர்க்கப் பட்டது. ''வழிபாடு'' எனும் தலைப்பில் பேசினார். பௌத்த மத வெறியர்கள் சுவாமிஜியின் பேச்சைத்தடுத்து நிறுத்தப் பறையடித்து. சேகண்டி, தகரக்குருவளை ஓசை யெழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் சுவாமிஜீ திடீரென்று இடையிலேயே பேச்சை முடித்துக் கொண்டார்.

சின்னஞ் சிறுவயதிலேயே புத்தர் பெருமானை ஞானக் காட்சியாகக் கண்ட, பௌத்த சமயத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை போற்றிய, சர்வமத சபையில் பௌத்த சமயத்தைப் பற்றிப் பேசிய வீரத்துறவிக்கு முன் பௌத்த சமய வெறியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தது, பௌத்த மதச் சான்றோர்களை தலைகுனிய வைக்கத் தக்கது. பௌத்த சிங்களவர்கள் —இந்து சமயத்தமிழர்களிடையே மோதல் ஏற்பட்டு விடக் கூடாது எனும் பேருள்ளத்தால் சுவாமிஜி தமது பேச்சை முடித்துக் கொண்டார். இந்துக்களை அமைதிகாக்க வற்புறுத்தினார். அமைதி திரும்பியதும் உலகளாவிய சமய நெறியைப் பற்றிப் பேசினார். சிவன், விஷ்ணு, புத்தர் மற்றும் வேறெந்த பெயரிலும் கடவுள் வழிபாட்டை நிகழ்த்தலாம் என்றும் வலியுறுத்தினார். பல்வேறு சமயங்களிடையே பரிவு, சகிப்புத்தன்மையின் அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் 120 மைல் தொலைவில் இருக்கின்றது. பாதை மட்டுமன்று, கோச்சு வண்டியும் மோசமாக இருந்தது. பயணத்தின் களைப்பைத் தீர்க்க அழகான சுற்றுப்புறச் சூழல் உதவியது. சேர்ந்தாற்போல இரு இரவுகள் தூக்கமில்லாமல் சுவாமிஜி செல்ல வேண்டியதாயிற்று.

அனுராத புரத்தை அடுத்து வவுனியாவில் சுவாமிஜி தங்கி சற்று இளைப்பாற முடிந்தது. வவுனியா இந்துக்கள் அளித்த வரவேற்பை ஏற்று சுவாமிஜி சுருக்கமாகப் பேசினார். வவுனியாவின் எழிலார்ந்த காடுகள் வழியே சுவாமிஜியின் யாழ்ப்பாணப் பயணம் தொடர்ந்தது.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சுவாமி விவேகானந்தர்

சுவாமிஜியின் இலங்கை சுற்றுலாவில் யாழ்ப்பாணச் சுற்றுலா பெற்ற வரலாற்றுச் சிறப்பு சற்று கூடுதலாகும். ஏன் எனில் இங்கு சைவ சமயம், சக்திவாய்ந்த இயக்கமாக கிறித்துவ சமயத்தின் பிரசாரப் போரிற்கு பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தது. இங்குதான் சைவ சமயப் பிரசாரப் போர் முரசாக ஒலித்த இந்து சாதனமும், கிறித்துவ சமயப் பிரசாரப் போர் முரசாக ஒலித்த ''உதயதாரகையும்'' சுவாமிஜியின் வருகையை இருவேறு கோணங்களில் விரிவாக விமர்சனம் செய்தன.

சுவாமிஜியை வரவேற்க ஒரு குழு அமைக்க இந்து கல்லூரியில் 12-1-1897-ல் நூறு சைவப் பிரபுக்கள் கூடியச் செய்தியை இந்து சாதனத்தின், ''ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளது வரவு'' எனும் தலையங்கத்தில் (20-01-1897-ப-46) பின் வருமாறு அறிகின்றோம்.

''அத்துவக்காத்து ஸ்ரீ கனக சபையவர்கள் எழுந்து ஸ்ரீ நாகலிங்கமவர்கள் அக்கிராசனபதியாயிருக்க வேண்டுமெனப் பிரேரிக்க ஸ்ரீ பிறக்கிறாசியார் காசிப் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்கள் அதனை அனுவதித்னர். அத்- ஸ்ரீ.நாகலிங்கமவர்கள் அக்கிராசனத்தமர்ந்து. கூட்டம் வரிக்கப் பெற்ற நோக்கத்தைப் பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசிய பின்னர், ஸ்ரீ.அத். கனக சபையவர்களுடைய பிரேரகப் படியும். ஸ்ரீ இலங்கை நாயக முதலிய வருடைய அனுவாதப்படியும் ஸ்ரீ அ.சபாபதியவர்களை லேககராகத் தேர்வு செய்யப்பட்டனர். பிறக்கிறாசியார் ஸ்ரீ பொன்னம் பலமும் ஸ்ரீ லெ.பெ இராமசாமிச் செட்டியாரும் தனாதி காரிகளாய் இருத்தல் வேண்டுமென அக்கிராசனபதி பிரேரிக்க அதனை டாக்தர் ஸ்ரீ கந்தையா அனுவதித்த னர். ஸ்ரீ விவேகானந்த சுவாமியவர்கள் இந்த மாதம் 24-ம் தேதி இங்குவர இருப்பதால் அவர்க்குத் தகுந்த உபசரணை செய்ய வேண்டுமென ஸ்ரீலோட்டனவர்கள் பிரேரிக்க அதனை ஸ்ரீ இலங்கை நாயக முதலியார் அனுவதிக்க அது சர்வாங்கீகாரமானது. ஸ்ரீ த.கைலாச பிள்ளையவர்கள் சுவாமியவர்களை உபசரித்தற்கு வேண் டிய செலவுக்கு பணம் சேர்த்தல் வேண்டுமெனப் பிரேரிக்க ஸ்ரீ. அத். கனக சபை அதனை அனுவதித்தனர். ஸ்ரீ. முத்துத்தம்பி பிள்ளை அவர்கள் பிரேரிக்க ஸ்ரீமயில் வாகனம் அனுவதிக்க கூட்டத்தாரின் நோக்கத்தை நிறைவேற்ற ஓர் நிருவாக சபை நியமிக்கப்பட்டது.''

'இந்து சாதனம்' மேற்படி தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டதாவது: ''சுவாமியவர்களுடைய திவ்விய முகத்தைப் பெற்று ஆனந்திக்கும் சலாக்கியம் எமக்குக் கிடைக்குமென்று நாம் காத்திருக்கவில்லை. இவர் எம்மையும் தரிசிக்கச் சித்தங்கொண்டது எமது நாடு செய்த பெரும் பூஜா புண்ணிய பலனென்றே சொல்லத் தக்கது... இப்பெருந்தபோதனரை எம்மூரார் அதி மகிழ்வுடனேற்று உபசரித்தனுப்புவா ரென்பதற்கு சந்தேக மில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியை வரவேற்கத்திட்ட மிட்டக் கூட்டத்தில் கலந்துக் கொண்ட ''நூறு சைவப் பிரபுக்''களில் ஆறுமுக நாவலரின் மருகரும், சைவபரிபாலன சபையின் தலைவருமான பொன்னம்பலம் பிள்ளையும் நாவலரவர்களின் உடன் பிறந்தாரின் பெருமகனும், இந்து சாதனம்' ஆசிரியருமான த. கைலாச பிள்ளையும், 'இந்து ஆர்கன்' ஆசிரியர் அ. சபாபதி பிள்ளையும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்தப் பேரியக்கத்தலைவர்கள், வேதாந்தச் சிங்கத்தை உளமார வரவேற்க உவகைப் பெருக்குடன் திட்டமிட்டதும் குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் மாத மிருமுறையாக வெளிவந்த இந்து சாதனம். தனது அடுத்த இதழின் தலையங்கத்தில் (3-2-1897 ல்) சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகை வைபவத்தை ''ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள்'' எனும் தலைப்பில வருணனை நடையின் சிறப்பம்சங்கள் நனிதுலங்க எழுதியது.

## சுவாமிஜியின் வருகை

## இந்து சாதனம் வருணனை

இந்து சாதனத்தின் முற்கூறிய தலையங்கம் சிறந்த தொரு வரலாற்று ஆவணம் ஆகும். இதன் ரக்கியத்துவம் கருதி தலையங்கம் முழுவதும் பின் வருமாறு வழங்கப் படுகின்றது.

''நாம் சென்ற பத்திரிகையிற் சொல்லியவாறு எம்மூராரெல்லாம் மிக்க ஆவலோடு வரவெதிர் பார்த்து நின்ற ஸ்ரீமத் விவேகானந்த சுவாமியவர்கள், சென்ற மாதம் 24-ம் தேதி காலை பத்து மணியளவில். எம்முரைப் பிணித்து நிற்கும் பாசாந்தகாரத்தை யோட்டித் துரத்த வந்த ஞான சூரியனை நியர்த்து எமது மத்தியில் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தனர். சுவாமியவர்களது உபசரணைக்காக வரிக்கப் பட்ட நிருவாக சபையார் (ஸ்ரீமத் நாகலிங்கம், ஸ்ரீ வி. காசிப் பிள்ளை. ஸ்ரீ அ. மயில் வாகனம் ஆகிய பிரபுக்கள் பலர்) சுவாமிகளை எதிர் கொண்டழைத்து வருமாறு அசுவரதங்களோடும் அன்று சாவகச்சேரி வரையிற் சென்று "கோச்சு" மார்க்கமாக வந்த சுவாமிகளையும் அவரது ஆங்கிலேய அமெரிக்க சீஷர்களில் மூவராகிய கப்றின் சேவியர், இவர் பாரியார், மெஸ்குட்வின் என்பவர் களையும், சுவாமியவர்கள் கொழும்பு வந்து இறங்கும் போது வரவேற்குமாறு சென்னை மாநகரத்துஉபசரணைச் சாமியார் அங்கிருந்து அனுப்பியிருந்த ஸ்ரீ நிரஞ்சனானந்த சுவாமியென்பவரையும், தக்க மரியாதையோடும் அக மகிழ்ச்சியோடும் எதிர் கொண்டுபசரித்து அழைத்து வந்தனர். அன்று சாயந்தரம் 6 மணியளவில எம்மூரார் மிக ஆராமையோடும் உள்ளன்போடும் செய்த உபசரணை யின் காட்சி நாம் முன்னொரு போதுங் கண்டிராத மாட்சியுடைத்தாய் உலகத்தின் கண்ணுள்ள எச்சாதி யாரிலும் மார்க்க விசுவாசமும் பக்தியும் மிகவும் பெரிதுடையார் இந்தியர்களே யென்று சுவாமியவர்கள் சொல்லியதற்கு ஒரு சான்றாயுமிருந்தது.

"பல்லாயிரம் புடைசூழ, மேளவாத்திய கோஷங்கள் திசாமுகங்களை அதிரச் செய்ய, தீவர்த்திகளெல்லாம் வான சோதிகளை இரிந்தோடச் செய்ய. இரு துரகங்கள் பூட்டிய வண்டி மீதிவர்ந்து இந்துக் கல்லூரியிலியற்றப் பட்டிருந்த அலங்காரப் பந்தர்க்குச் சுவாமியவர்கள் எழுந்தருளிய போது, பெரிய கடை முதல் கல்லூரி ஈறாகச் செய்யப்பட்டிருந்த வீதியலங்காரம் அம்மம! எம்மாற் சொல்லத் தக்கதன்று. எங்கணுந் தோரணங்கள்! எங்கணும் பூரண கும்பங்கள்! எங்கணுந் தீப தூபங்களு மாயே இருந்தது. எள்ளிடவிடமின்றி எண்ணிறந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமியிருந்த பந்தர்க்குச் சுவாமியவர்கள் ஏழு மணியென்ன வந்து சேர்ந்து பந்தரின் கீழ் இயற்றப்பட்டிருந்த மிக அலங்காரமான சிம்மாசனத்தின் மீது தமது சிஷர்கள் மூவரும் இருபக்கங்களிலும் எய்தியிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது உபசரணைச் சபை லேககராகிய ஸ்ரீ அ. சபாபதி பிள்ளையவர்கள் எழுந்து வந்தனோபாசராப் பத்திரிகையொன்று வாசித்தனர்.

''அவர் வாசித்து முடியவே சுவாமியவர்கள் அப்பத்திரத்திற் கூறப்பட்ட விஷயங்களுக்கு உத்தரஞ் சொல்லுமாறு தம்மாசனத்தை விட்டெழுந்தார். அத்தருணத்தில் அப்பந்தரின் கீழிருந்தோர் யாவரும் தம்மை மறந்தனர். எங்கிருக்கின்றோம் என் செய்கின்றோம் என்னும் நினைவுகள் யாவுமிழந்து. புலனைந்தும் தத்தம் பொறிவழி செல்லாது ஒரு வழி நிற்கச் சுவாமிகளுடைய திருவுருவக் காட்சி மயமாகியே நின்றனர். இப்பெருமானாரது திருமேனிப் பொலிவுகண்ட அன்றே நாமெல்லாம் கடைத்தேறினேம். நாம் பூர்வ ஜன்மங்களிற் செய்த புண்ணியங்கள் யாவுக்கும் பலன் அன்றே பலித்ததென்று கூற எந்த நாப்பின்னிடும்? கோடி சூரியர் உதயமீதென்ன அட்டலக்குமிகளும் நடனமிடும் திருவரங்கமாகிய அவரது முகராவிந்தப் பிரகாசமே பிரகாசம்!

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறு குற்றங்களையும் ஒரு நொடியிற் சுட்டெரித்து எதிர்ப்பட்டோர் யாரையும் ஆனந்த பரவசத்தாராக்கிய அவரது கட்பார்வையினது வசீகரமே வசீகரம்! கேட்டோர் மனங்களைக் கொள்ளை கொண்டு அவர்கள் செவிகளிலே புத்தமிர்த வாரியை ஓய்வின்றி யள்ளியிறைத்தாலன்ன இனிமையே கொண்டு அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பிரசங்கங்களினது அலங்காரமே அலங்காரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புத்தரை வாதில் வென்ற ஸ்ரீ மத் மாணிக்க வாசக சுவாமியவர்களின்து திருவவதாரமே அன்றிச் செக்கர் வாணிறத்தனாகிய எம்பிரானே எமக்குபு தேசஞ் செய்யு மாறு மானுடச் சட்டை பூண்டெழுந்தருளிய குரு வடி வந்தானோ எம் முன்னே நிற்கும் வடிவமென்று ஐயுறக் கிடந்ததெனில் சுவாமி அவர்கள் மகத்துவம் எம்மாற் சொல்லுந் தகைத்ததோ! அன்று, அன்று.

''சுவாமியவர்கள் வந்தனோபசார பத்திரிகைக்ளித்த விடை அங்கிருந்தோர் யாவர்க்கும் மனக்கிளர்ச்சியை யுண்டாக்கியது. சமயாபிமானம், தேசாபிமானம் ஆகிய வைகளைப் பற்றியே பெரிதும் வற்புறுத்திப் பேசினர். அப்பால் ஸ்ரீ அப். கனக சபையவர்கள் சபையார் யாவர்க்கு மாகச் சுவாமியவர்களுக்கு ஸ்துதி கூற, அற்றை நாட் கூட்டம் சமாப்தியாவிற்று. அடுத்த நாள் சுவாமியவர்கள் 'மார்க்கம்' என்பதைப் பீடிகையாகக் கொண்டு ஓர் பிரசங்கம் செய்த்னர்.''

இந்து சாதனத்தின் மேற்படி நேர்முக வருணனையில் சுவாமிஜியை 'திருவாசகம்' அருளிய மாணிக்க வாசக சுவாமிகளுடன் ஒப்பிட்டுள்ளது எண்ணுதற்குரியது, திருவாத வூரடிகள் புராணத்தில் 'புத்தரை வாதில் வென்ற சருக்கம்' கூறும் செய்தி மேலே கூறப்பட்டுள்ளது. ஈழத்தரசன் பௌத்த குருமார்களுடன் சிதம்பரம் வந்து சோழ நாட்டு அரசன் சபையில் பௌத்த சமயத்தின் உயர்வை நிறுவிட வந்த பொழுது, பௌத்தர்களை வாதில் வெல்ல வல்லவர் திருவாத வூரரான மாணிக்க சுவாமிகளே என்று முடிவு செய்யப்பட்டது. அரசவையின் வேண்டுகோளை ஏற்று சமயவாதத்தில் பௌத்தர்களை மாணிக்க வாசகர் வென்றதை 'புத்தரை வாதில் வென்ற சருக்கம்' விளக்கியுள்ளது. இறுதியில் ஈழத்தரசனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த குருமார்களும் பஞ்சாட்சரம் ஓதி திருநீறு அணிந்து மாணிக்கவாசகரை வணங்கிச் சென்றனர்.

சிகாகோவில் இந்து சமய மேன்மையை உலகறியச் செய்த சுவாமிஜியின் சமயப்பணி, 'இந்து சாதன' ஆசிரியரை புத்தரை வாதில் வென்ற சருக்கத்தை நினைவு கூரச் செய்தது போலும்.

## 'இந்து ஆர்கன்' வருணனை

இந்து சாதனத்தின் ஆங்கிலப் பகுதியான 'இந்து ஆர்கன்' (Hindu Organ), யாழ்ப்பாணத்தில் சுவாமிஜியை வரவேற்க முன் சென்றோரின் பெயர்ப்பட்டியலையும், வரவேற்பு வைபவத்தையும் (பிப்ரவரி 3, 1897) விளக்கி எழுதியுள்ளது. இதன் சுருக்கம் வருமாறு:

''ஜனவரி 24— ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண இந்து மக்களுக்கு எக்காலத்திலும் மறக்க முடியாத நாளாகும். இந்த நாள் சுவாமி விவேகானந்தர், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தரை மார்க்கமாக வந்து சேர்ந்த நாள். சுவாமிஜியை ஏழு பேர் கொண்ட தூதுக்குழு ஒன்று உபார் எனுமிடத்தில் ஞாயிற்றுக் கிழமை காலையில் எதிர்கொண்டு சந்தித்து யாழ்ப்பாண நகரத்தில் அவர் தங்க வேண்டிய இடத்திற்கு அழைத்து வருவதற்கு வரவேற்புக்குழுவினர் திட்டமிட்டிருந்தனர். மாலையில் பொது மக்கள் சார்பில் வரவேற்கத்திட்டமிடப் பட்டது. ஆனால் ஞாயிற்றுக்கிழமை காலையில் உபார் எனுமிடத்தில் இந்து சமயப் பிரமுகர்கள் நூறுபேர் சுவாமிஜியை வரவேற்கப் பேரார்வத்துடன் கூடி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலை 9 மணி வரையில் சுவாமிஜி வரும் கோச்சு வண்டி பார்வையில் தென்படவில்லை. மேற்கொண்டு ஐந்து மைல் சென்று சாவகச்சேரியில் காத்திருந்து சுவாமிஜியை வரவேற்கச் சென்றனர். எதிர்பார்த்தவாறு சாவகச்சேரியில் சுவாமிஜி தமது குழுவினருடன் வந்து சேர்ந்தார்.

''சாவகச்சேரியில் இருந்து சுவாமிஜியை நகரத்திற்குள் அழைத்துச் செல்ல ஊர்வலம் ஏற்பாடாகியது. இருபது கோச்சு வண்டிகளுக்கு ஏற்பாடாகின. முதல் வண்டியில் வழக்கறிஞர் நாகலிங்கம் அமர்ந்து ஊர்வலத்தை வழி நடத்தினார். சாவகச்சேரியிள் சுவாமிஜியை வரவேற்கக்கூடியப் பிரமுகர்கள் பெயர்கள் வருமாறு.''

''வழக்கறிஞர்கள் நாகலிங்கம், கனகசபை, காசிபிள்ளை, கதிர்வேலு, ஏ. மயில்வாகனன், இலங்கநாயகா, முதலியார் தில்லைநாதர், டி. குசலிங்கம் பிள்ளை. ஏ சபாபதி பிள்ளை, முதலியார் க. நவரத்தினம், கே. செல்லப்பா செட்டியார், எஸ். நாகநாதர், முத்தய்யா, சுப்பிரமணிய செட்டியார், எல்.பி. ராமசாமி செட்டியார், எம். சி. சின்னப்பா.

''யாழ்ப்பாண நகரத்தை ஊர்வலம்காலை 11-30மணி அளவில் அடைந்தது. நகரத்தில் பொன்னம்பலம் என்பவர் உதவிய வீட்டில் சுவாமிஜி தங்கினார்.

''குறுகிய காலத்தில் மகத்தான ஏற்பாடுகளை செய்தனர் வரவேற்புக் குழுவினர். இந்து கல்லூரியில் வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடாகியது. இந்துக் கல்லூரி, நகரத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. வழியெங்கிலும் இரு புறங்களிலும் வாழை மரங்களும், வண்ணத் துணிகளும். கொடிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரித்தன, மாலை 6 மணி முதல் நள்ளிரவு வரையில் யாழ்ப்பாணம் - கனகேசத்துறை பாதையில் இருந்து கல்லூரி வரையில் போக்குவரத்து நெரிசலாக இருந்தது. வண்டிகள் மாற்று வழிகளில் திருப்பி விடப்பட்டன. இந்து கல்லூரி வரை தீவர்த்தி ஊர்வலம் இரவு 8-30 மணி அளவில் நிகழ்ந்தது. அந்நாள் வரை அவ்வளவு பெரிய ஊர்வலம் நடைபெற்றதில்லை. 15,000 மக்களுக்கு மேல் ஊர்வலத்தில் பங்கேற்றனர். வழியெங்கும் ஒவ்வொரு வீட்டின் முன்னே பூரண குடும்பத்துடன் தீப ஒளியுடன் சுவாமிஜி வரவேற்கப் பட்டார். வழியில் வண்ணார் பண்ணை வெஸ்லியன்மிஷனைச் சார்ந்த ஒரு கிருத்துவர் வீட்டைத் தவிர பிறவெல்லாம் இந்துக்கள் வீடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. வழியில் சிவபெருமான், கதிரேசன் கோயில்களில் வழிபாடு செய்தார். சுவாமிஜி. சுவாமிஜி இந்து கல்லூரிக்கு இரவு 10 மணிக்கு வந்தார். சுவாமிஜி அங்கு வருவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்பே பந்தலில் மக்கட் கூட்டம் நிறைந்து வழிந்தது. சுவாஜியின் நாவன்மையைப் பற்றிக் கேள்வியுற்ற கிறித்து வர்களும் திரளாக வந்திருந்தனர். பணி ஓய்வு பெற்ற திருவாங்கூர் உயர் நீதிபதி திரு. எஸ். செல்லப்பா பிள்ளை சுவாமிஜியை வாயிலில் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர்.''

## இந்து கல்லூரி

யாழ்ப்பாண கல்வித்துறை வரலாற்றில் இந்து கல்லூரி வரலாற்றுப் புகழ்கொண்ட கல்லூரி யாகும். சைவ பரிபாலன சபை, இந்து சாதனம், இந்து கல்லூரி மூன்றும் யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தின் திரிசூலமாகத் திகழ்ந்தது. ஒன்றையடுத்து ஒன்றுக் கொன்று ஆதாரமாய் தோன்றின.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலத்தை பயிற்றுமொழியாகக் கொண்டு தோன்றிய முதல் கல்லூரி ''இந்து கல்லூரி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பர்ய இந்து சமயப் பண்பாட்டை பேணிக் காப்பாற் றியது. அத்துடன் நவீன முறை கல்வி போதனையையும் கொண்டது.

யாழ் இந்து கல்லூரியின் தொடக்கம், 1887-ல் யாழ்ப் பாணம் பிரதான வீதியில் ஹெவின்ஸ் டபிள்யூ சிதம்பரம் பிள்ளையால் நிறுவப்பெற்ற தேசிய நகர உயர்பாடசாலை யுடன் (The Natives Town High School) தொடர்பு கொண்டதாகக் கருதப்படுகிறது. 1889-ல் இப்பாடசாலை யின் நிருவாகம் வழக்கறிஞர் (அட்வகேட்) எஸ். நாகலிங் கம் அவர்கள் பொறுப்பில் வந்தது. 1889-ல் நிறுவப் பெற்ற சைவ பரிபாலனசபை இப்பாடசாலையை எடுத்து நடத்த வேண்டுமென்ற பிரேரணை இச்சபையில் 19 ஜூலை, 1890-ல் திரு. சிதம்பரம், திரு. மு. பசுபதி செட்டியார் அவர்களால் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சைவ பரிபாலன சபையினால் இந்து உயர் பாடசாலை 23-10-1890 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1893-ல் கல்கத்தா பல்கலைக் கழகத் தினரால் இப்பாடசாலை உயர்பாடசாலையாக அங்கீகரிக் கப்பட்டது. பல்கலைக்கழக புதுமுக வகுப்பு வரை இங்கு போதனை நடத்தப்பட்டது. 1895-ல் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி என்ற பெயரைப் பெற்றது. கல்கத்தா பல்கலைக் கழகத்துடன் இணைந்த ஒரு கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டு முதற்கலை வகுப்புக்கள் நடத்தப் பட்டன.[31]

இன்று இந்துக் கல்லூரி என்னும் ஆலவிருட்சம் விழுது விட்டுப் பலப்பல இந்துக் கல்லூரிகளை நாடெங்கும் நிறுவ நின்றது. சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு விழாவை இந்து கல்லூரி மிகச் சிறப்பாக நடத்தியது என்று கூறலாம்.

இந்து சமயப் பண்பாட்டின் காவல் அரணான இந்து கல்லூரியில் சுவாமிஜி பேருரை யாற்ற வந்தது மிகப் பொருத்தமுடையதாகும். சுவாமிஜியை மேடைக்கு அழைத்துச் சென்ற ஓய்வு பெற்ற திருவாங்கூர் உயர் நீதிபதி இந்து சாதனத்தின் ஆங்கிலப் பகுதியின் முதல் ஆசிரியாக விருந்து முப்பத்தைந்து ஆண்டு காலம் பணி யாற்றியப் பெருமையுடையவர். சுவாமிஜியை வரவேற்ற வர்களில் ஒருவரான கௌரவ ஏ. சபாபதிப்பிள்ளை இலங்கை சட்ட மன்றத்தில் நியமனம் பெற்ற உறுப்பினர்.

## யாழ்ப்பாண இந்துக்கள் சார்பில் வாசித்தளிக்கப் பெற்ற வரவேற்பிதழ்

யாழ்ப்பாண இந்துக்கள் சார்பில் வரவேற்புக் குழுவின் தலைவர் வழக்கறிஞர் சி. நாகலிங்கம், செயலாளர் அ. சபாபதிப்பிள்ளை பெயர்களில் சுவாமிஜியிடம் வாசித் தளிக்கப்பட்ட வரவேற்பிதழின் ஒரு பகுதி வருமாறு.

''சர்வமத சபையில் வேதங்களில் வெளிப்படுத்தப் பட்ட உண்மை ஒளியின் வழியே நமது சமயத்தை மேன்மை மிக்க தொண்டுள்ளத்துடன் தாங்கள் பரப்பி வருவதற்கும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இந்தியாவின் தெய்விகத் தத்துவ உண்மைகளைப் பரப்பி வருவதற்கும், மேற்கு நாடுகள் இந்து சமய உண்மை களை அறிமுகம் செய்துக் கொள்ள வைத்ததற்கும், இதன் மூலம் மேற்கும் கிழக்கும் நெருங்கிவரச் செய்ததற்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வ தற்கு இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்ளுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நம்பிக்கை நலிவுற்று ஆன்மிக உண்மைத் தேடலில் ஆர்வமற்றும் உலோகாயதக் கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் நமது தொன்மையான சமயத்தின் மறு மலர்ச்சிக்காக ஓர் இயக்கத்தைத் தொடங்கி வைத்ததற் கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

''தாங்கள் மேல் நாட்டில் சமயப் பணியை பற்றார் வத்துடனும் வெற்றியுடனும் பாடுபட்டதின் முன்னேற் றத்தை கவனமாக உற்று நோக்கி இதயபூர்வமான மகிழ்ச்சியடைந்தோம் என்பதைச் சொல்லத் தேவை யில்லை. மேற்கு நாடுகளில் அறநெறி வளர்ச்சியிலும், சமய உண்மையைத் தேடுவதில் அறிவார்ந்த செயற்பாடு களுடைய புகழார்ந்த மையங்களிலும் நம்முடைய சமய இலக்கியத்திற்கு தங்களுடைய விழுமிய பங்களிப்பையும் வழங்கியதில் தங்களுடைய மேன்மை மிக்க மகத்தான முயற்சிகளுக்கு சான்று கூறுவன, ஆங்கே வெளிவந்த பத்திரிகைச் செய்திகளின் பாராட்டுரைகள்,''

வரவேற்புரைக்கு தகுந்த முறையில் சுவாமிஜி பதில ளித்தார். இதன் விவரத்தை அறிய முடியவில்லை. யாழ்ப்பாணத்திற்கு சுவாமிஜி வருகை தந்ததற்கு நன்றி கூறும் தீர்மானத்தை வழக்கறிஞர் கனகசபை முன் மொழிய, ஏ. மயில்வாகனன் வழிமொழிந்தார்.

சுவாமிஜி 24-ந் தேதி இரவு 10 மணிக்கு மேல் வரவேற் புரையை ஏற்றுக்கொண்ட சுவாமிஜி அன்று விரிவானச் சொற்பொழிவாற்ற இயலாத நிலை காரணமாக அடுத்த நாள் இந்து கல்லூரியில் இரவு 7 மணிக்கு இந்து சமயத் தைப் பற்றி விளக்கப் பேருரையாற்றினார். கூட்டத்திற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிபதி செல்லப்பா பிள்ளை தலைமை வகித்தார். சுவாமிஜி 1 மணி நேரம் 40 நிமிடங்கள் பேசினார். சுவாமிஜியின் இந்தப் பேருரையின் சுருக்கம் பின்வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தலைப்புப் பொருளோ மிகப் பெரிது. காலமோ குறுகியது. இந்து சமயத்தைப் பற்றிய முழுமையான பகுப்பாய்வை ஒரு சொற்பொழிவில் கூற முடியாது. ஆகையினால் என்னால் இயன்றளவு எளிமையான மொழியில் நமது சமயத்தின் முக்கிய அம்சங்களை எடுத்துரைப்பேன். எல்லா மதங்களும் கடவுளால் அருளப் பெற்றதென்று கருதப்படும் சில நூல்களைப் பெற்றிருக்கின்றன. இவற்றுள் இந்துக்களின் வேதங்கள் மிகப் பழமை வாய்ந்தது என்று மேலை நாட்டு நவீன ஆய்வறிஞர்களின் முடிவாகும்.

''வேதம் ஆதி, அந்தம் இல்லாதது. ஒருவரால் எழுதப்பட்டதோ, படைக்கப்பட்டதோ அல்ல. வேத மந்திரங்கள் (மந்த்ர திருஷ்டாக்கள் என்னும் பொருளுடைய ரிஷிகளால் கண்டு பிடிக்கப் பட்டன. உலகில் என்றும் நித்யமாக நிலவும் வேத மந்திரங்களை ரிஷிகள் கண்டெடுக்கிறார்கள். ஆன்மிக கண்டு பிடிப்பாளர்களான ரிஷிகள் சிந்தனையில் தோன்றியதல்ல, வேத மந்திரங்கள். வேதத்தின் சாரம்தான் வேதாந்தம். இந்து மதத்திலுள்ள எல்லாப் பிரிவினரும், துவைதிகள், விசிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள், சைவர்கள், வைணவர்கள், சாக்தர்கள், சௌரர்கள், காணாபத்யர்கள், இந்து சமயத்திற்குள் அடங்கும் எவரும் வேதத்தின் உபநிடதங்களை ஒப்புக் கொள்ள வேண்டும்.

''ஆண் - பெண் வேற்றுமை ஆத்மாவிற்கு இல்லை, ஆத்மாவைத் தாங்கும் உடலுக்குத்தான் அந்த வேற்றுமையுண்டு. ஆத்மா என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளாமல் கடவுளை அறிய முடியாது. ஆத்மா ஆரம்பமும் முடிவும் அற்றது. சர்வ சக்தியுள்ள தூய்மையும் ஞானமும் ஒவ்வொரு ஆத்மாவிலும் புதைந்திருக்கிறதென்று அனைவரும் ஒப்புக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மகத்தான தத்துவத்தை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனித அல்லது மிருகத்தின் உள்ளத்திலும், அவர்கள் எவ்வளவு தாழ்ந்து அல்லது பலவீனமாயிருந்த போதிலும், அதே மகத்தான சர்வ வல்லமை பொருந்திய ஆத்மா குடிகொண்டிருக்கின்றது. நமக்குள்ளிருக்கும் வித்தியாசத்திற்குக் காரணம், நம் உள்ளத்திலிருக்கும் ஆத்மாவின் வித்தியாசம் அல்ல. ஆனால் அந்த ஆத்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வித்தியாசம் தான்.

''எனக்கும் மிகச் சிறிய ஒரு பிராணிக்குமுள்ள வித்தியாசம், இவ்வாத்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வித்தியாசம் தான். அடிப்படையாக நானும் அதுவும் சகோதரர்கள் போன்றவர்கள். அதுவும் நானும் ஒரே விதமான ஆத்மாவைப் பெற்றிருக்கிறோம், இந்தியா உபதேசித்திருக்கும் தத்துவங்கள் அனைத்திலும் இது தான் மிகச் சிறந்தது. மனிதர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்று வெளிநாடுகளில் சொல்லுகிறார்கள். மனிதனிலிருந்து எறும்பு வரை எல்லா உயிர்களும் சகோதரத் தன்மையுடையன என்று இந்தியா கூறுகிறது.

''ஆத்மாவைப் பற்றி இன்னொரு விஷயம். ஆங்கிலத்தில் இவ்விஷயங்களைப் படிப்பவர்களுக்கு ஆத்மா, மனது என்ற சொற்களில் குழப்பமுண்டாகிறது. நாம் மனது என்று குறிப்பிடுவதை அவர்கள் ஆத்மாவென்று சொல்லுகிறார்கள், ஆனால் மனம் ஆத்மாவல்ல. மனம் சூட்சும சரீரமாயிருந்து பிறந்து இறக்கிறது. மனதுக்கு மேல் ஆத்மா இருக்கிறது, ஆத்மா என்ற சொல்லிற்கு ஆங்கிலத்தில் சரியான சொல் இல்லை. எனவே ஆத்மா வென்ற சொல்லையே பயன்படுத்துவோம். ஆத்மா வென்பது மனத்திலிருந்தும் உடம்பிலிருந்தும் வேறுபட்டதென்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் ஆத்மா மனமாகிய சூட்சம சரீரத்துடன் பிறந்து இறக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய காலத்தில் ஞானத்தைப் பெற்று பூரணத்வத்தை யடைந்தால் பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை பெறுகிறது. அதற்கு மேல் அது மனமாகிய சூட்சம சரீரத்தை வைத்துக் கொள்ளலாம், அல்லது அதை விடுத்து நித்திய சுதந்திரத்துடன் வாழலாம். ஆத்மாவின் இலட்சியம் முக்தி அல்லது விடுதலை.

''ஆத்மா நித்தியமாயிருப்பது. அது எப்படி உலகில் தோன்றிற்று? இதற்கு நம் சாஸ்திரங்களில் ஒரு பதில்தான் உண்டு. அறியாமை தான் அதன் வீழ்ச்சிக்குக் காரணம் அறியாமையின் மூலம் தான் நாம் கட்டுண்டிருக்கிறோம். அறிவு நம் பந்தங்களைப் போக்கும். இந்த ஞானத்தை எவ்விதம் பெற முடியும்? அன்பின் வழியாகவும், பக்தியின் வழியாகவும் பெறலாம். கடவுள் மனித உள்ளங்களில் குடிகொண்டிருக்கிறார். கடவுள் குடிகொண்டிருக்கும் கோவில்களை நினைத்து எல்லா உயிர்களையும் வழிபடுவதன் மூலம் இந்த ஞானத்தைப் பெறலாம். ஆழ்ந்த அன்பிலிருந்து ஞானம் பிறக்கும் ஞானத்தால் அறியாமை மறையும். அத்துடன் நம் பந்தங்கள் அகன்று ஆத்மா விடுதலையடையும்.''

''மற்ற மதங்களைப்போல், வேதாந்தம், பக்தி, பூசனை முதலிய பல விஷயங்களையும் போதிக்கின்றது. ஆனால் அதன் போதனைகள் அனைத்திலும் மேலானது ஆத்மாவைப் பற்றிய அதி ஆச்சரியமான உயிர் கொடுக்கும் எண்ணம்தான். இம்மகத்தான தத்துவம் உலகில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கும். அத்துடன் விஞ்ஞான சாஸ்திரத்தில் தற்கால ஆராய்ச்சிகளை மதத்தத்துவங்களுடன் சமரசப் படுத்தும்.''

சுவாமிஜி அவர்கள் இந்து சமயத்தின் படைப்புத் தத்துவம். உருவ—அருவ வழிபாடு, மத அநுஷ்டானங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானவற்றைப் பற்றியும் தமது பேருரையில் விளக்க மளித்துள்ளார். சுவாமிஜியின் பேச்சு மின்னல் விசிறிப் பாய்ந்தது போன்ற உணர்வை அவையோர் உள்ளங்களில் ஏற்படுத்தியது.

## சேவியர் சிற்றுரை

சுவாமிஜியின் பேருரைக்கு பின்பு அவையோர் வேண்டுகோளை ஏற்று சுவாமிஜியுடன் வந்த கேப்டன் சேவியர் சுருக்கமாகப் பேசினார். அவர் தமது சிற்றுரையில் அவரும், அவருடைய மனைவி யும் சுவாமிஜியுடன் வந்ததைப் பற்றியக் காரணத்தை விளக்கினார். ''எங்களுடைய சொந்த மதத்தில் ஆறுதல் பெறாமல், பிற மதங்களில் உள்ள உண்மை களை பல ஆண்டுகளாகத் தேடினோம்: ஆனால் வெற்றியடைய முடியவில்லை. ஒன்பது மாதங் களுக்கு முன்பு லண்டனில் சுவாமிஜி இந்து சமயத் தைப் பற்றிப் பேசியதைக் கேட்டு, அவரால் ஆட் கொள்ளப்பட்டோம். அவர் எடுத்துரைத்த சமய வுண்மை எங்களுக்கு ஒத்து வந்தது. அதனால் வேதங்கள் தோன்றிய பூமியைக் காண அவருடன் வந்தோம். எங்கள் நம்பிக்கையை மேலும் பெருக்கிக் கொள்ள நடைமுறையில் அறியப் பாடுபடுகிறோம்.'' இறுதியில் வழக்கறிஞர் நாகலிங்கம், வழக்கறிஞர் கனகசபையும் நன்றி கூறும் தீர்மானத்தின் மீது உணர்ச் சிப் பெருக்குடன் பேசினர்.

## யோக சுவாமிகள் கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணம் தந்த சித்தர்களில் யோக சுவாமிகள் (1872-1964), ஒருவர். இவருடைய போதனைகள் 'நற் சிந்தனைகள்' எனும் நூலில் தொகுத்துரைக்கப்பட் டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சுவாமிகள் இளைஞராக இருந்த 25 வயதில் சுவாமிஜியை தரிசித்தலர். அவருடைய பேருரையைக் கேட்ட நற்பேற்றையும் பெற்றவர். யோக சுவாமிகள் அப்பொழுது, தேர்வடம் பிடிக்கும் புண்ணியச் செயல் போன்று, சுவாமிஜி அமர்ந்து வந்த கோச்சு வண்டியை கரம்பற்றி இழுத்துச் சென்றதாக பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தைச் சார்ந்தசுவாமி சித்ரூபானந்தா ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.[32]

யோக சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் சுவாமிஜியைக் கண்டதையும், அவருடையப் பேருரையைக் கேட்டதையும் பிற்காலத்தில் நினைவு கூர்ந்து கூறியதை ஒரு நூலில் பின்வருமாறு அறிகின்றோம்.

''சுவாமிகள் கிளிநொச்சியில் தொழில்புரியும் காலத்திலேயே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது (1897) அப்பெரியாருக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் உற்சாகத்துடன் பங்கு பற்றினர். கோட்டையிலிருந்து இந்து கல்லூரியில் வரை சென்ற ஊர்வலத்திலும் பின்னர் கல்லூரியில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்திலும் சுவாமிகள் கலந்து கொண்டனர். பின்னாட்களில் அவர் தம் அன்பர்களிடத்து, விவேகானந்தர் மேடையின் இரு பக்கங்களிடையேயும் சிங்கக் குட்டி போல் உலாவிக் கொண்டு பேசினார்.'' எனவும் ''அவர் பேசினார் என்பதிலும் சிங்கம் போல் கர்சித்தார் என்பதே சரி'' எனவும் கூறி மகிழ்வார். அவர் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகளில் அன்பர்களுக்குக் கூறியிருக்கிறார். ''விடயம் பெரிது, நேரமோ குறுகியது.'' (The Subject is vast But time is short) என்பதே அவ்வாசகமாகும்.''[33]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சுவாமிகள் வழியே சுவாமிஜியின் மேடைப் பேச்சின் பாணியை அறிகின்றோம் மேடையில் உலாவிக் கொண்டே சுவாமிஜி பேசும் பழக்கமுடையவர் என்பதை மேரி லூயிஸ் பர்க்கும் குறிப்பிட்டுள்ளார்.

## சுவாமிஜியிடம் வேண்டுகோள்கள்

சுவாமிஜியின் இந்து கல்லூரி பேருரை இந்துக்களிடையே புத்தெழுச்சியைத் தூண்டியது. இராம கிருஷ்ண பரமஹம்சரின் அருளுரைகளை அறிந்துக் கொள்ள விரும்பினர். இராமகிருஷ்ணரின் போதனைகளை எடுத்துக் கூறத்தக்க உபதேசிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள்கள் சுவாமிஜியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. பிரதிநிதித்துவம் வாய்ந்த பல்வேறு அமைப்புகள் தந்திகள் வாயிலாகவும், கடிதங்கள் வாயிலாகவும். சுவாமிஜிக்கு சிறிது நேரமாவது வந்தருள வேண்டி அழைப்புகள் விடுத்தன. ஆனால் அன்பார்ந்த அழைப்புகளையெல்லாம் சுவாமிஜியால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. 1893 முதல் 1897 தொடக்கம் சுவாமிஜி ஓய்வு சிறிதுமின்றி மேற்கொண்ட கடுமையானச் சுற்றுப் பயணம் அவருடைய உடல் நலத்தை உள்ளூரப் பாதித்து வந்தது. இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டவர் சுவாமிஜி. ''சோர்வும் களைப்பும் தொண்டருக்கில்லை'' என்பதை எடுத்துக் காட்டுவது போல சுவாமிஜி அப்பொழுது இருந்தாலும், வரம்பு மீறுதல் விரும்பத்தக்கதன்று என்பது உணரப்பட்டது. ''அவர் இலங்கையில் மேற்கொண்டு நீண்ட நாள் தங்கினால் அவர் அன்புத் தொல்லைகளால் கொல்லப்பட்டிருப்பார்'' என்று சுவாமிஜியுடன் வந்த ஒருவர் குறிப்பிட்டதை சுவாமிஜி வாழ்க்கை வரலாற்று நூலில் அறிகின்றோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா செல்ல பாம்பனுக்கு சுவாமிஜி 1897 ஜனவரி 26-ல் இரவு ஒருமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் புறப்பட்டார். இலங்கைப் பயணத்தின் வெற்றி கரமானச் சூழல், இந்தியப் பயணத்திலும் தொடர்ந்து நீடித்தது.

## இலங்கை அனுபவம் பற்றி சுவாமியிஜின் நினைவுக்குறிப்புகள்

1900-ல் கல்கத்தாவில் இருந்து வெளிவந்த 'உத்போதன்' எனும் வங்கமொழி பத்திரிகையில் சுவாமிஜியின் 'ஐரோப்பிய பயண நினைவுக்குறிப்புகள்' எனும் தொடர் கட்டுரை வங்க மொழியில் வெளிவந்தது. இராமகிருஷ்ணர் இயக்க ஏடான உத்போதனின் ஆசிரியர் சுவாமி திரிகுணாதீதா அவர்கள். இந்த ஐரோப்பிய பயணக்குறிப்புகளில் சுவாமிஜி தமது இலங்கை பயணக் குறிப்புகளையும் எழுதியுள்ளார். இலங்கை இந்துக்களைக் குறித்து சுவாமிஜி எழுதியதாவது:

''இங்கு எல்லா இந்து வகுப்பினரும் ஒன்று கலந்து ஒரே இனமாய் வாழ்கின்றனர். இவர்கள் பஞ்சாபிய ஜாட்டுகளைப் போல எந்த ஜாதிப் பெண்ணையும் (ஐரோப்பியர் பெண் உட்பட) மணந்து கொள்ளலாம். ஒருவன் கோவிலுக்குச் சென்று புனிதமான முப்பட்டைத் திருநீற்றை நெற்றியில் அணிந்து, 'சிவசிவா' என்று கூறினால் உடனே இந்துவாக மாறிவிடுகிறான். கணவன் இந்துவாகவும் மனைவி கிறிஸ்துவ மதத்தினளாகவும் இருக்கலாம். ஒரு கிறிஸ்துவன் நெற்றியில் வெண்ணீற்றைப் பூசி, 'நமபார்வதிபதையே' என்றதும் இந்துவாக மாறிவிடுகிறான். இதுதான் கிறித்துவப் பாதிரிகளுக்கு மிகுந்த கோப மூட்டுகிறது. 'இலங்கைக்கு நீங்கள் வந்ததிலிருந்து அனேக கிறிஸ்தவர்கள் நெற்றியில் நீரணிந்து 'சிவனே போற்றி' என்று கூறித் தங்கள் பழைய இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்திற்குச் சென்று விட்டார்கள் என்பது அவர்கள் கோபம்.

''இங்கு அத்துவைதமும் வீரசைவமும் அனுஷ்டிக்கப் படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவன் எனக் கூறவேண்டும். ஸ்ரீ சைதன்னிய தேவர் வங்காளத்திலே பரவச் செய்த இறைவனின் திவ்விய நாம சங்கீர்த்தனமும் நடனமும் ஆதியிலே தென்னாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன. இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமானத் தமிழாகும். மதமும் கலப்பற்றத் தமிழ் மதமேயாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறை நூல்களை ஓதுதலும், சிவனைப் பரவி பாடுதலும் ஆயிரக்கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிறந்த அடியாரான அனுமனையொத்தத் தோற்றமும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் திருநீறு பூசி, கழுத்திலே உருத்திராக்க மாலைகளணிந்து மெய் மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றையெல்லாம் நேரில் பாராமல் ஒருவரால் புரிந்துக் கொள்ள இயலாது.''

இலங்கையில் பன்னிரண்டு நாட்கள் (15-1-1897 முதல் 26-1-1897 வரையில்) சுற்றுப்பயணம் செய்த சுவாமிஜி இலங்கை இந்துக்களைப் பற்றிய தமது விமர்சனத்தில் சில முக்கியக் கருத்துகளை வெளியிட்டுள்ளார். அவை யாவன:

1. சுவாமிஜியின் வருகையால் மதம் மாறிய இந்துக்கள் மீண்டும் இந்து மதத்திற்கு திரும்பியது. இதனால் கிறிஸ்துவப் பாதிரிகள் கோபம் கொண்டது.

2. இந்து என்ற பெயருக்கு சைவன் எனக் கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலங்கையில் வழங்குய் தமிழ் சுத்தத் தமிழாகும்.

4. மதமும் கலப்பற்றத் தமிழ மதமே யாகும்.

5. சிவச் சின்னங்களுடன் தேவார பாராயணம் ஓர் இசை இயக்கமாகவே நிகழ்ந்தது.

மேற்காணும் கருத்துகள் ஆய்விற்குரியன.

முதல் கருத்து எவ்வளவு உண்மையானது என்பது யாழ்ப்பாண கிறிஸ்துவ சமயப் பிரசார பத்திரிகைகளில் விளக்க முற்றுள்ளது. இரண்டாவது கருத்தின் நுட்பத்தை சுவாமிஜி அடையாளங் கண்டது குறிப்பிடத்தக்கது. சைவ சமய பரிபாலன சபையின் பிரசார முரசான பத்திரிகையின் பெயர் 'இந்து சாதனம்' என்றிருந்தாலும் அது சைவ சாதனமாகவே தன்னைப் படைத்துக் கொண்டது. வைணவம், யாழ்ப்பாணத்தில் கால் கொள்ளவில்லை;

சைவம் இந்து சமயத்தின் உட்பிரிவு என்பதில் சைவர்களிடையே கருத்து வேற்றுமை இல்லையென்றாலும், அறுதிப் பெரும்பான்மை கருதி 'இந்து' சைவம் இரண்டையும் ஒரே பொருளில் ஆண்டனர், யாழ்ப்பாணச் சைவர்கள். இதன் தொடர்பாக நான் கொழும்பில் சைவ சமய அறிஞர் ஒருவருடன் (இவர் ஆங்கிலத்திலும், மருத்துவத்துறையிலும் புலமை பெற்றவர்) உரையாடிய பொழுது அவர் தமிழில் சைவம், சைவர் என்று குறிப்பிடப் பட்டாலும், ஆங்கிலத்தில் கூறப்படும் பொழுது இந்து சமயம், இந்து என்று குறிப்பிடப்படுகின்றது என்று கூறினார். கல்வித் துறை பாடத்திட்டத்திலும் பன்னிரண்டாவது வகுப்பு வரையில் (General Certificate of Education) சைவ சமயம் கற்பிக்கப்படுகின்றது; மேல் வகுப்புகளில் இந்து சமயம் கற்பிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது என்றும் அந்தப் பெரியவர் விளக்கினார். தமிழில் 'சைவ மகளிர் மன்றம்' என்பது ஆங்கிலத்தில் 'Hindu women Association' என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறே பல பெயர்கள் உள்ளன. 1951-ல் கூடிய சைவ சமயிகள் கூட்டத்தில் ஓர் அமைப்பிற்கு பெயர் வைக்க விவாதம் எழுந்த பொழுது சைவ மன்றமா? இந்து மன்றமா? எனும் விவாதம் நிகழ்ந்தது. இறுதியில் 'அகில இலங்கை இந்து மன்றம்' என்று பெயரிடப்பட வேண்டும் என முடிவாயிற்று.[24]

சுவாமிஜியின் மேற்காணும் மூன்றாவது கருத்து அவருக்கு தமிழ் அறியாத நிலையிலும் உசாவியறிந்துக் கூறியத்திறம் வியப்பிற்கும், பாராட்டுதலுக்கும் உரியது.

நான்காவது கருத்தான ''மதமும் கலப்பற்றத் தமிழ் மதமே யாகும்'' என்பது அவர் காலத்தில் ஒரு சாரார 'தமிழர் மதம் சைவமே' எனும் இயக்கப் பிரசாரத்தை நினைவுறுத்துகின்றது. தமிழர்களிடையே வைணவம், சமணம், பெளத்தம், கிறித்துவம், இஸ்லாம் முதலான பல மதங்கள் நிலவும் பொழுது, சைவத்தை மட்டும் தமிழர் மதம் என்று உரிமை கொண்டாடியது காலாவதியாகி விட்டது.

1892-ம் ஆண்டில் திருவனந்தபுரத்தில் சுவாமிஜியை திருவனந்தபுரம் கிளப்பில் 'மனோன் மணீயம்' சுந்தரம் பிள்ளை சந்தித்த பொழுது, ''இந்து சமூக அமைப்பிற்கு முற்றிலும் வெளியே உள்ள ஒரு திராவிடனாகத்தம்மைக் கருதுவதாகச் சுந்தரம் பிள்ளை'' கூறியதாக ஒரு செய்தி யுண்டு என்பதையும் இங்கு நினைவு கூரவேண்டும். பின்பு ஒரு சமயம் சுந்தரம் பிள்ளை போன்ற அறிஞர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவெறுப்பிற்கு இடமளித்து விட்டாரே என்றும் சுவாமிஜி வருந்தியதுண்டாம்.

1897-ல் தமது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு பிப்ரவரி இறுதியில் கல்கத்தா சென்ற பிறகு சுவாமிஜி நிகழ்த்தியச் சொற் பொழிவில் சைவம் பற்றிக் கூறியதாவது: ''தென்னிந்தியாவின் சில பகுதிகள், இலங்கை நீங்கலாக இந்தியாவில் உள்ள சைவர் எல்லோரும் பொதுவாக அத்வைதிகளே. சுவாமி மற்றொரு சமயம் நம்மாழ்வார் உட்பட வைணவ ஆழ்வார்களைப் பற்றியும் கூறியுள்ளார்.

சென்னையில் சிகாகோ வீரரான வேதாந்தச் சிங்கத்தை, சைவசித்தாந்தச் சிங்கமான ஜே.எம். நல்ல சாமிபிள்ளை சந்தித்தாக ஒரு செய்தி நல்லசாமி பிள்ளை வாழ்க்கை வரலாற்று நூலில் கூறப்பட்டுள்ளது. சைவ ஆகமங்களைப் பற்றியும் சைவம் தழைக்கப்பாடுபட்ட திருஞான சம்பந்தரின் தொண்டுகளோடு சுவாமி விவேகா னந்தரின் திருப்பணிகளையும் ஒப்பிட்டு நல்லசாமிப் பிள்ளை சுவாமிஜியிடம் உரையாடினார்.

சுவாமிஜி சைவம் தமிழர் மதம் என்று குறிப்பிட்டதை யாழ்ப்பாணத் தமிழ் இந்துக்கள் மதம் சைவமதம் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்

## இலங்கைக்கு சுவாமிஜியின் மூன்றாவது விஜயம்

1899-ல் மேற்கு நாடுகளுக்கு செல்லும் வழியில் சுவாமிஜி கொழும்பில் ஆனிமாதம் 28-ந் தேதி சகோதரி துரியானந்தருடன் இறங்கினார். சுவாஜியின் இந்த இலங்கை விஜயம் பற்றி 'இந்து சாதனம்' ஜூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12-ல் காரை கே.சோமசுந்தரம் எழுதியக் கடிதத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இதில்ஒருபகுதி வருமாறு:

"ஸ்ரீ மத் P. குமாரசுவாமி முதலியாரது பிரயத் தனங்களாற் சுவாமிகளுஞ் சீடர்களுமொரு மணியளவிற் கப்பலை விட்டிறங்காராரென்பதை நன்கறிந்துஞ் சுவாமிகள் பேரிற் கொண்ட நீங்காப் பக்ஷத்தாற் சுவாமிகளை தரிசனஞ் செய்யா விட்டாலுமவர்கள் வநத கப்பலையாவது கண்ணாற் கண்டானந்திப் போமெனத தீர்மானித்துத் துறைமுகத்துக்குச் சென்றிருந்த நூற்றுக்கணக்காணோர் சுவாமிகளைப் பின் தொடர்ந்தனர். மெஸ் குமாரசுவாமி முதலியவர்களின் சுற்றுமித்திராற் கறுவாக் காட்டுக் கழைக்கப்பட்டாங்கவர்களாலும்மபுசரிக்க[illegible] பெற்றும் பின்னரவ்விடமிருந்து மதராஸ் வங்கிச் சிற[illegible] சொக்கநாத பிள்ளையவர்களா அழைக்கப்பட்டும் பி[illegible] ருளதன் சிறந்த "இந்து வாலிப தேர்ச்சிச் சங்க" த்தங்கத்தவர்களாலவர்களின் சங்க மண்டபத்திற்கு வாத்திய வாத்தியங்களோடழைக்கப்பட்டு அவ்விடத்திற் பத்து நிமிடம் வரையிற்றிறல்கியச் சிறுவர்களது முயற்சியை யாசீர்வதித்துச் சாயந்தர மாறுமணி வரையிற் பெருந்தொகைச் சனத்திரன்களுடன் துறைமுகஞ் சென்று கப்பலேறினார். நாளைக் காலை லண்டனை நோக்கிப் பிரயாணமாவர்."

சுவாமிஜியை வழியனுப்புவதற்காக கூடிய கூட்டத்தில் சுவாமிஜிக்கு கிடைத்த வரவேற்பு வைபவத்தைப் பற்றி உடன் சென்றிருந்த சகோதரி நிவேதிதா வியப்புடன் எழுதியதாவது.

"நாங்கள் வீட்டிற்குள் நுழையும் பொழுது பறை - தப்பட்டை முழக்கமும், ஊதுகுழலோசையும் வரவேற்

றன. ஆ! எல்வளவு கூட்டம்! எவ்வளவு பக்தி பரவசத்துடன் சுவாமிஜி மீது விழி பதிந்திருந்தனர். சுவாமிஜி தமது ஐரோப்பிய உடையலங்காரத்தை சுட்டிக் காட்டினார். ஆனால் அது வித்தியாசமாகத் தெரியவில்லை. அவர்களுக்கு முன்கண்ட அதே அவதார புருஷர்தான்.''

இங்கு சுவாமிஜியுடன் சிகாகோ சர்வமத சபையில் பௌத்த சமயப் பிரதிநிதியாகக் கலந்துக் கொண்ட அநகாரிக தம்மபாலர் பற்றிய நினைவு எழுதுவது இயற்கையே. சிகாகோ சர்வமத சபையின் வரலாற்று நாயகராக சுவாமிஜி விளங்கியதை தம்மபாலர் புகழ்ந்து பாராட்டியுள்ளார், கல்கத்தா 'இந்தியன் மிரர்' பத்திரிகை (ஏப்ரல் 12, 1894), தம்மபாலர் பாராட்டியதைப் பற்றி பின்வருமாறு எழுதியுளளது.

''மிஸ்டர் தம் பாலர் கூறியதாவது.'' சிகாகோவின் தெருக்களில் சுவாமி விவேகானந்தரின் முழு உருவப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. படங்களின் கீழே ''துறவி விவேகானந்தர்'' என்று எழுதப்பட்டிருந்தது. வருவோர் போவோர் மிக்க மரியாதையுடன் அந்தப் படங்களை வணங்கினர்.'' சமயப் பேரவையின் வெற்றிக்கு பெருமளவில் சுவாமி விவேகானந்தர் காரணகர்த்தா என்றும் தம்மபாலர் கருத்து தெரிவித்தார்.''[35]

'இந்தியன் மிரர்' மீண்டும் தம்மபாலரின் மற்றுமோர் பாராட்டுரையை - ஆசிரியருக்கு கடிதப் பகுதியில் வெளிவந்ததை - பின்வருமாறு வெளியிட்டது.

''சுவாமி விவேகானந்தரின் அபூர்வமான ஆங்கில மொழி ஆற்றல், மிக்குயர்ந்த சமயப் பொறை, அற்புதமான துறவு அவையோரை மின்சார அதிர்ச்சிக்குள்ளாக்கியது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர் 31-8-1894-ல் அமெரிக்காவில் இருந்து அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதியக் கடிதத்தில் ''அவர் தகைசான்த நல்ல மனிதர், நம்முடன் அற்புத மாகப் பணியாற்றுவார்'' என்று தம்மபாலரைப் பற்றிக் குறிப்பிட்டார். இவ்வாறு சுவாமிஜியும் மிகவும் நேசித்த இதே தம்மபாலர் சுவாமிஜியுடனான நட்பை முறித்துக் கொண்டு இழிவாகப் பேசத் தொடங்கி விட்டார். சுவாமிஜி பௌத்த சமயத்தின் வீழ்ச்சியைப் பற்றி வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பேசியது, தம்மபாலரை சீற்றம் கொள்ளச் செய்தது. இந்தச் சீற்றம் வெறுப்புத் தீயை உமிழ்ந்தது. சுவாமிஜி மகாசமாதி அடைந்த பொழுது, தம்மபாலர் இரங்கலைத் தெரிவிக்காமல் அவதூறாகப் பழித்துரைத்து 'ஓபன் கோர்ட்' எனும் பத்திரிகைக்கு கடிதம் எழுதினார். ஆனால் அந்தக் கடிதத்தை ஆசிரியர் பிரசுரிக்கவில்லை. லூயிஸ்பர்க், வரலாற்று நலன் கருதி இந்தச் செய்தியை தமது நூலில் வெளியிட்டுள்ளார்.[36]

□ □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண விஜயத்தின் எதிரொலி

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் காலத்தில் இருந்தே நிகழ்ந்து வந்த சைவ-கிறித்துவப் பிரசாரப் போர், சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் விஜயம் காரணமாக மீண்டும் தீவிரமடைந்தது.

ஐரோப்பிய பயணக்குறிப்புகளில், சுவாமி தம்ஜி மீது யாழ்ப்பாணத்தில் கிறித்துவப் பாதிரிமார்கள் கொண்ட கோபத்தைக் குறிப்பிட்டுள்ளார். தங்கள் மத மாற்ற முயற்சிகளுக்கு சுவாமி விவேகானந்தர் விஜயம் ஓர் அறைகூவலாக எழுந்ததை கிறித்துவ சமயப் பாதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

சுவாமிஜியின் மீது கடுமையான தாக்குதல் அமெரிக்காவிலேயே சில கிறித்துவப் பாதிரிகளால் தொடக்கி வைக்கப் பெற்றதை மேரி லூயிஸ் பர்க். ''கிறித்துவக் கடுந் தாக்குதல்' எனும் தனித் தலைப்பில் தமது நூலில் (மேற்கு நாடுகளில் சுவாமி விவேகானந்தர்-புதிய கண்டு பிடிப்புகள்-தொகுதி 1) விளக்கியுள்ளார். அவருடைய விளக்கத்தின் சில கருத்துகள். வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சுவாமிஜியின் சொற் பொழிவுகள் மிக்கச் செல்வாக்கைப் பெற்றன. பத்திரிகைகளும் அவரைப் பாராட்டி எழுதின. இவற்றையெல்லாம் பாதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

2. எந்த சமயமும் சாராம்சத்தில் மற்றொன்றை விட உயர்ந்தது இல்லை என்று குறிப்பிட்டு, உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் கிறித்துவத்தின் போலித்தனத்தை அம்பலப்படுத்தியது.

3. பாதிரிகள் இந்து சமயத்திற்கு எதிராகச் செய்து வந்த பொய்ப் பிரசாரங்களை மறுத்துப் பேசியது.

4. ''சீரழிந்த இந்தியாவை உய்விக்க வந்தவர் கிறிஸ்துவ மிஷனரிகள்; அவர்கள் மாவீரர்கள், ஞானிகள், அவர்களை இருளடைந்த இந்துக்கள் நன்றி கூறி விழுந்து வணங்க வேண்டும்; இதை அமெரிக்க மக்கள் ஆதரிக்க வேண்டும்'' என்று பாதிரிகள் கூறி வந்ததை சுவாமிஜி வன்மையாக எதிர்த்துப் பேசியது.

அமெரிக்கப் பாதிரிகளின் இத்தகைய எதிர்ப்புப் பிரசாரத்தை யாழ்ப்பாணம் கிறித்துவ சமயப் பிரசார இதழ்களும் சுவாமிஜி விவேகானந்தருக்கு எதிராகவும் அவரை ஆதரித்த இந்து சமயப் பிரசார இதழ்களுக்கு எதிராகவும் நடத்தின.

யாழ்ப்பாண கிறித்துவ சமயப் பிரசார இதழ்கள் முக்கியமாக இருவாதங்களை முன் வைத்தன. ஒன்று, அமெரிக்காவில் சுவாமி பேச்சிற்கு மக்கள் திரண்டது அவரை ஒரு 'புதுமைக் காட்சியாக'க் கண்டு ரசிப்பதற்கு ஆகும். மற்றொன்று, யாழ்ப்பாணம் சைவ மக்கள் சைவ சித்தாந்திகள், சுவாமி விவேகானந்தர் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்தி: ஆகவே ஓர் வேதாந்திக்கு சைவ சித்தாந்திகள் வரவேற்பும், பாராட்டுதலும் அளிக்கலாமா?

சுவாமி விவேகானந்தர் எதிர்ப்புப் பிரசாரத்தில் கிறித்துவ சமய இருமொழி (ஆங்கிலம்-தமிழ்) இதழான உதயதாரகை தீவிரமாக முன்நின்றது.

## உதயதாரகை

1897 பிப்ரவரி மாதம் 4-ந் தேதி வியாழக்கிழமை யன்று ''அத்துவைதம் - Vedantism என்னும் தலையங்கம் சத்திய நேசன் என்பவர் எழுதிய ''விவேகானந்த சுவாமியின் அவிவேக சாலப் பிரசாரணம்'' எனும் தொடர் கட்டுரை, 'ஓர் வேதன்' என்பவர் எழுதிய ''விவேகானந்த சுவாமி'' எனும் சிறு கட்டுரை ஆகியன சுவாமி விவேகானந்தர் எதிர்ப்புப் பிரசாரத்தை முடுக்கி விட்டன.

'அத்துவைதம்' எனும் தலையங்கத்தில் சுவாமி யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் 'இந்து சமயம்' பற்றி பேசியதை விமர்சித்து எழுதியது. இந்த விமர்சனம், வேதாந்த-சித்தாந்தப் 'பூசலை' 'முரண்பாட்டை' விளக்குவதாகக் கூறி பிரித்தாளும் தந்திரத்தை மேற் கொண்டது. இதில் ஒரு பகுதி வருமாறு:

''வேதாந்தம் தமிழ் நாடுகளுட் புகுந்த காலத்துச் சைவசித்தாந்த ஆதீனத்தார் கும்மிறொலி செய்தெழும்பச் சித்தாந்திகளுக்கும் வேதாந்திகளுக்கு மிடையிற் பெரும் பூசலுண்டாயிற்று. இப்பூசலிடையறாது நடந்துகொண்டே வருகின்றது. ''அத்துவைத தூஷணங்கள்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பரிகாரங்கள்'', ''நிராகரணங்கள்''; மெத்த! மெத்த! திருச்செங்கோட்டு விவேகதிவாகரனாதியாம் பத்திரங்களிலு மிச்சமர் நடக்கின்றது, திராவிட தேயத்தரவர்களில் மிகுதியானோர் சைவ சித்தாந்த பட்சத்தாராகவே, விவேகானந்த சுவாமியின் அத்துவைத பிரசாரண மெவ்வள விலங்கீகாரம் பெறுமோ அறியேம்.

''யுக்திக்கும் அனுபவத்துக்கு மிணங்க, கடவுள், ஆன்மாவாதியான பிரத்தியேக வஸ்துக்களே யெனச் சித்தாந்தங்கூற, ஏகாத்மவாதமாகிய வேதாந்தமோ பிரமமொன்றேயன்றி வேறு வஸ்தில்லை யென்றும் கடவுள். ஆன்மா, உலக மாதியன பிரத்தியேக வஸ்துகளாய்த் தோற்றுவது ஆன்மாவை மாயைப்பற்றியிருப்பதினாலாகிய பொய்க் காட்சியென்றுங் கூறுகின்றது. வஸ்துக்களெல்லாவற்றிலுங் கடவுள் கலந்திருக்கிறாரெனத் தாயுமானவராதியார் கூறுஞ் சகத்துவாத (Pantheistic) கொள்கையுண்மைக் கவ்வளவு தூரப்பட்டதன்றாக்கும், ஆயின், வேதாந்த கோட்பாடதுவன்று. உலகில், கடவுள், மனுஷன், விலங்கு. தாவரம், கல், மண்ணெனத் தோற்றுங் காட்சிகளாம். கடவுளே ஆன்மாவும், ஆன்மாவே கடவுளுமாம். அகம்பிரமம் (நான் கடவுள், என்பது வேதாந்த சாரமாகவே மனுஷன் தன்னை வேறாக்கித் தனக்கு மேற்பட்ட கடவுளொருவரிருக்கிறாரெனப் பாவித்துத் தொழுவதும் அழுது செபிப்பதும் சமய நிலையனுசரிப்பதும் பைத்தியமும் மதியீனமுமாகின்றது. வேதாந்தி வஸ்துக்களைப் பன்மைப் படுத்தி நான், நீ, அவன், எனச் சம்பாஷிப்பதும் வாதிப்பதும் கொண்டாடுவதுங் கூடாமையாகின்றது. ஆனபடியாவர்க்கும் ''பேசிக் கெட்டது வேதாந்தம் பேசாமற் கெட்டது சித்தாந்தம்'' எனப் பழமொழியுமுண்டாயிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[37] அத்துவைதப்பாடிவ்வாறிருக்க விவேகானந்த சுவாமி தம் விவேக சாமார்த்தியத்தால் வந்திருந்தோரை யெல்லோரையுஞ் சமன் படுத்தி பௌத்தர், மகமதிய மாதிய எல்லாச் சமயங்களும் முத்திக்கு வழி காட்டு வனவே யெனக் கூறியதோடு எல்லோருந் தத்தம் தேறி யினிற்கலாமெனத் தைரியஞ் சொல்லி முடித்தனர். பிரசங்க முடிவில் விவேகானந்த சுவாமியோடு கூடிவந்த மூவருள் இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட கப்றின் சீரிய ரெழுந்து, ''நான் கடவுள்'' என்னும் ஞானத்தை லந்தோர் பட்டினத்திலிருந்து கண்டு பிடித்தல் கூடா தாகையால் இந்தியா சென்றுணரும் நோக்கமாய் யானும் மனைவியும் புறப்பட்டே மென்றனர். மூன்றாமாளகிய கொட்டுவின் என்பவர் அமெரிக்காவிலிருந்து சுவாமி யோடு வந்தவர். இவர் சந்நியாசுகிச் சுவாமியோடு திரிகின்றாராம்...

''அமெரிக்காவின் சமய சங்கத்துக்கு இந்தியா விலிருந்து மறு இந்து மதங்களின் பிரதிஸ்தராய்ச் சென்ற முசம்டார் ஆதியோரிவலும் அதிகம் அறிவுள்ளவர்களாம். அவர்கள் சுவாமியைப் போற் காவி வஸ்திரமும் தலைப்பாகையுந் தரியாமையால் இவ்வளவாய் அமெரிக்க ராதியோர் கவனத்தை வரித்திலராம்'' [37].

மேற்காணும் தலையங்கத்தில் அத்துவைத - சைவ சித்தாந்த 'வேறுபாடுகளை'ச் சுட்டிக்காட்டி இரண்டை யுமே இகழ்ந்தும், இறுதியில் சுவாமிஜியின் காவியுடைக் கோலமும், தலைப்பாகையும் சிகாகா சர்வமத சபையில் அவையோரின் கவனத்தைக் கவர்ந்தன என்றும் 'விமர் சனம்' செய்யப்பட்டுள்ளது. இந்து சமயம் குறித்து சுவாமி இந்து கல்லூரியில் பேருரையாற்றியதை விமர்சனம் செய்த உதயதாரகை, சுவாமிஜியின் அன்றையப் பேருரை யின் பின்வரும் பகுதியை 'விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடவுளை வழிபடுவதற்குப் பல முறைகளிலிருக்கின்றனவென்று பழங்காலத்திலிருந்து ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. உலகத்தில் எல்லோரும் ஒரே மதத்தையும் ஒரே முறையையும் பின்பற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அது மிகுந்த கெடுதல்களை யுண்டாக்கும். அதன் மூலமாக எல்லா மதங்களும் எல்லா ஆத்மிக உணர்ச்சியும் அழிந்து விடும். பலதிறப்பட்டிருப்பதே உயிர் இருப்பதன் அறிகுறி. ஆனால் இந்த வேறுபாட்டின் காரணமாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

''ஆனால் மற்றவர்கள் வந்து தங்கள் மதத்தை நம்மேல் பலாத்காரமாகச் சுமத்தப் பிரயத்தனம் செய்வார்களானால், நாம் அவர்களுக்கு சொல்ல வேண்டிய வார்த்தைகள் சிலவுண்டு, அவர்களைப் பார்த்தால் சிரிப்புண்டாகிறது. கடவுளை அடைவதற்காக வேறு ஒரு முறையைப் பின்பற்றுகிறார்கள் என்று தோன்றுகிற காரணத்திற்காகத் தாங்கள் சகோதரர்களை அழிக்க விரும்பும் மக்கள், அன்பைப் பற்றிப் பேசினால் அது எவ்வளவு அசம்பாவிதமாக இருக்கும்; ஒருவன் வேறு ஒரு முறையைப் பின்பற்றுவதைப் பார்த்துச் சகிக்க முடியாதவர்களுடைய அன்பு எத்தகையதாக இருக்கும்! கிறிஸ்து, முகம்மது, புத்தர் முதலிய எவரை வழிபடும் மதத்தினரிடமும் நமக்கு வெறுப்பு கிடையாது.''

'உதயதாரகை' குறிப்பிட்ட அத்துவைத - சைவ சித்தாந்த 'வேறுபாடுகள்' குறித்து 'இந்து சாதனம்' பதிலளித்துள்ளது.

இனி, அடுத்து சத்தியநேசன் என்பவர் எழுதிய ''விவேகானந்த சுவாமியின் அவிவேக சாலப் பிரசாரணம்'' எனும் கட்டுரையில் சில பகுதிகளைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றற்கொன்று விபரீதமாய்ப் போதிக்கும் இந்து மதங்களின் விவிதபோதனைகளையும், இத்தேசத்திற் பல்லோராற் சாதிக்கப்படும் விவித சாதனையுமுள்ளவாறு காட்டாது மறைத்து, தாம் பெற்ற கிறிஸ்த போதனைக் கேற்ப உண்டாக்கிய நவ இந்துமத பிரசாரணஞ் செய்து அமெரிக்கராதியோர்க்குச் சாலங் காட்டிய தமையாது இந்நாட்களில் ஈண்டுதித்துக் கொழும்பு யாழ்ப்பாணமாகிய இடங்களிலும் அவ்வகை விபரீத சாலப் பிரசாரணங் கூறலுற்றார்.

'அமெரிக்க கிறிஸ்து மதம் மாணிக்கவாசக சுவாமி காலச் சைவமாயிருப்பின் சுவாமி அங்கு பிரசங்கிக்கவும் பின்னர் திரும்பி வரவும் விடுவரா? கழுவேற்றி விடுவாரே! சமய இட்டங் கொடுப்பதும், பரமத வேறுபாடின் றிச்சகலரிலும் அனுதாபப்படச் செய்வதும் கிறிஸ்து மதமே யென்பதை அனுபவ மாத்திரையாய் பூரணமாய இந்துவும் இவ்வாறு போலிசாலம் விடல் அவர்க்கு விவேகமாகுமா?''

சுவாமிஜி தொல்பெரும் இந்து சமயத்தின் வேதாந்த ஞானத்தை 'நவ இந்துமத பிரசாரணம்' என்று கூறி, இந்தப் பிரசாரத்திற்கு அவர் கிறிஸ்து மத போதனையை ஆதாரமாகக் கொண்டார் எனும் திரிபுவாகம், பொய் யுரை மேலே கூறப்பட்டுள்ளது அத்துடன், யாழ்ப்பா ணத்தில் சுவாமிஜிக்கு அளிக்கப் பெற்ற மாபெரும் ரவேற்பு வருணனையில் 'இந்து சாதனம்' அவரை மாணிக்கவாசகரோடு ஒப்பிட்டதை 'உதயதாரகை'யின் சத்திய நேசனால் பொறுத்துக் கொள்ள முடியாமல், ''மாணிக்கவாசகர் காலம்'' பற்றிய குறிப்பை மேலே பொருத்தமில்லாமல் கூறியுள்ளார்.

அடுத்து 'வேதன்' என்பவர் எழுதிய ''விவேகானந்த சுவாமி'' எனும் கட்டுரையில் பொறாமை எரிச்சல் மேலோங்க எழுதப்பட்டதாவது ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்கே அமெரிக்கா இங்கிலாந்திலும் இங்கே இலங்கை யாழ்ப்பாணத்திலும் விவேகானந்த சுவாமி சமயோபதேசஞ் செய்தல் எம் நாட்டில் பாடியோடி விளையாடுவோர் இருபட்சமாய், ஒருபட்சத்தார் வரிசை பெற நிற்க, மறுபட்சத் தொருவன் வந்து, அக்கம் பக்கம் போய்க் குனிந்து கைகளையூன்றி, மண்ணள்ளிக் கசக்கித் தன்னைப் பிடிக்கச் சொல்லி ஓடுதல் போன்றிருக்கிறது.

''எட்டி எட்டிப் பார்ப்பாரும், ஏணி வைத்துப் பார்ப்பாரும் குட்டிச்சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும் என்றாற்போவ நம் யாழ்ப்பாணத்துள்ள சைவரும் பிறரும் விவேகானந்த சுவாமியை வலிந்தழைத்தும் எட்டிப் பார்த்தும் வணங்கிப் பார்த்தும் பெற்றுக்கொண்ட நற்பலன்தானென்ன? விவேகானந்த சுவாமி போதிக்கின்ற மதத்துக்கும் அவரதாசரத்துக்கும் யாழ்ப்பாணத்துள்ள சைவர் அனுசரிக்கின்ற மார்க்க ஒழுக்கங்களுக்கும் ஏதும் ஒற்றுமை பற்றுமா? முத்திறத்தார்க்கே விசேஷ சலாச்கியமும் பாக்கியமுமாய்ச் சமைந்துள்ள ஆலயங்களும் நூல்களும் எத்திறத்தார்க்கும் இயைத்தற்குகந்த விதி உபதேசத்தால் மாற்றினால் வாய்ப்புத்தான்.''

'வேத'னின் இந்த வாதத்திற்கும் 'இந்து சாதனம்' பதிலளித்துள்ளது.

'உதயதாரகை', இவ்வாறு எதிர்ப்புப் பிரசாரத்தை ஏவியிருக்க, அதன் ஆங்கிலப் பகுதியான ''Morning Star'' தன் பங்கிற்கு தரக்குறைவாக எழுதியது.

'சுவாமி' என்ற சொல்லால் விவேகானந்தரை அழைப்பது, தகாது என்று விஷம் கக்கியது. ''The Swamy?'' எனும் தலைப்பில் எழுதப்பட்டதாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''It seems like blasphemy to use this word, but seeing that Mr Dutt wishes to be called by it we will not quarrel about a name. it is however only properly applicable to the divine self-existent one, possessing Swampu. But this man arrogates to himself not only the name but the attributes of Deity. When his preten_tious are such we need not be surprised af anything he says or does''[35]

குருதேவர் இராமகிருஷ்ணரால் கொண்டாடப் பெற்று, சமயாச்சாரியராக இந்துக்களால் போற்றப்பட்ட வரை 'சுவாமி' என்றழைப்பது பொருந்தாது என்று கிறித்துவ சமயப் பாதிரிகள் சிலர் தெரிவித்த எதிர்ப்பு, பிற சமயத்தில் செய்தத் தலையீடு மட்டுமன்று, வெறும் பிதற்றலுமாகும். விவேகானந்தர் 'சுவாமியா? இல்லையா?' என்பது இந்துக்களுக்குரிய விஷயமாகும். இது, பாதிரிகளுக்கு தெரியாததன்று. கலகம் செய்வோருக்கு நியாயவரம்பேது?

கல்கத்தா 'இந்தியன் மிரர்' இதழில் (ஆகஸ்ட் 17-1-1899). ''சுவாமி விவேகானந்தரும் அவருடைய குருவும்'' எனும் நூலைப் பற்றிய விளக்கவுரை வெளிவந்துள்ளது. கிறித்துவ இலக்கியச் சங்கம் (இந்தியா. லண்டன், சென்னை) 1897-ல் வெலியிட்ட நூல் முற்கூறிய நூல். இந்நூலைப் பற்றிய விளக்கவுரையில் சுட்டிக் காட்டப் பெற்ற பின்வரும் பகுதி, நூலின் தரக்குறைவான வெறுப்புப் பிரசாரத்தை அம்பலப்படுத்தியது.

''இந்நூலின் முதற்பாகத்தில் சுவாமி விவேகானந்தருடைய ''சூத்திர'' சாதிப் பிறப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அடுத்து அவருக்கும், அவருடைய குருவிற்கும் போதிய அறிவு கிடையாது என்றும் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காரணங்களால் அவர் வேதாந்தத்தை உபதேசிக்க தகுதியற்றவராகிறார், அவருடைய நடவடிக்கைகள் காரணமாக அவர் 'சுவாமி' என்று அழைக்கப்பட உரிமை யற்றவராவார்,''3[9]

சுவாமிஜி பாராட்டிய ஜெர்மானிய தத்துவ அறிஞர் ஷோபன்ஹோவரும், புகழ்பூத்த மாக்ஸ்முல்லரும் இந் நூலில் இழித்துரைக்கப் பெற்றுள்ளனர். ஜெர்மானிய அறிஞர் இந்து சமய உபநிடதங்களை உச்சி மேல் வைத்து மெச்சியவர். மார்ஸ் முல்லர் பண்டைய இந்து வேதங்கள் உட்பட பல தத்துவ நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து பாரறியச் செய்தவர். இப்பணியைப் பொறுத் துக் கொள்ளாத மேற்படி நூல், ஜெர்மானிய அறிஞரை 'கயவன்' என்றும், மாக்ஸ் முல்லரை 'இரு குரல்களில் பேசுபவர்' என்றும் மனம் போன போக்கில் சாடியுள்ளது.

சுவாமி விவேகானந்தர் அனுராதபுரத்தில் இருந்து யாழ்பபாணம் வந்தபொழுது, வழியில் கோச்சு வண்டியின் சக்கரங்களுக்கு ஏற்பட்ட விபத்தை 'மார்னிங் ஸ்டார்' எவ்வளவு படுகேவலமாக தனது நச்சுப் பிரசாரத்திற்கு பயன்படுத்திக் கொண்டது என்பதைப் பின்வருவது விளக்க வல்லது.

''இதை (விபத்தை) நாங்கள் முற்றிலும் தீர்க்க தரிசனமானது என்று கருதுகின்றோம். காலாவதியான வேதாந்தம் எனும் வாகனத்தில் பயணம் செய்யும் அவருடைய முயற்சி, அவர் ஏறிவந்த கோச்சு வண்டி முறிந்தது போல முற்றிலும் முறிந்து விடும் என்பதை நாங்கள் சற்றும் தயங்காமல் உறுதியாக முன்னுணர்ந்து கூறுகின்றோம்.[8]''

சுவாமிஜியின் யாழ்ப்பாணப் பேருரையின் வீரிய வாசகங்களை 'விமர்சிப்பதாக'க் கருதி 'மார்னிங் ஸ்டார்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுதி வாரித் தூற்றியுள்ளது. தமிழில் உதயதாரகை பிரித்தாளும் சூழ்ச்சியுரையை வாதமாக வைத்தது போல, ''மார்னிங் ஸ்டாரும்,'' ''அவருடைய தத்துவம் முரண்பாடானது சுய அழிவிக்குரியது. யாழ்ப்பாண சைவர்களுக்கு மாறுபட்டது'' என்று வாதிட்டது.

உதயதாரகையைப் போலவே, 'சத்திய வேத பாது காவலன்' எனும் யாழ்ப்பாண கிறித்துவ சமய பத்திரிகையும் சுவாமிஜியின் செல்வாக்கைக் கண்டு எதிர்த்து எழுதியது.

## சத்திய வேத காவலன்

இதுவும் இருமொழி (தமிழ், ஆங்கிலம்) பத்திரிகை, ஆங்கிலப் பகுதிக்கு, ''The Jaffna Catholic Guardian'' என்று பெயரிடப்பட்டது. 1876 மாசி, 16-ல் மாதமிருமுறையாக ஆரம்பிக்கப்பட்டது' 1878 மாசி 23 முதல் வாரப் பத்திரிகையாகியது. 1894 தை 13 தொடக்கம் பெரிதாய் ஆங்கிலத்தில் வாரமும், தமிழில் ஒன்றுவிட்டொரு சனிக்கிழமைகளிலும் நடைபெற்று வந்தது.,°

''விவேகானந்த சுவாமி என்பவர் யார்?'' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை (1897 மாசி 6-ந் தேதியில் வெளி வந்தது. இந்தக் கட்டுரையும் சுவாமிஜியின் யாழ்ப்பாண விஜயத்தின் எதிரொலியாகும். சுவாமிஜி எதிர்ப்பில் கட்டுபாடான இட்டமிடப்பட்ட பிரசாரத்தில் கிறித்துவ பத்திரிகைகள் சில ஓர் அணியில் திரண்டன என்பதற்கு இந்தப் பத்திரிகையும் ஒரு சான்று. 'உதயதாரகை'யின் எதிரொலியை சத்தியவேத காவலன் இதழிலும் பின்வருமாறு கேட்கின்றோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிக்காககோவுக்கு போகும்போது மகாபரிசுத்த வான்களுக்குக் கிடப்படும் சுவாமி விவேதானந்தர் எனும் போர்வையைத் தம்மேல் போட்டுக் கொண்டு போயினாரென்று ஒருவர் சொல்லுகிறார். இவருடைய சமயக்கொள்கைகள் மாத்திரமன்று இவருடைய உடையும், உறுமலும், போக்கும், பேச்சுத் திறமையும் எல்லாம் நூதனமாயிருந்தன. அதனாலே நூதன காட்சியிலே இந்நூதனத்தை அதிக நூதனமாகச் சனங்கள் கூடிப் பார்த்தார்கள். கேட்டார்கள். இதையே பெரிய காரிமென்று சொல்லி விவேகானந்தரும் இங்குள்ள சைவரும் எண்ணிப் பெருஞ் சத்தம் பண்ணிக் கொள்ளுகிறார்கள்...

''விவேகானந்தர் சிக்காகோவிலே பேசியவற்றையே இங்கும் பேசினாராம்...இவ்வித போதனை முற்றாக நியாய விரோதமாயிருக்கின்றது. தாங்கள் தேவனுக்குச் சமானமாயிருக்கிறோமென்று வானோர் கணங்கள் எண்ணி அகங்காரங் கொண்டு துள்ளி எரிவாய் நிரையத்து வீழ்ந்த வாறான நித்திய கேட்டை இக்கொள்கையும் இக்கொள்கையை யுடைய மதமும் வருவிக் கலாகுமென்பதிற் சந்தேகமில்லை.

''The Light of Truth'' உண்மையின் வெளிச்சத்தை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பரப்பினாரென்று சைவர் அவருக்கு வாசித்த வாழ்த்துப் பத்திரத்திலே கூறியது இவை போன்றவைகளையாக்கும்... ஆத்துமாவானது கடவுளின் அம்சமென்பதை யாவர் தாம் நம்புவார்கள். அது கூறும் மதத்தை யார்தாம் உண்மையென்று கையேற்பார்கள்... இப்படிப்பட்ட ஒரு கொள்கையா அமெரிக்கர் ஐரோப்பியர் விரும்பியதும் ஒத்துக் கொண்டதும். ஒகோ! சொல்லுவார் சொல்லுகில் கேட்பார்க்கு மதியில்லையோ.''

யாழ்ப்பாண கிறிஸ்துவ இதழ்கள் சிலவற்றின் தாக்குதல் பிரசாரத்தை 'இந்து சாதனம்' முறியடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அந்த இதழ்கள், சைவர்-சுவாமி போதனைகளுக் கிடையே 'மித்ர பேதம்' செய்ய முற்பட்டதையும் முறிய டித்தது.

## இந்து சாதனம்

இந்து சாதனம், 17-2-1897-ல் "ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளும் கிறிஸ்துவர்களும்" எனும் தலைப்பில் எதிர்த் தாக்குதல் தொடுத்தது. இதில் ஒரு பகுதி, பின் வருவது:

"ஆயிரஞ் சுணங்கள் கூடிச் சந்திரனைப் பார்த்துக் குரைத்து ஊளையிட்டாலும் அதற்கு யாதும் குறை வுண்டாகுமா? ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் மீது எண்ணி றந்த கிறிஸ்தவர் சீறிச் சினந்து அவர்க்கும் அவர் பிரசங்கிக்கும் மார்க்கத்திற்கும் விரோதமாகப் போலிக் கண்டனங்கள் எழுதித் தங்கள் பத்திரிகைகளை நிரம்பி விடுவதால் அவர் மாட்சிக்கு இம்மியள வேனுந் தாழ்ச்சி யுண்டாகுமா? உண்டாகா! உண்டாகா

"சுவாமியவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா ஆதியா மிடங்களிலே எமது மார்க்கத்தைப் பிரசங்கித்து அங்குள் ளாரநேகரை எமது மத அனுசாரிகளாக்கினா ரென்று நாம் கூற அதனை மறுத்து, அங்ஙனமன்று 'வினோதக் காட்சிப் பிரியாராயுள்ளோர் சிலர் மாத்திரமே அவர் பிரசங்கத்தைக் கேட்டு போயின ரென்று எம்மோடு வாதாடின கிறிஸ்தவர்கள், அவர் தமது ஆங்கில சீட ரோடும் நம் மத்தியில் வந்துதித்து, துயின்றிருந்த எம்ம விழிக்கச் செய்து ஒரு பெருங்கிளர்ச்சியை எம்ம தினர்க்குள் உண்டாக்கிச் சென்றதைக் கண்ணுற்று மனம் பொறுக்க லாற்றாதவராய்க் கிறிஸ்து மதத்திற்கு இடையூறு நேரிட்டிருகின்றதே எனுமச்சங் காராணமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பத்திரிகைகள் மூலம் ஆகச் சில வெற்றுரைகள் பகர்ந்து எம் நாட்டினரை இது வரையும் வஞ்சித்தது போதாதென்றாக்கும் இன்னும் வஞ்சிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்.''

சித்தாந்திகள், வேதாந்தியை வரவேற்கலாமா? என்று 'உதயதாரகை' ''அத்துவைதம்'' எனும் தலையங்கத்தில் எழுப்பிய வினாவிற்கு இந்து சாதனம் விடையளித்தது. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் உமாபதி சிவாசாரியார் அருளிய ''சிவ புண்ணயத் தெளிவு'' எனும் நூலில் இருந்து ஒரு பாடலைக் கொண்டு ''இந்து சாதனம்'' விடையளித்ததில் ஒரு பகுதி, வருமாறு.

''வேதாந்தம் சித்தாந்தங்கட் கிடையே யுள்ள பேதாபேதங்களை ஏதோ நன்குணர்ந்தவர் போன்று நடிக்கும் நடிப்பே நடிப்புத் தாம் கைக் கொண்டிருக்கும் கிறிஸ்த மதத்தினது உண்மை பொய் தெரியாது மயங்குமிவர் பரசமய ஆராய்ச்சி செய்ய நினைத்த மருளே மருள்! ''பிரமவிததியா'', ''விவேக திவாகரன்'' ஆதிய இந்தியப் பத்திரிகைகளில் அத்துவைத விஷயமாய் ஆங்ககங்கு பல முறைகளிலும் எழுதப்பட்ட வற்றையெல்லாம் திரட்டி எடுத்துச் சென்று...பிரசுரித்து விட்டு, தாம் ஏதோ அத்துவைத நூல்களை விசாரித்துக் கரை கண்டார் ஒருவர் போலக் கபட நாடகஞ் செய்யும் நாடகமே நாடகம்!...இவர் வெற்றுரையால் எடுபட எமது சமயிகள் அத்தனை மூட சிரோன் மணிகளன்று.

''வேதாந்த சித்தாந்தங்களை உண்மை ஞானிகள் ஒருபோதும் இரண்டெனார். சுத்தாத்துவிதமே சித்தாந்தம் என்பது எமக்கெல்லாம் ஒத்த துணிவு. ஆகவே வேதாந்த சித்தாந்தங்கள் உண்மையளவில் ஒன்றேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியா விஷயங்களில் இவையிரண்டிற்கும் சிறிது பேத முண்டேயாயினும் அதனால் உண்மை பேதிக்குமா? மாயாவாதத்துக்கும் சித்தாந்தத்துக்கும் மிக்க பேத முண்டு. இவ்வுண்மைகளை அறியாது பத்திராதியர் தாமே மயங்குகின்றாரன்றிப் பேதைகளை மயக்கவும் எத்தனிக்கின்றார். இவர் இங்ஙனம் எத்தானிக்கா முன் இவ்விஷயங்களைப் பற்றி நன்றாய் ஆராய்ச்சி செய்வா ராயின் மிக நலமாயிருக்கும்.

சீவனை சிவத்தி னொன்றாய் சேர்க்கும்
சித்தாந்தத்தோர்க்கும்
சீவனை பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத் தோர்க்கும்
பாவனை இரண்டுமொன்றே பரம ஞானத்
தோர்க்கெல்லாம்
மேவிய கரும காண்டம் விளம்பிற் பேதமாமே'
-சிவ புண்ணியத் தெளிவு

சுவாமியவர்களுடைய பிரசங்களிலே, சிவு புண்ணியத் தெளிவுடையார் கருத்தே மிகுதியும் செறிந்துகிடத்தலைப் பலரும் இனிது விளங்கிக் கொள்வர்.''

சுவாமி விவேகானந்தர் பேருரை காரணமாக வேதாந்த-சித்தாந்த பூசலின் இறுக்கம் தளர்ந்து, வேதாந்தம் கற்க உதவும் சூழல் தோன்றியதை 'சிவ புண்ணியத் தெளிவு' கொண்டு கூறப்பட்ட விளக்கம் தெளிவுப் படுத்துகிறது.

சிவஞான போதத்திற்கு வேதாந்தபரமாக, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், உரை காணப்பட்டுள் ளது. 1929-ல் வேதாந்தச் சூறாவளி கோ. வடிவேலு செட்டியாரவர்கள் சிவஞான போதத்தை வேதாந்த நூலாகக் கொண்டு உரையெழுதியுள்ளார். உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாசிரியர் கோ. வடிவேலு செட்டியார், தமது முகவுரையில் 'ஸ்ரீ பிரஹ்ம நிஷ்ட பண்டித வி. குப்புஸ்வாமி மகராஜ்' அவர்கள் சிவஞான போதத்திற்கு 'தத்துவப் பிரகாசிகை' என்னும் தமிழுரையை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வுரை அத்துவைதம் சார்ந்தது."

"சைவஞ் சிவத்தோடு சம்பந்தமானமையால், சைவமே யத்துவிதஞ் சாதிக்கும்" எனும் சிவஞான வள்ளலார் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

கோ. வடிவேலு செட்டியாரின் "சிவஞான போத மூலமும் தெளிவான பொருள் விளக்கவுரையும்" (1929), எனும் நூலிற்கு வேதாந்த-சித்தாந்தத்தில் நிறை புலமை கொண்டிருந்தப் பேரறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்து இவ்விடத்தில் இணைத்து சிந்திப்பதற்குரியது,

"சிவஞான போதம் சைவ சித்தாந்தத்தின் தலை சிறந்த நூலாகும். இந்நூலின் உரையாசிரியர் (கோ. வடிவேலு செட்டியார்) சிவஞான போதத்தை வேதாந்தத்தின் பாடநூலாக உரிமை கொண்டாடுகின்றார். இவ்விதம் உரிமை கொண்டாடுவது, பகைவன் பாசறையின் மையத்திற்கே போரைக் கொண்டு செல்வதற்கு ஒப்பாகும். இருப்பினும், தத்துவத்தில் தலைகளை எண்ணுவதோ அல்லது தலையோடு தலை மோதுவதோ என்பதில்லை. பூசலிடும் தத்துவக் கர்த்தாக்களின் தலைகளைச் சுற்றி விளையாடும் ஒளிவட்டமே கவனத்திற்குரியது என்பது என் உறுதியான கருத்தாகும்."

## பேராசிரியர் க. கைலாசபதி கருத்து

பேராசிரியர் கைலாசபதியின் மாமனார் மாணிக்க இடைக்காடர் இராமகிருஷ்ண இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். இவருடைய தந்தையார் நாகமுத்துவும் இராமகிருஷ்ண இயக்கத்திற்காக தாம் தொடங்கியப் பாடசாலையை ஒப்படைத்தவர். பேராசிரியர் கைலாசபதி மார்க்சிய இயக்கத்தில் தோய்ந்தவர் என்றாலும், இராம கிருஷ்ணர் இயக்க வரலாற்றையும் விமர்சிப்பதில் நடு நிலைமை காட்டியவர். அத்துடன் அல்லாமல் ''இலங்கை இந்து சமயத்தில் சுவாமி விவேகானந்தர் தாக்கம்'' எனும் அவருடைய ஆங்கிலக் கட்டுரை இலங்கையில் இப்பொரு ளில் வந்த முதல் கட்டுரையாகும். இந்தக் கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு;

''நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள், இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறித்துவ சமயத்தின் மத மாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர், கிறித்துவம், தகுதியற்றது என்று நிறுவப் போராடினர். ஆனால், விவேகானந்தரின் அணுகுமுறை வித்தியாச மானது. தமது குருநாதரின் போதனைகளுக்கு ஏற்ப அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலி யுறுத்தினார். இதனால், இந்து மதம் பிற மதங்களுக்குத் தாழ்வானது அன்று என்பது விளக்கமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்கப் பட்டது.

''இவ்வாறு விவேகானந்தரால் பிரசாரம் செய்யப் பெற்ற வேதாந்தம் அனைத்துப் பிரிவினரையும் சமயக் கோட்பாடுகளையும் சமமாகக் கருதியது. அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இருவித அங்கீகாரத்தையும் பெற முடிந்தது. ஒருவர் சைவராகவும் அதே சமயத்தில் விரிந்த பொருளில் ஓர் இந்துவாகவும் அங்கீகாரம் பெறுவார். இவ்வாறே வைணவரும் இரு வேறு அங்கீகாரம் பெறத்தக்கவர்.

''யாழ்ப்பாண இந்துக்களில் பெரும்பான்மையினர் சைவர்கள், சைவ சமயப் பற்று மிகுந்தவர்கள் சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல - மெல்ல வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுவாமி விவேகானந்தரின் போதனைகளும் இராமகிருஷ்ணர் இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் மக்களை வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யா விட்டாலும் பெரும்பாலோரின் குறுகிய நோக்கையும் கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது.''[11]

## ''ஸ்ரீ விவேகானந்த சுவாமி அவர்களும் உதயதாரகைக் கடிதமும்''

உதயதாரகையில் 'ஓர்வேதன்' எனும் பெயரில் வெளி வந்தக் கட்டுரைக்கு, இந்து சாதனத்தில், 'A Hindu' எனும் பெயரில் வெளிவந்த மறுப்பு, ''ஸ்ரீ விவேகானந்த சுவாமி அவர்களும் உதயதாரகைக் கடிதமும்'' என்பதாகும். இக்கட்டுரை முழுவதுமாக இங்கே வழங்கப் படுகிறது.

'' 'ஓர்வேதன்' என்னும் உதயதாரகைக் கடிதர், இம்முறை ''விவேகானந்த சுவாமியும் நாலாயிரவரும்'' என முகவுரையை முன்னையினும் பார்க்கச் சற்றே குறுக்கிப் பின்னுமோர் கடிதம் வரைந்து, சென்ற உதய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை 24-ம் சங்கியையிலே வெளியிட்டிருக்கின்றனர். இது நாம் இந்து சாதனத்தில் வெளியிட்ட கடிதத்துக்கு ஓர் உத்தரமாகச் சங்கற்பித்து விடப்பட்டதாய்த் தோற்று கின்றது.

''ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளைப் பற்றிப் பேசப் புகுந்தவர் சமயதூஷணம் செய்யத் தலைப்பட்டதேனோ'' என நாம் வினவியதற்குக் கடிதர் சமாதானம் கூற முட்டுப் பட்டு, ஏதோ நயக்குப் புத்தி கூறுவார் போன்று சில மயக்குரை வரைந்து விட்டிருக்கின்றனர், இதுவுங் கடிதர் சூழ்ச்சிகளுளொன்று. சுவாமியவர்கள் மேலைத் தேசங்களிற் பிரஸ்தாபமடைந்து சித்தியெய்தி வருகின்றனர் என்ற சங்கதியின் சத்தியாசத்தியங்களை விசாரித்து நிறுத்துவான் நாம் வந்தேமல்லமென்பது, எமது கடிதத்தை வாசித்த மகளிர்க்கும் இனிது விளங்கிக் கிடக்க, எமது நண்பராகிய உதயதாரகைக் கடிதர்க்கு மாத்திரம் அது புலப்படாது போனது பேரதிசயமே. ஆயினும் அவர் விவேகானந்த சுவாமியவர்கள் விஷயத்திலேயே இன்னும் அபிப்பிராய முடையாராய்க் காணப்படுதலால் அவ்விஷயத்தில் தலையிடச் சித்தமானோம்.

''விவேகானந்த சுவாமியவர்கள் அமரிக்கர் நாலாயிரவரை இந்து மத விசுவாசிகளாக்கினர் என்று யாரோ சிலர் விறிசடித்தலைக் கண்டு, அவர்கள் அறியாமையை நீக்குமாறே தாம் தாரகையிற் கடிதமெழுதினராம். ஆகா! ஈதன்றோ ஜனோபகாரம்! அடித்தது விறிசோ அன்றோ என்பதையும், அஃதறியாமைதானோ அறிவுடைமை தானோ என்பதையும் பற்றிப் பின்னர் யோசிப்போம். ஈண்டு இவர் நீக்கப் புகுந்த ''அறியாமை'' யார் மாட்டுடையதென்பதைச் சற்றே விசாரிப்போம். மேலைத் தேசப் பத்திரிகைகளே சுவாமியவர்களைப் பற்றிய சங்கதிகளை வெளியிட்டனவாகவே, கடிதர் ''விறிசடித்த சிலர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சுட்டிப் பேசியது, அப்பத்திராதிபர்களையே யென்ற வாறாயிற்று. எனவே இவர் சொல்லும் ''அறியாமை'' யும் அவர் மாட்டேயுடையதாகின்றது. இப்பத்ராதிபர்களி னது ''அறியாமை''யையே நீக்குதல் கடிதர் கருத்தாயின். உதயதாரைகையிற் கடிதமெழுதிவிட்டாற் போதுமா? இரும்பைத் தின்று விட்டு சுக்கு தண்ணீரைக் குடித்தால் இரும்பு ஜீரணிக்குமா? சுவாமியவர்கள் சங்கதிகளை வெளி யிட்ட பத்திரிகைகளின் நாமங்களை ஈண்டு தருகின்றோம். அப்பத்திராதிபர்களுக்குக் கடிதர் நேரே யெழுதியவர்கள் அறியாமையை நீக்கிக் கொள்ளட்டும். இங்ஙனமின்றிச் சமய தூஷணத்தில் மீண்டும் தலையிட்டுக் கொண்டு அவதிப்படல் புத்தியன்று.

பத்திரிகைகளின் நாமங்கள் வருமாறு :

''Iowa State Register''

''Newyork Critic''

''The Interior Chicago''

''Chicago Daily Interior ocean''

''The Newyork Herald

''West minster gazette

''இனி இப்பத்திரிகைகள் விறிசடிக்கத்தக்கவை தாமோ அன்றோ என்பது கல்வியறிவிற் சிறந்தார் நன்கு ணர்வர். உதயதாரகைக் கடிதர் ஆங்கில அமெரிக்க பத்திராதிபரை அறியாமையுள்ளார் என்று காட்டப் புகுந்த மதி குருவுக்குபதேசிக்கத் துணிந்த சீஷமைதியை யொக்குமென்க.

''இது நிற்க, இக்கிறிஸ்த பத்திரிகைகளிலே சுவாமி யவர்கள் சங்கதிகளைக் கண்டவுடனே நம்பிக்கொண்டவர்

அவை கூறும் ஏனைய செய்திகளையும் (கிறிஸ்துமத விஷயங்களை யென்றபடி) நம்பாததேனோ? எனக் கடிதர் வினவுகின்றார். ஆகா! இது தக்க நியாய மரபுடைய வினாவே! இதை எமது நீதி ஸ்தலங்களிலுள்ள நியாய துரந்தரர் யாவரும் ஆவசியகம் கற்றுக்கொள்ள வேண்டியது. என்னை? பிரதிவாதிபட்சத்துக்குச் சார்பாய், வாதி ஒரு கூற்றைக் கூற ''விட்டானாயின், அதைப் பிரதிவாதியெடுத்துக்காட்டிச்சுவந்யாயத்தின் பொருட்டுருசுப்படுத்துவான், அப்பொழுது வாதியெழுந்து ''என்கூற்று ஒன்றை நம்பிக்கொண்ட பிரதிவாதி நானிட்ட. பிராதிற் கூறிய ஏனைய கூற்றுக்களையும் நம்பாததேனோ!'' என்று கேட்டு விட்டால் வாதிபட்சத்துக்கும் தீர்ப்பாய் விடும். ''வேதன்'' தார்க்கீக சாமர்த்தியம் நன்றாயிருந்தது.

''இனி விவேகானந்த சுவாமியார் மேலைத் தேசங்களிற் போதிப்பது எம்மதத்தை? என்கின்றார். கடிதர் இதை இன்னும்யறியவில்லையா? சுவாமியார் போதிப்பது எமது வேத ஆகம உபநிடதங்களிலுள்ள ஞானமார்க்கத்தையே. வேதாகமோபநிடதங்கள் இந்து மக்களுடைய முதனூல்களாகவே நாம் அவர் போதிப்பதை இந்து மதமென்றோம்.''

''இதே 'ஓர்வேதன்' என்பவர் உதயதாரகையின் இருபதாம் இலக்க சஞ்சிகையில் முற்கூறிய தலைப்பிலேயே எழுதிய மற்றொரு கட்டுரைக்கும், இந்து சாதனத்தில் 'A Hindu' எனும் பெயரில் வெளிவந்த மற்றொரு மறுப்பின் ஒரு பகுதி வருமாறு:

''கடிதர் தோளின் மீதிருந்து செவியைக் கடிப்பது போல, விவேகானந்த சுவாமியவர்கள் செய்யும் கிருத்தியங்களையும் அவரது கீர்த்திப் பிரதாபங்களையும் பற்றிப் புதினப் பத்திரிகைகள் பல பகர்த்திருக்கும் சாக்ஷியங்களை ஒருவாறு நிராகரிப்பவர் போல் நடித்து எமது சமயத்தின் மீது தூஷண அஸ்திரங்களைப் பிரயோகிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார். அமெரிக்கா, இங்கிலாந்து ஆதியாம் தேசங்களில் ஸ்ரீவிவேகானந்த சுவாமியவர்கள் செய்து வரும் இந்து மதப்பிரசங்கங்களைக் கேட்டு, அநேகாயிரவர் இந்து மதாநுசாரிகளாய் விட்டனர் என்ற சங்கதி அபத்தமென்பதும், சுவாமியவர்களுடைய பிரசங்க மண்டபங்களிலே சனங்கள் திரண்டு குழு முதல் அவர் செய்யும் போதனையில் அபிமான முற்றன்று, வேடிக்கை பார்த்து களிப்புறற்கே யென்பதும், இந்து தேச மார்க்க கிரியா சாரங்களை நன்குணர்ந்த கிறிஸ்த சுதேசி அவர் பிரசங்கத்தில் சமூகமாயிருப்பின் ''சுவாமியவர்கள் தலைகுனிந்து பயந்தொடுங்கி விடுவாரென்பதுமே'' 'வேதன்' கடிதத்துட் டுறை.

''இனி விவேகானந்த சுவாமியவர்கள் தமது முயற்சியிற் சித்தியடைந்து விடுகின்றனரோ அன்றோ என்பதை உலகமே தூக்கியெறியட்டும். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் சக்தி எம்மிடத்துமில்லை. வேதனிடத்துமில்லை,...சுவாமியவர்களினது பிரசங்க மண்டபங்களிலே 'எமது மதாசார நியமங்களை நன்குணர்ந்த ஓர் சுதேசிக் கிறிஸ்தன் சமூகனாயிருந்தால் சுவாமியவர்களுடைய பேச்சு, கீச்சுக் கீச் சென்றுங் கிளி போன்றிருக்குமோ என்று 'வேதன்' மனப்பால் குடித்து மகிழ்வெய்துகின்றார்...

''அப்படியாயின் கிறிஸ்த மிஷனரிகள் எம்மூருக்கு வந்து எம்மதத்தைப் பிரசங்கித்துத் திரியும் சமயங்களிலெல்லாம் மேலைத் தேச சமாயாசார நியமங்களை நன்குணர்ந்த இந்து ஒருவர் பிரசன்னராயிருப்பின் மிஷனரிகளெல்லாம் சிங்க சந்நிதானத்துற்ற சம்புகங்களை நிகர்த்திருப்பரோ என்று நாமும் சொல்லி விடலாமே. இதனாலுள்ள பயனென்னோ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் மேலை நாட்டுப் பயணத்தால், இந்து சமயத்திற்குக் கிடைத்தப் பயன்களை எண்ணி-எண்ணி பேருவகையுடன் இந்து சாதனம் ''சைவ சமய நிலை'' எனும் தலையங்கத்தின் (அக்டோபர் 18, 1899-ப.3) இறுதியில் கூறியதாவது:

''எம் சமயாபிமானிகள் இங்கே இன்னுஞ் சிறிது கால முயற்சி செய்ய ஸ்ரீமாந் விவேகானந்த சுவாமிகள் மேலைத் தேசங்டோறுஞ் சென்று எம் சமயவொளியை துலக்க, கிறிஸ்து மதபேதங்கள் யாவும் அடியற்றுப் போய்விடும். அப்போது எமது இந்து சமயமே உலக முழுவதுக்கு மேக சமயமாய் விளங்கும். இது சத்தியம்! சத்தியம்! அமெரிக்க முதலிய மேலைத் தேசங்களியே அக்கிறிஸ்து சமயம் அசைவாடி நிற்றலே இதற்குச் சான்றாகும்.''

'இந்து சாதனம்' அவ்வப்பொழுது சுவாமிஜி பற்றியக் குறிப்புகளையும், சொற்பொழிவுகளையும் வெளியிட்டு வந்தது. ''இராமகிருஷ்ண பரம ஹம்ஸ அவர்களின் சீவிய சரித்திரமும் அவர் உரைத்த போதனைகளும்'' எனும் தலைப்பில் தொடர் கட்டுரைகளையும் 1899 ஆகஸ்ட் 9-ந் தேதி முதல் வெளியிட்டு வந்தது.

## ''ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கு ஓர் ஞாபகச் சின்னம்''

இந்தத் தலைப்பில் ஒரு கடிதத்தை இந்து சாதனம் 1897-லேயே வெளியிட்டது. ''சமயாபிமானம் பெரிதுமுடைய எம் நண்பர் ஒருவர் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் எமக்களித்த தரிசனத்தை நாமெஞ்ஞான்றும் நினைவு கூர்தற்கு ஓர் ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்றும். அச்சின்னம் ஓர் புத்தக சாலையா

யிருத்தல் உத்தமோத்தம மென்றுங் காட்டிமெக்கோர் கடிதம் விடுத்திருக்கிறார். அக்கடிதம் வருமாறு.'' எனும் குறிப்புடன் இந்து சாதனம் வெளியிட்டுள்ளதை அரிய ஆவணமாகக் கருதி முழுமையாகத் தரப்படுகின்றது.

''கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த ஸ்ரீ விசுவநாத தத்தர் என்னும் புண்ணிய சீலன் செய்ததபோ பலன் என்ன அவர்க்கு மகாவாயுதித்து இளமையிலேயே உள்ளத் துறவு பூண்ட ஸ்ரீவிவேகானந்த சுவாமிகள் சற் சமயமாகிய இந்து சமயத்தின் உண்மையை இதர தேசங்களிற் செய்த பிரசங்கம் வாயிலாக நன்கு புலப்படுத்தித் தமது ஜெனன பூமி நோக்கித் திரும்பிய சமயத்தில் எமக்கும் தமது திருமுக தரிசனமளித்துப் போயினர். இப்பெருமானார் எமது சமயத்திற்குச் செய்திருக்கும் நன்மை இத்துணைத் தென்று எம்மாற் சொல்லத் தக்கதன்று. இவர் அமெரிக்கா இங்கிலாந்து முதலியவிடங்களில் எமது மதத்தை ஸ்தாபித்ததுமன்றி இங்கும் துயின்றிருந்த எம்மையும் விழிக்கச் செய்து ஓர் பெருங் கிளர்ச்சியை எம் சமயிகட்குள் உண்டாக்கி சென்றிருக்கின்றனர். ஆகவே இம்மகானுக்கு இந்துக்களாகிய நாமெல்லாம் பெருங் கட்டுப்பாடுடையவர்களாக விருக்கின்றோ மன்றோ.

''சுவாமிகள் யாழ்ப்பாணம் வருவாரெனவும் அவரது திவ்விய சமூகம் எமக்குக் கிடைக்கு மென்றும் நாம் ஒரு போதும் காத்திருக்கவில்லை. அப்படியிருந்தும் தெய்வாதீனமாய் அவர் தரிசனத்தைப் பெற்று நாமெல்லா மானந்திக்கலானோம். இது நமக்குக் கிடைக்கத் தக்க ஓர் பேறன்று. எமது பூர்வ புண்ணிய வசத்தினாலேயே இவ்வரிய பேற்றைப் பெறலாகும். ஆதலால் இவ்வபூர்வ சம்பவம் எம்மாலும் எமது பின் சந்ததியாராலும் சந்ததமும் நினைந்து ஆனந்தங் கொள்ள வேண்டிய ஓர் விஷயமே. அங்ஙனமே நினைவு கூர்தற்கு எம்மூரிலே ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆவசியமே. அதுவும் எம் நாட்டிற்குப் பலவற்றானும் நன்மை பயக்கத் தக்க ஒன்றாயிருத்தல் மிகவும் நன்று.

''விவேகானந்த சுவாமிகள் புத்தக சாலை என ஓர் புத்தக சாலையை ஸ்தாபித்து சமஸ்கிருதம், தமிழ், இங்கிலீஷ் பாஷைகளிலுள்ள இந்துமத நூல்கள் பத்திரிகைகள் முதலியனவைகளை இயன்ற மட்டும் அழைப்பித்து, யாவரும் இலகுவிற் வாசிக்குமாறு ஏற்பாடு பண்ணிக் கொண்டால் அது சுவாமியின் ஞாபகச் சின்னமாயிருத்தல் மாத்திரமின்றிச் சமய அறிவு ஓங்கி வளர்வதற்கும் ஏதுவாயிருக்கும். சாஸ்திர முகத்தும் நியாய முகத்தும் நிற்குமாற்றலில்லாது கிறிஸ்து மதம் தளர்வெய்தி ஆடிபாடி. மேலைத் தேசவாதிகள் கீழ்த்திசையை நோக்கி ஞானோபதேசம் பெறுவதற்கு எம்மை நாடி வருமிச் சமயத்தில் இப்புத்தக சாலையொன்றை ஏற்படுத்தி சமய விருத்தி செய்து வருதல் எத்துணைப் பெரும் நன்மை.

''இக்கலியுகத்திலே தானங்கள் யாவற்றினும் வித்தியா தானமே மிக மேலானது. அதிலும் சற்சமய விருத்திக்கேற்ற வித்தியாதானமே மிகவும் விசேஷமுடையது. ஆதலால் சமயாபிமானிகளும் தர்ம குணசீலருமாயுள்ள எம்மூர்ப் பிரபுக்கள் யாவரும் இவ்விஷயத்தில் ஊக்கமுற்றுக் கையிடுமாறு அவர்களை வேண்டிக் கொள்கிறேன்''.

மேற்கண்ட வேண்டுகோள், இலங்கையில் தோன்றிய விவேகானந்த சபைகள், இராமகிருஷ்ணர் இயக்க மேற்பார்வையில் நடைபெற்ற வித்யா சாலைகள், இராமகிருஷ்ண மிஷன்கள் முதலானவற்றால் நிறைவேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவை யொட்டி கொழும்பு ராமகிருஷ்ணா மிஷன், கொழும்பு விவேகானந்த சபையில் மிக உயர்ந்த மேடையின் மீது சுவாமிஜியின் முழு வடிவ உருவச்சிலையை நிறுவியுள்ளதும் சுவாமி விவேகானந்தருக்கு ஏற்படுத்தப் பெற்ற, குறிப்பிடத் தக்க நினைவுச் சின்னங்களுள் ஒன்றாகும்.

## இந்து சாதனத்தில் வெளி வந்த இரங்கல் தலையங்கம்

சுவாமிஜி தாம் நாற்பது வயதிற்குமேல் உயிருடன் இருக்க மாட்டேன் என்று தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்டார். 1902 ஜூலை 4-வெள்ளிக்கிழமை-இரவு 9 மணி அளவில் மகாசமாதி அடைந்துவிட்டார். அன்று அவருக்குவயது 39 ஆண்டுகள், 5 மாதங்கள், 24 நாட்கள். அவருடைய பூதவுடல் மறைந்தது. சச்சிதானந்தமான அவர் ஆத்மா வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றது.

சுவாமிஜியின் மகாசமாதிக்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செய்த பத்திரிகைகளில் இந்து சாதனமும் ஒன்று என்று சொல்லவும் வேண்டுமோ?

1902 ஜூலை 16-ந் திகதியன்று-சுபகிருது வருஷம் ஆடி மாதம் 1-ந் திகதியன்று ''ஸ்ரீவிவேகானந்த சுவாமியவர்கள் சிவபதமடைந்தார்கள்'' எனும் தலையங்கம் இந்து சாதனத்தில் பக்கம் ஆறில் வெளி வந்தது. இதில் பெரும் பகுதி, வருமாறு:

''தமது வாணாளை மார்க்க போதனா விஷயங்களுக்கே முற்றும் பரித்தியாகஞ் செய்திருந்த ஸ்ரீவிவேகானந்த சுவாமிகள் கல்கத்தாவிலே பேலூரென்னுமிடத்

திலே சென்ற 5-ந்திகதி* தேக வியோகமாகி விட்டனர் என்னும் துக்க சங்கதியானது மின்னாது முழங்காது விழுந்த இடியேறு போல கொழும்பிலிருந்து தந்தி மூல மாயெமக் கெட்டியது. ஐயையோ இம்மகானை இழக்க நமது சமயந்தான் செய்த தவக்குறை வென்னோ அறியேம்...

''இந்தியாவிலே இந்நாட்களிற் பிரசங்கஞ் செய்து வரும் மாது ஸ்ரீ அபயானந்த அம்மாள் இவரது சிஷ்யர் களிலொருவர். இற்றைக்கு ஐந்து வருஷங்களுக்கு முன் சுவாமிகள் நம்மூருக்குத் தரிசனமளித்து நம்மெல்லோரை யும் பேருவகைக் கடலுளாழ்த்தியது நம்மவர் ஞாபகத்தி லின்னும் சிலையிற் சித்திரம் போற் பதிந்து கிடக்கின்றதே. இந்து காலீஜ் மண்டபத்தில் இவரது திருமுகாரவிந்தப் பொலிவைக் கண்டும். இவரது சாதுரியாலங்காரம் பிரசங்கத்தைக் கேட்டும் நாமெல்லாம் பேரானந்த மடைந் தோமே,

''பண்டைக் காலத்தில் பௌத்த சமண சமயங்கள் இப்பரத கண்டத்தில் அதிகமாகப் பரவிய காலத்தில் நமது சமயக்குரவர்கள் அவதரித்து சற்சமயமாகும் சைவ சித்தாந்த சமயத்தின் உண்மையை நிலை நிறுத்தினார்கள். இவர்களக் காலத்திற் பிறந்திலரேல் நமது சமயமிப் பொழுது அழிந்தொழிந்து போயிருக்கும். இது பற்றியே ''சொற் கோவுந் தோணிபுரத்தோன்றலு மென் சுந்தர னும் சிற்கோல வாதவூர் தேசிகனும் முற்கோலி வந்தில ரேல் நீறெங்கே மாமறை நூறானெதங்கே எந்தைப்

* இங்கு திகதி சரியன்று 4-ந்திகதியே சரி யானது.

பிரானைந்தெழுத்தெங்கே'' என்று கூறப்பட்டிருக்கின்றது. பிற்றைக் காலத்தில் இவ்வீழ நாட்டிலுள்ள நல்லையம் பதியிலே பரமததுச்ச கோளரியாகும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களவ தரித்து தமிழ் பாஷையின் பொருட்டும் சைவ சமய விருத்தியின் பொருட்டும் அதிக பிரயாசை யெடுத்து அவைகளை நன்னிலைப்படுத்திச் சிவ பதமடைந்தனர். இவருக்குப் பின் இந்தியாவிலே பரம ஹம்ச தேவரவர்களும் அவரது சீஷராகும் விவேகானந்த சுவாமிகளும் தோற்றினார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களாவது அல்லது பரமஹம்ஸ தேவர்களாவது எமது சமயக் குரவர்களோடு ஒப்பிடத்தக்கவர்களன்று எனச்சிலர் சொல்லக் கூடுமாயினும் இம்மகான்கள் எமது சமயத்தின் பொருட்டுத் தங்களை பரித்தியாகஞ் செய்த புண்ணியவான்களென் பதற்காசேஷபமின்று. இவர்களிக் காலத்திற் தோன்றியிலரேல் நமது சமயமிப் பொழுதடைந்தடைந்திருக்கு முன்னத தசையை யடைந்திருக்க மாட்டாது.''

மேலே, தமிழ் நாட்டில் பக்தி இயக்க காலத்தில் சைவ சமயக்குரவர்களான ஞான சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகியவர்களோடு பரமஹம்சதேவரவர்களை ஒப்பிடத் தயங்கும் சிலரின் கூற்றை இந்து சாதனம் குறிப்பிட்டது சைவ சமய தீவிரவாதத்தின் கூற்றாக எடுத்துக் கொள்ளலாம். பரமஹம்ஸர் தன்னளவிலும், சுவாமி விவேகானந்தரை சிகாகோ சாதனையாளராக்கிய அளவிலும் முற்கூறிய சமயக்குரவர்களை நிகர்த்தவர் என்பதில் ஐயமில்லை. அத்துடன் கால வளர்ச்சிக்கேற்ற சமய சமரச நன்னெறியை வலியுறுத்தியதோடு அன்றுவரை உலகம் கண்டிராத வகையில், கிறித்தவ, இஸ்லாமிய முதலான சமயங்களின் ஆன்மிக அனுபவத்தை அந்தந்த மதஸ்தராக நின்றளவில், அடைந்தவர்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இந்துஆர்கன்' எழுதியத் தலையங்கம்

இந்து சாதனத்தின் ஆங்கிலப் பகுதியான 'The Hindu Organ' அதே நாளில் (ஜுலை 16, 1902) எழுதியத் தலையங்கத்தில் சுவாமிஜியின் ஒப்பற்ற வரலாற்றுப் பாத்திரத்தை பின்வருமாறு விளக்கியுள்ளது.

''...சுவாமி விவேகானந்தர் மறைவில் இந்து சமூகத்தில் மிக ஆழ்ந்த உண்மையான துக்கவுணர்வு பரவியுள்ளது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு முன்புதான் யாழ்ப்பாணத்திற்கு வந்தார்; இந்துக்கள் அவருக்கு மகிழ்ச்சிப் பெருக்குடன் இதயபூர்வமான வரவேற்பளித்தனர். அவருடைய ஒப்பற்ற பேச்சாற்றலாலும், சமய உணர்வின் சுடரொளியாலும், இந்துக்கள் மட்டுமல்லாது, கிறிஸ்துவர்களும் கூடியிருந்த அவையோரை உணர்ச்சி பொங்கச் சிலிர்க்க வைத்தது. சுவாமிஜியின் இந்த வருகை இங்கு இந்து சமய மறுமலர்ச்சிக்குரிய முக்கிய நிகழ்வாக என்றென்றும் நினைவிற்குரியதாகும்.

''நவீன காலத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இந்துசமயத்தைப் பரப்பும் பணியில் மகத்தானவர். மற்ற அனைத்து இந்து சமயத் துறவிகளும், சீர்திருத்தக்காரர்களும், தங்கள் செயற் களத்தை இந்திய எல்லைக்குள்ளேயே அமைத்துக் கொண்டவர்கள். ஆனால், சுவாமி இந்திய எல்லையைத் தாண்டி அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்து சமயத்தைப் போதித்தார். தொன்மை வாய்ந்த இந்து சமயத்தின் ஆன்மிக உண்மைகளை அந்தக் கண்டங்களில் உள்ள பெரும்பான்மையான மக்கள் புரிந்துக் கொள்ளச் செய்தார். பலரை தம் கொள்கையுடன் இசைவுறச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு நாடுகளில் தாம் தொடங்கி வைத்தப் பணியைத் தொடர்ந்து செய்ய மற்றவர்களுக்கு அவர் பயிற்சி யளித்த போதிலும், அவருடைய மறைவு இந்து சமயத் திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரிடத்தை நிறைவு செய்வதற்கு நீண்ட காலமாகும்.''

இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம் தோன்றுவ தற்கான சில வித்துகளைத் தூவியது, இந்து சாதனமும், இந்து ஆர்கனும்.

## சுவாமி அபயானந்தா

உதயதாரகையும், இந்து சாதனமும் சுவாமி அபயா னந்தர் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர். 13-4-1897-ல் வெளி வந்த உதயதாரகையில் சுவாமி அபயானந்தர் பற்றிய ஒரு செய்தி பின்வருமாறு வெளிவந்துள்ளது:

''சுவாமி அபயானந்தர் என்னும் பின்னோர் மாது சென்னப்பட்டணஞ் சென்று வேதாந்தப் பிரசங்கஞ்செய்து மறுபடியுங் கற்குத்தாவுக்குத் திரும்பினர். 'சென்னை மெயில்' பத்திரிகையின் பிரதிநிதியொருவர் கேட்ட சில கேள்விகளுக்கவர் கூறிய விடையையோர் பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது. 'இவ்விதமாகவா உம்முடைய மதம் மாறிற்று' என்று பிரதிநிதி வினவின போது. அம்மாள் ஆச்சரியத்துடன் 'மதம் மாறுவதேது? நான் எதை விட்டேன்?

''வேதாந்தியாகிய எனக்கு மதம் மாறுவதுண்டோ? எல்லா மதங்களு முண்மையே. சுவாமி விவேகானந்த ருடைய பிரசங்கங் கேட்ட பிறகு யேசுவினுடைய மதத்தி னுண்மையான அபிப்பிராயந் தெரிந்தது என்றார்.'' ''வேதாந்தமும் கிறிஸ்து மதாபிப் ரயமும் ஒன்றா'' என்பதற்கு, ''வேதாந்தந்தான் பைபிபிலிலுஞ் சொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கின்றது. இல்லாவிட்டால், நானுங் கடவு ளுமொன்று. என்னைக் கண்டவர் அவரைக் கண்டவர், கடவுள் உன்னிலிருக்கிறார், என்னும் பைபில் வாக்கியங் களுக்கு என்ன அர்த்தம் என்றார்.''

சுவாமியின் வேதாந்தப் பிரசாரத்தின் பேருண் மையை, அதாவது ஒருவர் தமது மதத்தைக் கைவிடா மலே வேதாந்தியாக விளங்க முடியும் எனும் பேருண் மையை சுவாமி அபயானந்தர் அம்மையார் அனுபவ ரீதியாக விளக்கிவிட்டார். இதை வெளியிட்ட 'உதய தாரகை, சுவாமி விவேகானந்தரை 1897-ல் எவ்வாறெல் லாம் விமர்சித்தது என்பதையும் இங்கு நினைவு கூர்ந்து தெளிவு பெற வேண்டும்.

பிரெஞ்சுப் பெண்மணியான சுவாமி அபயானந்தா அமெரிக்காவில் நியூயார்க்கில் அமெரிக்கப் பிரஜையாகி விட்டார். பல ஆண்டுகள் இவர் உலோகயதவாதியாக, சோஷலிஸ்டாக இருந்தவர். சுவாமிஜியின் வேதாந்த சமயத்தை ஏற்றுக் கொண்டு 1995-ல் அவருடைய முதல் சீடரானார், சுவாமி அபயானந்தா. அவருக்கேயுரிய ஆற்றலுடன் அமெரிக்காவில் நான்கு ஆண்டுகள் அற்புத மாக வேதாந்தப் பிரசாரம் செய்தார். ஒரே மாதத்தில் அவருடைய சக்தி வாய்ந்தப் பிரசாரத்தால் செல்வாக் குள்ள, அறிவார்ந்த குழுவினர் அவரைச் சுற்றிச் சூழ்ந்த னர். அவர்களுடைய வற்புறுத்தல் காரணமாக சிகாகோ வில் அத்வைத சொஸைடியைத் தொடங்கினார். 1899-மார்ச்சில் இந்தியா வந்தார். பம்பாய், சென்னை, கல்கத்தா, டாக்கா, மைமின்சிங், பாரிசால் முதலான விட ங்களில் சிந்தனைக்கிளர்ச்சியூட்டும் புலமை நிறைச் சொற் பொழிவுகளாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து கல்லூரியில் சுவாமி சொற்பொழி வாற்றிய காலத்தில் அங்கு ஆசிரியராக விருந்த நாகமுத்து இராம கிருஷ்ணர் இயக்கத்தைச் சார்ந்தவர். அவர் நாவலாசிரி யருமாவார். பேராசிரியர் கைலாசபதி "ஈழத்து இலக்கிய முன்னோடிகள்" எனும் அவருடைய நூலில், நாகமுத்து அவர்களின் 'சித்தகுமாரன்' எனும் நாவலில் இராம கிருஷ்ணரது போதனைகளின் தாக்கம் இருப்பதை பின் வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

"...இராமகிருஷ்ண பரம ஹம்ஸரது போதனை கள் நாகமுத்து அவர்களைக் கவர்ந்திருக்கும் என நம்பலாம். 'சித்த குமாரன்' நாவலில் வரும் சாமியார் ஓரிடத்தில் மேல் வருமாறு கூறுகிறார்.

"சிலர் பிறக்கும் பொழுது ஞானிகளாய் பிறப்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா! ஸ்ரீ இராமகிருஷ்ண பரம அம்ச அவர்கள் அதிகங் கற்றவரல்ல. சரியை, கிரியை, யோகம் முதலியவைகளை முறையாக அனுட்டித்தவ ரல்ல. பின் அவர் ஞானியாய் வந்தது எவ்வாறு?" இவ்வாறு இராமகிருஷ்ண பரம ஹம்ஸரைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியருக்கு அரும் பெரும் வாய்ப்பு ஒன்று கிட்டியிருந்தது."

பேராசிரியர் கைலாசபதி, இராமகிருஷ்ணர் இயக்கச் செல்வாக்கு நாகமுத்து அவர்களிடம் மட்டுமல்லாமல் வேறு சிலரிடத்திலும் காண முடிந்தது என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சைவம் என்ற வரம்பிற்குள்ளேயே சிந்தித்தும் ஒழுகியும் வந்த பெரும் பாலான ஈழத்துத் தமிழ் அறிஞர் களும் புலவர்களும் சுவாமி விவேகானந்தரின் வருகைக்குப் பின்னர் சற்றுப் பரந்த நோக்கிலே செயற்படத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கினர்... இலக்கியத்துக்கும் சில உந்துதல்கள் கிடைத்தன. விவேகாநந்தர் பிரசாரஞ் செய்த வேதாந்தம் வீறு கொண்ட வேதாந்தமாகும். அது, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியன பற்றி நம்மவரை ஆழமாகச் சிந்திக்க வைத்தது. அச்சிந்தனைகள் சிலரது உள்ளங்களில் ஊறிக் கனிந்து இலக்கிய வடிவம் பெற்ற பொழுது புதிய சோபையுடன் காட்சி தந்தன. இடைக் காடரின் நாவல்கள், விபுலானந்தரின் கவிதைகள் என்பன இத்தகைய இலக்கிய வெளிப்பாட்டின் முற்பட்ட விளை பொருள்கள்.''

சுவாமிஜியின் இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து, குருதேவர் பரம ஹம்சரின் நேர் சீடர்களின் இலங்கை விஜயமும் இராமகிருஷ்ணர் இயக்க வளர்ச்சிக்கு புதிய சக்தியை அளித்தது.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு விஜயம் செய்த
## ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்கள்





2




3




4



5



6



7

1) சுவாமி சிவானந்தா 2) சுவாமி ராமகிருஷ்ணானந்தர் 3) சுவாமி அபேதானந்தர் 4) சுவாமி துரியானந்தர் 5) சுவாமி விஞ்ஞானானந்தர் 6) சுவாமி திரிகுணாதீதானந்தர் 7) சுவாமி நிரஞ்ஜனானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதேவர் பரமஹம்சர் நேர்சீடர்களின் இலங்கை விஜயம்

## சுவாமி சிவானந்தர் (1854-1934)

சுவாமிஜியின் வெற்றிகரமான இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து அடுத்த ஜூலை மாதத்திலேயே (1897) 'மகாபுருஷ் மகராஜ்' சுவாமி சிவானந்தரின் இலங்கை வருகை நிகழ்ந்தது. குருதேவரின் நேர்சீடர் சுவாமி சிவானந்தர். சுவாமி விவேகானந்தரால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சுவாமிஜியின் வரலாற்றுச் சிறப்புமிக்க வருகையால் பயனடைந்த இந்து சமயத்தினர் தொடர்ந்து இராமகிருஷ்ணர் இயக்கத்தைப் பற்றி மேன்மேலும் அறிந்து பயன் துய்க்க விரும்பினர். இவர்கள் விருப்பத்தை நிறைவேற்றவே சுவாமிஜி தமது சகோதரத் துறவியை அனுப்பிவைத்தார்.

கொழும்பில் மதராஸ் வங்கியில் பணியாற்றிய சொக்கநாத பிள்ளை, சுவாமிஜியை இலங்கையில் தம் இல்லத்தில் வரவேற்று விருந்தோம்பிய பெரும் பேற்றைப் பெற்றவர். சுவாமிஜி இவருக்கு எழுதியக் கடிதத்தில் தாம் வாக்களித்தவாறே சுவாமி சிவானந்தரை அனுப்பி வைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். சுவாமிஜியின் இந்தக் கடிதம் கொழும்பு இராமகிருஷ்ணா மிஷனரில் பக்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:

ALMQRA
30, June, 1897

To

T. Sokanathan ESQR

My dear friend,

The bearer of this note Swami Shivananda, is sent to Ceylon as promised by me during my sojourn. He is quite fit for the work entrusted to his care, of course with your kind helf

I hope you will introduce him to other Ceylon friends.

Yours ever inthe Lord Vivekananda

சுவாமி சிவானந்தர் கொழும்பு சென்று தமது பணியைத் தொடங்கியதைப் பற்றி சுவாமி பிரம்மானந்தா (இராம கிருஷ்ண இயக்கத்தின் முதல் தலைவர்) கல்கத்தாவில் இருந்து, சகோதரி நிவேதிதா அவர்களின் லண்டன் முகவரிக்கு 4-8-1897-ல் எழுதியக் கடிதத்தில் கூறியதாவது:

"இலங்கையில் தொண்டாற்றத் தொடங்க அண்மையில் சுவாமி சிவானந்தா அனுப்பட்டார். அவரை அன்புடன் வரவேற்ற கொழும்பு நகரத்தைச் சார்ந்த உள்ளூர் சொஸைடியொன்றின் செல்வாக்கு வாய்ந்த உறுப்பினர்களைச் சந்தித்தார். இலங்கை சட்டமன்ற உறுப்பினர் கௌரவம்மிக்க குமாரசுவாமி கூட்டியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் சுவாமி சிவானந்தாவின் பணிக்கு உதவ தீர்மானிக்கப்பட்டது. அவருடைய பணியின் முன்னேற்றம் குறித்து ஓர் அறிக்கை உரிய காலத்தில் அனுப்பி வைக்கப் படும்.'' [43]

பிற்காலத்தில் தாம் இலங்கையில் இருந்ததைப் பற்றி சுவாமி சிவானந்தர் தமது சீடர் ஒருவரிடம் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''நான் சிலோன் சென்றிருந்தேன். சுவாமிஜி இந்தியா திரும்பிய சில மாதங்களுக்குப் பிறகு வேதாந்தத்தைப் போதிக்க அங்கு என்னை அனுப்பினார். கொழும்பில் ஏழு அல்லது எட்டு மாதங்கள் தங்கியிருந்தேன். சமயச் சொற்பொழிவுகளையும், முறையாக கீதை வகுப்பு களையும் நடத்தி வந்தேன். பலர் வந்தனர்.''

தமிழர்களுடன், சிங்களவர்கள், ஐரோப்பியர்களும் சுவாமி சிவானந்தர் நடத்திய கீதை, ராஜயோக வகுப்புகளுக்கு வந்தனர். இவ்வாறு தவறாமல் வந்தவர் களில் ஆஸ்த்ரேலியாவைச் சார்ந்த எல்சி பிக்கட் எனும் பெண்மணி குறிப்பிடத்தக்கவர். சுவாமி சிவானந்தர் இந்தப் பெண்மணிக்கு ஹரிப்பிரியா எனும் பெயர் வைத்து ஐரோப்பியர்களுக்கு வேதாந்தம் போதிக்கப் பயிற்சி அளித்தார். ஆஸ்த்ரேலியா, நியூஜிலாந்தில் வேதாந்தப் போதகராக ஹரிப்பிரியாவிற்கு உரிமையளித்து சுவாமி சிவானந்தர் அனுப்பிவைத்தார். இந்த இரு நாடுகளிலும் ஹரிப்பிரியா சுற்றுப் பயணம் செய்து சிலவிடங்களில் வேதாந்த வகுப்புகளைத் தொடங்கினார்.

சுவாமி சிவானந்தர், சுவாமி விபுலானந்தரின் இராமகிருஷ்ணர் இயக்கப்பணிகளை ஊக்குவித்தும் பாராட்டியும் 1925, 1926, 1927-ம் ஆண்டுகளில் பல கடிதங்கள் எழுதியுள்ளார். 13-9-1925-ல் எழுதியக் கடிதத்தில் சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலானந்தர் இலங்கையில் குருமகராஜின் வேதாந்தத் தைப் பிரசாரம் செய்து வந்ததைப் பாராட்டியுள்ளார். இதற்கு முன்பு 19-5-1925-ல் எழுதியக் கடிதத்திலும் சுவாமி விபுலானந்தர் குருமகராஜ், சுவாமியின் போதனை களை இலங்கையில் பரப்பி வந்ததையும் பாராட்டி யுள்ளார்.

27-11-1926-ல் எழுதியக் கடிதத்தில் சுவாமி சிவானந்தர் எழுதியதாவது.

"குறுகிய காலத்தில் பெருமளவில் குருமகராஜின் போதனைகளைத் தாங்கள் பரப்பி வருவதை அறிய மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

குருமகராஜ் தங்கள் மூலம் பணியாற்றுகின்றார். அவர் மீது அழிவில்லாத நம்பிக்கையையும் அன்பையும் கொள்க. தங்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவி களையும் அவருடைய வாழ்த்து மூலம் தாங்கள் நிச்சயம் பெறுவீர்கள். நான் தங்களை இதய பூர்வமாக வாழ்த்து இன்றேன். எப்பொழுதும் தாகூர் மகராஜ் தங்களை வழி நடத்திச் செல்லட்டும். சிலோன் மக்களின் முன்னேற் றத்திற்கு தாங்கள் எது அவசியமென்று கருதுகின்றீர் களோ அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தாகூர் மகராஜ் வலிமை தருவாராக என்றும் வாழ்த்துகின்றேன். நாம் எல்லோரும் அந்த ஒரே தலைவரின் சிறுவர்கள் ஆவோம்." **

1924-ல் சுவாமி சிவானந்தர், அளித்த சந்நியாச தீட்சை திருநாமம் தான் சுவாமி விபுலானந்தர். தமது குரு பணித்தவாறே இலங்கையில் இராம கிருஷ்ணாமிஷன் பொறுப்பில் இருந்த கல்வி நிறு வனங்களை நிருவகிக்கச் சென்றார், சுவாமி விபுலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னந்தர். 1926-ல் மட்டக்களப்பு கல்லடி உப்போடை யில் தொடங்கிய ஆங்கிலப் பாடசாலைக்கு 'சிவானந்தா வித்யாசாலை' என்று பெயரிட்டார், சுவாமி விபுலானந்தர்.

சுவாமி சிவானந்தர் அவர்களுக்கு கவிமலர்களால் அஞ்சலி செய்தார், சுவாமிவிபுலானந்தர். 'குருசரண ஸ்தோத்திரம்' எனும் கவிதாஞ்சலியில் உள்ள ஒரு கவிமலர் பின் வருவது;

''நோவொழிய விளைப்பகற்றி நுவலநின்ற
முதுமை
நோய்மரண முறுதலிலாத் தேவர்நிலை
பெறுதற்
காவனசெய் தானந்த நிறைவினையன் றளித்த
அணிமலர்ச் செஞ் சேவடியை யடைந்த
வரைப் புரக்கும்
தேவதரு நிழலென்கோ தெள்ளமுத மென்கோ
சிவானந்த நிதிபொதிந்த செழும்பேழை
யென்கோ
பாவமொன்றா நீரமைந்து பரிந்துவந்தென்
சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற்
புதமே''

''மகாலட்சுமி தோத்திர''த்திலும் சுவாமி விபுலானந் தரின் குருபக்தி பின்வருமாறு வெளிப்பட்டுள்ளது.

''..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகபரத்து வருபொருளைத்
தினை பொறுத்த துணைமதியாச்
சிவானந்த வருட்குரவன்
புனிதவடிக் கொண்டெனு மெய்ப்
பொருள் படைத்த பெருமையினேன்.''

## சுவாமி அபேதானந்தர் (1866-1939)

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பத்தாண்டு காலம் கடுமையாக உழைத்து இராமகிருஷ்ணர் இயக்கப் பணியில் சாதனைகள் செய்து விட்டு சுவாமி அபேதானந்தர் நியூயார்க்கில் இருந்து இந்தியாவிற்கு கொழும்பு வழியாக, மே 16, 1906-ல் புறப்பட்டார். இவர் வருகையை அறிந்த கொழும்பு நகர் மக்கள் மகிழ்ச்சியில் பரபரப்படைந்தனர். தெருக்களில், சந்துகளில், பொது விடங்களில் அவர் வருகையைப் பற்றிய விளம்பரங்கள் வைக்கப்பட்டன. பேலூர் இராமகிருஷ்ண மடம்—மிஷனின் தலைவர் சுவாமி பிரம்மானந்தர், சென்னையில் அப்பொழுது தங்கியிருந்த சுவாமி இராமகிருஷ்ணானந்தர் அவர்களையும், சுவாமிஜியின் இளைய சீடர் சுவாமி பரமானந்தர் அவர்களையும் கொழும்பு சென்று சுவாமி அபேதானந்தரை வரவேற்குமாறு பணித்தார்.

சுவாமி அபேதானந்தர் ஜூன் 16, 1906-ல் கொழும்பிற்கு வந்தார். ''என் அன்பிற்குரிய காளி, எவ்வளவு பெரிய போதகராய் விட்டாய், இப்பொழுது'' என்று கூறி தமது சகோதரத்துறவியை சுவாமி இராமகிருஷ்ணானந்தர் அன்புடன் தழுவினார். ''சசி! எல்லாம் குருதேவரின் அருளினால்தான்'' என்று சுவாமி அபேதானந்தர் விடையளித்தார். பிறகு, வரவேற்பு குழுவின் சார்பில் சுவாமி அபேதானந்தருக்கு மாலையணிவிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அபேதானந்தர் இலங்கை மண்ணில் காலெடுத்து வைத்ததும் அவரை வரவேற்ற முதல் மனிதர், பௌத்த சமய அனகாரிக தர்மபாலர். 1897-ல் சுவாமிஜியை ஆர்வப் பெருக்குடன் வரவேற்ற இந்துக்கள் அதே போன்று சுவாமி அபேதானந்தரையும் 1905-ல் வரவேற்றனர். வரவேற்புரையில், சுவாமி விவேகானந்தர் பெயர் குறிப்பிடப்பட்டது. சுவாமி அபேதானந்தர் நெஞ்சைத் தொட்டது. நெகிழ்ந்த உணர்ச்சி மயமான குரலில் அவருக்கேயுரிய பாணியில் சுவாமிஜியின் விழுமிய மேன்மையை பின் வருமாறு விண்டுரைத்தார்.

''இந்த வரவேற்புரையில் ஒன்றைக் கவனித்தேன். அதாவது நீங்கள் சுவாமிஜியின் மறைவு குறித்து துக்கமுற்றிருப்பதைக் கவனித்தேன். அவர் மறையவில்லை: நம்முடன் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார். உங்களுடன், என்னுடன் இருக்கின்றார். நீங்கள் கண்ட பரு உடலில் இல்லை; கண்ணுக்கு தெரியாமல் ஆன்மிக சக்தியாக நம்முன் இருக்கின்றார். பரு உடலில் நீங்கள் கண்டதை விட ஆயிரம் மடங்கு இப்பொழுது சக்தியுள்ளவராக இருக்கின்றார். பத்தாண்டுகளுக்குமுன்பு அவர்தான் என்னை இங்கிலாந்திற்கு அழைத்தார். லண்டனில் ஓராண்டுக்காலம் பணியாற்றினேன். அடுத்த ஆண்டு நியூயார்க்கிற்கு அழைக்கப் பெற்றேன். அங்கு தொடர்ந்தாற்போன்று ஒன்பது ஆண்டுகள் பணியாற்றினேன். மானுடத்தின் நலனுக்காக சுவாமி விவேகானந்தர். செய்துள்ளதை எவரும் மதிப்பிட முடியாது.''

கொழும்பு வந்த மூன்றாவது நாளில், 18-ந்தேதியன்று கொழும்பு விவேகானந்தா சொஸைடியில் சுவாமி அபேதானந்தர் உரையாற்றினார். இந்தக் கூட்டத்திற்கு புகழ் பூத்த கலை விமர்சகர் ஆனந்த கே. குமாரசுவாமி வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கொழும்பு நகர இந்து கோயில்களுக்கு சென்று வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார், சுவாமி அபேதானந்தர். கண்டி, அநுராத புரம், யாழ்ப்பாணம் முதலானவிடங்களுக்குஞ் சென் றார்.

## யாழ்ப்பாணத்தில் சுவாமி அபேதானந்தர்

சுவாமி அபேதானந்தர் யாழ்ப்பாணத்திற்கு ஜூன் 23-ந்தேதி யன்று, சுவாமி இராமகிருஷ்ணாநந்தர் சுவாமி பிரேமானந்தருடன் ரயில் மார்க்கமாக வருகை தந்தார். சுவாமி அபேதானந்தர் வருகையை, இந்து சாதனம் (ஜூலை 11, 1906) முதல் பக்கத்தில்," ஸ்ரீமத் அபேதானந்த சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்குத் தரிசன மளித்தது" எனும் தலைப்பில் பின்வரும் செய்தியை வெளியிட்டது.

"யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இலேககரும் யாழ்ப்பாணம் இந்து காலீஜ் மானேசருமாகிய ஸ்ரீகாசிப் பிள்ளை, யாழ்ப்பாணம் விவேகானந்த சபை உப அக்கிராசனாதிபதி ஆ. கதிரை வேற்பிள்ளைஇந்துசாதனம் இங்கிலீஷ்பத்ராதிபர் அ. சபாபதிப் பிள்ளை,யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுச் சக்கிறுத்தார் ஸ்ரீ இ. கந்தையா முதலியார், வலிகாமம் மேற்கு மணியம் ஸ்ரீ ரகுநாத முதலியார், தில்லைநாதர். இருதுரகங்கள் பூட்டிய ஓர் வண்டி மீதவரையி வரச் செய்து வண்ணார பண்ணையி லுள்ள கண்மாரியம்மாள் சத்திரத்திற்கு கொணர்ந் தனர்.

"இந்து காலீஜ் மண்டபத்தில்-"அரகர மகாதேவ" எனச் சொல்லி சனங்கள் பேரொலி செய்தனர். தேவாரம் ஓதப்பட்டது. 'எங்கள் தமிழ்ப் பிரதிநிதி' கௌரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ அ. கனக சபையவர்களின் மைத்துனர் அத்துவக்காத் M.I. கனக சபையவர்கள், உபசாரப் பத்திரம் வாசித்தார். பிரசங்க முடிவில் வி. சபாபதி குருக்கள், ஸ்ரீமத். முத்துக் குமார சுவாமிக் குருக்கள் ஆகிய பிராமணோத்தமர்கள் அக்ஷதைதூவி சுவாமிகளுக்கு ஆசீர்வாதம் கூறினர்.

''அடுத்து மாணிப்பாய் சென்று மருதடி விநாயகர் ஆலயத்துக்கும். சிவப் பிரகாசம் வீட்டிற்கும் சென்று, திரும்பிய பொழுது, வண்ணார் பண்ணையில் ஸ்ரீ க. வேலுப்பிள்ளையவர்களால் நடத்தப்படும் விவேகானந்த பெண் பாடசாலையைத் தரிசித்தனர்.''

யாழ்ப்பாணத்தில் இந்து காலேஜ் மண்டபத்தில் சுவாமி அபேதானந்தர் 'வேதாந்தம்' எனும் தலைப்பில் உரையாற்றினார். இவ்வுரையும் இந்து சாதனத்தில் சுருக்கமாக வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வுரையில் வேதாந்த-சித்தாந்த சமரசம் பற்றிய தமது கருத்தை பின் வருமாறு வெளியிட்டார்:

''சித்தாந்தத்துக்கும் வேதாந்தத்துக்கும் வித்தியாசமில்லை. சித்தாந்த சமயத்துக்கு ஆதாரமாயுள்ள உபநிஷத்துச் சமய வேதாந்தமாகும். இதை நாம் மறக்கும் போது சண்டையும் விரோதமும் உண்டாகின்றது. எங்கள் சமயத்தவர்க்கு வேதாந்திகள் என்னும் பெயரே சிறப்புடைத்து. இந்தப் பொருள்ளில் துவித, அத்துவித, விசிட்டாத்துவித மார்க்கத்தவர்களு மடங்குவார்.''[65]

இலங்கையில் பன்னிரண்டு நாட்கள் தங்கி விட்டு ஜுன் 28-ல் சுவாமி அபேதானந்தர் இந்தியாவிற்குப்புறப் பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி இராமகிருஷ்ணானந்தா -(1863-1911)

சுவாமி விவேகானந்தரை வரவேற்க சென்னையில் இருந்து இலங்கை வந்தார், சுவாமி இராமகிருஷ்ணானந்தர். சூன் 15, 1906-ல் சுவாமி இராமகிருஷ்ணானந்தா, சுவாமி கருணானந்தா அவர்களுடன் கொழும்பு விவேகானந்தா சபைக்கு வருகை தந்தார்.

## சுவாமி துரியானந்தா-(1863-1921)

1899 சூன் மாதத்தில் சுவாமி விவேகானந்தருடன் மேலை நாட்டிற்குப் போகும் வழியில் கொழும்பு வந்தார்.

## சுவாமி திரிகுணாதீதா-(1865-1915)

1903-ல் சுவாமி திரிகுணாதீதா அமெரிக்கா போகும் வழியில் கொழும்பு வந்தார்.

## சுவாமி விக்ஞானாநந்தா-(1868-1938)

சுவாமி விக்ஞானாநந்தா, டிசம்பர் 27, 1933-ல் கொழும்பு வந்தார், விவேகானந்த சபைக்கு விஜயம் செய்தார், ராமகிருஷ்ணா ஆச்ரமத்தில் மற்றும் சிலவிடங்களில் சொற்பொழிவுகளாற்றினார், மட்டக்களப்பில் சுவாமிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. மட்டக்களப்பு இராமகிருஷ்ணா மிஷன் மாணவர் விடுதியில் செயல் முறை சமய போதனை அளித்தார். திரிகோணமலை, அநுராதபுரா முதலான பலவிடங்களில் பேசினார். இலங்கையில் பதினொன்று நாட்கள் தங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி நிரஞ்சனானந்தா-(1862-1904)

1897-ல் இவர் கொழும்பு வந்தார். சுவாமி விவேகானந்தரை வரவேற்க வந்தார்.

சுவாமி விவேகானந்தரைத் தொடர்ந்து குருதேவர் பரம ஹம்சரின் நேர்சீடர்கள் எழுவர் இலங்கை வந்தது, இராமகிருஷ்ணர் இயக்க வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்றது.

---

இவ்விடத்தில் சகோதரி அவபாமியாவின் பங்களிப்பை நினைவு கூர்தல் வேண்டற்பாலது.

## சகோதரி அவபாமியா

சுவாமி விவேகானந்தரின் முதல் அமெரிக்கச் சீடரான சுவாமி அபயானந்தா, சுவாமி சிவானந்தரின் ஆஸ்த்ரேலியச் சீடர் ஹரிப்பிரியா ஆகியோரைப் போல், சகோதரி அவபாமியா எனும் ஸ்வீடன் நாட்டைச் சார்ந்த சுவாமி விவேகானந்தர் சீடருக்கு சுவாமி அபேதானந்தா வேதாந்தப் பிரசாரத்தில் பயிற்சியளித்தார். இந்த அம்மையார் 1908-ல் ஆஸ்த்ரேலியாவிற்கு வேதாந்தப் பிரசாரம் செய்ய வந்தார். மூன்றாண்டுகள் ஆஸ்த்ரேலியாவில் வேதாந்தப் பிரசாரம் செய்து விட்டு இந்தியாவிலும், மற்றும் கிழக்கு நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்ய 1911-ல் ஆஸ்த்ரேலியாவிலிருந்து புறப்பட்டார் அவபாமியா.[46]

1901-ல் இலங்கைக்கு வந்தார் சகோதரி அவபாமியா. மட்டக் களப்பு பிரதேசத்தில், ''இந்து சிறுவர்களுக்கு இந்து பாடசாலைகள்'' எனும் குரல் ஒலித்திட அவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய மட்டக்களப்பு வருகை வித்திட்டது. அவர் பல இந்து பாடசாலைகளைத் திறந்து வைத்தார். ஆரையம் பதி கிராமத்தில் 19-1-1912-ல் சைவப் பாடசாலையைத் திறந்து வைத்தார். பாடசாலையின் பதிவேட்டில் சகோதரி அவபாமியா எழுதியதாவது:

''கடவுளின் எல்லையற்ற கருணையால் இப்பள்ளிக் கூடம், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வாழ்த்துப் பெற வேண்டும் என்பதே என் பிரார்த்தனை,''[61] இவவாறே காரைத் தீவு ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தையும் வாழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராமகிருஷ்ணர் இயக்க உருவாக்கத்தில் சுவாமி சர்வானந்தா பங்களிப்பு

சுவாமி சர்வானந்தா (1885-1970), தூய அன்னை சாரதாமணி தேவி அவர்களிடம் தீட்சை பெற்றவர். 1905-ல் இராமகிருஷ்ணா மிஷனில் சேர்ந்தார். 1906-ல் ஆறுமாத காலம் சென்னை இராமகிருஷ்ணா மடத்தில், அதன் முதல் தலைவர் சுவாமி இராமகிருஷ்ணானந்தாவுடன் தங்கியிருந்தார். 1911-ல் சுவாமி இராமகிருஷ்ணானந்தாவிற்குப் பிறகு சென்னை மடத்தின் தலைவராகி 1927 வரையில் செயல் வீரராகப் புகழ் பெற்றவர். எழுத்திலும், பேச்சிலும், நிருவாகத்திறனிலும் ஆற்றல் பெற்றவராய்த் திகழ்ந்தார். சென்னை மடத்தின் சார்பில் ''ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்,'' என்னும் தமிழ் மாத இதழும், 'வேதாந்த கேசரி' என்னும் ஆங்கில மாத இதழும் வெளிவர ஏற்பாடு செய்தார்.

சென்னை இராமகிருஷ்ணா மடத்திலும் தலைவராக இருந்து, இலங்கைக்கு பன்முறை வருகை தந்து, அங்கு இராமகிருஷ்ணர் இயக்கப் பணிகளை செழுமையுறச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு சுவாமி சர்வானந்தா அவர்கள் முதன் முதலில் டிசம்பர் 1915-ல் வந்தார். கீரிமலையில் நடை பெற்ற இந்து மாணவர்கள் முதல் முகாம் வெற்றிகரமாக நடந்தது. இந்து வாலிபர்கள் சங்கங்கள் இலங்கை முழுவதும் தோன்றின. இந்தச் சங்கங்களின் ஆண்டு விழாக்களில் தலைமையேற்க சுவாமி சர்வானந்தா அடிக் கடி அழைக்கப்பட்டார், இவ்வாறு அவர் 1917, 1918, 1919, 1921, 1926, 1930, 1932-ஆண்டுகளில் இலங்கை வந்தார்.

இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் தோன்றுவதற்கு முன்பு கொழும்பு இந்து இளைஞர் சங்கமும், கொழும்பு விவேகானந்த சபையும் இராமகிருஷ்ணர் இயக்கப்பணிக ளையும் ஆற்றி வந்தன. இந்து இளைஞர் சங்கம், 1899-ல் சுவாமிஜி கொழும்பு வந்த பொழுது அவருடைய வாழ்த் தைப் பெற்றது. சுவாமிஜியும், சுவாமி சிவானந்தரும் இலங்கை வந்து சென்றதின் தூண்டுதலினால் விவேகா னந்த சபையின் தோற்றத்திற்கானச் சூழல் ஏற்பட்டது. இவ்விரு அமைப்புகளும் சுவாமி சர்வானந்தரின் இலங்கை வருகைக்கும், வரவேற்பிற்கும், பொதுக் கூட்டங்கள் நடத்தவும் வழிவகைகளைக் கண்டன.

1919 ஜனவரி 3-ல் 'இந்து சாதனம்' இதழில் ''ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகள்'' எனும் தலைப்பில் வெளி வந்த சமாசாரக்குறிப்பு, பின் வருவது.

''கொழும்பில் இருந்து இங்கு சென்ற சில நாட்களாகக் கீரிமலையிலும் வேறு இடங்களிலும் அரிய உபந்நியா சங்கள் செய்த ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகள் நேற்று திரிகோண மலைக்குப் பயணமானார்.''

1917-ல் சுவாமி சர்வானந்தா யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுது அவரை வரவேற்றது. விவேகானந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை. இந்தச் சபையின் தூண்டுதல் காரணமாக சுவாமி சர்வானந்தர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரர் வித்யாலயத்தை இராமகிருஷ்ணா சங்கத்தின் சார்பில் ஏற்றுக் கொண்டார்.

1918-ம் ஆண்டு சனவரி மாதம் சுவாமி சர்வானந்தா மட்டக்களப்பிற்கு வந்தார். யாழ்ப்பாணத்தில் நாவலர் இயக்கம் வளர்த்து விட்ட கல்வி இயக்கம் போல் மட்டக்களப்பு பகுதி கல்வி இயக்கத்தை நடத்த சுவாமி விபுலானந்தர் காலம் எதிர்பார்த்திருந்தது. சுவாமி சர்வானந்தர் வந்த பொழுது அங்கு சைவ சமயப்பாடசாலைகள் எதிர் கொண்ட இன்னல்களையும், சோதனைகளையும் கண்டும் கேட்டும் அறிந்தார். அவர் ஆரப்பற்றைச் சைவப் பாடசாலையைப் பார்வையிட்டார். அப்பாட சாலையின் நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தில் நமது கருத்தை பின் வருமாறு எழுதினார்.

''இந்தக் கிராமத்தில் உள்ள கல்வி நிறுவனத்தைப் பார்வையிட்டதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன் இந்தப் பாடசாலையைப் பாதுகாப்பதில் மக்களின் துணிவார்ந்த விடா முயற்சியின் வரலாற்றை அறிந்தும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த கல்வி நிறுவனம் மேன் மேலும் வளர்ச்சி பெற்று முதல் தரமாக விளங்க இறைவன் வாழ்த்து கிட்டுமாக.'' சுவாமி சர்வானந்தா கையொப்பத்துடன் பார்வையிட்ட திகதியாக 1-1-1918 யையும் குறிப்பிட்டுள்ளார்.

1921-செப்டம்பர் 8-ல் 'இந்து சாதனம்' வெளியிட்ட பின்வரும் செய்தியில் சுவாமி சர்வானந்தா, கொழும்பு விவேகானந்த சபையில் ஏற்பட விருந்த பிளவைத் தவிர்த்தது கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு விவேகானந்த சபை

இந்துக்களில் சமய சாதியாசரத்தின் பொருட்டுப் பல வருடங்களாக உழைத்து வந்த இச்சபையிற் சென்ற சில மாசங்களாக அங்கத்தவர்களுள் அபிப்ராய பேத முண்டாகிப் பெரும் பிரிவு ஏற்பட்டது. அதனாற் சைவாபி மானிகள் பலர் இச்சபைக்கு யாதும் மோசம் வருமோ வென ஏக்கங் கொண்டிருந்தனர். சென்றவாரம் ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தாரவர்கள் அங்கு சென்று இரு திறத் தோரையும் ஒருங்கு அழைத்துச் சற்போதனை செய்து மேற்படி சபையாருக்கிடையே இருந்த அபிப்பிராய பேதத்தையும் பிரிவையும் அகற்றி ஐக்கியப் படுத்தி விடுவார்களெனக் கேள்வியுற்று ஆனந்தமடைந்தோம். இனிமேல் இங்ஙனம் பிரிவு வாரா வண்ணம் பாதுகாத்தல் நம்மனோர் கடனாகும்.''

1930-ல் கொழும்பு வெள்ளவத்தாவில் இராமகிருஷ்ண ஆசிரமத்தை சுவாமி சர்வானந்தர் தொடக்கி வைத்தார். இதன் தொடர்பாக ராமகிருஷ்ண மிஷன் (சிலோன் கிளை) நிருவாகக் குழுவின் நடவடிக்கைகள் குறிப்பேட்டில் ஆங்கிலத்தில் உள்ள செய்தி, வருமாறு.

''நிருவாகக் குழுவின் ஐந்தாவது கூட்டம் 1930 அக்டோபர் 20-ல் திரு.மூத்த தம்பி வீட்டில் கூடியது. பூஜ்ய சுவாமி சர்வானந்தாஜி தலைமை வகித்தார். திருவாளர்கள் மூத்த தம்பி, எஸ்.சுப்பிரமணியன், டி. குமாரசுவாமி, டாக்டர் ஜி. அப்பாசுவாமி, வி.கே. பரமநாயகம் முதலானோர் கலந்துக் கொண்டனர். தலைவர் அவர்கள் கொழும்பில் மிஷன் ஆசிரமத்தை திறந்து வைக்கக் கோரும் தீர்மானத்தை முன் மொழிந் தார். திரு.மூத்த தம்பி வழிமொழிந்தார். தீர்மானம் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.'' [48]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சர்வானந்தா மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் சுவாமி விபுலானந்தர் நிறுவிய சிவானந்தா வித்யாலயத்திற்கு 15-11-1930-லும், 1-9-32.லும் வந்துள்ளார். 1930-ல் அவர் வித்யாலயத்தைப் பார்வை யிட்டு எழுதிய பார்வையாளர் குறிப்பு, பின்வருவது.

''இன்று காலை சிவானந்த வித்யலாயத்தைப் பார்வையிட்டேன். வித்யாசாலை எவ்வாறு நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதைக் கவனித்துப் பார்க்க சந்தர்ப்பம் இல்லையென்றாலும், நான் பார்த்த அளவில் இதன் நிருவாகம் நன்கு அமைந்துள்ளது. கல்வி போதனையில் சமய கலாசாரத்திற்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. இது, மாணவர்களின் நல்லொழுக்கத்தை வளர்ப்பதற்கு உதவும். வித்யாசாலையின் அடக்கமானத் தொடக்கமாய் இருந்தாலும் இறைவன் பெருங்கருணையாலும், உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பாலும் தகுதி வாய்ந்த முன்னேற்றத்தை இந்து வித்யாசாலை விரைவில் எய்தும்.'' [49]

1-9-32-ல் சிவானந்த வித்யாசாலையைப் பார்வையிட்டு சுவாமி சர்வானந்தா எழுதியக் குறிப்பு வருமாறு:

''பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை கூடுதலாக இல்லையென்றாலும், திறமை பெருமளவில் முன்னேறியுள்ளது. ஆசிரியர்களும் 'மாணவர்களும் பாடசாலையின் இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதில் பேரார்வம் காட்டுகின்றனர். பழைய குருகுல அமைப்பு வழியே முதல் தரமான விடுதியுடன் கூடிய ஆங்கிலப் பள்ளி அமைந்துள்ளது உடற்பயிற்சிக்கும், இசைப் பயிற்சிக்கும் போதிய கவனம் செலுத்துவதும் குறிப்பிடத்தக்கது.''

இலங்கையில் இராமகிருஷ்ணா மிஷன் தோன்றுவதற்கு முன் மட்டக்களப்பு, யாழ்ப்பாண பிரதேசத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ணர் இயக்கத்திடம் ஒப்படைக்கப் பெற்ற பாடசாலைகளின் நிருவாகத்தைக் கவனிக்க குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்களை மேற்பார்வையிடவும், வழி நடத்தவும் சுவாமி சர்வானந்தா அவ்வப் பொழுது இலங்கை வந்து போவார்.

1918 நவம்பர் 'பிரபுத்த பரதா'வில் சுவாமி சர்வானந்தரின் மேற்படி வருகையைப் பற்றி பின்வருமாறு எழுதப்பட்டது.

"சுவாமி சர்வானந்தர் இலங்கைக்கு அவ்வப் பொழுது வந்திருப்பது, இந்துக்களிடையே மகத்தான சமய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. கொழும்பு, யாழ்ப்பாணம் முதலான பல இடங்களில் சமயம், கல்வி பற்றி பல சொற்பொழிவுகளாற்றியுள்ளார். "நமக்கு தேவைப்படும் கல்வி," "நாகரிகத்தில் ஓர் ஆக்கக் கூறாக சமயம்" எனும் தலைப்புகளில் கொழும்பு பேட்டாவில் இந்து இளைஞர் மன்றத்தில் 27, 28--செப்டம்பர் 1918-ல் இரு சொற்பொழிவுகளாற்றினார். நல்லூர் இந்து பள்ளியில் "நம்முன் உள்ள பாணி" என்ற தலைப்பிலும், மணிப்பாய் இந்து காலேஜில் "இந்துவின் இலட்சிய வாழ்க்கை" எனும் தலைப்பிலும் அவர் சொற்பொழிவாற்றினார். யாழ்ப்பாணத்தில் கிராமங்களில் தமிழ்ப்பாடசாலைகள் தொடங்குவதற்கு சுவாமி சர்வானந்தா வருவார். யாழ்ப்பாணத்தில் இந்துக்களுக்கு உயர்தரக் கல்வி வழங்குவதற்கு இலட்சிய நோக்கில் தேசிய கல்லூரியைத் தொடங்குவதற்கு அவர் எண்ணினார். அவருடைய பணி திருப்திகரமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. அவர் நாள்தோறும் சமய போதனை வகுப்புகளை நடத்தி வந்தார்."

சுவாமி சர்வானந்தர் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாண நகரங்களில் மேற்கொண்ட இராமகிருஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணர் இயக்கப் பிரசாரப் பணிகளில் விளைந்த மாபெரும் நற்பயன்களில் ஒன்று பண்டித மயில்வாகனரைச் சுவாமி விபுலானந்தராக மலரச் செய்தது. கொழும்பு, யாழ்ப்பாணம் இராமகிருஷ்ணர் இயக்கத்தில் ஏற்றம் பெற்றிருந்தக் காலத்தில் கிழக்கிலங்கையில், குறிப்பாக மட்டக்களப்பின் முக்கியத்துவத்தை முன்னுணர்ந்து, அதை இராமகிருஷ்ணர் இயக்கத்தில் ஏற்றம் பெற வைத்திட பண்டித மயில்வாகனரை கண்டெடுத்தார் சுவாமி சர்வானந்தர்.

''மட்டக்களப்பு இராமகிருஷ்ணா மிஷன் வரலாறும் பங்களிப்புகளும்'' எனும் ஆங்கிலக் கட்டுரையில் சுவாமி ஜீவனானந்தா அவர்கள் (இப்பொழுது மட்டக்களப்பு இராமகிஷ்ணா மிஷன் தலைவர்) சுவாமி சர்வானந்தர் பண்டித மயில்வாகனர் சந்திப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''கொழும்பு விவேகானந்த சபை 1903 ஜூலையில் நிறுவப்பட்டது. இந்தச் சபை, ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்சீடர்களை இலங்கைக்கு அழைத்து வரவேற்றத் தன்னேரில்லாதச் சிறப்புரிமையைப் பெற்றது. இவர்கள் வருகை, ஓர் இணைப்புச் சங்கிலியாகத் திகழ்ந்தது. இதை மேலும் வலிமையுறச் செய்தவர் சுவாமி சர்வானந்தா அவர்கள். இவர் ஆழக்கற்றவர், நிறை புலமையுடையவர்; வீறார்ந்த ஆளுமையுடையவர். இத்தகையப் பண்புநலன்களைக் கொண்ட இவருடைய சொற்பொழிவுகள் இளைஞர்களை எப்பொழுதும் கவர்ந்தன. 1917-ல் சுவாமி சர்வானந்தா யாழ்ப்பாணம் வண்ணாரப் பண்ணை வைத்தீஸ்வர வித்யாலயத்தின் நிருவாகப் பொறுப்பை, அதன் நிறுவனரும் தலைமையாசிரியருமான டி.நாகமுத்து அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமி சர்வானந்தரின் இத்தகைய வருகைகள் ஒன்றில் பண்டித மயில்வாகனம் (பிற்காலத்தில் சுவாமி விபுலாநந்தர்) சுவாமி சர்வானந்தரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பெற்ற அகத்தூண்டுதலால் யாழ்ப் பாணம் ஆனைப்பந்தியில் தமது வீட்டில் விவேகானந்த சபையை ஆரம்பித்தார்." [80]

மேலும் ஒரு சான்றில் சுவாமி சர்வானந்தரின் ஆளுமையைப் பின்வருமாறு அறிகின்றோம்.

"சுவாமி சர்வானந்தர் உயரமானவர்; சிவந்த மேனியர்; அவர் முன்னிலை அற்புதமானது; அவருடைய சொற்பொழிவு வீறுடையது; கம்பீரமானது. ராமகிருஷ்ண சங்கத்தின் ஆடையணிந்த தூயவர். அவருக்கு இதய பூர்வமான மதத்தான வரவேற்பளிக்கப்பட்ட நாளில் பண்டித மயில்வாகனம் பற்றியச் செய்தி பெரிதும் பேசப்பட்டது. மணிப்பாய் இந்து கல்லூரியின் முதல்வர் மயில்வாகனம் தமது பதவியைத் துறந்து, உள்ளத் துறவு பூண்டு துறவியாகப் போகிறார் என்ற செய்தி அன்று பெரிதும் பேசப்பட்டது." [81]

இலங்கையில் விவேகானந்த சபைகளை வாழ்த்தி யும் வழிகாட்டியும் ஊக்குவித்தர் சுவாமி சர்வானந்தா. சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவுகளைப் படித்து கருத்து பரிமாற்றம் செய்து கொள்ள ஆய்வுமையங் களை அமைத்தவர் சுவாமி சர்வானந்தா. தமது பல் வேறுபணிகளால் இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் சுவாமி சர்வான ந்தர்.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்த சபைகள்

இராமகிருஷ்ணர் இயக்க வரலாற்றில் ''விவேகானந்த சொஸைடிகள்'' எனும் அமைப்புகளுக்கு தனியிடம் உண்டு. இராமகிருஷ்ண மிஷன் தோன்றுவதற்கு சில மாதங்களுக்கு முன்பும், பின்பும் தோன்றிய விவேகானந்த சொஸைடிகள், மிஷன்-மடம் பணிகளில் இணைந்து தொண்டாற்றியுள்ளன; தொண்டாற்றியும் வருகின்றன.

சிகாகோ வீரராக திருச்சிராப் பள்ளியில் நிலையத்தில் சுவாமி வந்த பொழுது அவரைத் தரிசித்த அன்பர்கள் உடனடியாக 'விவேகானந்த சொஸைடி' எனும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவி விட்டனர். இதைப் பற்றியச் செய்தி கல்கத்தா 'இந்தியன் மிரர்' இதழில் (21-2-1897), பின்வரும் செய்தி வெளிவந்தது.

''சுவாமி விவேகானந்தர் வருகையைப் போற்றும் வகையில் திருச்சிராப்பள்ளியில் ''சுவாமி விவேகானந்த சொஸைடி'' என்னும் பெயரில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. டி. எம். மாணிக்கம் பிள்ளை செயலாளராகவும், சிங்காரவேலு முதலியார் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்''

இதைத் தொடர்ந்து 1897-லேயே தமிழகத்தில் வாணியம்பாடு புதூரில் க. வேங்கடசாமி நாயுடு (1869-1929 விவேகானந்த சொஸைடியை ஆரம்பித்தார். இந்த சொஸைடியின் முகவரிக்கு கே.வேங்கடசாமிநாயுடு விற்கு 23-1-1900ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி பாராட்டுக் கடிதம் எழுதியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது ''வேதமதத்தின் பிரசாரத்திற்காக ஓர் அமைப்பை ஏற்படுத்தியதில் வெற்றி பெற்றத் தாங்கள் என் பாராட்டுதல்களை ஏற்கவும்'' என்று சுவாமிஜி எழுதினார்.

இவையிரண்டையும் தவிர அரசம்பட்டி, கிருஷ்ண கிரி, தர்மபுரி, கடலூர், தூத்துக்குடி, பாரூர் எனும் ஊர்களிலும் தமிழகத்தில் விவேகானந்த சொஸைடிகள் அமைக்கப்பட்டன. சுவாமி இராமகிருஷ்ணானந்தர், சகோதரி நிவேதிதாதேவியும் சொஸைடிகளைத் தொடங்கி வைத்துள்ளனர்.

இலங்கையில் சுவாமிஜியின் வெற்றியுலா காரணமாக விவேகானந்த சபைகள் தோன்றின. சுவாமிஜியைத் தொடர்ந்து சுவாமி சிவானந்தரின் வருகையும் விவேகானந்த சபையின் தோற்றத்திற்குரிய சூழலை உருவாக்கியது.

## கொழும்பு விவேகானந்த சபை

''இலங்கைத் தீவிலுள்ள சமயாபிவிருத்திச் சபைகளுள்ளே முதலில் வைத்தெண்ணப் படுவதாகிய கொழும்பு விவேகானந்த சபை'' [2] என்று சுவாமி விபுலானந்தரால் குறிப்பிடப் பெற்ற கொழும்பு விவேகானந்த சபை இலங்கையில் முதலாவதாக 1902 ஜுலை 13-ல் தொடங்கப்பட்டது.

இந்தச் சபையின் தோற்றம் பற்றி 'விவேகானந்தன்' முதல் இதழில் (1925-குரோதன வருஷம், கார்த்திகை மாதம்) பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எமது சபையின் தாபனத்துக்கு இக்கொழும்பு நகரத்திலே யிற்றைக்கு இருபத்து மூன்று வருடங்களுக்கு முன்னே சைவ சமயாபிமானங் கொண்டுழைத்த அறிவுடைப் பெரியார் சிலர் செய்த நன்முயற்சியே காரணமாகும். இச்சபையால் நன்மையையும், பெருமை யையும், புகழையுமடைய முயலு மொவ்வொரு சைவ சமயியும் இப்பெரியார் செய்த நன்றித் திறத்தைப் பெரிது பேணுதல் கடனாம். இச்சபையின் வளர்ச்சிக் காகத் தங்கள் காலத்திற் சிரமப்பட்டவர்களும், விதி வசத்தால் இவ்வுலக வாழ்வினின்று நீங்கினவர்களுமாகிய திருவாளர் V. காரාள பிள்ளை, சேர் P.அருணாசலம், N. தியாகராஜா, C. நமசிவாயம், H திருவிளங்கம், M.வன்னிய சிங்கம், R S. சுப்பிரமணிய தேசிகர், சிற்றம்பலம் கைலாச பிள்ளை முதலியார், ஆகிய இவர் களது நன்றியை என்றும் மறவோம்.

''1902-ம் ஆண்டின், ஆடி மாசத்திலே சைவ சமயா விருத்திக்காக உழைத்தல் வேண்டுமென்ற ஊக்க முடை யார் சிலர் ஓர் சைவ சபை கூட்ட வேண்டி, அக்காலத் திற்குச் சிறிது முன்னாகத் தமக்கும் எமக்கும் என்றும் மங்காப் புகழெங்கணும் நாட்டிப் பின் இவ்வுலக வாழ்வை நீத்த ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் திருப்பெயரில் ஞாபகத்துக்காக ''கொழும்பு விவேகானந்த சபை'' என்ற பெயரோடு இச்சபையைக் கூட்டினார்கள்.''

கொழும்பு விவேகானந்த சபையின் தோற்றம் குறித்து யாழ்ப்பாணம் 'இந்து சாதனம்' (1902-ஜூலை-30) வரவேற்று எழுதியதாவது

''விவேகானந்த சபை நமது ராஜதானியாகும் கொழும்பிலுள்ள சைவ சமயிகள் சிலர் சேர்ந்து முகவு ரைப் பெயரிய ஓர் சபையை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து வாலிபர்கள் மார்க்க தேர்ச்சியின் பொருட்டே இச்சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இச்சபை அதிக விருத்தியடைந்து நற்பயனை ஈயவேண்டு மென்பதே நமது பேரபிப்பிராயம்.''

கொழும்பு விவேகானந்த சபையின் நோக்கங்களில் சில பின் வருவன;

1. வேத ஆகமங்கள் விதித்தவாறு இந்து சமயத்தைப் பிரசாரம் செய்தல்

2. சமயச் சொற்பொழிவுகள், சமய வகுப்புகள், சமய ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தல்.

3. சமய-தத்துவ நூல்கள் அடங்கிய நூலகத்தை நடத்துதல்.

4. சைவ சமயாசாரியர் நால்வர் குரு பூஜைகள், மற்றும் திருத் தொண்டர்கள், ஆறுமுக நாவலர் குருபூஜை, சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் முதலானவற்றை ஆண்டு தோறும் கொண்டாடுதல்.

5. தமிழிலக்கணம், இலக்கியம் கற்போர்க்கு வகுப்புகள் நடத்துதல்

6. புராண படனம், கதா பிரசங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல்.

கொழும்பு விவேகானந்த சபை, ''நாவலர் இயக்கத்திலே தம்மாலியன்ற பங்களிப்பினை'' செய்துள்ளதை ''ஈழம் தந்த நாவலர்'' நூலாசிரியர் அறிஞர் பொ.பூலோகசிங்கம் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1932 ஆம் ஆண்டிலே கொழும்பு விவேகானந்த சபையினர்", நாவலர் வசன நடை பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவித்தனர்."

## விவேகானந்த சபையில் சுவாமி அபேதானந்தர்

1906 ஜூன் 18-ல் விவேகானந்த சபைக்கு சுவாமி அபேதானந்தர் வந்தார். வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது; சபையின் நடவடிக்கைகளைப் பற்றிய சுருக்கமான அறிக்கை தரப்பட்டது. சுவாமி அபேதானந்தர் தமது உரையில் சபையின் உறுப்பினர்கள் மேலும் ஊக்கமுடனும், ஆர்வமுடனும் உழைத்து சொந்தக்கட்டியப் காணப் பாடுபடவேண்டும் என்று கூறினார். படிப்பறிவில்லாதவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் உயர்த்திட பாடுபடவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

## விவேகானந்த சபையில் சுவாமி இராமகிருஷ்ணானந்தா

சுவாமி அபேதானந்தரை இலங்கையில் வரவேற்க சென்னையில் இருந்து வந்த சுவாமி இராமகிருஷ்ணானந்தா, கொழும்பு விவேகானந்தா சபைக்கு வந்தார். சபையின் செயற்பாடுகளைப் பற்றிக் கேட்டறிந்தார்; நூலகத்தைப் பார்வையிட்டார். நூலகத்தில் இருந்த மதிப்பு வாய்ந்த நூல்களைப் பற்றியும், சபையின் முன்னேற்றம் பற்றியும் திருப்தி தெரிவித்தார். சந்நியாச தருமத்தைப்பற்றி உரையாற்றினார். சபை உறுப்பினர்களை வாழ்த்தியப் பிறகு, சுவாமிஜியின் பக்தர் திரு. டி. சொக்கநாதன் அவர்களுடன் புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்த சபையில் காந்தியடிகள்

1926-ல் காந்தியடிகள் இலங்கைக்கு வந்தார், யாழ்ப் பாண வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நவம்பர் 27.ல் "இந்துக்களுக்கு யான் சொல்வது" எனும் தலைப் பில் பேசினார் இதற்கு முன் நவம்பர் 13-ல் விவேகானந்த சபைக்கு காந்தியடிகள் வந்தார். அப்பொழுது அவர் பேசியதில் ஒரு பகுதி வருமாறு

"நீங்கள் தந்த உபசார பத்திரத்திற்கும், பணப் பையிற்குமாக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். எனக்கென் றிருந்த சொற்ப நேரத்துள் உங்கள் சபையில் நடக்கும் காரியங்களைப் பற்றிய அறிக்கைப் பத்திரிகையை பார்வை யிட்டேன். சபையில் பலவகையான முயற்சிகளுக்காக உங்களுடன் யானும் மகிழ்ச்சி கூறுகிறேன். விவேகானந்த ருடைய பெயரானது அற்புதமானது. அவர் இந்தியாவின் வாழ்க்கையில் ஓர் அழியாத பயனை ஆக்கி விட்டார். தற்காலத்தில் இந்தியாவிற் பல பகுதிகளிலும் அவர் பெய ராலேயே அனேக சபைகள் தொடங்கியிருக்கின்றன."[53]

சுவாமி விவேகானந்தர் காந்தியடிகளின் தேசிய அரசி யல் இலட்சியங்களை ஏற்றுக் கொண்டவர். 'பிரபுத்த பாரதா'வின் ஆசிரியராகவிருந்த காலத்தில் 1940 டிசம்பர் இதழில் ஆன்மிக விடுதலையைப் பெற்றுத் தந்த ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரையும், சுவாமி விவேகானந்தரையும் அரசியலில் தார்மிக நெறியை இணைத்த காந்தியடிகளை யும் போற்றியுள்ளார். சுவாமி விபுலானந்தர் முயற்சியால் காந்தியடிகள் கொழும்பு விவேகானந்த சபைக்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்த சபையின் வெள்ளி விழா குறித்து...

கொழும்பு விவேகானந்த சபையின் வெள்ளி விழா குறித்து 'விவேகானந்தன்' இதழில் எழுதப்பட்டவாவது;

"இலங்கையின் தலைநகராகிய கொழும்பு மாநகரத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாக நிலைபெற்று நின்று பற்பல துறைகளில் நன்மை பயந்து வருகின்ற விவேகானந்த சபையின் வெள்ளி விழா கொண்டாட்டத்தை இவ்வாண்டிற் சிறப்பாக நடத்த வேண்டுமென்று நிருவாக சபையார் உத்தேசித்திருக்கின்றனர். அதற்காக எழுபது பேரடங்கிய ஓர் ஆலோசனை சபை நியமிக்கப்பட்டிருக்கின்றது. சங்கத்தின் அங்கத்தினர் தொகை அறுநூற்றுச் சிலவாகும். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளிலும் விவேகானந்த சபையைச் சார்ந்திருந்து அதற்கு வேண்டிய தொண்டு செய்து இம்மை மறுமைப் பேறுபெற்றினை அடைந்தோர் எத்தனையோ பலர். வேறு பல சங்கங்கள் இடையே தோன்றி மறைந்து போக இச்சபை ஆண்டவருடைய அநுக்கிரகத்தினாலும் தான் யாருடைய திருநாமத்தைத் தாங்கி நிற்கின்றதோ அப்புண்ணிய புருஷருடைய ஆசீர்வாதத்தினாலும் நிலைபெற்று நிற்கின்றது."

12-6-1948-ல் சமர்ப்பிக்கப்பட்ட சபையின் அறிக்கையில் இந்தியாவைச் சார்ந்த ராஜாஜி, எம். எஸ். ஆனே (பீகார் ஆளுநர்) இலங்கையின் உலகப் புகழ்பெற்ற கலை விமர்சகர் டாக்டர் ஆனந்த குமாரசுவாமி ஆகியோர் கௌரவ உறுப்பினர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். 12-6-1948-ல் சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையின் விவரம், வருமாறு: கௌரவ உறுப்பினர்கள் 9; ஆயுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள் 109; ஏனைய உறுப்பினர்கள் 1054; மொத்தம் 1172.

இக்காலத்திலும் கொழும்பு விவேகானந்த சபை பாரம்பர்யப் பெருமையை, செயல்திறத்தை முன்னெடுத்து கொண்டு வருகின்றது. சொந்தக் கட்டிடத்தைப் பெற்றுக் கொண்ட சபை, சமய-கலை-இலக்கிய-கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளை மிக்க ஊக்கத்துடனே நடத்தி வருகின்றது. இராமகிருஷ்ண மிஷனுடன் அவ்வப்பொழுது இணைந்தும் செயலாற்றி வருகின்றது. நூற்றாண்டு விழாவை நோக்கி காத்திருக்கும் விவேகானந்த சபையின் வளாகத்திற்குள் மிக உயர்ந்த மேடையில் ஒன்பது அடி உயரமுள்ள சுவாமி விவேகானந்தரின் வெண்கலச் சிலையின் திறப்பு விழா நிகழவுள்ளது. சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி (1897-1 97) கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் இந்த வெண்கலச் சிலைக்கு ஏற்பாடு செய்து, சிலை திறப்பு விழாவையும் விவேகானந்த சபையில் முன்நின்று 1997 ஜனவரியில் நிகழ்த்துகின்றது.

## 'விவேகானந்தன்'

கொழும்பு விவேகானந்த சபை, 1925-ல் குரோத ஆண்டு கார்த்திகை மாதத்தில் 'விவேகானந்தன்' எனும் பெயரில் ஒரு மாத இதழைத் தொடங்கியது. இதன் முதல் ஆசிரியர் சுவாமி விபுலானந்தர், முதல் இதழின் கடைசிப் பக்கத்தில் ''சைவ சமயிகளுக்கு ஓர் விண்ணப்பம்'' என்னும் தலைப்பில் வெளிவந்தை அறிக்கையில் 'விவேகானந்தன்' இதழ் தோற்றத்தைப் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''கொழும்பு விவேகானந்த சபையார் இவ்விதமான மான சஞ்ஜிகை ஒன்றை வெளிபடுத்தும் நோக்கமுடையவராயிருந்தும் தகுந்த ஓர் பத்திரிகையாசிரியர் கிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமையால் இம்முயற்சியை இதுவரையும் செய்யாமல்விட நேரிட்டது இப்போது. ஸ்ரீமத் விபுலானந்த சுவாமிகள் திருகோணமலையைத் தமது இருப்பிடமாகக் கொண்டு இவ்விலங்கா துவீபத்திலுள்ள சைவ சமயிகளுடைய சமய ஞான கல்வி ஞான முதலியவற்றை வளர்க்கவும் இம் முயற்சிக்குத் துணையாய் வித்தியா சாலைகளை இயன்ற வரையில் ஏற்படுத்தவும் சித்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களின் உதவியைக் கொண்டு சுய நலம் பொருணலம் கருதாது குறைந்த சந்தாவுடன் இச் சஞ்சிகை வெளிப்படுதலாயிற்று.''

விவேகானந்த சபையின் நிகழ்ச்சிகள் பற்றியச் செய்திகள் 'விவேகானந்தன்' இதழில் வெளிவந்தன. 'ஆசிரியர் உள்ளக் கிடக்கை' எனும் தலைப்பில் சுவாமி விபுலானந்தர் எழுதிவந்தார்' சுவாமி விபுலானந்தரின் அணுக்கத் தொண்டர் மா. பீதாம்பரம் பிள்ளை இப்பத்திரிகையை நடத்துவதில் உறுதுணையாக இருந்தார்.

சுவாமி விபுலானந்தர் இரண்டாண்டுகளே ஆசிரியப் பொறுப்பில் இருந்தார். 'விவேகானந்தன்' இதழை இராமகிருஷ்ணர் இயக்கர் பிரசாரத்திற்கு சுவாமி விபுலானந்தர் பயன்படுத்தினார். 'விவேகானந்தன்' இரண்டாம் தொகுதியின் இரண்டாம் பகுதியில் வெளிவந்த 'ஆசிரியர் உள்ளக் கிடக்கை'யில் தமது குரு சுவாமி சிவானந்தரையும், குருதேவர் இராமகிருஷ்ண பரம ஹம்சரைப் பற்றியும், இராமகிருஷ்ணா மிஷன் உலகளாவியப் பணியைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

முதல் இதழிலேயே 'காப்பு' உரையில் குரு தேவர் பரம ஹம்சருக்கும், தமக்கு சந்நியாச தீட்சையளித்த சுவாமிசிவானந்தருக்கும் பின்வருமாறு வணக்கம் செலுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...அய்யராசக்தியானது பூர்ணானுக்கிரகம் பெற்ற சிந்மாயானந்த பரம குருவாகிய பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ச தேவரது திருவடித் தாமரைகளை யாம் வணங்குகிறோம்."

"அப்பால் குருவினது திருவருட் பிரசாதம் பெற்று ஏழையேமையுங் கடைக்கணித்தாண்ட சிவானந்த வருட் குரவனது திருவடித் தாமரைகளை யாம் வணங்கு கிறோம்."

1923 ஆனி மாத இதழின் "ஆசிரியர் உள்ளக் கிடக்கை"யில் இராமனும் கிருஷ்ணனும் சேர்ந்த அவ தாரமே, இராமகிருஷ்ணர் என்னும் கருத்தை பின்வரு மாறு வெளியிட்டுள்ளார்.

"ஸ்ரீராமனாகவும், ஸ்ரீகிருஷ்ணனாகவும் உற்பவித்த தெய்வவொளி மீண்டுமிவ்வுலகத்திற் றோன்றி ஸ்ரீராம கிருஷ்ணர் ரென்னும் நாமத்தோடு எம்மனோரையும் உய்யக் கொண்டதென்பது எம்முள்ளத்துப் படிந்த நிச்சயமான நம்பிக்கை."

சுவாமிஜியின் அருள்வாக்கியத் தொடர் ஒன்றையும் விவேகானந்தனில் இடம் பெறச் செய்தார். சுவாமி விவேகானந்தர் தமது சீடர்களுடன் நிகழ்த்திய உரை யாடல்களை பேச்சுகள் சிலவற்றை 'குரு சிஷ்ய சம்வாதம்' என்னும் தலைப்பில் மொழி பெயர்த்து விவேகானந்தனில் வெளியிட்டு வந்தார். சுவாமிஜியின் சில கடிதங்களை யும் சுவாமி துரியானந்தரின் கடிதத்தையும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

இராமகிருஷ்ண மிஷனில் இளைஞர்கள் சேர முன் வர வேண்டும் எனும் தமது விருப்பத்தை சுவாமி விபுலானந்தர் 1927-ல் ஜனவரி-பிப்ரவரி மாத விவேகானந்தனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் 'உள்ளக் கிடக்கை' பகுதியில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

''ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் சிஷ்யர்கள் ஏழு பேர் பிரகாசானந்தர், பிரபவானந்தர், இராகவானந்தர், அகிலானந்தர், தயானந்தர் என்னும் திருநாமம் படைத்தோர் இப்பொழுது அமெரிக்காக் காண்டத்திலிருந்து இந்துமத பிரசாரணம் செய்து வருகிறார்கள். எழுவரல்ல. எழுநூறு பேருக்கு அமெரிக்கா நாட்டில் பிரசாரண முயற்சி செய்ய இடமுண்டு. ஆதலால் அகத் தூய்மையும் கல்வியறிவுமுள்ள வாலிபர் இந் நன் முயற்சிக்குத் தங்களை அர்ப்பணஞ் செய்ய முன் வரவேண்டு மென்பது எமது உள்ளக் கிடக்கை.''

## விவேகானந்த சபை குறித்து சுவாமி விபுலானந்தர்

1927 ஏப்ரல்-மே இதழின் ''ஆசிரியர் உள்ளக் கிடக்கையில்'' கொழும்பு விவேகானந்த சபை இலங்கைத் தமிழரனைவருக்கும் ஒரு பொது நிலையமாக இருத்தல் வேண்டும். எந்தத் தமிழனும் பெருமையோடும் ஆர்வத்தோடும் இச்சபையைக் கட்டிப்போற்றதக்க உன்னத நிலையில் சபையானது அமையப் பெறவேண்டும்...இலங்கைத் தீவுக்கு முகமெனத் திகழும் இக் கொழும்பு மாநகரிலே விவேகானந்த சபை போன்ற ஒரு நிலையத்தை நாம் சிர்பெற நடத்தாது விடுவோமாயின் பிறருடைய நகைக்கு ஆளாவோ மன்றோ? கடையாய அக்ஷய வருஷங் கழித்து முதன்மை பொருந்திய பிரபவ வருஷம்தோன்றியிருக்கிறது. சபையினுடைய வெள்ளி விழா இவ் வருஷத்தில் நடைபெறப் போகின்றது. சபையினங் கத்தவரும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தைக் கருதியரனைவோரும் புதிய உற்சாகத்தோடு வேண்டுவன புரிந்து வெள்ளி விழாவை கொண்டாடல் வேண்டும்.''

## யாழ்ப்பாணம் விவேகானந்த சபை

கொழும்பு விவேகானந்த சபை தோன்றிய நான்கு மாதங்களுக்குப் பிறகு 1902 நவம்பர் 5-ல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் விவேகானந்த வித்தியாசாலையில் சிலர் கூடி யாழ்ப்பாணத்தில் விவேகானந்த சுவாமி பேரில் ஓர் சபை ஏற்படுத்தி நடத்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இந்த சபைக்கு அப்புக்காத்து திரு, தலைவசிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்கள். இந்தச் சபையின் தோற்றத்தை வரவேற்று 'இந்து சாதனம்' (நவம்பர் 1902) எழுதியதாவது:

''விவேகானந்த சுவாமிகள் மேலைத் தேசங்களில் நமது மதத்தைப் பிரசங்கித்து அதனுண்மையை அநேகரறிந்துய்யுமாறு செய்ததுமன்றி நமது தேசத்திற்கும் தரிசனமளித்து நம்மெல்லோரையும் பேருவகைக் கடலுளாழச் செய்தார். இத்தகைய மகானை நாமென்றும் நினைவு கூரத் தக்கதாய் அவர் பேரில் ஓர் சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெரும் சந்தோஷமே. இச்சபை நம்மூருக்கு பெரும் நன்மைக்கேதுவாய் என்றும்நிலைக்க வேண்டுமென்பதே நமது பேரப்பிராயம்.''

## திருக்கோண மலையில் விவேகானந்த சபை

திருக்கோணமலையில் 1906-ல் விவேகானந்த சபை நிறுவப்பட்டது இதன் நூலகத்தில் சுவாமிஜியின் நூல்கள் பல சேர்த்து வைக்கப்பட்டன, சுவாமி விவேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னந்தர் விளக்கியவாறு இந்து சரித்திர நூல்களை கற்க வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 1924-ல் இந்தச் சபையின் அழைப்பை ஏற்று சுவாமி சர்வானந்தர் சுவாமி விபுலா னந்தருடன் வந்திருந்து எழுச்சியூட்டும் சொற்பொழிவ களாற்றினார். இந்த வருகை விவேகானந்த சபைக்கு மிகப் பெரிய அளவில் ஊக்கமளித்தது. இதன் காரண மாக 1925 மே 9-ல் திருக்கோணமலையில் இராமகிருஷ்ண மிஷன் ஆச்ரமம் தோன்றியது.

## ஆனைப்பத்தி விவேகானந்த சபை

சுவாமி விபுலானந்தர், பூர்வாச்ரமத்தில் பண்டித மயில்வாகனம், ஆனைப்பத்தியில் தமது வீட்டில் விவேகா னந்த சபையை அமைத்தார். எந்த ஆண்டில் சபை அமைக்கப்பட்டது என்பது பற்றி தெளிவானச் சான்று கிடைக்கவில்லை. இந்தச் சபையை திருவாளர்கள் செ. மயில்வாகனம், கலைப்புலவர் நவரத்தினம், திரு. முத்துக்குமார், வெ. கி. கி. குமாரசாமி முதலான நண்பர்களுடன் சேர்ந்து அமைத்தார், பண்டித மயில் வாகனம்.

## மட்டக்களப்பு விவேகானந்த சபை

மட்டக்களப்பில் விவேகானந்த சபையின் தோற்றத் தைப் பற்றியும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால், சபையின் நடவடிக்கைப் பற்றிய ஒரு செய்தியை 'இந்து சாதனம்' (ஜனவரி 21, 1915) இதழில் பின் வரு மாறு அறிகின்றோம்.

''விவேகானந்த சுவாமிகளின் ஜனனத்தினக் கொண்டாட்டம் மட்டக்களப்பு கல்லடி உப்போடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்த வித்தியாசாலையிற் சென்ற ஜனவரி 19 சனிக்கிழமை பிற்பகல் விவேகானந்த சுவாமிகளின் 53-வது ஜெனனதினக் கொண்டாட்டம் விவேகானந்த சபையாராலும் வித்தியாசாலை வித்யார்த்திகளாலும் கொண்டாடப்பட்டது. மேற்படி சபையின் அங்கத்தவர் சி. சுப்பிரமணிய தேசிகர் தலைமையில் அ. சரவணமுத்து ஸ்வாமிஜியின் சரித்திரத்தை உபந்யாசித்தார்.''

1925-ல் சபையின் தலைவராகயிருந்தவர் திரு. எம். சின்னையா. மட்டக் களப்பு மாவட்டத்தில் காரைத் தீவு மண்டூர், ஆரைப்பத்தி, ஆனைப்பத்தி, இச்சந்தீவு முதலான விடங்களில் இருந்த பாடசாலைகளை திரு. சின்னையா சுவாமி விபுலானந்தரிடம் ஒப்படைத்தார்.

## அனுராதபுரம் விவேகானந்த சபை

சுவாமிஜி விஜயம் செய்த அனுராதபுரத்தில் விவேகானந்த சபை 1925-ல் அமைக்கப் பெற்றது. 1963-ல் சுவாமி விவேகானந்தர் நினைவு மலரை இந்தச் சபை தமிழில் வெளியிட்டது. 1975-ல் சபையின் பொன் விழாவை முன்னிட்டு பொன் விழா மலர் வெளி வந்துள்ளது.

மானிப்பாய், மாத்தளை ஆகிய விடங்களிலும் விவேகானந்த சபைகள் இருந்துள்ளன என்பதை அறிகின்றோம். இதுகாறும் கூறப் பெற்ற சபைகளின் நடநடவடிக்கைகளைப் பற்றியும் பிறவிடங்களிலும் சபைகள் இருந்துள்ளனவா என்பதைப் பற்றியும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றுள் கொழும்பு விவேகானந்த சபை மட்டும் நூற்றாண்டு விழாவை நோக்கி இயங்கிக் கொண்டு வருகின்றது. வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த இந்தச் சபையைப் பற்றிய விரிவான ஆய்விற்கும் தேவையுள்ளது.

விவேகானந்த சபைகள் இராமகிருஷ்ணர் இயக்கத்திற்கு பக்க பலமாக இயங்கியதில் தான், இயங்குவதில்தான் அதன் மூலபலமும் அடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் தோற்றமும் வளர்ச்சியும்

## கொழும்பு இராமகிருஷ்ணமிஷன்

திருக்கோண மலையில் சுவாமி சர்வானந்தா அவர்கள், சுவாமி விபுலானந்தர் காரணமாக முதன் முதலில் இராமகிருஷ்ண மிஷன் ஆசிரமம் 1925-ல் அமைந்தது. ஆயினும் இராமகிருஷ்ண மிஷன் எனும் பெயரில் பேலூர் இராமகிருஷ்ணமிஷன்-மடத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் அமைக்கப்பட்டது. இந்த மிஷன் தோற்றம் பற்றி 1934-ல் சுவாமி அசங்கானந்தர்-சுவாமி விபுலானந்தர் வெளியிட்ட ''ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்து திருமடம், கொழும்பு'' எனும் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''...1915-ம் ஆண்டு சுவாமி சர்வானந்தர் இலங்கை வாசிகளினது வேண்டு கோளுக் கிணங்கி விஜயம் செய்து தமது சொற்பொழிவுகளினாலே கேட்டோரது உள்ளத்தை உருக்கும் ஒரு பெருங்கிளர்ச்சியினை உண்டாக்கினார். அவர் இடையிடையே இலங்கைக்கு விஜயம் செய்ததின் பெறு பேறாக யாழ்ப்பாணம், திருக்கோண மலை, மட்டக்களப்பு முதலிய விடங்களிலே சங்க

ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. ஆங்காங்கு பாடசாலைகளும் அநாதைப் பிள்ளைகள் வசிக்கும் இல்லங்களும் நிறுவப்பட்டு ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துச் சாதுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பிலும், திருக்கோணமலையிலும் இருக்கும் இடையிடையே கொழும்பு மாநகரத்துக்கு விஜயம் செய்து சொற்பொழிவுகளும் சம்பாஷணைகளும் ஆற்றினதின் நிமித்தம் சங்கத்திலே பற்றுதலுள்ள சில அபிமானிகளுடைய உள்ளத்திலே கொழும்புமா நகரத்திலே ஒரு திருமடம் ஏற்படுத்த வேண்டுமென்னும் எண்ணம் ஆழ்ந்து பதிவதாயிற்று. அத்தகைய அபிமானிகள் பலமுறை கூட்டங்கூடி ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து எல்லா மடங்களுக்கும் தலைமடமாகிய கல்கத்தாவுக்கு அனுப்பிக் கொழும்பு மாநகரத்திலே ஒரு திருமடம் நிறுவும்படி அதிகாரிகளைக் கேட்டனர். தலை மடத்தார் சுவாமி சர்வானந்தரை யனுப்பி 1930-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் தேதி வெள்ளவத்தை யென்னும் இடத்திலே குடிக் கூலிக்கு ஓர் இல்லம் எடுத்து அதிலே மடத்தை நிறுவச் செய்தனர்.''

கொழும்பில் இராமகிஷ்ண மிஷன் அமைத்திட அநுமதி வேண்டி கல்கத்தா பேலூர் இராமகிருஷ்ண மிஷன் தலைமையகத்திற்கு ஆர்வலர்கள் சார்பில் கடிதம் எழுதியவர் எம். மூத்தத்தம்பி. இவருடைய சகோதரியின் உடன்பிறப்புதான், 1897-ல்சுவாமி விவேகானந்தரை தமது விருந்தளியாக தமது இல்லத்தில் எழுந்தருளச் செய்த செல்லையா அவர்கள். தலைமையகச் செயலாளர் சுவாமி விரஜானந்தா அவர்கள் திரு எம். மூத்தத்தம்பிக்கு 8-10-1939-ல் எழுதிய பதில் பின்வருவது.

''என்னுடைய கடந்த 20-ந் தேதியிட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக, கொழும்பில் இராமகிருஷ்ணா மிஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குவது சம்பந்தமாகத் தாங்கள் சமர்ப்பித்தா் கோரிக்கையை நிருவாகக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின் றேன். சுவாமி சர்வானந்தா இலங்கைக்கு முன்பே புறப் பட்டு விட்டார்.[59]

சுவாமி சர்வானந்தா அவர்கள் சுவாமி பிரண வேஷானந்தா அவர்களுடன் இலங்கை வந்தார். அவர்களை சுவாமி விபுலானந்தாவும், மூத்தத் தம்பி யும் மற்றும் பலரும் வரவேற்றனர் கொழும்பில் மிஷன் அமைப்புத் தொடர்பான முதல் கூட்டம் திரு. மூத்த தம்பி வீட்டில் நடைபெற்றது.

22-10-1930-ல் கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் (இலங்கைக் கிளை) அமைக்கப்பட்டது. கொழும்பு வெள்ளவத்தை 48 ஹேமர்ஸ் அவென்யூவில் வாடகைக்கு எடுத்துக் கொண்ட இல்லத்தில் மிஷன் இயங்கியது. பிறகு 49.விக்ரமா தெரு. வெள்ளவத்தை முகவரிக்கு மாறியது.

பகவான் இராம கிருஷ்ணர், தூய அன்னையார், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் புகைப்படங்கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப் பெற்றது. சுவாமி சர்வானந்தா தொடக்கச் சடங்கை நிகழ்த்தினார். மிஷனின் ஆதரவாளர்கள் நூறுபேர் கலந்துக் கொண் டனர். சுவாமி விபுலானந்தர் இலங்கையில் மிஷனின் செயற்பாடுகளைக் குறித்து ஓர் அறிக்கையை சமர்ப்பித் தார். சுவாமி கனானந்தா இராமகிருஷ்ணா மிஷன் (இலங்கைகிளை) துணைத்தலைவராக நியமிக்கப் பட்டார். இவர் மிஷனின் முதல் துணைத்தலைவராக 1931 முதள 19 2 வரையில் பணியாற்றினார். 1933 முதல் சுவாமி அசங்கானந்தர் துணைத்தலைவரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் காலத்தில் திருமடத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் கட்ட முயற்சி யெடுக்கப்பட்டது. இதற்குரிய வேண்டு கோளாகத்தான் ''ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துத் திருமடம், கொழும்பு-ஒரு விண்ணப்பம்'' வெளியிடப் பட்டது. இதில் இறுதிப் பகுதி பின் வருமாறு:

''...துறவும் தொண்டுமே மேன்மையான நோக்கங்களாமெனக் கொண்டுள்ள இவ்வாச்சிரமத்திலே இடைவிடாத ஆன்மார்த்தத்திற்குரிய எண்ணமும் பணியும் நாள்தோறும் வளர்ச்சி யெய்திக் கொண்டு வருகின்றன. இவ்வாச்சிரமம் தற்காலம் ஒரு குடிக்கூலிக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுப் பரோப கார்த்தமாகக் கருதிக் கொடுக்கிற பொருளைக் கொண்டு நடத்தப் பட்டு வருகிறது. ஆச்சிரமம் நிறுவச் சொந்தமான நிலமும் பொருளும் தேவை. இத்திருப் பணிக்குக் குறைந்தளவாக ரூபா 20, 00. ஆயினும் தேவையென்பது தெளிவு. பரந்த சிந்தையும், உயர்ந்த நோக்கமும் கொண்டொழுகும் பெருந்தகையாளர்கள் முன்வந்து தங்கள் தங்களாலியன்ற பொருளுதவியோ, நிலமோ, மற்றெவ்வித உதவியோ புரியுமாறு அவர்களை யாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.''

சொந்தக் கட்டிடத்திற்கான முயற்சி 1935-ல் நிறைவேறியது. 1935 ஏப்ரல் 4-ல் கால் ஏக்கர் அளவில் சிறிய நிலம் கொழும்பு மிஷனால் வாங்கப்பட்டது. கோயில், பிரார்த்தனை அறை, சொற்பொழிவு கூடம், தங்குவதற்கு அறைகள், சமையல் அறை சாப்பாட்டு அறை கட்டுவதற்கு மார்ச் புதன் கிழமையன்று (1935) பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நூற்றாண்டின் முதல் நாளில் ஆசிரமவளாகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 24 பிப்ரவரி 1936-ல் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. 26 ஏப்ரலில் (1936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சொற்பொழிவுக் கூடம் திறந்து வைக்கப்பட்டது. கோயிலும், பிரார்த்தனைக் கூடமும் ஜனவரி 4, 1938-ல் அர்ப்பணிக்கப்பட்டது. இந்த மிஷனில் முகவரி 44-வது சந்து, வெள்ளைவத்தை யாகும். மிஷனின் கோயில் கட்டுவதற்கான மொததச் செலவும் பிம்ரம்ஜி தேவ்ஜி, எம்.கே. கபாடியா, எம்.ஜே. படேல் ஆகியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரார்த்தனைக் கூடத்திற் கானச் செலவுத் தொகை டாக்டர் ஜி. விக்லராஜாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டாம் உலகப்போரக் காலத்தில தற்காலிகமாக மிஷனின் தலைமை யகம் 1942 ஏப்ரலில் லுனகாலாவிற்கும், பிறகு ஜூலை 1942-ல் மட்டக்களப்பிற்கும், மீண்டும் வெள்ள வத்தை 60-வது சந்திற்கும் மாற்றப்பட்டது. 1944 முதல் இப்பொழுது இருக்கும் இடத்திற்கே மாற்றப்பட்டது.

கொழும்பு இராமகிருஷ்ணா மிஷனின் முதல் நிரு வாகக்குழுக் கூட்டம் மட்டக்களப்பு விவேகானந்தா மன்றத்தில் நவம்பர் 16, 1929-ல் கூடியது. துணைத் தலைவர் சுவாமி அவிநாசானந்தா, செயலாளர் சுவாமி விபுலானந்தா, டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் மற்றும் பதினேழு உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர். இருபத் தொன்பது உறுப்பினர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.[66]

மிஷனின் வளர்ச்சிக்கு கொழும்பு நகரவாசிகள் பலர் பொருளுதவி செய்தனர். சட்ட ரீதியான ஓர் அங்கீகாரத்தை இலங்கை அரசாங்கம் 1929-ல் வழங் கியது. சட்டமன்றத்தில் திருக்கோணமலைப் பிரதேசத் தின் பிரதிநிதியான கௌரவ எம்.எம்.சுப்பிரமணியம் ஜூலை 28, 1928-ல் மிஷனுக்கு சட்ட ரீதியான அங்கீ காரம் வழங்கப்பட ஒரு மசோதாவைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். இறுதியில் இதற்கான அரசு ஆணை ஜூலை 4, 1929-ல் வெளியிடப்பட்டது.

தொடக்கத்திலிருந்தே பூஜை, உபநிடத வகுப்பு, பகவத்கீதை, ஆத்மார்த்தமான உரையாடல் முதலியன வகுப்புவாதமின்றி ஒழுங்காகவும், செம்மையாகவும் நடைபெற்று வருகின்றனர். மடத்திலிருக்கிற சுவாமிகள் இலங்கையிலுள்ள பல முக்கியமான விடங்களுக்குஞ் சென்று சொற்பொழிவுகளும் சமய சம்பந்தமான சம்பாஷணைகளும் ஆற்றி வருகின்றனர். நிவாரணப் பணிகளில் முன் நின்று தொண்டாற்றும் இராமகிருஷ்ண இயக்க மரபைப் பேணி வளர்த்து வருகின்றது. இவ்வாறே கல்விப்பணி இயக்கத்திலும் மரபு வழியில் முன்நின்று வருகின்றது. 1930 மே 19-ல் பேலூர் மடம் இராம கிருஷ்ணாமிஷன் பொதுச் செயலாளர் சுவாமி மாத வானந்தாஜி மகராஜ் அவர்களுக்கு சமர்ப்பித்த வரவேற் புரையில் மிஷன் 18 பாடசாலைகளையும், 3500 மாண வர்களையும் மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப் பாணம், லுனகாலா முதலிய விடங்களில் நிருவகித்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமகிருஷ்ணமிஷனின் பொருளாளராகப் பணியாற் றிய திரு.சி.பி.மோடி, அவருடைய மனைவி கமலா மோடி இருவரும் மிஷனுக்காக நூலகம், வாசகசாலை இரண்டை யும் தங்கள் செலவிலேயக் கட்டிக் கொடுத்தனர் 1949-ல் இது பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

ஆன்மிக, சமய கலாசார நிகழ்ச்சிகளை அவ்வப் பொழுது ஏற்பாடு செய்தும், இதற்காக இலங்கையி லிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் சொற்பொழிவாளர் களை, கலைஞர்களை மிஷன் வரவழைத்து இராம கிருஷ்ணர் இயக்கப் பணிக்களத்தை விரிவடையச் செய்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர் 1897-ல் இலங்கை விஜயத்தின் பொன் விழாவை 1947-ல் கொழும்பு மிஷன் கொழும்பு விவேகானந்த சபையுடன் இணைந்து கொண்டாடியது. அப்பொழுது இலங்கையில் இந்திய அரசின் உயர் தூதரக அதிகாரி யாகப் பணியாற்றிய மேதகு எம்.எஸ். ஆனே தலைமை வகித்தார்.

ஜனவரி 1950-ல் அன்றையப் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருஜி, அரசியல் அறிஞர் திரு.வி.கே. கிருஷ்ண மேனன் அவர்களுடன் கொழும்பு மிஷனுக்கு வருகை தந்து மிஷனின் உலக கலாசார மையக் கட்டிடத்தைத் திறந்து வைத்து, இராமகிருஷ்ணர் இயக்கத்தின் வெளிநாட்டு-உள்நாட்டுப் பணிகளைப் பாராட்டிப் பேசினார். இதற்கான அடிக்கல் அன்றைய இந்திய ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் ஜூன் 17,1959-ல் நாட்டப் பெற்றது. இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி சி.வி. இராமன், இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் ஜே.பி.கிருபாளனி முதலான பலர் கொழும்பு மிஷனுக்கு வந்து அதன் பன்முகப் பணிகளைப் பாராட்டியுள்ளனர். தூய அன்னை சாரதாதேவி அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழா மார்ச் 20, 1954-ல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் தலைமையில் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்தும் இராமகிருஷ்ணர் இயக்கத் துறவிகள் பலர் அவ்வப்பொழுது இலங்கை வந்திருந்து மிஷனின் பணிகளை ஊக்குவித்துள்ளனர்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவின் நூற்றாண்டு விழாவை கொழும்பு மிஷன் இலங்கையின் பலவிடங்களில் மக்கள் புத்தெழுச்சி பெறும் வண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993-ல் நடத்தியது. இந்த நூற்றாண்டு விழாவை யொட்டி தமிழக எழுத்தாளர் பெ.சு.மணி எழுதிய ''நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள்'' எனும் நூலை கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் வெளியிட்டது.

சிகாகோ வீரர் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவை கொழும்பு ராம கிருஷ்ணாமிஷன் சீரும் சிறப்பும் பொலிவுற நடத்து கின்றது. கொழும்பு விவேகானந்த சபையில் சுவாமியின் ஒன்பது அடி உயரம் கொண்ட வெண்கலச் சிலையை நிறுவுகின்றது. ஜனவரி 15, 1997-ல் ஸ்ரீமத் சுவாமிரங்க நாதானந்தா அவர்கள் திறந்துவைக்கின்றார். இலங்கை அரசு சுவாமிஜி வருகையின் நூற்றாண்டு விழா நினைவாகச் சிறப்புத் தபால் தலை வெளியிடவும் கொழும்பு மிஷன் ஏற்பாடு செய்துள்ளது. ஸ்ரீலங்கா பிரதம மந்திரி ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டார நாயமக சிலிப்புத்தபால் தலையை வெளியிடுகின்றார். பெ.சு.மணியின் 'இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்' எனும் நூலை தனது வெளியீடாக இந்த நூற்றாண்டு விழாவில் வெளியிடுகின்றது. இன்றைய கொழும்பு மிஷனின் துணைத்தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தாஜி மகராஜ் அவர்கள் தமது சதோதரத்துறவிகளுடன் முரண்பட்ட பற்பலச் சூழல்களுக்கிடையே மிஷனின் புகழார்ந்தப் பாரம்பர்யத்தை முன்னெடுத்துச் செல்கின் றார்.

இலங்கையில் பிரபல முருகன் திருக்கோயிலான கதிர் காமத்தில் வரும் யாத்திரிகர்களுக்காக கதிர் காமம் மடத்தை கொழும்பு மிஷன் நிறுவியதும் அதன் சிறப்புப் பணிகளுள் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமம் மடம்

இலங்கையில் தமிழர் சிங்களவர் ஆகியோர்க்கு கதிர்காமம் வழிப்பாட்டிற்குரிய பிரபல புண்ணியத்தலமாக விளங்குவது. இஸ்லாம் மதத்து றேபா குழுப் பக்கிரிகள் கதிர்காம பக்தி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதும் உண்டு.

இந்துக்களுக்கு முருகன் திருத்தலமாக கதிர்காமம் கொண்டாடப்பட்டு வருகிறது. அருணகிரிநாதரின் திருபுகழ் பெற்றத் திருத்தலமாகவும் கூறப்படுகிறது. கதிர்காமம். கதிர்காமக் கடவுளைக்குறிப்பிடுவதற்குக் காலங்காலமாக எண்ணிறந்த பெயர்களும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன இவருடைய சாதனைகள் பல புராதன சம்ஸ்கிருதப், பாளி, தமிழ் சிங்கள நூல்களிலும் விவரமாகத் தரப்பட்டுள்ளன. பௌத்த சிங்களமரபில் கதிர்காமக் கடவுள் பௌத்தர் தெய்வமாகக் கூறப்பட்டு வருகின்றது. தொல் பழங்கால வேடர்மரபின் வரலாறும் முருகன் வள்ளி வழிபாட்டை உணர்த்துவதாகும்.

கதிர்காமத்தில் இராமகிருஷ்ணர் திருமடத்தின் சார்பில் ஒரு கிளை அமைப்பை நிறுவவேண்டும், எனும் எண்ணம் 1943-ல் சுவாமி சித்தாத்தமானந்தஜி அவர்களின் கதிர்காம யாத்திரையின் போது தோன்றியது. அக்காலத்தில் அப்பாசாமிமடம், செல்லா கதிர்காம மடம் இரண்டும் யாத்ரிகர் தங்குவதற்கு அமைந்திருந்தன. 1943-லிருந்து இலவசமாக யாத்ரிகர்களுக்கு உணவு வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இந்தப் பணியாற்ற எம். ஜே. அப்பாசாமியின் மனைவியும் அவர்களுடைய குடும்பமும் அப்பாசாமி மடத்தைக் கொடுத்துதவினர். அப்பாசாமி மடத்திற்கு ஆண்டுதோறும் அதிகப்பட்டியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவானதால் 'சொந்தமாக ஒரு கட்டிடம் கட்ட மிஷன் முடிவு செய்தது. கோயிலுக்கருகில் வி. ஞானபண்டிதர் என்பவருடைய நிலத்தை விலைக்கு வாங்கி பெரிய அள வில் மடம் கட்டத்திட்டமிடப்பட்டது. இதற்கு அன்றைய பிரதமர் டி. எஸ். சேனநாயகே பெரிதும் உதவினார். கதிர்காமம் பணிக்காக சுவாமி அசங்கானந்தா தலைமை யில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 1952 சூன் 5-ல் அடிக்கல் நாட்டப்பட்டது.

1953 ஜுலை 12-ல் கதிர்காம இராமகிருஷ்ணா மிஷன் மடம் இலங்கை பிரதம மந்திரி டட்லிசேன நாயகே அவர் களால் திறந்து வைக்கப் பட்டது. சுவாமியதீஸ்வரா னந்தா ஜி மகராஜ், சுவாமி கைலாசனந்தா ஜி மகராஜ் (சென்னை மடத்தின் தலைவர்), 'தபோவனம்' சுவாமி சித்பவானந்ததா ஜி மகராஜ், சுவாமி அசாங்கானந்தா ஜி மகராஜ், தொழில் அமைச்சர் ஜி. ஜி. பொன்னம்பலம், நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தனே முதலா னோர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

சுவாமி சர்வா நிதானந்தாஜி மகராஜ் அவர்கள் இந்த மடத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திருவிழாக் களுக்கு வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இலவச மாக உணவளித்து வந்தது கதிர்காமம் ராமகிருஷ்ண மிஷன்-மடம். அத்துடன் வழிபாடு, சமயச் சொற் பொழிவுகள், முதலானவையும் இராமகிருஷ்ணர் இயக்க வழி நிகழ்த்தப்பட்டு வந்தன. சாதி சமயபேதமற்ற இந்த ஆன்மிக சமூகப் பணி கதிர்காமத்திற்கு வரப்பிர சாதகமாக அமைந்தது.

இலங்கை அரசு இந்த மிஷன்-மடத்தை 1976, நவம்பர் 10-ல் அரசு வடமையாக்கிக் கொண்டது. இதனால் கதிர் காமம் ராமகிருஷ்ண மிஷன்-மடம் சேவையை கதிர்காமம் இழந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு இராமகிருஷ்ணா மிஷன்

கொழும்பு, யாழ்ப்பாணம், சுவாமி விவேகானந்தரின் வருகையால் பெற்ற பெரும் பேற்றினை மட்டக்களப்பு பெற வாய்ப்பில்லாமற் போனாலும். மட்டக் களப்பு நாயகராகப் பொலிந்த சுவாமி விபுலானந்தர் காரணமாக மட்டக் களப்பு இராமகிருஷ்ணா மிஷன் பணியிலும், அதன் வழிப்பட்ட கல்வித் தொண்டுகளிலும் முனணியில் நின்றது நிற்கின்றது.

''மட்டக்களப்பு இராமகிருஷ்ணா மிஷனின் வரலாறும் பங்களிப்புகளும்'' எனும் ஆங்கிலமொழியிக் கட்டுரையில் மிஷனின் தற்காலத் தலைவரான சுவாமி ஜீவனானந்தாஜி மகராஜ் அவர்கள் மிஷன் பணியிற் சிறந்த, கல்விப் பணியில் சிறந்த மட்டக் களப்பின் மாண்புகளை விளக்கியுள்ளார்.''

19-4-1925-ல் மட்டக் களப்பு கல்லடி உப்போடையில் உள்ளூர் இந்து மக்களின் மாநாடு நடைபெற்றது. சுவாமி விபுலானந்தர் இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்டார். தமது மாநாட்டு உரையில் இந்துக்களுக்கு தேவைப்படும் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினார், சுவாமி விபுலானந்தர். மாநாட்டின் தீர்மானங்களுள் மட்டக் களப்பில் இராமகிருஷ்ணா மிஷன் அமைக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

சுவாமி விபுலானந்தர் தலைவராகவும், கே. என். நல்ல தம்பி துணைத்தலைவராகவும், கே. எஸ். சத்திய சேகரம்பிள்ளை, எஸ், சீனித்தம்பி பிள்ளை செயலாளர் ராகவும், எம். சின்னையா (வழக்கறிஞர்), டி. சங்கரப் பிள்ளை கே. ஓ. வேலுப்பிள்ளை, என்.எஸ். செல்வதுரை, எஸ். ஓ' ரத்தினசிங்கம், குருநாதப்பிள்ளை, கனகசபை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி. கனகசபை, என். எம். மாசிலாமணி, எஸ், டிபிள்யூ சாம்ப மூர்த்தி, கே. எஸ். காசிபதி பிள்ளை, ஆகியோர் கொண்ட ஒரு குழு மாநாட்டில் தீர்மானங்களை நிறை வேற்ற அமைக்கப்பட்டது.

மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தருடன் இணைந்து இராமகிருஷ்ண சங்கப் பணிகளாற்றியவர் சுவாமி அவிநாசநந்தர். மிஷன் தோன்றி ஓராண்டிற்குள்ளேயே தான் தொண்டாற்றப் போகும் சமூகத்தின் அங்கமாகி விட்டதை சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் குறிப்பிட் டுள்ளார். கல்லடி உப்போடையில் இந்து மாணவர்கள் ஆங்கிலப் பள்ளி (சிவானந்தா வித்யாலயா)க்கு நவம்பர் 6, 1925-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. மிஷன் நிறுவிய ஒரே ஒரு ஆங்கிலப் பள்ளி இதுதான், இதைக் குறிப்பிட்டு தான் சுவாமி ஜிவனானந்தாஜி மகராஜ் முற் கூறியக் கருத்தை வெளியிட்டார்.

1928-1932-களில் மிஷன் பணியாற்றிய சுவாமிகளும். வருகை தந்த சுவாமிகளும் கல்லடித் தெருவில் (ஆனைப் பத்தி அருகில்) உள்ள இந்து தமிழ்ப் பாடசாலையில் தங்கினர், இங்கு ஓர் அறை களிமண்ணால் கட்டப்பெற்று, பனையோலைகள் வேயப்பட்டிருந்தது. இதுதான் மட்டக் களப்பு ஆச்ரமத்தின் மூலக்கூறு.

சிவானந்தா வித்யாலயத்தில் மிஷன் துறவிக்கும், மிஷன் அலுவலகத்திற்கும், குருதேவருக்கு கோயிலும் இடமளிக்கப்பட்டது.

1930 ஜனவரியில் கல்முனை இந்து இளைஞர் சங்கத் தினர் நன்கொடையாக அளித்தவிடத்தில் மிஷன் ஒரு

கட்டிடத்தைக் கட்டியது. கல்முனையில் இந்தக் கட்டிடத்தில் பாடசாலை தொடங்கும் வரையில் இது மிஷனின் உள்ளூர் மையமாகவிருந்தது.

தொழு நோயாளிகளுக்கும், சிறைக் கைதிகளுக்கும் தொண்டு செய்யும் பணியை மிஷன் 1930-ல் தமிழ்ப் புத்தாண்டில் மேற்கொள்ளத் தொடங்கியது. 1931-ல் சுவாமி விபுலானந்தர் தமிழகத்தில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பணியாற்றச் சென்றார். இதனால் பாடசாலைகளின் நிருவாகப் பொறுப்பை கொழும்பு ராமகிருஷ்ண சங்கத்தின் துணைத்தலைவர் சுவாமி கனானந்தா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இவருக்கு உதவியாக இருந்தவர் பிரம்மசாரி அவ்யக்தசைதன்யா. இவர் இங்கு ஏப்ரல் 1932 வரையில் இருந்தார். இவருக்கு பிறகு சுவாமி பரிபூராணந்தா உதவியாகஇருந்தார். 1933-ம் ஆண்டின் பிற்பகுதியில் சுவாமி விபுலானந்தர் பாடசாலைகளின் பொது மேலாளராகப் பொறுப்பை மீண்டும் ஏற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு தெற்குப் பகுதி ஆசிரியர்கள் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று சுவாமி விபுலானந்தர் கல்முனை மிஷனில் சிறப்புத் தமிழ் கற்பிக்க வகுப்புகளை நடத்தினார். 1934, சனவரி 3-ல் குருதேவர் பரமஹம்சரின் நேர் சீடர் சுவாமி விஞ்ஞானானந்தாஜி மகராஜ் அவர்கள் மட்டக் களப்பு மிஷனிற்கு வந்தார். இந்த மறக்க முடியாத மகத்தான நிகழ்ச்சி மிஷன் வளர்ச்சிக்கு புதிய வேகத்தை அளித்தது. இந்த அதியற்புதஅரிய நிகழ்ச்சியை சுவாமி ஜீவனானந்தாஜி மகராஜ் அவர்கள் தமது ஆங்கிலக் கட்டுரையில் பின் வருமாறு பக்தி பரவசத்துடன் வருணித்துள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மட்டக்களப்பு மிஷனைச் சார்ந்த அனைவர்களுக்கும் இந்நாள் மிகவும் மகத்தான நாளாகும். அப்பொழுது ஆசிரியராக விருந்து பிற்காலத்தில் சுவாமி நடராஜானந்தராகத் துறவறம் பூண்டவர், புனிதம் மிகு ஸ்ரீமத் சுவாமி விஞ்ஞானானந்தாஜி மகராஜ் அவர்கள், சிவானந்தா வித்யாலயத்தின் கிழக்குப் பக்கத்தில் இருந்த மாமரத்தின் அருகில் நின்று உணர்ச்சிப் பொங்கக் கூறிய அருள்வாசிகளை நினைவு கூர்ந்தார். சுவாமி விஞ்ஞானானந்தாஜி மகராஜ் அவர்கள் தமது இரு கரங்களையும் நீட்டி, ''இந்த நிறுவனம் இந்த மாதிரியாக, இந்த மாதிரியாக இந்த மாதிரியாக, இந்த மாதிரியாக வளரயட்டும்'' என்று கூறினார். 'இந்த மாதிரியாக' என்று ஒவ்வொரு முறையும் கூறிய பொழுது அவர் தமது கரங்களைத் திறந்து நீட்டியது, எதிரில் உள்ள வெறுமை வெளி முழுவதையும் தழுவியது போன்றிருந்தது.

''அவருடைய அருளாசிகள் அரிய பயன் விளைவித்தது. மட்டக்களப்பு இந்து சமூகத்தின் மீது உணர்ச்சிமயமான பேரன்புச் சூழல் நிறைந்தத் தாக்கத்தை ஏற்படுத்தியது. கல்லடி உப்போடையில் பகவான் இராமகிருஷ்ணா தேவருக்கு திருக்கோயில் அறையொன்று சமர்ப்பணம் செய்யப்பட்டது. மாணவரில்லத்தின் தற்காலிகமான மேற்கூரை, ஓடுகளால் மூடப்பட்டது.''

மட்டக் களப்பு பிரதேசத்தில் சுவாமி விபுலானந்தர் வெள்ளப் பெருக்கென கல்விப் பெருக்கை ஏற்படச் செய்து, இராமகிருஷ்ணர் இயக்கக் கல்விப் பணியின் மாபெரும் இலட்சியங்களை மக்கள் அறிந்திடச் செய்தார். 1939-ல் இந்தியாவில் இராமகிருஷ்ணார் இயக்கத்தின் பிரபல ஆங்கில மாத இதழான 'பிரபுத்த பாரதா'வின் ஆசிரியப் பொறுப்புஏற்கச் சென்றதால் சுவாமி நிஷ்காமானந்தர், சுவாமி விபுலானந்தர் இடத்தில் தொடர்ந்து பணியாற்றத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940-ல் இராமகிருஷ்ணா மிஷன்-படம் பொதுச் செயலாளர் சுவாமி யாதவானந்தாஜி மகராஜ் அவர்கள் மட்டக் களப்பு மிஷனிற்கு விஜயம் செய்ததும் புதிய உத்வேகத்தைத் தந்தது. இவ்வாறு இராமகிருஷ்ணா மிஷனின் துறவிகள் பலர் விஜயம் செய்துள்ளனர்.

19-7-1947-ல் சுவாமி விபுலாநந்தர் கொழும்பில் மகாசமாதி யெய்தியதும், அவருடைய பூதவுடல் மட்டக் களப்பு மிஷன் வளாகத்திற்கு கொண்டு வரப்பெற்று அடக்கம் செய்யப்பட்டது.

சுவாமி விபுலானந்தர் தாமே மாபெரும் இயக்கமாக வீறு பெற இயங்கி திருக்கோணமலை, கொழும்பு மட்டக் களப்பு முதலானவிடங்களில் இராமகிருஷ்ணா மிஷன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டது அரும்பெரும் காப்பியப் படைப்பிற்குரியது.

## "தெய்வீக சங்கீதத்தின் இசைக் கோவை"

முத்தமிழ் வித்தகராகவும், இராமகிருஷ்ணர் இயக்கத் துறவியாகவும், ஒன்று, மற்றொன்றால் பாதிக்கப்படாமல் இரு வேறு துறைகளிலும் குறைவுபடாமல் நிறைவுறப் பணியாற்றியவர் சுவாமி விபுலானந்தர்.

1947-ஜூனில் தமிழகத்தில் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தில் சுவாமி விபுலானந்தரின் தன்னேரில்லாத அரிய இசையாராய்ச்சி நூலான யாழ் நூல் திருவிழாச் சூழலில் வெளியிடப்பட்டது. இந்நூலின் முகவுரையில் சுவாமி விபுலானந்தரின் கையெழுத்துப்படியில் உள்ள பின்வரும் சமர்ப்பண உரை குறிப்பிடத் தக்கது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''To the Lotus feet of the
Holy Mother Sri Sri Sarada
Devi, whose life was a
Symphony of heavenly music

சுவாமி விபுலானந்தரின் யாழ்நூல் ஆய்வில் ஆழ்ந்த போதிலும், புனிதம் மிகு தூய அன்னையின் தவவாழ்க்கையை தெய்வீக சங்கீதத்தின் இசைக் கோவையாக வருணித்து அவருடைய திருவடித் தாமரைக்கு யாழ் நூலை சமர்ப்பணம் செய்தது வியப்பிலும் பெரும் வியப்பாக உள்ளது. இசைப் புலவர்கள் பலர் இருக்க சுவாமி விபுலானந்தர் தூய அன்னையாருக்கு சமர்ப்பித்தது அவருடைய இராமகிருஷ்ணர் இயக்க இதயத்துடிப்பின் தெய்வீக இசையும் குறிப்பிடுவதன்றோ.

இங்கு, பாரதியார் தமது தேசியகீதங்கள் நூலை திலகர் போன்ற அரசியல் தலைவருக்கு காணிக்கையாக்காமல், சகோதரி நிவேதிதா தேவிக்கு சமர்ப்பணம் செய்தது நினைவு கூர வேண்டியாதொன்றாகும்.

சுவாமி விபுலானந்தரின் இந்த சமர்ப்பண உரையை கையெழுத்துப்படியில் இருந்து 16-10-96-ல் உதவினார். இவ்வாறு காலப்போக்கில் புதையல்கள் பல வெளிப்படுத்தப்படவேண்டும்.

இலங்கையின் இராமகிருஷ்ணர் இயக்க வரலாற்றுப் பொன்னேடுகளில் சுவாமி விபுலானந்தருக்குரிய பக்கங்கள் கணிசமானவை. அந்தப் புனித பாரம்பரியத்தின் ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபத்தை ஏந்தி இன்றையசுவாமிஜீ வனானந்தாஜி மகராஜ் அவர்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் குருதேவர் ஆன்மிக ஒளியை மேலும் பரவச் செய்து வருகின்றார்.

## இராமகிருஷ்ணமிஷன் கல்வி இயக்கச் சாதனைகள்

யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீஸ்வாமிநாத பரமாச்சாரிய ஸ்வாமிகள், "இலங்கை இராமகிருஷ்ணா மிஷனின் பொன் விழா மலரில் குறிப்பிட்ட பின்வரும் கருத்து இங்கு எடுத்துக் காட்டுவதற்குரியது.

"உலகாசைகளைத் துறந்து உத்தமத் துறவிகளாகி உலகில் மக்கள் சேவைக்கே தம்மை அர்ப்பணித்த துறவிகளின் துணைகொண்டு கல்வி, சமயம், கலாசாரம், சமூக சேவை ஆகிய பல துறைகளிலும், சர்வ சமய சமரஸ நோக்குடன், சகோதரத்துவ உணர்வை ஊட்டும் இணையற்ற ஸ்தாபனம். இலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம். இதன் கல்விப்பணி 1917-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்ப மாயிற்று. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் ஆகியன பொறுப் பேற்கப்பட்டன. விபுலானந்த அடிகள், அவினாசானந்தா, நிஷ்ரேஷானந்தா போன்ற பல துறவிகள் தலைமையில் கல்விப் பணி சிறப்புற நடந்தது. இச்சங்கத்தின் கீழ் இயங்கிய பாடசாலைகளை, 1960 மார்கழி மாதம் அரசாங்கம் தேசிய கல்விச் சட்டமூலம் பொறுப்பேற்ற தால், சங்கத்தின் கல்விப்பணி பெரிதும் பாதிக்கப் பட்டது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கப்பாடசாலைகளின் பிதாவாக'' சுவாமி விபுலானந்தர் 1927-ல் கல்வி நிறுவனங்கள் பலவற்றைத் தோற்றுவித்து திறமையுடன் நிருவாகம் செய்து முன்னேற்றப் பாதையில் பீடு நடை போடச் செய்தார். இவருக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக 1912-ல் சகோதரி அவபாமியா அம்மையார் பல பாடசாலைகளைத் திறந்து வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இராமகிருஷ்ணா மிஷனின் பாடசாலைகள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றின் பொது மேலாளர் சுவாமி நடராஜானந்தா அவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களின் பட்டியல், பின் வருவது;

## கிழக்குமாகாணம்-மட்டக்களப்பு மாவட்டம்

1. அக்கரைப் பத்து உயர் செகண்டரி பள்ளி
2. காரைத்தீவு ஸ்ரீ சாரதா வித்யாலய உயர் செகண்டரி பள்ளி (மாணவர் இல்லத்துடன்)
3. காரைத்தீவு ஸ்ரீ இராமகிருஷ்ண வித்யாலய உயர் செகண்டரி பள்ளி
4. கல்முனை உயர் செகண்டரி பள்ளி
5. மண்டூர் உயர் செகண்டரி பள்ளி
6. களுத்தவளை உயர் செகண்டரி பள்ளி
7. பலுகாமம் உயர் செகண்டரி பள்ளி
8. கொக்கடிசசோலை ஜுனியர் செகண்டரி பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆரைப்பத்தி உயர் செகண்டரி பள்ளி

10. ஈச்சத்தீவு ஜூனியர் செகண்டரி பள்ளி

11. கல்லடி உப்போடை உயர் செகண்டரி பெண்கள் பள்ளி

12. சிவானந்த வித்யாலயா உயர்செகண்டரி ஆண்கள் ஆங்கிலப் பள்ளி (மாணவரில்லத்துடன்)

13. ஆனைப்பத்தி விவேகானந்தா வித்யாலயா உயர் செகண்டரி பெண்கள் பள்ளி (மாணவரில் லத்துடன்)

14. ஆனைப்பத்தி ஜூனியர் செகண்டரி ஆண்கள் பள்ளி

15. மொரக் கோட்டன் சேனை ஜூனியர் செகண்டரி பள்ளி

16. சித்தாண்டி உயர் செகண்டரி பள்ளி

17. திருக்கோணமலை இந்து கல்லூரி உயர் செகண்டரி ஆண்கள் ஆங்கிலப் பள்ளி (மாணவரில்லத்துடன்)

18. திருக்கோணமலை ஜூனியர் செகண்டரி ஆண்கள் பள்ளி

19. தம்பலகம் ஸ்ரீ சாரதா நூற்றாண்டு நினைவு பெண்கள் பள்ளி (திட்டமிடப்பட்டுள்ளது)

## வடக்கு மாகாணம்-யாழ்ப்பாணம்

20. யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்யாலயா உயர் செகண்டரி ஆங்கிலமும் கலந்த பள்ளி (மாணவ ரில்லத்துடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21, கொக்குவில் உயர் செகண்டரி தமிழும் கலந்த பள்ளி

ஊவா மாநிலம்-பதுளை மாவட்டம்

22. லுகைலா நாகலிங்க வித்யாலயக ஜூனியர் செகண்டரி தமிழ்ப்பள்ளி

## அனாதை இல்லங்கள்

## கிழக்கு மாகாணம்-மட்டக் களப்பு

1. காரைத் தீவு பெண்கள் இல்லம்
2. ஆனைப் பத்தி ஸ்ரீ சாரதா பெண்கள் இல்லம்
3. கல்லடி உப்போடை ஆண்கள் இல்லம்.

சமய பேத மின்றி, இராமகிருஷ்ணர் இயக்கப் பாட சாலைகளில் கல்வி கற்பிக்க வழி காட்டியவர் சுவாமி விபுலானந்தர். இது பற்றி முஸ்லிம் அறிஞர் எம்.எம்.ஏ. அஸீஸ் எழுதியுள்ளதாவது;

''ஈழத்தில் தமது ஆழ்ந்தகன்ற கல்விஞானத்தினா லும், சிவானந்தம் வித்தியாலயம் வாயிலாகப் பரப்பிய சகிப்புத் தன்மை, தோழமையுணர்வு ஆகியவற்றினாலும் கல்வித் துறையில் மேற்கொண்ட முயற்சிகளினாலும் இழக்கிலங்கை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நட்பு வுப் பாலமைத்தார்.'' [57]

குருதேவர் வழியில் நின்று சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ணர் இயக்கப் பாடசாலைகளில் மத நல்லிணக் கத்திற்கு வழியமைத்துக் கொடுத்தார். ''சுவாமியவர்கள் தமது பாடசாலைகளில் கல்வி கற்றவர்களும், மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் விடுதியில் தங்கியிருந்தவர்களுமான பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மாணவர்கள் தமது மத அநுட்டானங்களை வழுவாது கடைப் பிடிக்க தூண்டுதலும் உதவியும் அளித்தார். எனினும் மதம் மாறுவதையோ மத மாற்ற முயற்சிகளையோ அவர் சிறிதும் விரும்பவில்லை. மதமாற்றத்திற்கு தமது முழுமையான எதிர்ப்பை அவர் பகிரங்கமாக எடுத்துச் சொன்னார்.'' இவ்வாறு 'விபுலானந்த தரிசனம்' (1993) எனும் நூலின் ஆசிரியர் திரு.வ.சிவ சுப்பிரமணியம் கூறியதுடன், சுவாமி விபுலானந்தரின் ''நம் நாட்டின் பெருமை'' எனும் கட்டுரையின் பின்வரும் கருத்தையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

''நம் நாட்டிலுள்ள சமயங்களைத் தழுபவர்களுக்குள் சிறிய அளவிலேனும் சச்சரவு ஏற்படக் காரணம் என்ன? பிறநெறியைக் கைக் கொள்பவர்களுடைய உண்மை மன நிலைமையை அறியாமையேயாகும். எவ்வுயிரையும் படைத்த ஈசனார் தமது அம்சத்தில் ஒரு சிறியதேனும் நம்முள்ளத்திலடக்கியிருக்கிறார். அழிவற்றதும் ஆனந்தம் நிறைந்ததும் கருணை பொருந்தியதும் எவ்வவுயிரையும் தனதாகவே பாவிக்கும் இயற்கையுள்ளதுமான ஈசுவராமிசம் தாமே என்பதை மறந்து தம்மைக் கேவலம் உண்ணவும் உறங்கவும் ஏற்பட்டுள்ள பிராணிகளாக்கி பிறரிடம் குற்றமும். குறையும் கண்டு அதனால் பல தொல்லைகளுக்குட்படுகின்றோம். இதனால் நாமறிவது யாது? நம் நாட்டிற் பிறந்து—அன்று உலகத்திற் பிறந்து அன்று-உலகத்திற் பிறந்த மானிடர் அனைவரும் தாமே மேற்கொள்ளும் சமயத்தை உண்மையுடன் அறிந்து, அதில் கூறியுள்ள கொள்கைகளை அவலம்பிக்க முயற்சி செய்ய வேண்டும். பிறகு பிற மதங்களின் உண்மையை அறிய வேண்டும். அப்படிச் செய்யாவிடின், பளிங்கு மாளிகையில் தாம் இருக்கும் இடம் மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் மீது வம்புக்காக கல்லெறிவது போல் முடியுமே யன்றி, வேறன்று.''

மேலே, சுவாமிஜியின் சிகாகோ சர்வமத சபைப் பேருரையான 'இந்து சமயம்', சுவாமி விபுலானந்தர் குரலில் எதிரொலித்துள்ளதைக் கேட்கின்றோம். இராம கிருஷ்ணர் இயக்கக் கல்விக் கொள்கையின் மரசொலியும் அஃதே.

சுவாமிஜியின் அற்புதமான கவிதைப் படைப்பான, ''சந்நியாசி கீதம்'' காட்டும் பின்வரும் சந்நியாச இலக்கணத்திற்குரிய இலக்கியமாகத் திகழ்ந்துக் கொண்டு வரும் இராமகிருஷ்ணர் இயக்கத் துறவிகளின் புனிதப் பாரம்பரியம் எங்கும் போல் இலங்கையிலும் தமது வரலாற்றும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

மனவலி படைத்த
    மாசிலாத் துறவி
சுவைமலி இன்பச்
    சுரந்தனை எழுப்புதி!
மகிதலக் கறையுறா
    ஙிவகு தொலைக் கப்பால்
புலப்பகை வெறுக்கை
    புகழ்ச்சியை அமைதியைக்
கலைப்பதற் கென்றுந்
    தலைப்படாத் தலத்தை
அறிவு மெய்யெனும்
    அருவிகளுடனே
பரமா நந்தத்
    திருமா நதியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்புறு குகையைப்
　　பொற்புறு வனத்து
பிறப்பிட மாக்கொடு
　　சிறப்புமிக் கார்ந்தே
எழும் கீதத்தை
　　முழங்குதி நன்கு!
ஓதுக நீ ஓம்
　　தத்ஸத் ஓம் என.''

* 1904-ல் மதுரை விவேகானந்த சபை வெளியிட்ட 'சந்நியாசி கீதம்'. மொழி பெயர்த்தவர் மதுரை விவேகானந்த சபையின் பிரதம காரியதரிசி எம். கோபாலகிருஷ்ணய்யர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு - I

1893 சிகாகோ செல்லும் வழியில் முதன் முறையாக சுவாமி விவேகானந்தர் இலங்கை வருதல்

1897 சுவாமிஜியின் இரண்டாவது வருகை. சிகாகோ வீரராக பத்து நாட்கள் இலங்கையில் வெற்றியுலா வருதல்

1897 குருதேவரின் நேர் சீடர் சுவாமி நிரஞ்சனானந்தாவின் வருகை

1899 சுவாமிஜியின் மூன்றாவது வருகை

1899 குருதேவரின் நேர் சீடர் சுவாமி துரியானந்தர் வருகை

1902 கொழும்பில் ஜூலை 13.ல் முதன் முறையாக விவேகானந்த சபை தோன்றியது. பிறகு மற்றும் சில விடங்களில் விவேகானந்த சபைகள் அமைக்கப் பட்டன.

1903 குருதேவரின் நேர் சீடர் சுவாமி திரிகுணாதீதாவின் வருகை.

1906 குருதேவரின் நேர்சீடர்களான சுவாமி அபேதானந்தர், சுவாமி இராமகிருஷ்ணானந்தர், சுவாமி பரமானந்தர் ஆகியோர்களின் வருகை

1910 சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கா சிஷ்யை சகோதரி அவபாமியா அம்மையாரின் வருகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1915 சென்னை மயிலாப்பூர் மடத்தின் தலைவர் சுவாமி சர்வானந்தாவின் வருகை

1917 வைத்தீசுவர வித்யாலயம் மிஷனின் பொறுப்பில் வருதல். மிஷனின் பொறுப்பில் வந்த முதல் பாடசாலை

1922 பண்டிதர் மயில்வாகனம் இராமகிருஷ்ணா மிஷனில் சேர்ந்து சுவாமி விபுலானந்தராக பெயர் பெறுதல்

1925 திருக்கோணமலையில் இராமகிருஷ்ண ஆச்ரமம் முதன் முறையாக இலங்கையில் அமைக்கப்படுதல்

1925 திருக்கோண இந்து கல்லூரி, மிஷனிடம் ஒப்படைக்கப்படுதல்

1925 கல்லடி உப்போடையில் சுவாமி விபுலானந்தர் சிவானந்த வித்யாலயத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

1925 கிழக்கு மாகாணத்தில் பல இந்து தமிழ் பாடசாலைகள் இராமகிருஷ்ணமிஷன் வசம் ஒப்படைத்தல்.

1926 சுவாமி அவிநாசானந்தாவின் வருகை

1926 யாழ்ப்பாணத்தில் மாணவர் இல்லம் தொடங்குதல்

1928 சுவாமி யதீஸ்வரானந்தா, சுவாமி ஆனந்தானந்தாவின் வருகை

1929 யாழ்ப்பாணம் மாணவர் இல்லம் மட்டக்களப்பிற்கு மாற்றப்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1929 கொழும்பு இராமகிருஷ்ணா மிஷனுக்கு சட்ட ரீதியான அந்தஸ்தை அளிக்கும் அவசரச் சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதளித்தல்.

1929 கல்லடி உப்போடையில் சிவானந்தா வித்யாயத்தை சுவாமி விபுலானந்தர் திறந்து வைத்தார்.

1930 கொழும்பு வெள்ள வத்தையில் 48. ஹேமர்ஸ் அவென்யூவில் இராமகிருஷ்ணா ஆச்ரமத்தை சுவாமி சர்வானந்தர் தொடக்கி வைத்தார்.

1931 சுவாமிகனானந்தர் மிஷனின் துணைத்தலைவரானார்.

1932 கொழும்பு ஆச்ரமம் 49-ஸ்ரீ விக்ரமா தெருவிற்கு மாற்றப்படுதல்.

1933 சுவாமி அசங்கானந்தா மிஷனின் துணைத்தலைவரானார்.

1933 குருதேவரின் நேர் சீடர் சுவாமி விக்யானந்தாவின் வருகை.

1935 இராமகிருஷ்ணா மிஷன் தற்பொழுதைய முகவரியில் (40 இராமகிருஷ்ணா சாலை) இயங்கத் தொடங்குதல்

1940 இராமகிருஷ்ணா மிஷன்-மடம் தலைமையகத்தின் (கல்கத்தா) பொதுச் செயலாளர் சுவாமி மாதவானந்தாவின் வருகை.

1941 சுவாமி சிதாத்மானந்தா மிஷனின் துணைத் தலைவராகப் பொறுப் பேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942 கொழும்பு ஆச்ரமம் இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் கொழும்பிற்கு வெளியே மாற்றப் பட்டது.

1943 தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் (இலங்கை) முதல் தமிழ்ப் பேராசிரியராக சுவாமி விபுலானந்தர் நியமிக்கப்படுதல்

1944 மீண்டும் கொழும்பு ஆச்ரமம் பழைய இடத்திற்கே மாற்றப்பட்டது.

1948 கொழும்பு ஆச்ரமத்தில் நூலகமும் வாசக சாலை யும் கௌரவ டி.எஸ். சேனநாயகேவால் திறந்து வைக்கப்பட்டது.

1951 சுவாமி அசங்கானந்தர் மிஷனில் துணைத்தலைவ ராகப் பொறுப்பேற்றார்.

1951 இந்தியாவின் புகழ் பூந்த நோபின் பரிசு பெற்ற விஞ்ஞானி டாக்டர் சி. வி. இராமன் வருகை

1951 இந்தியக் குடியாசின் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் வருகை.

1952 கொழும்பு மிஷனின் ஞாயிற்றுக் கிழமை வகுப்புகள் தொடங்கப்பட்டது.

1952 வெள்ளவத்தையில் 43, 44-வது சந்துகள் முறையே விவேகானந்த சாலை, இராமகிருஷ்ணா சாலை என்று பெயர் மாற்றம் பெற்றன.

1953 கௌரவ டட்லிசேன நாயகேவால் கதிர்காமம் மடம் திறந்து வைக்கப்பட்டது.

1954 சுவாமி பிரேமாத்மானந்தா மிஷனின் துணைத் தலைவரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954 தூய அன்னையாரின் நூற்றாண்டு விழாக் கொண் டாட்டத்தைத் தொடக்கி வைக்க ஐக்கிய நாடுகள் சபை தலைவர் விஜய லட்சுமி பண்டிட் அம்மை யார் வந்தார்.

1957 கொழும்பு அனைத்துலக பண்பாட்டு மையத்திற்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் அடிக்கல் நாட்டினார்.

1960 மிஷனின் அனைத்துப் பாடசாலைகளையும் அரசு எடுத்துக் கொண்டது.

1962 அனைத்துலகப் பண்பாட்டு மையத்தை இந்தியப் பிரதமர் நேருஜி திறந்து வைத்தார்.

1967 இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர் களின் வருகை.

1968 கல்லடி உப்போடை மாணவர் இல்லத்திற்கு அரசாங்கம் 38 ஏக்கரா நிலமளித்தது.

1968 சகோதரி நிவேதிதாவின் நூற்றாண்டு விழாத் தொடர்பாக கல்கத்தா சாரதா மடத்தை சேர்ந்த ப்ரவிராஜிகா ஆத்மபிராணா, ப்ரவிரா ஜிகா முக்தி பிராணா வந்தனர்.

1968 கல்கத்தா இராமகிருஷ்ணா மிஷன் - மடத்தின் தலைவர் சுவாமி வீரேஸ்வரானந்தாஜி மகராஜ் அவர்கள் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969 விவேகானந்த நூற்றாண்டு விழா நினைவு மன்றக் கட்டிடம் திறக்கப்பட்டது.

1970 ஸ்ரீராமகிருஷ்ணா சாரதா சமிதி அமைக்கப் பட்டது.

1972 கல்லடி உப்போடையில் மாணவர் இல்லத்தின் புதியக் கட்டிடத்தை சுவாமி பிரேமாத்மானந்தர் திறந்து வைத்தார்.

1976 அரசாங்கம் கதிர் காமம் மடத்தை எடுத்துக் கொண்டது.

1976 கல்லடி உப்போடையின் மாணவர் இல்லத்தின் பொன் விழாக் கொண்டாட்டம்.

1980 கொழும்பு மிஷனில் பொன் விழா.

1982 கல்லடி உப்போடையில் சாரதா பெண் கள் இல்லத்தின் புதியக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

1983 1978-ல் புயலில் சேதமுற்ற மண்டூர் தொழு நோயாளர் மருத்துவமனையில் மறுசீரமைப்பு செய்யப் பெற்று மகா கும்பாபிஷேகம் நடை பெற்றது.

1985 சாரதா பெண்கள் இல்லத்தின் ஸ்ரீ ஸ்ரீ சாரதா தேவியின் கோயில் சமர்ப்பணம் செய்யப்பட்டது. சமர்ப்பணச் சடங்குகளை சுவாமி ராகவேஷானந் தாஜி செய்தார். கொழும்பு மிஷனின் துணைத் தலைவரானார், சுவாமி பிரேமாத்மானந்தாஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு மிஷனின் புதியவளாகம் திறந்து வைக்கப்பட்டது.

1986 ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தா மகராஜ் அவர்கள் வருகை.

1987 சுவாமி சம்பிரக்ஞானானந்தாஜி மகராஜ் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டது.

1990 சுவாமி பிரேமாத்மானந்தாஜி மகராஜ் மகாசமாதி அடைந்தார்.

1939 சுவாமி லோககேஸ்வரானந்தாஜி மகராஜ் கொழும்பு வந்தார்.

1990 சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1991 காரைத் தீவு பெண்கள் இல்லத்தின் புதியக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

1992 இராமகிருஷ்ணா மடம் - மிஷன் தலைமையகம் பொதுச் செயலாளர் ஸ்ரீ மத் சுவாமிகனானந்தாஜி மகராஜ் அவர்கள் வந்தார்கள்.

1992 ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தாஜி மகராஜ் அவர்கள் வந்தார். இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிஷன் வீடுகள் கட்டிக் கொடுக்க அடிக்கல் நாட்டினார்.

1993 சாரதா பெண்கள் இல்லத்திற்காக கலாச்சார கல்வி மையம் கட்டப்படுவதற்கு அடிக்கல் நாட்டப் இது நாகர்திவ நாட்டு தூதரகத்தில் Nord அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 கல்கத்தா இராமகிருஷ்ணா மடம்-மிஷனின் துணைச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி பிரபானந்தாஜி மகராஜ் அவர்கள் இலங்கை வந்தார். சாரதா பெண்கள், இல்லத்தில் கலாசார கல்வி மையத்தைத் திறந்து வைத்தார்.

1994 இராமகிருஷ்ணா மடம்-மிஷனின் பொதுச் செயலாளர் ஸ்ரீ மத் சுவாமி ஆத்மஸ்நானந்தாஜி மகராஜ் அவர்கள் வந்தார். 12-5-96-ல் நிகழ்ந்த சமயப் பேரவையக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

1996 காரைத்திவு பெண்கள் இல்லத்தின் புதுக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானானந்தாஜி மகராஜ்.

1996 இந்தியாவில் தில்லி இராமகிருஷ்ணா மிஷனின் தலைவர் சுவாமி கோகுலானந்தாஜி மகராஜ் அவர்கள் வந்தார்.

மேற்காணும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு கொழும்பு இராமகிருஷ்ணா மிஷனின் பொன்விழா மலரில் இருந்தும் மட்டக்களப்பு மிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்தாஜி மகராஜ் தொகுத்தளித்த கையெழுத்துப் பிரதியிலிருந்து (1982-1996 வரையில்) எடுக்கப்பட்டது.

★

பின்னிணைப்பு-2

# கொழும்பு இராமகிருஷ்ணமிஷனின் தலைவர்கள் துணைத்தலைவர்கள் பட்டியல்

## தலைவர்கள்

1. சுவாமி சர்வானந்தா 1929 1936
2. சுவாமி அசங்கானந்தா 1936 1939
3. சுவாமி வீரேஸ்வரானந்தா 1939 1963
4. சுவாமி கம்பீரானந்தா 1964 1987
5. சுவாமி ரங்கநாதானந்தா 1988 1991
6. சுவாமி ரங்கநாதானந்தா 1991 தற்சமயம்

## துணைத்தலைவர்கள்
## மற்றத்துறவிகள்

1. சுவாமி அவிநாசானந்தா 1929-30
சுவாமி விபுலானந்தா 29.30(தொடர்ந்து)
சுவாமி பரமேஷானந்தா

2. சுவாமி கனானந்தா 1931-1932
சுவாமி விபுலானந்தா 31-1932
சுவாமி பிரணவேஷானந்தா 31-1932 (தொடர்ச்சி)

3. சுவாமி அசங்கானந்தா
சுவாமி பிரணவேஷானந்தா 1932-1936 (தொடர்ந்து
சுவாமி பரிபூரணானந்தா 32-1933
சுவாமி ஜகதீஸ்வரானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சுதாரானந்தா 33
சுவாமி கேதாரேஸ்வரானந்தா 33-34
சுவாமி கூடஸ்தானாநந்தா 34-30 (தொடர்ந்து)
சுவாமி விபுலானந்தா 35-36 (தொடர்ந்து)

4. சுவாமி விபுலானந்தா 1936-39
சுவாமி கேதாரேஸ்வரானந்தா 39-39

5. சுவாமி அசங்கானந்தா 1939-40 (தொடர்ந்து)
சுவாமி நிஷ்காமானந்தா 39-40
சுவாமி அவிநாசானந்தா 39-40 (தொடர்ந்து)

6. சுவாமி சிதாத்மானந்தா 1941-51
சுவாமி நிஷ்காமானந்தா 41-42
சுவாமி அவிநாசானந்தா 41-45
சுவாமி ரிதாஞானானந்தா 42-46
சுவாமி விபுலானந்தா 42-46
சுவாமி ஹரிஷிகேஷானந்தா 46
சுவாமி நடராஜானந்தா 46-51 (தொடர்ந்து)
சுவாமி சர்வாதீதானந்தா 46.51 (தொடர்ந்து)

7. சுவாமி அசங்கானந்தா 1951-54
சுவாமி நடராஜானந்தா 51-54 (தொடர்த்து)
சுவாமி சர்வதானந்தா 51-54 (தொடர்ந்து)
சுவாமி வரானந்தா 52-54 (தொடர்ந்து]
சுவாமி கூடஸ்தானாநந்தா 53-54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சுவாமி பிரேமாத்மானந்தா 1954-87
சுவாமி நடராஜானந்தா 54-66
சுவாமி சர்விஜிதானந்தா 5.54
சுவாமி வரானந்தா 54-60
சுவாமி அவ்யாயானானந்தா 60-73
சுவாமி அகோரனந்தா 61-69
சுவாமி ஸ்ரீரங்கனந்தா 63-70
சுவாமி ஜீவானாநந்தா 87 (தொடர்ந்து)
சுவாமி விருபாக்ஷானந்தா 71-78
சுவாமி முக்தியானத்தா 75
சுவாமி சித்கனானந்தா 88 78
சுவாமி சமக்ரானந்தா 79.87 (தொடர்ந்து)

9. சுவாமி சம் பிரச்ஞானாநந்தா 88.90 (தொடர்ந்து)
சுவாமி ஜீவனானந்தா 88-10 (தொடர்ந்து)
சுவாமி சமக்ரானாநந்தா 90 (தொடர்ந்து]
சுவாமி ராஜேஸ்வரானந்தா 90 (தொடர்ந்து)

10. சுவாமி ஜீவனானந்தா 1991 (தொடர்ந்து)
சுவாமி சமக்ரானந்தநா 90 (தொடர்ந்து]
சுவாமி ராஜேஸ்வரானந்தா 90 91 (தொடர்ந்து)
சுவாமி அஜராத்மானந்தா 90 91 (தொடர்ந்து)

11. சுவாமி ஆத்மகனானந்த 1991-தற்சமயம்
சுவாமி ஜீவனானந்தா 91 ,,
சுவாமி ராஜேஸ்வரானந்தா 91 ,,
சுவாமி அஜராத் மானந்தா 91 ,,
சுவாமி சமக்கிரானந்தா 91 92
சுவாமி ரிதமயானந்தா 92-தற்சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்

1. இலங்கையில் இந்துக் கோயில்கள். பகுதி 1 பதிப்பாசிரியர் சி. பத்மநாதன்-இந்துய சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, கொழும்பு-1994 ப xi

2. Tamil Culture in c eyln A Genlral Introducion M. D. Ragavan-Kalai Nilayam Limiteb, colomlo-4 p. 75

3. "தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி" கட்டுரை, நாவலர் மாநாடு விழா மலர், நல்லூர், யாழ்ப்பாணம் 1969 ப. 23

4. ஆறுமுக நாவலர் சரித்திரம் யாழ்ப்பாணம் நல்லூர் த. கைலாச பிள்ளை நான்காம் பதிப்பு 155 (முதற் பதிப்பு 1916) சென்னை ப. 2

5. மேற்கோள் கலாநிதி பொ. பூலோக சிங்கம் அவர்களின் மேற்காணும் கட்டுரை ப. 24

6. ஈச்சுர நிச்சயம், ஆசிரியர் முன்னுரை 1895 ச. சுபாரத்தின பிள்ளை, யாழ்ப்பாணம். (சைவ உதயபானு 1880-ல் தோன்றியது.

7. மேற்கோள் இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இரண்டாம் பதிப்பு, 1978 பெ. சு. மணி ப. 46, 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. த. கைலாசபதி பிள்ளையின் மேலது நூல் ப. 28

9 முற் கூறப் பெற்ற கைலாச பிள்ளையின் நூலின் ஆங்கில அநுபந்தம் ப. 122.

10. "தேசிய வரலாற்றுப் பின்னணியில் நாவலர்" கட்டுரை- க. அருமைநாயகம் நாவலர் நூற்றாண்டு மலர் 1979 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை கொழும்பு யாழ்ப்பாணம் ப. 65

11. The Cultural and Liuguistic Consciouness of the Tamil Coumunity in Sri lanka 1982 Lecture Tamil Womens Union Kala laya P. 3

12. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இரண்டாம் பதிப்பு 1978 பெ. சு. மணி. ப. 266.

13. ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு தொகுப்பு நல்லூர். த. கைலாசபிள்ளை மூன்றாம் பதிப்பு 1954, ப. 87.

14. வே. கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுக நாவலர் சரித்திரம் 1994
பதிப்பாசிரியர் வை. கனகரத்தினம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை

15. முற்கூறப்பட்ட ஆறுமுகநாவலர் பெருந்திரட்டு இரண்டாம் பாகம் ப. 75

16. நாவலர் இலக்கிய நோக்கும் பணியும் கட்டுரை கலாநிதி கைலாசபதி நாவலர் நூற்றாண்டு மலர் 1977 ப. 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ''நாவலரும் முத்துத்தம்பி பிள்ளையும்'' கட்டுரை க. நாகேஸ்வரன் நாவலர் நூற்றாண்டு விழா மலர் 1979 ப. 199

18. மேலது ப. 199

19. மேற்கோள் நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள் 1993 பெ. சு. மணி கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் வெளியீடு ப. 105

20. வேதாந்த கேசரி ஆங்கில மாத இதழ் பொன் விழா மலர் இராமகிருஷ்ணா மிஷன் மயிலாப்பூர் 1964 ப. 61

21. Swami Vivekananda In the west New Discoveries Mary Louis Burk P.-79

22. ''ஒரு நூற்றாண்டு காணும் இந்து சாதனம் ஆங்கிலம் தமிழ்'' கட்டுரை இரா. கனகரத்தினம் இந்து சாதனம் 11-9-85 யாழ்ப்பாணம்

23. மேற்படி இதழ் ப. 7

24. இலங்கையில் சுவாமி விவேகானந்தர் 1813 196[3] ச. அம்பிகை பாகன் கொழும்பு ப. 1

25. பேராசியர் நடராசா நேர்முகம் 23-10-96 கொழும்பு

26. ''விவேகானந்த விஜய வாசகம்'' விவேகானந்தன் மாத இதழ் கொழும்பு 1925 கார்த்திகை மாதம் இதழ் கொழும்பு 1925 கார்த்திகை மாதம் ஆசிரியர் சுவாமி விபுலானந்தர் ப. 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. Vfvekananda His Gospal of Man Making1986 Swami Jyotir mayanana P. 568

28. விவரமறிய பார்க்கவும், ''இராமகிருஷ்ணர் இயக்க மும், தமிழ் நாடும் 1990 பெ. சு. மணி பக். 241 264.

29. பதிவு செய்யப்பட்ட நூல் விவரப் பட்டியல் தேசிய ஆவணக் காப்பகம், கொழும்பு பாகம் 4, குறிப்பு எண் 3606.

30. ''நாவலரும் முத்துத் நம்பிப் பிள்ளையும்'' கட்டுரை க. நாகேஸ்வரன் நாவலர் நூற்றாண்டு விழா மலர் 1979. ப. 197.

31. அகில இலங்கை இந்து மாமன்றம் தலைமையகக் கட்டிடப் பூர்த்திச் சிறப்புமலர் 1996 கொழும்பு ப. 31

32. ''ஆத்மிகமும் யாழ்ப்பாண மக்களும்'' தமிழோசை லண்டன் 31-7-1992. ப. 15

33. யோக சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும் முதற்பதிப்பு 1991 ஆக்கம், சிவத்தொண்டர், சிவத் தொண்டன் நிலையம், செங்கலடி ப. 17.

34. இந்த விவரங்களையெல்லாம் கொழும்பு விவேகா னந்தா சபையின் தலைவரும் மருத்துவ அறிஞரும், சைவ சமயம் அறிஞருமான டாக்டர் கே. வேலாயுதம் பிள்ளை கூறினார்.

35. சுவாமி ஜோதிர்மயானந்தாவின் முற்கூறிய ஆங்கில நூல்ப. 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. மேரி லூயிஸ் பர்க்கின் முற் கூறியதாய் தொகுதி 4 ப. 424.

37. இந்து சாதனம் யாழ்ப்பணம் 57-ம் புத்தகம் சஞ்கிகை, 3 ப. 11.

38. The Morning Star 4.2-1897. P. 13

39. சுவாமி ஜோதிர்மயானந்தாவின் முற்கூறிய நூல் ப. 59

40. சத்திய வேத பாதுகாவலன் மாசி, 6 1897 ப.4

41. "The impact of Swami Vivekananda on Hinuism in Srilanka" Prof K. Kailasapathy Golden Juiblee of the Ramakrishna Mission Srilanka 1980 P. 2

42. சுவாமி ஜோதிர் மயானந்தாவின் முற்கூறிய நூல் ப. 627

43. Quoted The Ramakrishna Movement in Srilanka 1978 swami Viru pakshananda P. 189

44. கொழும்பு ராமகிருஷ்ணா மிஷனில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நகலச்சுப் பிரதி

45. இந்து சாதனம் யாழ்ப்பாணம் சூலை 11, 1906 ப. 2

46. Vedante Hall opening Souvenir 1982 Ramakrishna Sarada vedanta Soctety of N S. W. P. 11

47. இலங்க ஸ்ரீராம கிருஷ்ணா சங்கம் பாடசாலைகளின் கல்வி மலர் 27 1957-ப. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. இந்தக் குறிப்பேட்டை அன்புடன் கொடுத்துதவியர் கொழும்பு ராமகிருஷ்ணா மிஷன் (சிலோன் கிளை) துணைத் தலைவர் சுவாமி ஆத்மகளாநந்தா அவர்கள்.

49. சுவாமி சர்வானந்தர் கைப்பட எழுதிய இந்தக் குறிப்பின் நகலச்சுப் பிரதியைக் கொடுத்துதவியர் மட்டக்களப்பு ராமகிருகிஷ்ணா மிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்த அவர்கள்.

50. Golden Jubile Souvenir of The Ramakrishna Mission Sri Lanka Centre 19o0 P. 22

51. மேற்கோள்; சுவாமி விருபாக்ஷானந்தாவின் முற்கூறிய நூல் ப. 193 194.

52. "ஆசிரியர் உள்ளக் கிடக்கை" விவேகானந்தன் மாத இதழ் கொழும்பு அக்ஷய வருஷம், ஆடி மாதம் ப. 200

53. விவேகானந்தன் தொகுதி 2, பகுதி 11-12-பிரபவ ஆண்டு, கார்த்திகை மார்கழி ப. 39

54. சுவாமி விருபாக்ஷானந்தாவின் முற்கூறியநூல் ப. 197

55. Minutes Book of the Board of Management of the Ramakrishna mission (Ceylon Branch).

56. முற்கூறிய இராமகிருஷ்ணா மிஷன் பொன்விழா மலர்

57. ஏ. எம். நஹியாவின் முற்கூறிய நூல் ப. 128

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று காலையிலே இந்த மகாசபை கூடும்பொழுது அடித்த மங்கல மணியானது, மூடக் கொள்கைகளின் சாவு மணியாகும். வாளினாலோ, எழுது கோலினாலோ ஒருவரை யொருவர் பகைக்கின்ற கொடுஞ் செயலானது அகன்று விடுக. ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்லுகின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக."

—சுவாமி விவேகானந்தர்

சிகாகோ சொற்பொழிவு, செப்டம்பர் 11, 1893.

"சர்வ மத சபை உலகத்திற்கு ஏதேனும் சுட்டிக்காட்டியது என்றால், அது இதுதான். புனிதத் தன்மை, தூய்மை, இரக்கம் ஆகியன உலகில் எந்த ஒரு சமய அமைப்பின். உடமைகள் அல்ல என்பதை இந்தச் சபை மெய்ப்பித்துள்ளது......தனது சமயம் மட்டும் தனித்துப் பிழைத்திருக்க பிற சமயங்கள் அழிந்துவிடுமென எவரேனும் பகற்கனவு காண்பாராயின், அவருக்கு எனது மனப் பூர்வமான இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதவி செய், சண்டையிடாதே; ஒன்றுபடுத்து அழித்துவிடாதே; சமரசமும் அமைதியும் வேண்டும். கருத்து வேறுபாடு வேண்டாம்; என்பதை ஒவ்வொரு சமயமும் தனது கொடியில் விரைவில் எதிர்ப்பிற்கிடையே எழுதும் என்பதை நான் அவருக்குச் சுட்டிக் காட்டுவேன்."

—சுவாமி விவேகானந்தர்

சிகாகோ சொற்பொழிவு, நவம்பர் 27, 1893.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org